15

புது எழுத்து

ஆடி 2007 ஆசிரியர் மனோன்மணி



குற்றவுணர்வின் மொழி

பாம்பாட்டிச் சித்தன்

விலை : ரூ. 40/-

அன்னம் ● அகரம்
1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 7. பேசி 04362279288

15
ஆடி 2007

புது எழுத்து

நவீன படைப்பிலக்கியத்திற்கான சிறுபத்திரிகை

ஆசிரியர்
மனோன்மணி

பதிப்பாசிரியர்
இரா. சுகவனம்

அச்சு
மலர் ஆப்செட்
சேலம் - 4.

அனைத்து தொடர்புகளுக்கும்
மனோன்மணி
ஆசிரியர் - புது எழுத்து
39, ஜே. கே. சி. தெரு,
காவேரிப்பட்டிணம் - 635 112.
கிருஷ்ணகிரி மாவட்டம்.
பேசி : 98426 47101
மின்னஞ்சல் : puduezuthu@gmail.com

ஆண்டு சந்தா : ரூ. 200/-
மாணவர் சந்தா : ரூ. 150/-
ஆயுள் சந்தா : ரூ. 10000/-
நிறுவன சந்தா : ரூ. 350/-

விளம்பர விகிதம்
2வது அட்டை : ரூ. 4000/-
3வது அட்டை : ரூ.3000/-
பின் அட்டை : ரூ.5000/-
முழு பக்கம் : ரூ. 1000/-
அரை பக்கம் : ரூ. 500/-
வண்ணம் : ரூ. 10000/-
(காரணம் எதுவும் இன்றி
விளம்பர ஏற்பு
மறுக்கப்படலாம்)

ரூ. 50/-

அட்டை ஓவியம்
மணிவண்ணன்

நகுலன் நினைவு மலராக
புது எழுத்து 16 ஆகஸ்ட் இறுதியில் வெளிவரும்

**நகுலன், வள்ளி நாயகம், புலவர் கலியபெருமாள்,
சதாரா மாலதி ஆகியோர் மறைவிற்கு
புது எழுத்து அஞ்சலி செலுத்துகிறது.**

குலசேகரன் கவிதைகள்

கண்ணாமூச்சி ஆட்டம்

சிறுவர்கள் கண்ணாமூச்சி
விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்
பழமையான ஊர் மறைந்து
மற்றொன்றாக கண்டுபிடிக்கப்படுகிறது
சந்துகள் மூலைகளென
அதன் நாட்பட்ட ரகசியங்கள்
யாவும் ஒவ்வொன்றாக துலங்குகின்றன
ஆட்டத்திருந்து விலக்கப்பட்ட
தேடலும் அடைதலும் இல்லாமலான
திறந்த வெளிகள் பார்வையாளராக மாறுகின்றன
அடர்ந்த இருளின் நடுவில்
பொத்துண்ட கண்கள்
நிலவின் ஒளி எதிரே
காற்றாடியாக சுழன்று திறக்கின்றன
காலடி நிரம்பிய வீதிகளும்
பேய் வாழும் புராதன வீடுகளும்
மறுபடியும் புதிதாக பிறக்கின்றன
கதவுக்குப் பின்னான சிற்றிடங்களும்
தேவையற்ற ஒதுக்குப்புறங்களும்
அவர்கள் கரங்களில் மீள்கின்றன
இப்பூமியிருந்து ஒளிந்து மீண்டும்
வேறுலகில் கண்டெடுக்கப்படுகிறார்கள்

விலக்கப்பட்ட வார்த்தை

தெருவில் விளையாடும் பையன்
புழுதி மண்ணில் ஒளிரும்
ஒரு சொல்லைக் கண்டெடுத்து
இரகசியமாக வாயிடுகிறான்
அது மிகுந்த கிளர்ச்சியூட்டுகிறது
ஒரு மிட்டாயைப் போல்
நுனிநாவில் சூடி மகிழ்கிறான்
அதில் பிறக்கும் துளிகள்
உள்ளே ஆற்றுச் சுழல்களாகின்றன
ஊற்றெடுக்கும் தாரை மோதுகிறது
உடன் கரைகளில் அலையாக
அவன் உற்சாகத்தில் விம்முகிறான்
தலைமேல் பறக்கும் பழைய வாசகங்களை
பிடிக்கும் விளையாட்டினூடே
வெளியிலெடுத்து இரசித்து
மீண்டும் விழுங்கி சுவைக்கிறான்
அதை ஊதிப் பெரிதாக்கி
அவன் உதட்டின் மேல்
குண்டைப் போல் வெடிக்கிறான்
பழகிய சொற்கள் சருகைவிட மென்மையாக
கீழே உதிர்ந்து விழுகின்றன
அவற்றின் உச்சியிலேறி நின்று
அவன் கைக்கொட்டி சிரிக்கிறான்

பால் ஊற்று

பூப்போட்ட சேலையில் பொதிந்த
அம்மாவின் வெளிர் முலைகள்
சிறுவனின் கண்களெதிரே மிதக்கின்றன
கைக்கெட்டாத தூரங்களில் உள்ளன
அவற்றின் கூழாங்கல் போன்ற குளிர்ச்சியும்
உள்ளே நிறைந்த வெம்மையும்
கடும் கோடையில் ஆவியான
கேணியின் ஊற்று நீர்
அவன் அடிநாவின் ருசியாயிருக்கிறது
காற்றில் எங்கும் வீசாது
ஊட்டும் உடன் மேல்
பூக்கும் அபூர்வ மணத்தையும்
ஆழப் புதைத்துக் கொள்ளும்
உறுத்தலற்ற மென்மையையும்
அவன் தனக்குள் தேடியபடி
இருண்ட மூலைகளில் ஒதுங்குகிறாள்
நெஞ்சோடு அணைக்கும் உருவம்
கரிந்து புகையும் அடுப்பிலும்
பழைய கொடித் துணிகளிலும்
நிழலாக கரைந்து மறைகிறது
அவன் தனிமையின் படுக்கையில்
கண்களை உருட்டி பயமுறுத்தும்
வேம்பு போன்ற கசப்பு
வாயில் கசிய உறங்குகிறாள்
ஒரு கனவென நீளும் கைவிரல்களிலிருந்த
அமுதத்தை ஆழ உறிஞ்சுகிறான்

அசதாவின் சிறுகதைகளும் கவிதைகளும்

கண்டராதித்தன்

அர்த்தம் மிக்கதும், மதிப்பு வாய்ந்ததுமான செயல்களைச் செய்திருந்தும் அதற்கான குறைந்தபட்ச கவனத்தைக்கூடப் பெறாமல் அமைதி காக்கவும், தமது சிறு செயலும் பெருங்கவனத்தை அடையுமாறு வாய்ச்சவடால்களையும், கோட்டித்தனத்தையும் செய்யும் இருவகையினர் உண்டு. அசதா இதில் முதல் பிரிவிற்குள் அடங்குவார். இரண்டு மொழிபெயர்ப்பு நாவல்கள் (வீழ்த்தப்பட்டவர்கள் - மரியானா அஸூவெலா, முன் கூறப்பட்ட சாவின் சரித்திரம் - மார்க்வெஸ்) பல்வேறு மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமது சொந்த ஆக்கங்களாக ஒரு சிறுகதைத் தொகுப்பும், கவிதைத் தொகுப்பும் வெளியாகியிருக்கின்றன. நானறிந்த வகையில் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கக்கூடிய வெகு சிலரில் அசதாவும் ஒருவர். ஓவியமும் ஓரளவிற்குத் தெரிந்தவர்.

வார்த்தைப்பாடு இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு 2003 டிசம்பரில் யுனைட்டட் ரைட்டர்ஸ் வெளியீடாக வந்தது பதினைந்து சிறுகதைகளடங்கியது.

நான்கு பெண்களோடு பிறந்த சகோதரனின் துக்கத்தையும், இயலாமையையும் சொல்லும் வார்த்தைப்பாடு கதையில் சூட்டிகையான தங்கை ரெஜினாவின் துறவு, தம் குடும்பத்தாருக்கோ, சுற்றத்துக்கோ இயல்பான அல்லது நிகழக்கூடியதொன்றாகத் தோன்றும்போது, அந்நிகழ்வுகளுடன் அச்சகோதரனின் மனவோட்டங்கள் இயல்பாக பதிவு

செய்யப்பட்டிருக்கும்.

நமது சமகால அரசியல் நிகழ்வுகளை பிரதிபலிக்கும் ஷீத்தல், அருந்ததிராயும் ஒரு கழைக் கூத்தாடிச்சிறுவனும் அவன் அக்காவும் என்ற இரு கதைகளில் முதல் கதையில் தாயை இழந்து குறை மாதத்தில் பிறந்த ஷீத்தலை, ஓடி ஆடுகிற வயது வந்ததும் அதற்கான உடல் வளர்ச்சி பெற்றிராத சிசுவை, ஒரு கலவரம் தன்னளவில் ஆரோக்கியமென நினைத்ததை செய்து கொன்று வைக்கிறது. ஊடகங்களும் அரசும் என்ன செய்தன என்ற கேள்விகள் இல்லை, அன்று நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்ற புலம்பல் இல்லை, ஆனால் தம்மை பாதித்ததை நிறைவாக செய்திருக்கும் அசதாவின் ஷீத்தல் மாண்டோவை ஒரு கணத்திற்கு நினைவிற்கு கொண்டு வருவது யதார்த்தமானதுதான். அடுத்த கதையின் பகடியும் குறிப்பிடவேண்டியதாகவே இருக்கிறது.

நாஜிக்களின் தற்கொலை முகாமைப் பின்னணியாகக் கொண்ட நேர்காணல், புராணீகத் தன்மையும், கவிமொழியும் கொண்ட கூந்தல், கனவு பூதம் போன்ற கதைகள் மீண்டும் வாசிப்பைத் தூண்டுபவையாக இருக்கின்றன. ஓசை, தரிசனம் கதைகள் மனித மனத்தின் எதிர்பார்ப்புகளையும் பயத்தையும் ஸ்பஷ்டமாக பேசுபவை. ஒரு போர்ச்சூழலையோ, கடுமையான அரசியல் நெருக்கடிகளையோ கடந்த நாற்பதாண்டுகளாக அல்லது தனது வாழ்நாளில் (எமர்ஜென்சியின் போது அசதா கைக்குழந்தையாக இருந்திருக்கலாம்) சந்தித்திராத இடத்திலிருந்து இவ்வாறான படைப்புகள் வெளியாகிறதென்றால் நேரடியானவை எல்லாம் நேரடியாகத்தான் வரும் என்பதில்லை என்றே நாம் பொருள் கொள்ள வேண்டும்.

ஆயத்தம், சூரியன் உதிக்காத கிழக்கு போன்ற கதைகள் தமக்களிக்கப்பட்ட பாத்திரத்தை (பக்கம் நிரப்பாது) அசதாவின் கதைகள் காட்டும் அரசியல் காட்சிகள், அதன் பின்னடைவுகள் வரலாற்றுத் தகவல்கள், புனைவுகள் இவற்றை மீறியும் ஒரு தேக்கம் இருப்பதாக நாம் நினைக்கக்கூடும் என்று நினைத்தோ என்னவோ தொகுப்பின் கடைசிக் கதையாக வள்ளி ஒயின்ஸ் உள்ளது இத்தொகுப்பின் ஆகச்சிறந்த கதையும் இதுவே.

சிறந்த மொழிபெயர்ப்பாளர்களின் சொந்த படைப்பாக்கங்களில் பிசிறில்லாத ஒரு கச்சிதம் இருப்பதைக் காண முடியும். அது எழுத்தை, மொழியை செழுமையாக்க உதவுகின்றதா, அல்லது வாசகனை நிறைவு கொள்ளச் செய்கிறதா எனத் தெரியவில்லை. அசதாவின் வார்த்தைப்பாடு ஒரு கச்சிதமான ஆக்கம் என்றே கருதுகிறேன்.

கவிஞராக எனக்கு அறிமுகமான அசதா, தனது முதல் கவிதைத் தொகுப்பை வெளியிடுவதற்கு முன் மூன்று நூல்களை வெளியிட்டிருந்தார். ஒரிய எழுத்தாளர் ஜெயந்த் மஹாபாத்ராவிற்கு சமர்ப்பணம் செய்து வெளியாகி இருக்கும் சுமார் எழுபத்தைந்து கவிதைகளடங்கிய பிஷப்புகளின் ராணி ஒன்பது வருடங்களாக பல்வேறு இதழ்களில் வெளிவந்தவையும், நேரடியாக தொகுப்பில் சேர்ந்த கவிதைகளும் கொண்ட நூல்.

அசதாவின் கதைகளுக்கும், கவிதைகளுக்குமான வேறுபாடு

எதிரெதிர்த் தன்மை கொண்டது. கதைகளில் தெரியும் லாவகத்தன்மையும், பார்வையும் அடக்கமானது. கவிதைகள் அதற்கு எதிராக பதட்டங்களையும், உடன் உடனான உணர்ச்சி வெளிப்பாட்டையும் கொண்டிருப்பவை. குறிப்பாக, காதலையும், காமத்தையும் சுட்டும் கவிதைகள் 'எரிதழல் கொண்டுவா, அண்ணன் கையை எரித்திடுவோம்' வகையான வேகத்தை உள்ளடக்கியது.

மூன்று பெரும் பொருட்களை மையச்சரடாகக் கொண்டு கிளைபிரியும் கவிதைகள், காதல்-காமம், நகரம் சார்ந்த விழுமியங்கள், வாழ்வும், சாவுமான மயானத் தோற்றங்களையும், ஒன்றுடன் ஒன்று கலந்தும் பிரிந்தும் அமைந்திருக்கின்றது.

அந்தரங்க வெளிப்பாட்டினை எட்டும் வரிகளில் வாசக மனத்திற்கு நெருக்கமான வெளிப்பாட்டின்மை, முழுக்க தனிமனித ஏக்கங்களாகவும், ஆற்றாமைகளாகவும் தொக்கி நிற்காமலும், படைப்பு ரீதியான நிறைவை எட்ட முயன்றும் வாசகனை குழப்பத்திலாழ்த்துபவை. உம்: நிழல் வேட்கை என் முதுகின் மீது, அவயம் போன்ற கவிதைகள்

நகரம் மீதான அசதாவின் வெளிப்பாடுகள் புதியதானவை.

அசைவச்சிற்றுண்டி
உண்டிருந்த நகரம் (நகரம் -2)

மேலும் நகரம் - 1, நகரம் - 2, பேருந்து நகரச்தொடங்கி விட்டது. பாலிதீன் அவென்யு,(மோடியின்) நகரம், என இக்குறிப்பிட்ட கவிதைகள் மட்டுமல்லாமல் குறியீடான நகரங்கள் பல்வேறு இடங்களில் பதிவாகியிருக்கின்றன.

உம்: நகப்பூச்சு வாசனைகளே
எஞ்சியிருக்கும் இங்கிருந்து
உன்னை எப்படி மீட்டுச் செல்வேன்
(தோட்டத்தில் இரண்டு பூக்கள்)

பீடிகை குறித்த / வருத்தந்தரும் உண்மை என்னவெனில் / சொல்லவேண்டியதை / சொல்ல வேண்டிய நேரத்தில் / அவை அகன்று விட வேண்டியதுள்ளதுதான்.

உன் வருகையின் போதெல்லாம் / ஒரு தூக்கமாத்திரையைப் போல் / எனக்குள் / அமைதியைக் கொண்டு வருகிறாய்.

ஒரு முற்றுப்புள்ளியை / தவறவிடுவதன் வழி / இரண்டு வாக்கியங்களிடையே / தீராத பகையை நிறுவுகின்றான் போன்ற விசேஷமான மௌனத்தைக் கொண்ட வரிகளும் உண்டு.

சொல்லுதலும் கேட்டலும், எச்சம், பிஷப்புகளின் ராணி, நொடிமுள் தடுக்கிய வினாடி, பேசும் ஆந்தை-கவிதைகள் குறிப்பிட வேண்டியவை. மரத்தை அறுத்துக் கொண்டிருக்கும் வாள் உடைந்தது போல பல கவிதைகள் நின்று விடுகின்றன. தனது எழுத்தின் மீதும், தன் மீதும் ஒரு விதவாஞ்சையுடன் (என்னுடைய கவிதையை வாசித்தீர்களா?) இருக்க அசதா பழகிக் கொள்ள வேண்டும். அது அவரை இன்னும் சில அடிகள் நகர்த்தக் கூடும். ●

ஸ்நேகிதன் கவிதைகள்

ஜுல்பிகர் அலி முகம்மது

நகர கம்யூனிஸ்டில் பொறுப்பிலிருந்தான்
அவனொரு நடைபாதை வியாபாரி
சேகுவேராவையோ
மாவோவையோ
மூலதனத்தை பற்றியோ அவன் அறிந்திருக்கவில்லை
என்பதைக் காட்டிலும்
இவற்றின் இருப்புக் குறித்தே அவனுக்குத் தெரியாது
கான்ஸ்டபிள் மருதாச்சலத்தின் மிரட்டலையும்
வாராந்திரம் தண்டமழும் மாமூலையும்
சரிப்படுத்தவே அவன் கம்யூனிஸ்டானான்
பிரச்சனைகள் தீர்ந்து விட்ட பிறகும்
அவன் கம்யூனிஸ்டாகவே அறியப் பட்டான்
நான்கைந்து ஆர்ப்பாட்டங்களில்
நரம்பு புடைக்கக் கத்தி
நகரப் பொறுப்பை அடைந்தான்
ஆனாலும் அவனுக்கு
இன்குலாப் ஜிந்தாபாத் என்பதற்கு மட்டும்
அர்த்தம் தெரியும்
அதுவும் பழைய மருதாச்சலம்
ஏதேச்சையாய் கேட்கப்போக
பக்கத்திருந்த தோழரிடம்
கேட்டுச் சொன்னபோது தான். ●

எங்கள் வீடுகளின் சவ ஊர்வலத்தில் இசைத்துக் கொண்டிருக்கும் நீரோவுக்கு

புதிய மத்தியக் கிழக்கை அமைக்கும் நேரமிது
புதிய மத்தியக் கிழக்கின் திட்டத்தை எவர்
விரும்பவில்லையோ அவர்களை வற்புறுத்தி பணியச் செய்வோம்.
- கொண்டலிசா ரைஸ்
அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர்

எங்கள் வீடு பாழடைந்து கிடக்கிறது
சிதிலங்கள்
நூலாம்படைகள்
பொத்துக் கொண்டு வழியும் வெளிச்சம்
புதைகுழிகள்
வெடிமருந்தின் அடர்ந்த வீச்சம்
சில பிணங்கள்
எஞ்சிக் கிடக்கும் நாங்களென
எங்கள் வீடு பாழடைந்து கிடக்கிறது
மௌனமாய் உமிழும்படி
கவனத்துடன் செய்யப்பட்ட
எந்திரத் துப்பாக்கிகள்
கருணையின் வடிவமாகப் பிரயோகமாகும்

உங்கள் முகத்திற்கு எதிர்ப்பதமாய்
பிருஷ்டங்களின் புறமிருந்து
ரவைகளைப் பரப்புகிறது.

பசியும் வலியும் மிச்சங்களையும்
தின்று தீர்க்குமுன் ஆசுவாசம் வேண்டி
கைகளை நீட்டுகையில்
தாடைகளைப் பெயர்த்த அதே முஷ்டியை
நீட்டுகிறாய் கர்த்தரின் முகமூடியோடு

காலாகாலமாய்
எங்கள் சுயங்களை அழிக்கிறாய்
எல்லைகளை நிர்மாணிக்கிறாய்
ஒன்று சொல்
எங்களில் யாருக்குப் பிறந்த உரிமை உனக்கு.... ●

சிலுவைகளும் கருணை வழியும் முகமும்

கீழுதடுகளைக் குவித்து மெலிதாக வெளியேற்ற
சுவாசத்தால் நிரம்புகிறது புல்லாங்குழல்
கசியும் சுகந்தம் நிரம்பிய இசை
மேடு பள்ளங்களிலும் மணல் வெளிகளுக்கிடையிலும்
விரவியலைந்து கிடந்தது
செம்மண் சுவர்களுக்கிடையே புணர்ந்து கிடந்ததும்
குதிரையேற்றத்துக்குப் பின் களைத்து அருந்தும்
பேரிட்சையும் தண்ணீரும் தரும் ஆசுவாசமும்
போர்க்காலங்களில் ஞாபகக்கானல் தான்
இப்போது நாங்கள் போராளிகள்
எங்கள் மூதாதைகளின் எலும்புகளையும் சதைகளையும்
தின்று செரித்து ஊறிப்போன
எரிதிரவத்தை கொள்ளையிட வந்தோரிடமிருந்து
ஜீவிதத்திற்கான இடம் வேண்டி
இப்போது நாங்கள் போராளிகள்
மணற்சுவர்களுக்குப் பின்னால்
கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும்
மனைவிக்காகவும் பிள்ளைகளுக்காகவும்
இப்போது நாங்கள் போராளிகள்

இன்னுமிருக்கும் தோழர்களே
மாயை களைந்து வாருங்கள்
காதுகளில் ராக் இசை ஒழுக
மார்புகளுக்குக் குறுக்கே புனிதக் குறியிட்டு
கழுத்துச் சிலுவையை முத்தமிட்டபடி
உயிர் பறிக்க குறி வைப்பவனை
கர்த்தரின் முகம் கொண்டு
எதிர் நோக்க வேண்டியதில்லை ●

01.பசுக்கள் பன்றிகள் போர்கள் சூனியக்காரிகள் ஆகிய கலாசாரப் புதிர்கள் (2 பாகங்கள்)* மார்வின் ஹாரிஸ்; தமிழில்: துகாராம் கோபால்ராவ் * விலை: 205
(ஹிந்துக்கள் ஏன் பசுக்களை வணங்குகிறார்கள், முஸ்லிம்களும் யூதர்களும் ஏன் பன்றிக்கறியைத் தின்ன மறுக்கிறார்கள் என்பன போன்றவற்றை ஆராயும் நூல்.)

02. குருவும் சீடனும் * நித்ய சைதன்ய யதி; தமிழில் ப.சாந்தி * விலை: 100
(நடராஜ குருவும் நித்ய சைதன்ய யதியும 1950களில் சேர்ந்து வாழ்ந்த நாட்களில் எழுதப்பட்ட குருகுலக் குறிப்புகளின் தொகுப்பு.)

03. மறையும் மறையவர்கள் முதலிய ஆய்வுக் கட்டுரைகள் * எஸ்.இராமச்சந்திரன் * விலை: 80

04. மெல்லக் கனவாய் பழங்கதையாய் (நாவல்) * பா.விசாலம் * விலை: 180

05. ஞானரதம் இதழ்த்தொகுப்பு * தொகுப்பு: வே.சபாநாயகம் * விலை: 350

06. ஞானரதத்தில் ஜெயகாந்தன் * தொகுப்பு. வே.சபாநாயகம் * விலை. 80

07. விசும்பு (அறிவியல் புனைதைகள்) * ஜெயமோகன் * விலை 85

08. இலக்கிய உரையாடல்கள் (நேர்காணல்களின் தொகுப்பு) * ஜெயமோகன் & சூத்ரதாரி * விலை: 150

09. யூமா வாசுகியிலிருந்து சமுத்திரம் வரை (கட்டுரைகள்) * வெங்கட் சாமிநாதன் * விலை: 120

10. இன்னும் சில ஆளுமைகள் (கட்டுரைகள்) * வெங்கட் சாமிநாதன் * விலை:120

11. கள்ளர் சரித்திரம் * ந.மு.வேங்கடசாமி நாட்டார் * விலை: 65

12. பிரதாபசந்திர விலாசம் (தமிழின் முதல் இசை நாடகம்) * ப.வ.ராமசாமி ராஜு * விலை: 100

13. எதிர்காலம் என்று ஒன்று (அறிவியல் புனைகதைகள) * தொகுப்பாசிரியர். கோபால் ராஜாராம் * விலை 80

14 ஓவியத்தின் குறுக்கே கோடுகள் (கட்டுரைகள்) * பாரி பூபாலன் * விலை: 40

15. அட்லாண்டிக்கு அப்பால் (கட்டுரைகள்) * பி.கே.சிவகுமார் * விலை: 120

எனி இந்தியன்
பதிப்பகம்

#102, எண்: 57, பி.எம்.ஜி. காம்ப்ளக்ஸ், தெற்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 600017
Ph: 044-24329283 * Email: customerservice@anyindian.com

அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களையும் ஆன்லைனில் வாங்க:
http://www.anyindian.com/

தமிழ்நாட்டுக்குள் தபால்செலவு இலவசம்

உடும்புப்பிடி?

முகமது அலி

அண்மையில் கண்டாச்சிபுரத்தில் நடந்து முடிந்த எழுத்தாளர் சந்திப்பு விருந்தில் உடும்புக்கறி அமர்க்களப் பட்டதாகக் கூறப்படுகிறது. வேட்டையால் அழிந்து வரும் மற்றொரு விலங்கு உடும்பு என்பதையும், இந்த ஊர்வன, 1972 ஆம் வருடத்திய புகழ்பெற்ற வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டப் பிரிவின் முதல் அட்டவணையில் உள்ளது என்பதையும், இச்சட்டத்தின்படி உடும்பு பிடிப்பதோ, கொல்வதோ, விற்பதோ, உண்பதோ 16 மாத சிறை தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதையும் அதில் கலந்து கொண்ட எந்த கலாரசிக, எழுத்துலக, இலக்கியவாணர்களுக்கு தெரியாது போலும்.

நடந்த விருந்தில் யாரோ ஒரு வலதுசாரிய எழுத்தாளர் "ஆகா உடும்புக்கறி என்ன ருசி....." என சப்புக் கொட்டி சிலாகித்ததாகவும், அதைக் கேட்ட இடதுசாரி எழுத்தாளர் ஒருவர் " அதுமட்டுமல்ல உடும்புக்கறி உடம்புக்கு நல்லது....." என மதுவாய் மலர்ந்ததாகவும் கூறப்படுகிறது. சுவை என்பது ஊட்டப்படுவதேயன்றி இயல்பானதல்ல. சந்தேகமிருந்தால் உப்பின்றி, உரைப்பின்றி எதையும் வாயில் வைத்துப் பார்க்கட்டும்.......

உடும்புகள், (Monitor lizard) இந்தியாவில் 4 வகைகளாகக் காணப்படுகின்றன. சாதாரண உடும்பு, பாலை உடும்பு, மஞ்சள் உடும்பு, நீர் உடும்பு என்ற அந்நான்கில் தமிழ்நாட்டின் ஒரே ஒரு சாதாரண உடும்பு எல்லா வகையான காடுகளிலும், ஊர்ப்புறங்களிலும் தமது உணவான சிறு பாலூட்டிகள், பறவைகள், முட்டைகள், ஓணான், அரணை, தவளை, ஆமை, மீன், நண்டு, இறால், புழுப்பூச்சிகள் மற்றும் அழுகிய இறைச்சி ஆகியவற்றை தேடி உண்டு வாழ்கின்றன.

வீட்டுப் பல்லிகள் போலின்றி கை விரல்களின் கூரிய நகங்களால் பற்றி, தொற்றி ஏறி செடி, கொடி, மரங்களிலும் வாழும் இந்த உழவரின் நண்பனின் அமைதியான வாழ்க்கை சென்ற 50 ஆண்டுகளில் மிகக் கடுமையாக பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. வேட்டை விகிதம் தோராயமாக "ஓதத்திற்கு நல்லது......... வாதத்திற்கு நல்லது...." என்ற கிராமிய மூடநம்பிக்கைகள் காரணமாக அழிக்கப்பட்டது 30%. கஞ்சிரா, உடுக்கை, பெல்ட், பர்ஸ் போன்று தாளக் கருவிகள், அழகு சாதனங்களுக்காக கொல்லப்பட்டது 30%. " சும்மா" எனத் தீர்த்துக் கட்டப்பட்டது 30%..... என 50 கோடி ஆண்டுகள் பல்லூழிக்கால தொல் பல்லியினமான உடும்புகள் நம் கண்முன்னே காணாமல் போய்க்கொண்டிருப்பது யாருக்கும் தெரியவில்லை.

ஆனால் 'உடும்புப்பிடி' என்பது மட்டும் நர்த்தனமாடாத ஊடகங்களே இல்லை எனலாம். வஞ்சிக்கோட்டை வாலிபன், நாயகன், அல்லது அம்புமாமா கதை, விக்கிரமாதித்தன் கோட்டைச் சுவர்மீது ஏற உடும்பைப் பயன்படுத்தியதைப் பார்த்துவிட்டு உயிரிலக்கணம் அறியா நமது ஊடக வாதிகள் அதை நம்பி ஏற்றதுடன், மக்களையும் நம்பச் செய்து விட்டனர். பெரும் சமூகக் குற்றமிது; புனைவுகளை நம்பும் எவரும் அதேபோல் உயரமான கட்டடத்தின் மீது ஏறிக் காட்டட்டும்.

இயற்கையின் நியதியாக சுற்றுச் சூழல் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க பங்காற்றி வரும் உடும்புகள் குறித்து சென்னையின் பாம்புகள் நிபுணர் ரோமுலஸ் விட்டேகர், இந்திரநீல் தாஸ் ஆகியோர் விரிவான ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். நாம் உணர்வது எப்போது..........? ●

ஜொஸ் அன்றாயின்

சிறப்புச் சிறுகதைகள்

பிறழ்வு

நான் என்னிடமிருந்து தொலைவிலிருக்கிறேன். சுற்றியுள்ள உலகம் அதைவிட மிகத் தொலைவிலுள்ளது. சக மனிதர்கள் என்னைப் பார்த்து முறுவலிப்பது கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து நட்சத்திரங்கள் மின்னுவது போலத் தோன்றுகிறது. ஒருநாள் நான் பக்கத்து மேஜையில் இருக்கும் சக ஊழியரைப் பார்த்து 'எப்படி உங்களால் மிகத் தொலைவிருந்து அழகாகச் சிரிக்க முடிகிறது?' என்றேன். அவர் தானும் அதே கேள்வியை என்னிடம் கேட்க எண்ணியதாகப் பதிலளித்தார். 'சுயத்திலிருந்து விலகியிருக்கும் ஒருவரால் எப்படி ஒழுங்காக அலுவல்களைச் செய்ய முடியும்?' எனக் கேள்வி எழலாம். ஆனால் ஒரு கணினியின் நேர்த்தியுடன் என்னால் வேலையைச் செய்ய முடியும்.

என்னுடைய மேலாளர் குறிப்பிட்ட கோப்பை கேட்டாரென்றால் சற்றும் யோசிக்காமலேயே ஒரு கண நேரத்தில் அதை அவருக்கு எடுத்துக்கொடுக்க முடியும். நான் தட்டச்சுச் செய்யும் வர்த்தகக் கடிதங்கள், அறிக்கைகளிலும் எந்தத் தவறையும் கண்டுபிடிக்க இயலாது. ஆனால் அதிலுள்ள வார்த்தைகள் கணினியைப் போலவே எனக்கும்

அர்த்தமற்றவைகளாகத் தோன்றுகின்றன. உண்மையில் நானும் என்னுடைய கணினியும் ஒரே மாதிரிதான் வேலை செய்கிறோம். இதனால் எங்கள் இருவரின் வாழ்வும் பின்னிப்பிணைந்து விட்டன. என் கணினியின் விசைப்பலகையிலுள்ள பொத்தான்கள் என் விரல் கணுக்களின் நீட்சியாகவே இருக்கின்றன. நாங்கள் இருவரும் நெருக்கமாக இருப்பதால் என்னுடைய மூளையும் கணினியின் ஒரு அங்கமாக மாறிவிட்டது. என் மனதில் ஏற்படும் பிம்பங்களை என் கணினி தன்னுடைய திரையில் காட்டுகிறான். நான் என் மனதில் நினைப்பவற்றை என் கணினி உள்வாங்குவது போல் என்னுடைய நண்பர்கள் யாரும் உள்வாங்கியதாக எனக்கு நினைவில்லை. எனக்கும் என் கணினிக்கும் இருக்கும் அந்நியோன்யம் காரணமாக என்னால் எந்தத் தவறுகளும் செய்யாமலேயே வேலை செய்ய முடிகிறது. அப்படியே ஏதாவது பிழை இருந்தாலும் ஒரு நல்ல நண்பனை போல என் கணினி அதைச் சுட்டிக்காட்டுவதோடு அதை திருத்துவதற்கான வழிமுறைகளையும் கொடுக்கிறான். நான் என்னுடைய கணினியை மிகவும் நேசிக்கும் காரணமும் இதுதான்.

நான் மிகவும் நேர்த்தியாக வேலை செய்வதால் என்னுடைய மேலாளருக்கு என்மேல் மிகுந்த மதிப்பு உண்டு. ஆனால் என்ன இருந்தாலும் என்னுடைய செயல்பாடுகளில் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாக அவர் கருதினார். ஒருநாள் அவர் என்னை அழைத்து 'உங்களிடம் உள்ள பிரச்சினை என்னவென்று கண்டுபிடித்துவிட்டேன். நீங்கள் கணினியைப் போல வேலைகளை எந்த உணர்ச்சியுமில்லாமல் செய்கிறீர்கள். மனிதர்கள் என்றால் உணர்ச்சிகள் வேண்டும். நம்முடைய நிறுவனம் முன்னேற வேண்டுமானால் நாம் எல்லோரும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினரைப் போல் பழக வேண்டும். அதற்கு உணர்ச்சிகள் முக்கியம்' என்றார். எனக்குச் சிரிப்பாக வந்தது. நான் அவருக்கு "உணர்ச்சிகளின் சிகரம்" என பட்டப்பெயர் வைத்துவிட்டேன். சக ஊழியர்களும் அந்தப் பெயரை ஆமோதித்தார்கள்.

நானும் சக ஊழியர்களும் எங்களுக்குள் மேலாளரை பட்டப்பெயரிட்டு குறிப்பிடுவது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். எங்களில் சிலரின் பதவி உயர்வுக்கு ஏற்பாடு செய்திருந்தார் அவர். எங்களைப் போலவே வேலை செய்த கணினிகளுக்குப் பதவி உயர்வு இல்லை. இது எங்களையும் எங்களின் கணினிகளையும் பிரிக்கச் செய்யப்படும் சதி என எனக்குப்பட்டது. பதவி உயர்வு பெற்ற மற்ற சக ஊழியர்களின் முகங்கள் சோகத்துடன் இருப்பதைப் பார்த்தபோது அவர்களும் அவ்வாறுதான் எண்ணியிருக்க வேண்டும் எனத் தோன்றியது. ஆனால் நான் அவர்களைப் போல அமைதியாக இருக்கத் தயாராக இல்லை. என்னுடையப் பணிவிலகல் கடிதத்தை உடனே மேலாளரிடம் கொண்டு கொடுத்துவிட்டேன். அவர் அதிர்ந்து போனார். 'உங்களுடைய ஆத்திரம் எனக்குப் புரிகிறது. உங்களுடைய திறமைக்கு இந்த உயர்வு போதாது என்பது எனக்கு தெரியும். நான் மேலதிகாரிகளிடம் சிபாரிசு செய்து இதைவிட நல்லநிலைக்கு ஏற்பாடு செய்கிறேன்' என்றார். எனக்கு ஆத்திரமும் அழுகையுமாக வந்தது. கோபத்தில் கட்டிடமே அதிரும்படி கத்திவிட்டேன். ஒரு வழியாக மேலாளர்

எனக்கு என்னுடையப் பழைய வேலையையே கொடுத்துவிட்டார். நான் சுயநலவாதியல்ல. மற்றவர்களுடைய நலத்தில் அக்கறை கொண்டவன். எனவே என்னுடைய மற்ற சக ஊழியர்கள் தங்களுடைய நல்ல நண்பனாக இருக்கும் கணினியை இழந்து என்ன பாடுபடுவார்கள் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. இதை மனதில் கொண்டு என்னுடைய சக ஊழியர்களுக்கும் அவரவர்களின் பழைய வேலையையே திருப்பிக் கொடுக்குமாறு எங்களுடைய மேலாளரைக் கேட்டுக்கொண்டேன். அவர் அவர்களுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருவதாகக் கூறினார் எனக்கும் அது சரியாகப் பட்டது.

மேலாளர் அறையை விட்டு வந்ததும் என்னுடைய சக ஊழியர்கள் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்கள். நான் அவர்களுக்காகவும் பரிந்து பேசியதை அவர்கள் எல்லோரும் வெளியிருந்து கேட்டிருக்க வேண்டும். எனக்கு என் செயலைக் குறித்துப் பெருமிதமாக இருந்தது. சந்தோசத்துடன் என்னுடைய நண்பனான என்னுடைய கணினியை தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

அன்று எங்கள் நிறுவனத்தை நிறுவியவரின் நினைவு தினம் என்பதால் அரைநாள்தான் வேலை. அதனால் மதியமானதும் வீட்டிற்குப் புறப்படத் தயாரானேன். ஒரு சில பதவி உயர்வு பெற்ற ஊழியர்கள் மட்டும் மேலாளரைச் சந்திக்கும் பொருட்டு அலுவலகத்திலேயே அமர்ந்திருந்தார்கள். அவர்கள் என்னைப் போலத் தங்களுக்கும் தங்கள் பழைய வேலையைத் தருமாறு மேலாளரை கேட்கப்போகிறார்கள் என்று எண்ணிக்கொண்டேன். அவர்கள் என்னைப் பின்பற்றுவது எனக்கு மிகுந்த சந்தோசமளித்தது. அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்து பேருந்தில் ஏறிக்கொண்டேன். பேருந்திலிருந்து இறங்கி அறைக்குச் செல்லும் வழியில் உணவுப் பொட்டலம் ஒன்றை வாங்கி என்னுடைய அறையை நோக்கி நடந்தேன்.

அறைக்குள் இரவிற்கான இருள் எல்லாம் பதுங்கி இருப்பதாக உணர்ந்தேன். ஜன்னல்களைத் திறக்க அந்த இருள் பகலில் சென்று கரைந்துவிட்டது. பேரிழப்பு ஏற்பட்டதாக உணர மீண்டும் ஜன்னல்களை மூடிக்கொண்டேன். என் மனம் அமைதியை அடைந்தது. ஆனால் என்னைச் சுற்றியுள்ள சிறு உலகத்துக்கு அது பிடிக்கவில்லை போலும். அவைகள் இருளில் என்மீது மோத ஆரம்பித்தன. வேண்டாவெறுப்புடன் ஜன்னல்களை மீண்டும் திறந்தேன். எலி ஒன்று திறந்த ஜன்னல் வழியாக வெளியே ஓடியது. ஓடிப்போன எலியுடன் உலகத்திற்கும் எனக்குமான உறவு முறிந்து போனதாக எனக்குப் பட்டது. என் அறையிலுள்ள என் புத்தகங்களும், செய்தித்தாள்களும், தொலைகாட்சிப் பெட்டியும் கூட என்னைவிட்டுப் போய்விடுமோ என்ற பயம் என்னைத் தொற்றிக்கொண்டது. மீண்டும் எழுந்து சென்று ஒரு ஜன்னலை மட்டும் லேசாகத் திறந்திருக்கும்படி செய்துவிட்டு மீதி எல்லா ஜன்னல்களையும் மூடினேன். பயம் நீங்கியது. ஆனாலும், மனமும், வயிறும் வெறுமையாக இருப்பதாக உணர்ந்தேன்.

வெறுமையிருந்து விடுபட ஏதாவது சாப்பிட வேண்டும் போலிருக்க நான் வாங்கிவந்த உணவுப் பொட்டலத்தை பிரித்துச் சாப்பிட ஆரம்பித்தேன். சுவையற்றதாக இருந்த உணவு என்ன என்று சோதித்துப் பார்க்க, அது தயிர் சாதம் போல தோன்றியது. என் நாக்குக் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண்டிருப்பதாக எனக்குப் பட்டது. இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். சுவை உணர்ச்சியைத் தூண்ட நல்ல காரத்துடன் கோழிக்கறி சாப்பிட்டால் நன்றாயிருக்கும் என்று தோன்றியது. அதை நினைக்கும் போதே என் நாக்கில் எச்சில் ஊறியது. உடனே எழுந்து கை கழுவிக்கொண்டு நல்ல கோழிக்கறி வாங்குவதற்காகப் புறப்படத் தயாரானேன். அப்போது பல தீயணைப்பு வண்டிகள் பயங்கரச் சத்தத்தை எழுப்பிய வண்ணம் நான் குடியிருக்கும் கட்டிடத்தின் அருகிலிருக்கும் பிரதானச் சாலைக்கு வந்து சேர்ந்தன. வெளியே பயங்கர கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. நான் அறையை விட்டு இறங்கி வெளியே ஓடினேன். எங்கள் பகுதியிருந்து சற்று தொலைவில் இருக்கும் கட்டிடங்களில் தீ பயங்கரமாகப் பற்றி எரிந்து கொண்டிருந்தது. எங்கும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. அந்தப் புகை உலகத்தையே இருளாக்கி விடும் போல இருந்தது. தீயணைப்புப் படையினர் தீயை அணைக்கத் தீவிரமாகப் போராடிக்கொண்டிருக்க ஆங்காங்கே மக்கள் கூட்டம் கூட்டமாக கூட ஆரம்பித்தனர். நிலவரத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஒரு கூட்டத்தை நோக்கிச் சென்றேன். அங்கு ஒருவர் தீ பக்கத்துப் பகுதிகளுக்கும் பரவிக்கொண்டிருப்பதாகவும், பலப்பேர் இறந்திருக்கக் கூடும் எனவும் தன் அருகிலிருப்பவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தார். எனக்கும் ஏதாவது சொல்ல வேண்டும் என்று தோன்றியது. அதனால் அவரைப் பார்த்து, 'ஏன் எரிகிறது?' என்றேன். அவர் என்னை ஒருவிதமாக பார்த்தார். எனக்கு என்னுடைய தவறு புரிந்தது. நான் செய்ய வேண்டியதை விட்டுவிட்டு தேவையில்லாமல் மற்ற விஷயங்களில் கவனத்தைத் திருப்புவதனால்தான் இப்படி நடக்கிறது. ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால் அதில்தான் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். மனதை ஒருமுகப்படுத்துதல் மிகவும் அவசியம் என எனக்கு தோன்றியது. அதனால் நான் ஏற்கனவே செய்ய நினைத்த விசயத்தைச் செயல்படுத்தும் விதமாக 'இங்கே நல்ல கோழிக்கறி எங்கு கிடைக்கும்?' என்று அவரையே திருப்பிக் கேட்டேன். அங்கே இருந்த அனைவரும் என்னை எரிச்சலுடன் பார்த்தார்கள். அவ்வளவு கூச்சலும் குழப்பமும் இருந்த இடத்தில் நான் தனியனாக உணர்ந்தேன். பெரும் பீதி என்னைத் தொற்றிக்கொள்ள உடம்பெல்லாம் வேர்த்து போய்விட்டது. அங்கிருந்த அனைவரும் மிருகங்களை விடக் கொடுமையானவர்களாகத் தோன்றினார்கள். இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் அவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமுமிருக்கவில்லை. எனவே அவ்விடமிருந்து மெதுவாக நழுவி அறையை நோக்கி நடந்தேன். நடக்க நடக்க, உருண்டையான உலகம் என்னை விட்டு என் கைகளிலிருந்து உருண்டோடிக் கொண்டிருப்பதாக நான் உணர்ந்தேன்.

நான் அறைக்குத் திரும்பியபோது, என் அறையின் வாசலில் என் பால்ய கால நண்பனொருவன் நின்று கொண்டிருந்தான். நானும் அவனும் சிறு வயதிலிருந்து சேர்ந்தேதான் படித்தோம். பல வருடங்களுக்கு அப்புறம் அவனை அப்போதுதான் பார்த்தேன். அவன், ஆள் மிகவும் மாறிவிட்டிருந்தான். 'என்னை எதிர்பார்க்கவில்லை இல்லியா?' எனச் சிரித்தபடியே கேட்டான். அவன் எதற்குச் சிரிக்கிறான் என்று எனக்கு புரியவில்லை. 'நான் எதையும் பார்க்கவில்லை' என்று அவனுக்குப் பதிலளித்தேன். அவன் உற்சாகத்துடன் அரசியலைப் பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டான். இந்தியாவின் முன்னேற்றத்திற்குப் பொதுவுடமை ஆட்சிதான் நல்லதென்றும், இந்தியாவில் பொதுவுடமை சோவியத் யூனியனைப் போல தோல்வியடைய வாய்ப்பில்லை எனவும் கூறினான். நான் மௌனமாயிருந்தேன். என் மௌனத்தைக் கண்ட அவன் எனக்கு அரசியலில் நாட்டம் இல்லை என நினைத்து பேச்சை மாற்றி என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி விசாரித்தான். 'வாழ்க்கையில் உன்னோட லட்சியம் என்ன? எப்பக் கல்யாணம் பண்ணிக்கப்போற?' என்று கேட்டான். நான் பதில் சொல்லமுடியாமல் விழித்தேன். அவன் தொடர்ந்து "காதல், காமம், கல்யாணம் பற்றி உன்னோட கருத்து என்ன?" என்று கேட்டான். எனக்குப் பதிலளிக்க வேண்டும் எனத் தோன்றியது. வெறும் பதிலல்ல, சரியான இடத்தில் சரியான பதில் சொல்ல வேண்டும் என்று என்னுடைய அலுவலக அனுபவம் காட்டியது. அதனால் மிகுந்த கவனத்துடன் 'தேங்க்ஸ்' என்றேன். என்னுடைய நண்பன் என்னை குறித்து ஏமாற்றம் அடைவதாக கூறினான். எனக்கு அவனைப் பார்க்க ஆச்சர்யமாக இருந்தது.

நண்பன் சென்ற பிறகு கட்டிலுக்குச் சென்று படுத்துக்கொண்டேன். தூக்கம் வரவில்லை. எதையோ நான் இழந்துவிட்டது போலத் தோன்றியது. முயற்சி செய்து மெல்லக் கண்களை மூட, பலவித வண்ண நூலிழைகளால் சேலை ஒன்று நெய்யப்படுவதைக் கண்டேன். அச்சேலை காற்றில் படபடக்க ஆரம்பித்தது. மெல்ல மெல்ல அந்த சேலையில் ஒரு பெண் உருக்கொள்ள ஆரம்பித்தாள். அவளின் ஒளியுள்ள கண்கள் என்னைப் பார்த்து புன்னகைத்தாள். அவளின் அழகிய உடல் என்னில் காம கிளர்ச்சியை ஏற்படுத்தின. அவளின் ஸ்பரிசத்தில் என் இறந்து போன ஆன்மா உயிர்கொள்ள, கைமதுனம் செய்ய ஆரம்பித்தேன். என்ன நேர்ந்ததென்று தெரியவில்லை. திடீரென அப்பெண் சேலைக்குள்ளிருந்து மறைந்து போனாள். அதிர்ச்சியில் கண்களை திறக்க அந்தச் சேலையும் கூட என் அருகில் இல்லாமல் இருப்பதை உணர்ந்தேன். மீண்டும் என் ஆன்மா வறண்டுபோயிற்று. என் ஆண்குறி என்னிடமிருந்து மிகத் தொலைவி-ருப்பதாகத் தோன்றியது. வெறுப்பு தோன்ற கைமதுனம் செய்வதை விட்டுவிட்டு ஜன்னலைத் திறந்து வெளியே எட்டிப்பார்த்தேன். சாலையில் மனிதர்களும், வாகனங்களும் பொம்மைகள் போல் சென்றுகொண்டிருப்பதைப் பார்த்தேன். நான் அந்த உலகிலிருந்து விலகி வேற்று கிரகத்தில் தனியனாக இருப்பதை போல உணர்ந்தேன். அந்தத் தனிமை என்னை மிகவும் அழுத்தியது. சற்று தூங்கினால் தேவலை எனத்

தோன்ற மீண்டும் கட்டில் போய் படுத்துக்கொண்டேன். கனவும் நனவும் மாறிமாறி வந்து என்னை ஏதோ ஒரு உலகத்துக்கு கொண்டு சென்றது. திடீரென அலாரம் அடித்தது. விடிந்துவிட்டது. தூங்கினேனா? ஆம் - இல்லை. எதைப்பற்றியும் என்னால் தீர்மானகரமாக யோசிக்க முடியவில்லை. இயந்திரக் கதியில் எழுந்துகொண்டேன். குளித்து உடைமாற்றித் தொலைக்காட்சிப்பெட்டியை ஆன் செய்ய, அதில்அன்றைய வானிலை அறிக்கை ஓடிக்கொண்டிருந்தது. அன்றைய வெப்பநிலை வெறும் 17 டிகிரிதான் என்பதை அச்செய்தியறிக்கையிலிருந்து தெரிந்துகொண்டேன். குளிக்கும்போது நல்ல குளிராக இருந்ததாக இப்போது எனக்குத் தோன்றியது. 'சில இடங்களில் மழைப் பெய்யக்கூடும் எனவும், கடலிலிருந்து மணிக்கு 40 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீச வாய்ப்புள்ளது எனவும், சில இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படலாம்' எனவும் அந்த அறிக்கை தொடர்ந்து கூறியது. அந்தச் செய்தியறிக்கை எனக்கு அயர்ச்சி அளிப்பதாகத் தோன்றவே தொலைக்காட்சிப் பெட்டியை ஆப் செய்துவிட்டேன். மீண்டும் எதையோ இழந்துவிட்டது போன்ற உணர்வு எனக்குள் தலைதூக்கியது. இழந்தது என்ன என்று எனக்குப் புரியவில்லை. திடீரென்று அலுவலகத்திலுள்ள என் நண்பனான கணினியின் ஞாபகம் வந்தது. அவனை உடனே பார்த்தாக வேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது. இப்போது எனக்கு எதையோ இழந்தது போன்ற உணர்வு ஏற்படுவதன் காரணம் புரிந்தது. என்னால் என் நண்பனான கணினியை ஒருபோதும் பிரிந்திருக்க முடியாது. அவனை பார்க்க வேண்டும் என்னும் எண்ணம் என் ஆன்மாவை உந்த, நான் உடனே அலுவலகத்திற்குச் செல்லும் பேருந்தைப் பிடிப்பதற்காக பேருந்து நிலையத்துக்கு வேகமாக சென்றேன்.

தொப்பை

ஜோஸ் அன்றாயின்

உங்களுக்கு நான் சொல்ல போகிற விசயங்கள் பிடிக்காமல் போகலாம். இருந்தாலும் பரவாயில்லை. அது உங்களுடைய பிரச்சனை. சரி நான் சொல்ல வந்ததை சொல்கிறேன். நான் நல்ல வசீகாமானவன். அதே நேரம் அந்த வசீகரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கு நான் பெரிய பிரயத்தனங்கள் எதுவும் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் அது எவ்வளவு தவறு என்பதை ஒரு நாள் உணர்ந்தேன். ஒருநாள் அலுவலகத்திற்கு செல்வதற்காக பேண்டும், சட்டையும் போட்டுக்கொண்டு பெல்ட்டை கட்டினேன். அது எவ்வாறு தோற்றமளிக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக குனிந்து பார்த்தேன். என்னால் நான் கட்டியிருந்த பெல்டை பார்க்க முடியவில்லை. நான் பார்க்க முடியாதவாறு என்னுடைய தொப்பை நான் கட்டியிருந்த பெல்டை மறைத்தது. அது என்னை எந்த அளவுக்கு அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.

என்னுடைய கல்லூரி நாட்களில் மாணவர் அரசியல் பங்குகொண்டு நான் பேசிய மேடை பேச்சுக்கள் எனக்கு ஞாபகத்திற்கு வந்தன. அப்போது நான், நாட்டில் சமதர்ம சமுதாயம் படைக்க வேண்டுமென்றால் முதலில் தொப்பைகளை ஒழிக்க வேண்டும். ஏனென்றால் தொப்பையானது ஊழல் பேர்வழிகள், சோம்பேறிகள், சமூகத்தைச் சுரண்டி வாழும் ஒட்டுண்ணிகள் மற்றும் இவர்களுக்கெல்லாம் கைக்கூகளாக விளங்கும் போலீசார் ஆகியோர்களின் முக்கிய அங்க அடையாளமாகும். ஆகலால்

தொப்பைகளை ஒழிக்காமல் சமதர்ம சமுதாயம் அமைப்பதற்கு வாய்ப்பே இல்லை என முழங்கினேன். இப்போது என்னுடைய தொப்பை எனக்கு பூதாகரமாக தோன்றியது. நான் நொடிந்து போய் உட்கார்ந்துவிட்டேன். என் மனைவி என்ன ஆச்சி ஏதாவது பிரச்சினையா என வினவினாள். நான் ஒன்றுமில்லை என்று சொல் மழுப்பிவிட்டேன். ஆனால் தொடர்ந்து இந்த தொப்பை பிரச்சனை என்னை மிகவும் வாட்டிக் கொண்டிருந்தது. இரண்டு மூன்று நாட்களாக என்னால் எந்த வேலையும் செய்ய முடியாமல் போனது. ஒரு வழியாக தினமும் ஓடுவதுதான் தொப்பையை குறைப்பதற்கான எளிய வழி என்பதை என்னுடைய நண்பர் ஒருவரிடமிருந்து அறிந்துகொண்டேன்.

தினமும் ஓடுவது என்று தீர்மானம் எடுத்தாலும், அதை செயல்படுத்துவது எனக்கு மிகவும் வேதனை தரும் விசயமாகிவிட்டது. நான் ஓட ஆரம்பித்தால் இந்த சமூகத்திலுள்ளோர் அனைவருக்கும் எனக்குத் தொப்பை இருப்பதை பகிரங்கப்படுத்துவது போல் ஆகிவிடும். பிறகு அவர்கள் எல்லோரும் என்னை ஒரு ஒட்டுண்ணியாகத்தான் பார்ப்பார்கள். நான் ஓடாமல் விட்டுவிட்டால், இந்த தொப்பைப் பெரிதாகி, என் வீட்டு வாசலையும், அலுவலகத்தின் வாசலையும் பெரிதாக்க வேண்டிய கட்டாயத்திற்கு இட்டுச் சென்றுவிடும். அது இதைவிட அவமானகரமான விசயமாகிவிடும். அதனால் எனக்கு தினமும் ஓடுவதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லாமல் போனது. அரைகுறை மனதுடன் காலையில் எழுந்து ஓட ஆரம்பித்தேன். அப்பொழுதுதான் தெரிந்தது, நான் தனியனல்ல என்று. அந்த காலை வேளையில் அந்த நிழற் சாலையானது மனிதர்கள் யாரும் இல்லாமல் வெறும் தொப்பைகளால் நிறைந்திருந்தது.

அந்த சாலை என்ன, நகரம் முழுவதுமே தொப்பைகளால்தான் நிறைந்திருந்தது எங்கும் நிறைந்திருக்கும் இந்த தொப்பைகள் மக்களை சேரிகளுக்கும், புறநகர் பகுதிகளுக்கும் விரட்டியடித்துவிட்டது போல தோன்றியது. 'எப்படி இந்தத் தொப்பைகளால் மக்கள் எல்லோரையும் துரத்திவிட முடிந்தது?' என மனதில் அசை போட்டவண்ணம் ஓடிக்கொண்டிருக்கும்போது, எல்லோரும் விரட்டியடிக்கப்படவில்லை என்பதை ஊர்ஜிதம் பண்ணுவது போல் எங்கள் பகுதிக்குப் பால் பாக்கெட்டுகளை விநியோகம் செய்யும் கிழவித் தன்னுடைய தள்ளுவண்டியைத் தள்ளி வந்துகொண்டிருந்தாள். வெயிலானாலும், மழையானாலும், இவள் தன்னுடைய தள்ளுவண்டியில் பால் பாக்கெட்டுகளை எடுத்துக்கொண்டு கிளம்பிவிடுவாள். மழைக்காலங்களில் சூரியன் காணாமல் போய்விடுவதுண்டு. ஆனால் இவளோ எங்கள் பகுதியெங்கும் தன்னுடைய தள்ளுவண்டியுடன் நிறைந்திருப்பாள். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கடந்து செல்லும் போது, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். அவள் முகத்தில் புன்னகை பூத்தது. அவள் என்னுடையத் தொப்பையைக் குறைக்கும் முயற்சியை தன்னுடைய புன்னகையின் மூலம் ஆமோதிப்பது போல் தோன்றியது.

முதல் நாள் என்னால் நீண்ட தூரம் ஓட முடியவில்லை. கால்கள் வலிக்க ஆரம்பிக்க ஓடுவதை நிறுத்தி, ஓடிக் கொண்டிருக்கும் மற்ற தொப்பைகளை அவதானித்தேன். அந்தத் தொப்பைகள் தொடர்ந்து

ஓடுவதற்கு அணிந்திருக்கும் விலையுயர்ந்த காலணிகள்தான் காரணம் என்பதை என்னால் உணரமுடிந்தது. நான் அணிந்திருக்கும் காலணிகளைப் பார்த்தேன். எனக்கே என்னைப் பற்றிய கழிவிரக்கம் உண்டாயிற்று. நான் இப்படிப்பட்ட சாதாரண காலணிகள் அணிந்திருப்பதை மற்ற தொப்பைகள் பார்த்து நகைப்பது போல் எனக்கு தோன்றின. நான் நல்ல சம்பளம் வாங்கும் தலைமை மென்பொறியாளர் என்பதால் காசு என்பது எனக்கு ஒரு பிரச்சினையாக எப்போதும் இருந்ததில்லை. அதனால் அன்றைக்கே கடைக்கு சென்று விலையுயர்ந்த காலணிகளை வாங்கினேன்.

நல்ல காலணிகள் அணிந்திருந்ததனால் மறுநாள் ஓடும்போது எனக்கு கால்கள் வலிக்கவில்லை. அதனால் நான் நீண்ட தூரம் ஓடினேன். ஓடிய ஓட்டத்தில் என் உடம்பெங்கும் வியர்வை வழிந்தோடி ஆடைகளையெல்லாம் நனைத்துவிட்டது. அப்போது அந்த பால்கார கிழவி தன்னுடைய தள்ளுவண்டியுடன் எதிர் திசையிருந்து வெளிப்பட்டாள். அவள் என் காலணிகளையும், வியர்வையில் உடலுடன் ஒட்டிப்போன ஆடைகளையும் பார்த்தாள். பின் என்னைப் பார்த்து புன்னகைத்தாள். நான் இனிமேல் சமூகத்தின் ஒட்டுண்ணியல்ல என்று அவள் எனக்கு அங்கீகாரம் வழங்குவது போல் தோன்றியது. அந்த அங்கீகாரம் கிடைத்த உற்சாகத்தில் நான் இன்னும் வேகமாக ஓடினேன். ஆனால் திடீரென்று ஏதோ இனம் புரியாத உணர்வு என்னை மின்னல் போல் தாக்கியது. ஓடுவதை உடனே நிறுத்திவிட்டேன். அந்தக் கிழவி மோசமானவள். சூது நிறைந்த சூனியக்காரி. அவள் என்னைப் பார்த்து புன்னகைக்கவில்லை. மாறாக ஏளனமாக சிரித்திருக்கிறாள். நான் என் மனைவிக்கு தண்ணீர் எடுத்துக் கொடுப்பது போன்ற சிறு உதவிகளையும் செய்யாதிருப்பது, பிஸ்கட் வாங்கப் போனால் கூட காரில் போவது, வெயிலில் காலணிகள் இல்லாமல் நடந்துபோன சிறுமிக்கு எந்த உதவியும் செய்ய முன்வராதது போன்ற விசயங்கள் எல்லாம் இவளுக்கு எப்படித் தெரிந்தது? எது எப்படியிருந்தாலும் இவ்வளவு தொப்பைகள் இருக்க கிழவி என்னை மட்டும் குறி வைத்து கேலிக்கணைகளால் துன்புறுத்துவது சரியல்ல. எனக்கு வந்த கோபத்தில் அவளை கொலை செய்துவிடலாமா என யோசித்தேன். ஆனால் அது முடியாதக் காரியம். ஏனென்றால் அவள் சமூகத்தின் மனசாட்சியாகவும், நீதிபதியாகவும் வலம் வந்துகொண்டிருந்தாள். என்னால் அவளுக்கு சிறு காயம் ஏற்பட்டால் கூட ஒட்டுமொத்த சமூகமும் சேர்ந்து என்னை தூக்கிட்டு விடும். என்ன செய்வதென்று தெரியாமல் திணறிப் போனேன். குனிந்து என் காலணிகளைப் பார்த்தேன். கிழவியின் ஏளனச் சிரிப்பு அந்தக் காலணிகளில் ஒட்டிக்கொண்டிருந்தது. இப்போது அந்தக் காலணிகளும் என்னைப் பார்த்து ஏளனத்துடன் சிரித்தன. என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த காலணிகளைக் கழற்றி துண்டு துண்டாக கிழித்து குப்பைத்தொட்டியில் போட்டேன். இனி ஓடுவதை விட்டுவிட்டு, வீட்டு வேலைகளில் மனைவிக்கு உதவி புரிவது, அலுவலகத்திற்கு காரில் போகாமல் சைக்கிளில் செல்வது, அக்கம் பக்கத்து சிறுவர்களுடன் கபடி விளையாடுவது போன்றவற்றின் மூலமே தொப்பையைக் குறைக்க வேண்டும் என உறுதி எடுத்துக்கொண்டேன்.

மறுநாளிருந்து என் மனைவிக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்ய

ஆரம்பித்தேன். கீழ் தளத்திருந்து குடங்களில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தேன். பாத்திரங்களை கழுவிச் சுத்தப்படுத்தினேன். துணிகளை துவைத்து உலர வைத்தேன். இந்த வேலைகளை எல்லாம் செய்ய ஆரம்பித்த பிறகுதான் எனக்குத் தெரிந்தது வீட்டு வேலை எவ்வளவு சிரமமானது என்று. இதுநாள் வரையிலும் என்னுடைய மனைவிக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்யாமல் இருந்தது எனக்கு பெரும் வருத்தத்தை அளித்தது. அதனால் அதையெல்லாம் நிவர்த்தி செய்யும் வண்ணம் நானே எல்லா வேலைகளையும் இழுத்து போட்டுக்கொண்டு செய்ய ஆரம்பித்தேன். என் மனைவி என்னை பாராட்டுவாள் எனும் சிறு எதிர்பார்ப்பு எனக்குள் இருந்ததுதான். ஆனால் அவள் எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. என்னால் அதை புரிந்துகொள்ள முடிந்தது. பாராட்டப்படுவதற்கு அவள் செய்யாத வேலையை ஒன்றும் நான் செய்துவிடவில்லை. அதனால் பாராட்டை எதிர்பார்ப்பது அபத்தமானது என்றுணர்ந்தேன். ஆனால் சில தினங்களில் அவள் என்னுடன் பேசுவதை குறைத்து முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டாள். ஏன் அவள் இவ்வாறு நடந்துகொள்கிறாள் என்பதை என்னால் புரிந்ததுகொள்ள முடியவில்லை. அதைப் பற்றி அவளிடம் கேட்கலாம் என்றிருக்கும்போது அவளே வந்து 'எனக்கு உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்' என்றாள். நான் 'என்ன விசயம்? சொல்' என்றேன். அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள், பின்னர் எதுவும் சொல்லாமல் அழ ஆரம்பித்துவிட்டாள். நான் பதறிப்போய் 'ஏய் என்ன விசயம்? சொல்லு' என்று அவளை பிடித்து உலுக்கினேன். அதற்கு அவள் 'அப்பாவி மாதிரி நடிக்காதீர்கள் எனக்குத் தெரியும் நீங்க எவளோ ஒருத்தியுடன் கள்ளத்தொடர்பு வைத்திருக்கிறீர்கள் என்று' என்றாள். எனக்கு தூக்கிவாரிப் போட்டது. நான் அதிர்ச்சியுடன் 'நீ எதை வைத்து நான் கள்ளத்தொடர்பு வைத்திருக்கிறேன் என்கிறாய்?' என்றேன். அவள் 'முதல் இரண்டு நாட்கள்இடிந்து போய் உட்கார்ந்திருந்தீர்கள். அப்புறம் உடம்பை கச்சிதமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஓட ஆரம்பித்தீர்கள். இப்போது என்னவென்றால் என்னை 'ஐஸ்' வைப்பதற்காக விழுந்தடித்து வீட்டு வேலைகளை செய்கிறீர்கள். கள்ளத்தொடர்பு இல்லாமல் இருந்தால் நீங்கள் ஏன் இப்படி நடந்துகொள்ள வேண்டும்' என்றாள். நான் கலக்கத்துடன் 'அப்படியெல்லாம் இல்லையம்மா. இதுநாள் வரை உன் மேல் எனக்குள்ள காதலை உணர முடியாதவாறு என்னுடைய தொப்பை என் அகக்கண்களை மறைத்துவிட்டது. இதை நம் பகுதிக்கு வரும் பால்கார கிழவிதான் எனக்கு புரிய வைத்தாள்.' என்று கூறி, எவ்வாறு அந்த கிழவி என்னுடைய வாழ்க்கை முறையைத் தெரிந்து வைத்துக்கொண்டுத் தன்னுடைய கேலி கணைகளால் என்னுடையத் தவறுகளை உணர வைத்தாள் என விளக்கினேன்.

உண்மையை உணர்ந்து கொண்டதும் என் மனைவி சாந்தமடைந்தாள். எது எப்படியிருந்தாலும் அலுவலகத்திற்கு சைக்கிளில் செல்லுவது. அக்கம்பக்கத்திலுள்ள சிறுவர்களுடன் கபடி விளையாடுவது போன்ற என்னுடைய எண்ணங்களை கைவிட்டுவிட்டேன். ஏனென்றால் என்னுடைய

மனைவி நான் ஒரு சைக்கிள் திருடன் எனவும், என்னுடன் விளையாடும் சிறுவர்கள் எனக்கு பிறந்த குழந்தைகள் எனவும் தவறாக நினைத்து விவாகரத்து கோர வாய்ப்பிருப்பதை என்னால் உணர முடிந்தது. அதனால் நான் வீட்டுவேலைகளை மட்டும் ஒழுங்காக செய்வது என தீர்மானித்தேன்.

எங்கள் இருவருக்கும் இடையிலுள்ள உறவு பலப்படுவதற்கு காரணமாக அமைந்ததால் என் மனைவி அந்த பால்கார கிழவியை தலையில் வைத்துக் கொண்டாடினாள். அவளை வீட்டுக்கு அழைத்து விருந்து படைத்தாள். 'எங்கள் குடும்ப வாழ்க்கையை மேன்மையடையச் செய்ய வந்த தேவதை நீங்கள்.' என்று அவளிடம் கூறினாள். உண்மையிலேயே கிழவி ஒரு அற்புதமான பிறவிதான். அல்லாவிடில் என் தனிப்பட்ட வாழ்க்கையை அவளால் இவ்வளவு துல்யமாக தெரிந்து வைத்திருக்க முடியாது. நான் அவளிடம் 'எப்படி உங்களால் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையைத் துல்யமாக அறிந்ததுகொள்ள முடிந்தது?' என்று கேட்டேன். கிழவி பயந்துவிட்டாள். 'எனக்கு உண்மையிலேயே உங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது.' என்று அவள் சத்தியம் செய்தாள். கிழவியின் பயத்தை என்னால் உணர முடிந்தது. ஒருவேளை உண்மையை அறிந்துகொண்டால் நான் அவளை ரவுடிகளை வைத்து கொலைச் செய்துவிடுவேன் என அவள் பயந்திருக்கக் கூடும். ஆனால் எனக்கு அந்த மாதிரி எந்த எண்ணமும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். உண்மையில் நான் கிழவியை எப்போதோ மன்னித்துவிட்டேன். என் மனைவி எரிச்சலுடன் 'ஏன் தேவையில்லாத கேள்விகளை விருந்துக்கு வந்திருப்பவரிடம் கேட்கிறீர்கள்?' என்றாள். தேவையில்லாமல் கிழவியை பயமுறுத்தியிருக்க கூடாதுதான். கிழவியின் பயத்தை போக்கும் எண்ணத்துடன் நான் அவளை பார்த்து 'எப்படி இந்த வயதிலும் உங்களால் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க முடிகிறது?' என்று கேட்டேன். அவள் 'நான் எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஒரு நாள் கூட வேலை செய்யாமல் இருந்ததில்லை. அதனால்தான் நான் எப்போதும் ஆரோக்கியத்துடன் இருக்கிறேன்' என்று பெருமிதத்துடன் கூறினாள். அவள் கூறியது முற்றிலும் உண்மை. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவள் எங்கள் பகுதிக்கு தள்ளுவண்டியில் பால் விநியோகம் செய்து வந்தாள்.

நான் என் மனைவியை மிகவும் நேசிப்பவன் என்பதால் அவளும் நீண்ட நாள் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என விரும்பினேன். அதனால் அவளுடைய பிறந்த நாளுக்கு நான் பால் விற்கக் கூடிய ஒரு தள்ளுவண்டியை பரிசாக அளிக்க தீர்மானித்தேன். இந்த பரிசின் மூலம் அவள் என்னுடையக் காதலின் தீவிரத்தை புரிந்துகொள்வாள் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை. பிறந்தநாளன்று உறவினர்களும், நண்பர்களும் சூழ்ந்திருக்க நான் பெருமிதத்துடன் என் மனைவிக்கு ஒரு தள்ளுவண்டியை பரிசாக அளித்தேன். நான், அவள் என்னுடைய காதல் பரிசை பார்த்து சந்தோசப்படுவாள் என நினைத்தேன். ஆனால் அவள் முகம் அவமானத்தால் கறுத்து போய்விட்டது. அழுத வண்ணம் 'நீங்கள் என்னை அவமானப்படுத்திவிட்டீர்கள்' என்று கத்தினாள். எனக்கு ஒன்றும்

புரியவில்லை. 'உன்னை அவமானப்படுத்தும்படி நான் என்ன செய்துவிட்டேன்?' என அவளைப் பார்த்து குழப்பத்துடன் கேட்டேன். அவள் அந்த தள்ளுவண்டியை சுட்டிக்காட்டி 'என்ன இது?' என்றாள். நான் ' நீ நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டும் என்பதற்காக நான் கொடுக்கும் காதல் பரிசு.' என்றேன். அதற்கு அவள் 'எனக்கு உங்கள் காதல் பரிசு தேவையில்லை. நான் உங்களை காதக்கவும் இல்லை.' என்று கத்தினாள். நான் அவளை பார்த்து 'ஏன்?' என்றேன். அவள் 'ஏனென்றால் உங்களுக்கு கணினியுடன் வேலை செய்து, செய்து மூளைத் தொப்பை வந்துவிட்டது.' என்றாள். எனக்கு என் தவறு புரிய ஆரம்பித்தது. என் மனைவியினுடைய பிறந்தநாளுக்கு அவளுக்கு பிடித்தவற்றை மட்டுமே செய்வது சரியான செயலாக இருந்திருக்கும். ஆனால் நான் அவளுடைய விருப்பம் என்னவென்று கேட்காமல் பிறந்தநாள் பரிசை வாங்கிவிட்டேன். அது மிகப்பெரும் தவறுதான். நான் ஒரு குற்றவாளிபோல் கூனி குறுகி போனேன். இதற்கு எல்லாம் காரணம் எனக்கு மூளைத் தொப்பை இருப்பதுதான். இந்த மூளைத் தொப்பையை போக்காவிடில் அவளுடைய காதலை என்னால் மீண்டும் பெற முடியாது என்பதை என்னால் உணரமுடிந்தது. அதனால் மூளைத் தொப்பையை குறைப்பதற்கு என்ன வழி என்று ஆராய ஆரம்பித்தேன்.

மூளைத் தொப்பை வருவதற்கு முதல் காரணம் என் மனைவி கூறியது போல் கணினியுடன் ஒன்றி போய்விடுவதுதான். இரண்டாவது காரணம் என்று நான் உணர்ந்தது வயிற்றுத் தொப்பை. எனவே முதல் நான் கணினியுடன் ஒன்றி போவதை தவிர்க்க வேண்டும். பின்னர் வயிற்றுத் தொப்பையை போக்கும் பொருட்டு உடலுழைப்பில் ஈடுபடுவதுடன், சமூகத்தின் மற்ற அங்கத்தினருடன் என்னை பிணைக்கும் செயல்களிலும் ஈடுபடவேண்டும். இவ்வாறு நான் செயல்பட்டால்தான் வயிற்று தொப்பையை போக்கி மூளை தொப்பையிருந்து விடுபட முடியும்.

மூளைத் தொப்பையை போக்க வேண்டும் என உறுதிபூண்ட நான் மறுநாள் அலுவலகத்திற்கு சென்றதும் எனக்கு கீழ் வேலை செய்யும் எல்லா மென்பொறியாளர்களுக்கும் அவரவர்கள் செய்ய வேண்டிய வேலையை கொடுத்து அந்த வேலைகளை செய்து முடிப்பதற்கான வழிமுறைகளைத் தெளிவாக விளக்கினேன். பின் அந்த மென்பொருள் கம்பெனி முதலாளிக்கு என்னுடைய பணிவிலகல் கடிதத்தை மின்னஞ்சல் மூலம் அனுப்பிவிட்டு அலுவலகத்தை விட்டு வெளியேறினேன்.

கணினியிடமிருந்து விடுபட்டால் மட்டும் போதாது. தொப்பையை குறைக்க வேண்டுமென்றால் உடனடியாக உடலுழைப்பில் ஈடுபட்டாக வேண்டும் என்ன வேலை செய்யலாம் என்று யோசித்த போது தள்ளுவண்டியில் பால் வியாபாரம் செய்வது சரியாக இருக்கும் எனத் தோன்றியது. ஆனால் நான் பால்கார கிழவிக்கு போட்டியாக இருப்பதை என் மனைவி விரும்புவாளா என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. ஏனென்றால் என் மனைவி நான் அவளுக்கு பிறந்தநாள் பரிசாக வாங்கிக்கொடுத்த பால் விற்கும் தள்ளுவண்டியை ஏற்றுக் கொள்ளாததன் காரணம் அவள் மிகவும் நேசிக்கும் பால்கார கிழவிக்கு தான் ஒரு போட்டியாக இருக்க விரும்பாதது

தான் இருக்கும் என எனக்குப் பட்டது. அதனால் பால் வியாபாரம் செய்யும் எண்ணத்தை கைவிட்டு தள்ளுவண்டியில் காய்கறி விற்பனை செய்வது என முடிவெடுத்தேன். உடனடியாக ஒரு தள்ளுவண்டியை ஏற்பாடு செய்து காய்கறி வியாபாரத்தை ஆரம்பித்துவிட்டேன். தெருக்கள் வழியாக 'லேடிஸ் அண்ட் ஜெண்டில்மென், தக்காளி, வெங்காயம், லேடிஸ் பிங்கர்.....' என்று சத்தமாக கூவிக்கொண்டு சென்றேன். வியாபாரம் நன்றாகத்தான் நடந்தது. முப்பது ரூபாய் லாபம் கிடைத்தது. வியாபாரத்தில் முன்பின் பழக்கமில்லாத எனக்கு முதல்நாளே அவ்வளவு லாபம் கிடைத்தது மிகுந்த சந்தோசத்தை அளித்து. அதனால் உற்சாகத்துடன் தள்ளுவண்டியுடன் வீடு திரும்பினேன்.

வீட்டை நெருங்கும்போது நான் வேலை செய்த கம்பெனி முதலாளி மகளின் கார் வீட்டுக்கு அருகில் நிற்பதைப் பார்த்தேன். அவள் எதற்காக என்னை தேடி வந்தாள் என எனக்குத் தெரியவில்லை. என்ன விசயமாக இருக்கும் என்று யோசித்த வண்ணம் வீட்டிற்குள் நுழைந்த போது முதலாளியின் மகள் என் மனைவியுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டேன். அவள் என்னைப் பார்த்ததும், 'ஏன் இப்படி திடீரென்று வேலையிருந்து நின்றுவிட்டீர்கள்? சம்பளம் குறைவென்று எண்ணினால் நீங்கள் அதைப்பற்றி நேரடியாகவே பேசியிருக்கலாமே!' என்றாள். நான் பதில் சொல்ல வாயெடுத்தேன். ஆனால் அவள் நான் பேசுவதை சட்டை செய்யாமலேயே தொடர்ந்து 'உங்களுக்கு அறுபது சதவிகிதம் சம்பள உயர்வு மற்றும் கம்பெனி செலவில் வருடத்தில் ஒரு மாதம் வெளிநாட்டில் குடும்பத்துடன் தங்கி ஓய்வெடுப்பதற்கான வசதி போன்ற ஏற்பாடுகளை செய்துள்ளோம்' என்றாள். நான் 'நான் உடலுழைப்பில் மட்டும்தான் ஈடுபட போகிறேன். அதனால் கணினி சம்பந்தமான எந்த வேலைகளையும் நான் இனிமேல் செய்யப் போவதில்லை' எனத் திட்டவட்டமாக அவளிடம் தெரிவித்தேன். அவள் 'கம்பெனிக்கு உங்களுடைய உதவி மிகவும் தேவைப்படுகிறது. அதனால் தயவு செய்து உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள்' என்று வேண்டினாள். அவள் புரியாமல் இப்படி பேசியது எனக்கு பெரிய கோபத்தை ஏற்படுத்தியது. அதனால் 'உங்கள் அப்பா போன்ற பாஸ்டர்ட்ஸ் எல்லாம் சேர்ந்து மனிதர்களை மூளைத் தொப்பையுள்ளவர்களாக மாற்றுகிறார்கள். அவர்கள் நடத்துவது மூளைத் தொப்பை உருவாக்கும் கம்பெனிகள் அல்லாது வேறொன்றுமில்லை. என்னைப் பொறுத்தவரை இவர்களெல்லாம் தண்டிக்கப்பட வேண்டிய சமூக விரோதிகள்' என்று கத்தினேன். என் மனைவி அதிர்ச்சியுடன் 'என்ன ஆச்சு உங்களுக்கு? ஏன் இந்த மாதிரி நடந்து கொள்கிறீர்கள்?' என்று கேட்டாள். முதலாளியின் மகள் மீண்டும் 'தயவு செய்து உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள்' என்று வேண்டினாள். நான் 'முடியவே முடியாது' என்று உறுதியாக கூறினேன். அந்நேரம் என் மனைவி என்னுடைய கையைப் பிடித்து பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றாள். பின்னர் 'ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? இதைவிட நல்ல வேலை கிடைப்பது கடினம். அதுபோக உங்களுடைய உதவி அவர்களுக்கு மிகவும் தேவைப்படுவது போல தோன்றுகிறது. இக்கட்டான நிலையில் இப்படி வேலையை விடுவது

சரியல்ல' என்று அழாத குறையாக கூறினாள். நான் 'நீ நினைப்பது மாதிரி நான் ஒன்றும் அந்த அளவுக்கு கம்பெனிக்கு முக்கியமானவன் அல்ல. முதலாளியின் மகள் என்னுடன் கள்ளத் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புகிறாள் போல தோன்றுகிறது. அதனால்தான் இவ்வளவு பிடிவாதமாக வேலைக்கு வர வேண்டும் எனக் கூறுகிறாள். எது எப்படியென்றாலும் நான் அங்கு வேலைக்கு சேரப்போவதில்லை. ஏனென்றால் நான் உடலுழைப்பின் மூலம் தொப்பையைக் குறைக்கப் போகிறேன் 'என்றேன். என் மனைவி 'கடவுளே .... உங்களுக்கு என்ன ஆச்சி?' என்ற வண்ணம் அழ ஆரம்பித்தாள். பின்னர் 'நீங்கள் இந்த மாதிரி நடந்து கொண்டால் நான் என் அம்மா வீட்டிற்கு போய்விடுவேன்' என்றாள். நான் திடுக்கிட்டுப் போனேன். அந்தக் கம்பெனியில் வேலை செய்வதை விட்டு நின்ற காரணமே மூளைத் தொப்பையைக் குறைத்து என் மனைவியின் காதலை திரும்பப் பெறவேண்டும் எனும் எண்ணம்தான். இப்போது அவளே நான் அந்த கம்பெனி வேலைக்கு போகாவிட்டால் அம்மா வீட்டிற்கு போய்விடுவேன் என்று கூறியது எனக்கு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. அவளில்லாமல் என்னால் வாழ முடியாதென்பது எனக்குத் தெரியும். அதனால் மீண்டும் கம்பெனியில் சேர்ந்து வேலை செய்வதாக அவளுக்கு உறுதியளித்தேன். பின்னர் முதலாளியின் மகள் அமர்ந்திருக்கும் அறைக்கு வந்து, 'நான் மீண்டும் கம்பெனியில் சேர்ந்து வேலை செய்ய சம்மதிக்கிறேன். ஆனால் நான் கம்பெனிக் கட்டிடத்திலுள்ள எல்லாத் தளங்களுக்கும் தண்ணீர் இறைப்பது போன்ற உடலுழைப்பு சம்பந்தமான வேலைகளைத்தான் செய்வேன்' என்றேன். அதற்கு அவள் 'அந்த வேலைகளுடன் கூடவே தங்கள் கீழ் வேலை செய்யும் மென்பொறியாளர்களுக்கு அவர்கள் வேலைகளிலுள்ள சந்தேகங்களை தீர்த்து அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளை கொடுக்க முடியுமா?' என்று கேட்டாள். இது ஒரு நல்ல சமரச முயற்சியாக எனக்கு தோன்றியது. அதனால், 'சரி.... நான் இதற்கு உடன்படுகிறேன்' என்றேன். அவள் 'சரி' என்று கூறி என்னிடமும் என் மனைவியிடமும் விடைபெற்றுக் கொண்டு வெளியேறினாள். நான் செய்த தியாகம் என் மனைவியை நெகிழ வைத்திருக்க வேண்டும். அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

என் வேண்டுகோளுக்கு இணங்க கம்பெனிக் கட்டிடத்திலுள்ள எல்லாத் தளங்களுக்கும் தண்ணீர் குழாய் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. கட்டிடத்திலுள்ள ஆறு மாடிகளுக்கும் நான்தான் தண்ணீர் இறைப்பதென்று முடிவாகியிருந்தது. உடலுழைப்பிலுள்ள மகத்துவத்தைத் தெரிந்த நான் உற்சாகத்துடன் தண்ணீர் இறைக்க ஆரம்பித்துவிட்டேன். மிகவும் சிரத்தையுடன் எந்த தளங்களிலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டேன். நான் தண்ணீர் குடங்களை ஏந்திய வண்ணம் படிகளில் ஏறிக்கொண்டிருக்க எனக்கு கீழ் வேலை செய்யும் மென்பொறியாளர்கள் கைகளில் லேப்டாப் கம்ப்யூட்டர்களுடன் என் பின்னே வந்து தங்கள் வேலைகளில் எழும் சந்தேகங்களை கேட்டனர். நான் படிகளில் ஏறிய வண்ணமே அவர்களுடைய சந்தேகங்களை தீர்த்து அவர்களுடைய வேலைகளை செம்மையாகச் செய்வதற்கான

அறிவுரைகளையும் வழங்கினேன். வேலையில் களைப்பு ஏற்பட்டு ஓய்வெடுக்கும் நேரங்களில் அவர்களில் யார் யார் எந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்து, அவர்கள் அந்த வேலைகளை சிறப்புடன் செய்வதற்கான வழிமுறைகளையும் விளக்கினேன்.

மூளைத் தொப்பையை போக்குவதற்கு வெறும் உடலுழைப்பு மட்டும் போதாது. வெளி சமூகத்துடன் இணைந்து வாழ்ந்து, சமூகத்தின் ஒரு முழு அங்கத்தினனாக மாறினால்தான் மூளைத் தொப்பையை குறைக்க முடியும். அப்படி சமூகத்தின் முழு அங்கத்தினனாக மாறுவதற்கான எளிமையான வழியாக எனக்குப் பட்டது எங்கள் கம்பெனியிலிருந்து சற்றுத்தொலைவிலுள்ள சேரியிலிருக்கும் சிறுவர்களுடன் மாலை நேரங்களில் கபடி விளையாடுவதுதான். ஆனால் நான் ஏற்கனவே கூறியதைப் போல என் மனைவிக்கு இது தெரிய வந்தால் பெரிய பிரச்சினையில் கொண்டுபோய் விட்டு விடும். அதனால் நான் சேரியிலுள்ள சிறுவர்களுடன் கபடி விளையாடும் விசயத்தை என்னுடைய மனைவியிடமிருந்து முற்றிலுமாக மறைத்துவிட்டேன்.

எங்களுடைய கடுமையான உழைப்பால் கம்பெனி அபரிமிதமான வளர்ச்சியை அடைந்தது. கம்பெனியை விரிவுபடுத்தும் முயற்சிகள் பலமாக நடந்து கொண்டிருந்தன. நாங்கள் பணிபுரியும் கட்டிடத்தின் அருகிலேயே கம்பெனிக்கான பனிரெண்டு மாடிக் கட்டிடம் ஒன்று எழும்பிக் கொண்டிருந்தது. ஒரு நாள் கம்பெனி முதலாளி என்னை அவருடைய அறைக்கு அழைத்து 'நீங்கள் இல்லாமல் இந்தக் கம்பெனி இந்த அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்க முடியாது. உங்களை கௌரவப் படுத்துவதற்காக நீங்கள் விரும்பும் எதையும் நான் செய்யத் தயாராயிருக்கிறேன். உங்களுக்கு என்ன தேவையிருந்தாலும் தயங்காமல் என்னிடம் கூறுங்கள்' என்றார். நான் அவரைப் பார்த்து 'தாங்கள் தற்பொழுது கட்டிக் கொண்டிருக்கும் புதுத் தளத்திலுள்ள எல்லாத் தளங்களுக்கும் தண்ணீர் இறைக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தால் நான் மிகவும் சந்தோசமடைவேன்' என்றேன். அதற்கு அவர், 'தங்கள் ஒருவரால் எப்படி அந்த வேலையைச் செய்ய முடியும்' என கேட்டார். நான், 'எனக்கு கீழ் வேலை செய்யும் மென்பொறியாளர்களில் எண்பது பேர் மூளைத் தொப்பையைக் குறைக்கும் எண்ணத்துடன் தண்ணீர் இறைப்பில் எனக்கு உதவி செய்யப் போவதாக உறுதியளித்துள்ளார்கள். அதனால் இந்த பொறுப்பை தாங்கள் எனக்குக் கொடுத்தால் கம்பெனி இன்னும் வேகமாக வளரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்' என்று கூறினேன். அவர் மகிழ்ச்சியுடன் அதற்கு ஒத்துக்கொண்டார்.

தொடர்ந்து நான் செய்து வந்த உடலுழைப்பின் காரணமாக என்னுடைய வயிற்றுத் தொப்பை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு வந்தது. இப்போது என் இடுப்பில் கட்டியிருக்கும் பெல்டை என்னால் பார்க்க முடிகிறது. இது உண்மையிலேயே எனக்குப் பெரும் சந்தோசத்தை அளித்தது. ஆனால் எனக்கு மூளைத்தொப்பை குறைந்திருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இந்த மூளைத் தொப்பை

குறைந்தால்தான் என் மனைவியினுடைய காதலை என்னால் திரும்பப் பெறமுடியும். அதே நேரம் என் மனைவியினுடைய காதல் எனக்குத் திரும்பக் கிடைத்தால்தான் என் மூளைத் தொப்பை குறைந்திருக்கிறது என்று நான் அறிந்து கொள்ள முடியும். இதை என்னுடைய மனைவியிடம் கேட்பதற்கு

பயமாக இருந்தது. ஏனென்றால் என் மனைவி எனக்கு மூளைத் தொப்பை குறையவில்லை என்று கூறி என்னைக் காதலிக்க முடியாது என்று மறுத்துவிட்டால் நான் நிலைகுலைந்து போவேன் என்பது எனக்குத் தெரியும். அதனால் எதுவென்றாலும் அவளாகவே கூறட்டும் என்று அது குறித்து அவளிடம் எதுவும் கேட்காமலேயே விட்டுவிட்டேன். அப்படியிருக்க ஒரு விடுமுறை நாளில் என் மனைவியினுடைய அம்மாவும் அப்பாவும் எங்கள் வீட்டிற்கு வருகை தந்தனர். அவர்களை நன்றாக உபசரிக்கும் எண்ணத்துடன் சந்தைக்குச் சென்று காய்கறிகளையும், பழங்களையும் வாங்கிக்கொண்டு வருவதற்காகப் புறப்பட்டேன். வீட்டை நெருங்கும்போது வீட்டினுள் என் மனைவிக்கும் அவளுடைய பெற்றோருக்கும் இடையே பயங்கர வாக்குவாதம் நடப்பதை என்னால் கேட்க முடிந்தது. அவளுடைய தாய் 'இந்தப் புத்திபேதத்தவனுடன் இருந்து ஏன் வாழ்க்கையை சீரழித்துக்கொள்கிறாய்? பேசாமல் எங்களுடன் வரச்சொன்னால் வரவேண்டியதுதானே?' என்று கூறினாள். என்னுடைய மனைவி 'எத்தனைத் தடவை நான் சொல்ல வேண்டும்? என்னால் வரமுடியாது என்றால் வரமுடியாதுதான்' என்று கோபத்துடன் கத்தினாள். அவளின் அப்பா 'அதான் ஏனென்று கேட்கிறேன்' என்று திருப்பிக் கத்தினார். என்னுடைய மனைவி 'ஏனென்றால் அவரில்லாமல் என்னால் வாழமுடியாது' என்று கூறி பலமாக அழ ஆரம்பித்துவிட்டாள். எனக்கு மூளைத்தொப்பை குறைந்துவிட்டது என்பதை அந்த கணமே நான் உணர்ந்தேன். அவளுடைய அப்பா 'உன்னையெல்லாம் திருத்தவே முடியாது' என்று கூறி அவருடைய மனைவியுடன் வீட்டை விட்டு வெளியேறினார். வெளியில் நின்றிருந்த என்னை பார்த்ததும் அவர்கள் எரிச்சலுடன் முகத்தை திருப்பிக்கொண்டு படிக்கட்டுகளில் இறங்கினர். நானோ வேகமாக வீட்டினுள்ளே நுழைந்தேன். என்னைப் பார்த்ததும் என் மனைவி அழுகையை நிறுத்தி ஒரு தேவதை, குழந்தையை பார்த்துப் புன்னகைப்பது போல் புன்னகைத்தாள். ●

டேவிட்டும் கோலியாத்தும்

ஜோஸ் அன்றாயின்

சுவாமிதாஸ் வாத்தியார் காலையில் பைக்கில் பேசிக்கொண்டே வந்து கொண்டிருந்தார். ஆனால் அவர் பேசுவதை கேட்பதற்கு வண்டியின் பின்னிருக்கையில் யாரும் இருக்கவில்லை. எனினும் அவர் தொடர்ந்து மிகவும் ஈடுபாட்டுடன் பேசிக்கொண்டு வந்தார். இதை பள்ளிக்கு நடந்தும், சைக்கிளிலும் வந்துகொண்டிருந்த மாணவர்கள் பார்த்தனர். அவர்கள் வாத்தியாருக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ என சந்தேகித்தனர். பைச் பள்ளிக்கு செல்லும் சாலையும், மணவிளைக்குச் செல்லும் மண்சாலையும் சந்திக்கும் இடத்துக்கு வந்ததும் பின்னால் திரும்பிப் பார்த்த வாத்தியார், 'அய்யோ கடவுளே....' என்று புலம்பிக்கொண்டே, வந்த வழியே திரும்பி வேகமாக போனார். இந்த விசயம் காட்டுத் தீ போல் பள்ளிக்கூட மாணவர்களுக்கு மத்தியில் பரவியது. யாருக்கும் வாத்தியாருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்பதில் எந்த சந்தேகமும் இருக்கவில்லை. விசயம் மற்ற வாத்தியார்களுக்கும், தலைமை ஆசிரியருக்கும் தெரிய வர, தலைமையாசிரியர் உண்மை நிலவரத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு சுவாமிதாஸ் வாத்தியாரின் வீட்டுக்குத் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்தார். தொலைபேசியை யாரும் எடுக்கவில்லை. அதனால் வாத்தியாருக்கு என்ன ஆயிற்று என்று யாராலும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

என்னதான் கடுமையானவர் என்று பெயர் எடுத்தாலும் சுவாமிதாஸ் வாத்தியார் உண்மையிலேயே நல்லவர்தான். அதனால் அவருக்கு பைத்தியம் பிடித்த விசயம் மாணவர்களுக்கு வருத்தத்தை அளிக்கத்தான் செய்தது. குறிப்பாக மாணவன் டேவிட், வாத்தியாருக்கு நேர்ந்ததை கேள்விப்பட்டவுடன் அதிர்ந்து போனான். அவருக்கு பைத்தியம் பிடிப்பதற்கு தான் தான் காரணம் என்று தன்னைத்தானே நொந்து கொண்டான். அதற்கு காரணம் இல்லாமலில்லை. நடந்த விசயங்களைச் சொன்னால் நீங்களும் அதைப் புரிந்து கொள்வீர்கள்.

டேவிட் ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவன். சிறந்த அறிவாளியும் கூட. 'அவனுக்கு டேவிட் என்று பெயரிட்டது தப்பு. ஏன்னா அறிவில் சிறந்த சாலமன் மன்னனுடைய பெயர்தான் அவனுக்கு பொருத்தமாய் இருந்திருக்கும்' என்று அவனுடைய தாத்தா அடிக்கடி கூறுவார். அந்த அளவுக்கு புத்தி கூர்மையுள்ளவன் அவன். என்ன இருந்தாலும் அவன் வகுப்பில் முதல் மதிப்பெண்கள் எடுப்பதில்லை. ஆனாலும் வகுப்பின் கதாநாயகன் டேவிட்தான். அவனிடம் முதல் மதிப்பெண் எடுக்கும் சுந்தரேசன் முதல் கடைசி மதிப்பெண் எடுக்கும் சிங்கு வரை மிகுந்த மரியாதை வைத்திருந்தனர்.

வகுப்பாசிரியரும் அறிவியல் பாடம் நடத்துபவருமான சுவாமிதாஸ் வாத்தியாருக்கு டேவிட்டின் திறமை தெரியாமல்லை என்றாலும் அவர் அவனுக்கு ஒருபோதும் அறிவியலுக்கு அறுபதுக்கு மேல் மதிப்பெண்

கொடுத்ததில்லை. ஆனால் முதல் மதிப்பெண் எடுக்கும் சுந்தரேசனும், நல்ல மதிப்பெண்கள் எடுக்கும் மற்ற மாணவர்களும் அறிவியல் பாடம் குறித்து தங்களுக்கு எழும் சந்தேகங்களை டேவிட்டிடம் கேட்டுதான் தெளிவுபடுத்திக் கொள்வார்கள். இத்தகைய சூழ்நிலையில்தான் ஒரு நாள் சுவாமிதாஸ் வாத்தியார் விதைகள் குறித்து பாடம் நடத்தினார். அவர் பாடம் நடத்திய முறை சுவாரசியமாக இருக்கவில்லை. கடைசி பெஞ்சில் இருந்த சிங்கு தூங்கி விழுந்தான். கோபமடைந்த வாத்தியார் 'டேய், விதைகள் எப்படி முளைக்கிறதுனு சொல்லு?' என்றார். சிங்கு திரு திருவென்று முழித்தான். பின்னர் ஐயாகுட்டியிடம் திரும்பி 'நீ சொல்லு' என்றார். அவனும் பதில் தெரியாமல் பரிதாபமாய் எழுந்து நிற்க, அருளிடம் கேட்டார். அவனும் எழுந்து தலையை குனிந்த வண்ணம் நின்றான். வாத்தியாரால் கோபத்தை அடக்க முடியவில்லை. 'இவ்வளவு நேரம் என்னத்தடா கவனிச்சிட்டு இருந்தீங்க?' என்று அவர்களை பிரம்பால் அடித்தார். மற்ற மாணவர்கள் எங்கே தங்களையும் கேள்வி கேட்டு அடிக்கப் போகிறாரோ என்று பயந்து கொண்டிருந்தனர். நல்ல வேளையாகப் பள்ளியின் கடைசி மணியடித்தது. வாத்தியார் 'எல்லாரும் நாளைக்கு ஒழுங்காக இன்னைக்கு எடுத்த பாடத்தை படிச்சிட்டு வந்திருங்க. அல்லது அடிச்சு தோலை உரிச்சிருவேன்' என்று கூறி, வகுப்பை விட்டு வெளியேறினார். மாணவர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர். அருள் டேவிட்டைப் பார்த்து, 'இன்னிக்குப் பாடம் ரொம்ப கஷ்டமா இருந்தது. சரியாப் புரியல' என்றான். டேவிட் சிரித்தவண்ணம், 'பாடம் ஒண்ணும் கஷ்டமானதில்ல..... வாத்தியாருக்குப் பாடம் நடத்தத் தெரியல. அதான் பிரச்சினை' என்றான். 'புரியாம படிச்சா ஒண்ணுமே ஞாபகத்துல நிக்கமாட்டேங்குது' என்றான் அருள்ராமன். 'உங்களுக்கு பாடம் புரியணும்னா, எங்கூட வாங்க' என்று எல்லோரையும் கூட்டிக்கொண்டு ஆற்றைத் தாண்டி ஊரில் எல்லையில் இருக்கும் தங்களுடைய தோப்புக்கு அழைத்துச் சென்றான் டேவிட். எல்லோரும் உற்சாகத்துடன் அவனைப் பின் தொடர்ந்தார்கள். அங்கு சமீபத்தில் பெய்த மழையில் ஆங்காங்கே முளைவிட்டிருந்த, புளிய மற்றும் வேப்பமரக் கன்றுகளைக் காட்டினான். அவைகள் பல்வேறு வளர்ச்சி நிலைகளில் இருந்தன. அவர்கள் எல்லோரும் ஆசையுடன் ஆளுக்கொரு மரக்கன்றினை பிடுங்கிக்கொண்டனர். டேவிட் அப்போதுதான் முளைவிட்டிருந்த ஒரு புளியங்கன்றினையும், ஒரு வேப்பம் விதையையும் கையில் வைத்துக்கொண்டு எவ்வாறு விதையின் மேருக்கும் தோடானது ஈரப்பதத்தினால் உடைந்து முளை உருவாகிறது என்று விளக்கினான். மேலும் எவ்வாறு விதையிருந்து முதல் மூல வேர் வெளிப்பட்டு புவி ஈர்ப்பு விசையின் திசையில் வளருகிறது என்பதையும், அதனைத் தொடர்ந்து விதையிலை வெளிப்படுவதையும், அதனையடுத்து வரும் தண்டு குருத்தானது புவியீர்ப்பு விசைக்கு எதிராக வளர்ந்து அந்த விதையிலையை பூமிக்கு மேல் எவ்வாறு கொண்டு வருகிறது என்பதையும் தெளிவாக விளக்கினான். சிங்கு, 'இப்போ வாத்தியாருக்கே என்னால விதை எப்படி முளைக்குதுனு சொல் கொடுக்க முடியும்' என்று சொன்னான்.

சொல்லிவைத்தாற் போல் மறுநாள் காலையில் சுவாமிதாஸ்

வாத்தியார் கேள்வியை முதல் சிங்குவிடமே கேட்டார். சிங்கு பாடம் சரியாக விளங்காத ஒரு மாணவனுக்கு கருணையுள்ளம் கொண்ட ஒரு வாத்தியார் பாடத்தை விளக்குவது போல் சுவாமிதாஸ் வாத்தியாருக்கு விதை எவ்வாறு முளைக்கிறது என்று விளக்கினான். வாத்தியாருக்கு எரிச்சலாக வந்தது ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், 'உனக்கு உண்மையிலேயே இந்த அளவுக்கு அறிவிருக்கா? எப்படிடா உன்னால இதெல்லாத்தையும் புரிஞ்சுக்க முடியுது?' என்று கேட்டார். சிங்கு எப்படி டேவிட் தங்களுக்கு விதை முளைப்பதைப் பற்றி விளக்கினான் என்பதைக் கூறினான். வாத்தியாருக்கு டேவிட்டின் மேல் இனம் புரியாத கோபம் ஏற்பட்டது என்றாலும் வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு 'இப்போது பட்டுப்பூச்சிப் பற்றியும் அதன் பயன்பாட்டைப் பற்றியும் பாடம் நடத்தப் போகிறேன்' என்று கூறிப் பட்டுப்பூச்சியைப் பற்றிப் பாடம் நடத்த ஆரம்பித்தார்.

சுவாமிதாஸ் வாத்தியார் அன்று முடிந்தவரை பாடத்தை நன்றாக சொல்க் கொடுக்க முயற்சி செய்தார். ஆனாலும் மாணவர்கள் பட்டுப்பூச்சியும் வண்ணத்துப்பூச்சியும் ஒன்றே என்று கற்பனை செய்து கொண்டனர். முட்டைப்புழு கூட்டுப்புழுவாக மாறி வண்ணத்துப் பூச்சியாக மாறுவதைச் சொல்வார் என்று எதிர்பார்த்தால் வாத்தியார் புழுக்கூட்டிருந்து பட்டு இழைகள் எவ்வாறு பிரித்தெடுக்கப்படுகின்றன என்பதை விளக்கிக் கொண்டிருந்தார். மாணவர்கள் பொறுமை இழந்தனர். இருந்தாலும் தேவையில்லாமல் கேள்வி கேட்டால் அடி கிடைக்கும் என்று கருதி எதுவும் கேட்காமல் அவர் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் சிங்குவால் சும்மா இருக்க முடியவில்லை. அவன் எழுந்து 'சரி அதிருக்கட்டும் சார். கூட்டுப்புழு எப்படி வண்ணத்துப்பூச்சியா மாறுதுனு சொல்க் குடுங்க' என்றான். வாத்தியார் தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு, 'நான் இப்ப உங்களுக்கு என்ன பாடம் எடுக்குறேன்?' என்று கேட்டார். 'வண்ணத்துப்பூச்சி பற்றிய பாடம்' என்றான். வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு ரவீந்திரனைப் பார்த்து, 'என்ன பாடம்டா நடத்துறேன்?' என கேட்க, அவன் சற்று பயந்தவனாய், 'வண்ணத்துப்பூச்சி பற்றி சார்' என்றான். பின் அவர் சுந்தரேசன் பக்கம் திரும்பி, 'நீ சொல்லு பார்க்கலாம்' எனச் சொல்ல, அவன் எழுந்து 'பட்டுப்பூச்சி எவ்வாறு வண்ணத்துப்பூச்சியாக மாறுகிறது என்பதைப் பற்றி சொல்க் கொடுக்கறீங்க சார்' என்றான். வாத்தியாருக்கு அதற்கு மேலும் கோபத்தை அடக்கி வைக்க முடியவில்லை. பிரம்பால் ஆளுக்கு மூன்று அடி வீதம் கொடுத்து அவர்களை வகுப்பின் பின்பகுதிக்கு கொண்டுபோய் குனிந்து நிற்க வைத்துவிட்டு, கோபத்தில் தன்னுடைய நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டார். சற்று நேரம் சென்றபின் டேவிட்டை நோக்கி, 'நீ சொல்லுடா, நான் என்ன பாடம் நடத்தினேனு' என்றார். அவன் எழுந்து, 'பட்டுப்பூச்சி பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் சார்' என்றான். 'பட்டுப்பூச்சியும் வண்ணத்துப்பூச்சியும் ஒண்ணா?' என்று அவனைத் திரும்பவும் கேட்டார் வாத்தியார். அவன், 'இல்ல சார். பட்டுப்பூச்சியும் வண்ணத்துப்பூச்சியும் வேற வேற' என்றான். சற்றே கோபம் தணிந்த வாத்தியார் எழுந்து வந்து தான் நடத்திய பாடத்தை

மீண்டும் ஒருமுறை விளக்கினார். பின்னர் அடுத்த வகுப்பிற்கான மணியடித்தவுடன் 'எல்லோரும் மத்தியானம் சாப்பிட்டு முடிச்சவுடன் விளையாடப் போகாம பட்டுப்பூச்சி பற்றி நான் இப்போ நடத்துன பாடத்த மனப்பாடம் பண்ணி வச்சுக்கோங்க. மத்தியானத்துக்கப்புறம் வகுப்புல கேள்வி கேக்குற சமயத்துல பதில் சரியா சொல்லலனா வெயிலுல முழங்கால் நிக்க வச்சிருவேன்' என்று சொல்விட்டு வகுப்பறையை விட்டு வெளியேறி ஆசிரியர்களின் அறையை நோக்கி நடந்தார்.

மத்தியானம் சத்துணவு சாப்பிட்டு முடித்தவுடன் பட்டுப்பூச்சியைப் பற்றிய பாடத்தைப் படிப்பதற்காக மாணவர்கள் எல்லோரும் பாடப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தார்கள்தான். ஆனால் யாருக்கும் மத்தியானம் கிடைக்கும் அந்த அரை மணி நேரத்தில் பாடத்தை மனப்பாடம் பண்ண முடியும் எனத் தோன்றவில்லை. 'இன்னிக்கும் பாடம் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது' என்றான் சுந்தரேசன். 'நல்லாப் படிக்கிற உனக்கே புரியலனா எங்களுக்கு எப்படிப் புரியும்?' என்றான் சிங்கு. அவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த டேவிட், 'இந்த லட்சணத்துல பாடம் நடத்துனா யாருக்குதான் புரியும்' என்றான். 'சரி...... இப்பப் பாடத்த புரிஞ்சிக்கறதுக்கு என்னதான் வழி இருக்கு?' என்று கேட்டான் செல்லசாமி. 'பட்டுப்பூச்சி வளக்குற எடத்துக்குப் போய் நேரடியா பாத்து தெரிஞ்சுக்கறது தான் ஒரே வழி' என்றான் டேவிட். சுந்தரேசன் டேவிட்டை போலவே நிறைய விசயங்கள் தெரிஞ்சுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதனால் அவன், 'நான் வர்றேன்' என்றான். ஐயாக்குட்டி உடனே குறுக்கிட்டு, 'டேய் வேணாம்டா வகுப்புக்கு மட்டம் போட்டா வாத்தியார் அடிப்பாரு' என்றான். 'போகாம இருந்தா மட்டும் நம்ம அடிவாங்காம இருக்கப் போறோமா என்ன?' என்று கேட்டான் சிங்கு. ஒரு வழியாக வகுப்புகளுக்கு மட்டம் போட்டுவிட்டுப் பட்டுப்பூச்சிப் பண்ணைக்குப் போகலாம் என்று முடிவெடுத்த அவர்கள், தங்கள் புத்தகப் பைகளை எடுத்துக்கொண்டு ஆசிரியர்கள் கண்ணில் படாதவாறு ஒவ்வொருவராக வெளியேறினர்.

டேவிட் தன் சக மாணவர்களுடன் தன்னுடைய பட்டுப்பூச்சிப் பண்ணைக்கு வந்திருப்பதை பார்த்த மாமா புகழும் பெருமாள், 'என்னடா, பள்ளிக்கொடத்துக்குப் போகாம இங்க வந்திருக்கீங்க?' என்றார். டேவிட், 'எங்களுக்குப் பட்டுப்பூச்சிப் பத்தி பாடம் இருக்கு மாமா. அதனால அதப் பத்தி தெரிஞ்சுகிட்டு போலாம்னு வந்தோம்' என்றான். மாணவர்கள் பட்டுப்பூச்சிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள வந்திருக்கிறார்கள் என்றவுடன் அவர் மிகவும் உற்சாகமாகிவிட்டார். 'பட்டுப்பூச்சிகளின் முட்டை பொரிப்பதற்கு சுமாரா பத்து நாட்கள் ஆகும். முட்டையிலிருந்து வெளிவரும் பட்டுப்புழுக்கள் தொடர்ந்து மல்பரி இலைகளைச் சாப்பிட்டுக்கிட்டே இருக்கும்' என்று கூறி பட்டுப்புழுக்கள் மல்பரி இலைகளைச் சாப்பிடுவதை எல்லோருக்கும் காண்பித்தார். பின்னர், முட்டைப்புழு உருமாற்றம் அடைந்து எவ்வாறு கூட்டுப்புழு நிலையை அடைகிறது என்பதையும், பட்டுப்புழுக்கள் தங்களைச் சுற்றி கட்டிக்கொள்ளும் கூட்டிலிருந்து தான்

பட்டு இழையானது பிரித்து எடுக்கப்படுகிறது என்பதையும், அந்தப் புழுக்கூடு 300 முதல் 900 மீட்டர் வரை நீளமுள்ள ஒற்றை இழையால் உருவானது என்பதையும், எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார். மேலும் அவர், இந்த பட்டுப்புழுக்களை தங்களைச் சுற்றி பட்டு இழைகளால் ஆன புழுக்கூட்டை கட்டிமுடித்தப் பிறகும் வளரவிட்டால் அவைகள் பட்டுப்பூச்சிகளாகி அந்தக் கூட்டில் ஓட்டைகளை இட்டு வெளியேறிவிடும் என்றார். பட்டுப்பூச்சியை பற்றி இவ்வளவு தெளிவாகக் கற்றுக்கொள்ள முடியுமென்று அவர்கள் நினைத்தே பார்க்கவில்லை. மகிழ்ச்சியுடன் அவர்கள் புகழும் பெருமாள் மாமாவிடம் விடைபெற்றுக்கொண்டு வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

மறுநாள் சுவாமிதாஸ் வாத்தியார் வகுப்பிற்கு மட்டம் போட்ட மாணவர்களை ஒரு வழி பண்ணிவிடுவது என்ற முடிவோடுதான் வகுப்பிற்குள் நுழைந்தார். அவர் வகுப்பிற்குள் வந்ததும் வராததுமாக, 'நேற்று வகுப்பிற்கு மட்டம் போட்டுவிட்டு எங்கடா சுத்தப்போனீங்க' என்று கோபத்துடன் கத்தினார். அருள், 'ஊர் சுத்த போகல சார். பட்டுப்பூச்சியைப் பற்றி தெரிஞ்சுக்கறதுக்காகப் பட்டுப்பூச்சிப் பண்ணைக்குத்தான் போனோம்' என்றான். வாத்தியார், 'யாருடா உங்கள அங்க கூட்டிட்டு போனது' என்று அவனிடம் கேட்டார். அவன் பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தான். வாத்தியார் தொடர்ந்து, 'உங்கள யாரு கூட்டிட்டு போயிருப்பானு எனக்குத் தெரியும்' என்று கூறி டேவிட்டின் காதைப் பிடித்துத் திருகி கூட்டி வந்து பிரம்பால் இரண்டு அடி கொடுத்து வகுப்பில் எல்லோருக்கும் முன்பாக முட்டி போட்டு நிற்க வைத்தார். பின்னர் அவர் வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களைப் பார்த்து, 'ஒழுங்கா படிச்சு முன்னுக்கு வரணும்னா இந்த கழிசடைகிட்ட யாரும் பழகாதீங்க. அப்படி அவங்கூட சேந்தீங்கன்னா அவன் அப்பன மாதிரி நீங்களும் மாடுதான் மேய்க்க வேண்டியது வரும்' என்று சொல்விட்டு, பட்டுப்பூச்சி பற்றி முன்தினம் அவர் எடுத்த பாடத்திலிருந்து கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். அவர் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் மாணவர்கள் சரியாகப் பதிலளித்தனர். பட்டுப்பூச்சிப் பண்ணைக்கு போய் வந்தபின் அவர்கள் இவ்வாறு பதில்களைத் தெளிவாக விவரணைகளுடன் சொன்னது அவரை அவமானப்படுத்துவது போல் இருந்தது. குறிப்பாக சிங்கு அவரிடம் நடந்துகொண்ட விதம் அவரை மிகவும் பாதித்தது. கடைசி கேள்விக்கு பதில் சொல் முடித்தவுடன் அவன், 'சார் B வகுப்பிற்கு பாடம் எடுக்கறதுக்கு முன்னால ஒருக்கா பட்டுப்பூச்சிப் பண்ணைக்கு போயிட்டு வந்திருங்க' என்றான். வாத்தியார் தான் எல்லோர் முன்னாலும் அவமதிக்கப்படுவதாக உணர்ந்தார். இதற்கெல்லாம் காரணம் டேவிட்தான். தான் டேவிட்டை விட ஒரு படி மேலே போய் பாடம் சொல்லிக்கொடுத்தால்தான் மாணவர்கள் அவன் பின்னால் போவதைத் தடுக்க முடியும் என்று நினைத்த வாத்தியார், நன்றாக யோசித்து அவனால் அவர் சொல்லிக் கொடுக்குமளவுக்கு நன்றாகச் சொல்லிக்கொடுக்க வாய்ப்பில்லாத ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுத்து நடத்துவது என தீர்மானித்தார். அதனால் இடையில் வந்த இரு பாடங்களை விட்டுவிட்டு

பாம்பைப் பற்றி பாடம் நடத்துவதென முடிவு செய்தார். பாடத்தைச் சுவாரசியமாக ஆக்கும் எண்ணத்துடன் பள்ளிக்கூட நூலகத்துக்குச் சென்று தெளிவான விவரணைகளுடன் கூடிய பாம்பு படங்களைக் கொண்டுவந்து அதன் உதவியுடன் பாம்பைப் பற்றி விளக்கினார். மாணவர்களுக்கு முன்பைவிட ஓரளவு அவர் நடத்திய பாடம் புரிந்தது. பாடம் முடிந்த பின் அவர் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் ஓரளவு சரியான பதிலை சொன்னார்கள். திருப்தியடைந்த வாத்தியார், 'இப்போ மீதியிருக்கும் நேரத்தில எடுத்த பாடத்தைப் படிங்க. மதிய வகுப்புல இந்தப் பாடத்திருந்து கேள்விகள் கேட்பேன்' என்றார். வகுப்பு முடிந்த பின் இடைவேளையின்போது, சுந்தரேசனும், அருளும் வாத்தியார் நன்றாக பாடம் நடத்தியதாக கூறினார்கள். அவர்களைப் பார்த்து டேவிட், 'பாம்பினைத் தொட்டுப் பார்த்திருக்கிறீர்களா? பாம்போட நாக்கு எப்படி இருக்குமுன்னு நேரில் பார்த்திருக்கிறீர்களா? பாம்போட விஷப்பல் எப்படியிருக்கும்னு தெரியுமா? பாம்பு எப்படி சீறும்னு தெரியுமா?' என்று கேள்விகளை அடுக்கினான். சுந்தரேசனாலும் அருளாலும் எந்தப் பதிலும் சொல்லமுடியவில்லை. அவர்களிடமிருந்து பதில் வராததைப் பார்த்த டேவிட், 'இதுக்காகத்தான் நான் சொல்றது, எதையுமே வகுப்போட மட்டுமே நிறுத்திக்க கூடாதுன்னு!' என்று சொன்னான். அவன் சொன்னது உண்மையாகத் தோன்றினாலும் அவர்கள் அன்றைக்கும் அவன் பின்னால் போகத் தயாராக இல்லை. ஆனால் சிங்கு வகுப்புக்கு மட்டம் போட்டுவிட்டு டேவிட்டோடு போக தயாராகிவிட்டான். கடைசி மதிப்பெண்கள் எடுக்கும் சிங்கு தெரிந்துகொள்கிற விசயங்கள் தனக்குத் தெரியாமல் போனால் அதைவிட அவமானகரமான விசயம் வேறெதுவுமில்லை என சுந்தரேசன் கருதினான். புதிதாய் விசயங்கள் கற்றுக்கொள்வதில் சிங்கு காட்டும் அதிகப்படியான ஆர்வம் அவனுள் பொறாமைத் தீயை உண்டுபண்ணியது. அதனால் உடனே தானும் டேவிட்டுடன் வருவதாக கூறினான். சுந்தரேசனே போகும்போது மற்றவர்கள் போகாமல் இருப்பார்களா? எல்லோருமே பாம்பைப் பற்றி நேரடியாகத் தெரிந்துகொள்வதற்காக டேவிட்டுடன் சென்றனர்.

டேவிட் தன் சக மாணவர்களை ஆற்றுக்கு அப்பால், வயல்வெளிகளைத் தாண்டியிருக்கும் பாம்புப் படப்பைக்கு அழைத்துச் சென்றான். பின் அவர்களெல்லோரையும் வாயிலிலேயே நிற்கச் சொல்லிவிட்டு தான் மட்டும் உள்ளே சென்றான். அங்கு புதர்களும் குறுமரங்களும் நெருக்கமாக வளர்ந்திருந்தன. நடுவில் ஒரு திண்டின் மேல் ஒரு நாகராஜா சிலை இருந்தது. இங்குதான் தைலாசி கிழவி வழக்கமாக பாம்புகளுக்கு பாலும் முட்டையும் கொண்டு வந்து கொடுப்பாளாம். அந்த பாம்புகள் எல்லாம் அவளுடன் குழந்தைகள் போல் விளையாடுமாம். டேவிட்டுக்கு அச்சூழல் சற்று திகிலை ஏற்படுத்தியது. இருந்தாலும் மனதை திடப்படுத்திக் கொண்டு இருளடைந்து பாம்பு புற்றுகள் நிறைந்திருந்த பின் பகுதிக்கு சென்றுவிட்டான்.

சற்று நேரம் கடந்த பின்னர் டேவிட் படப்பையினுள்ளிருந்து

வெளியே வந்தான் கையில் ஒரு நல்ல பாம்புடன். எல்லோரும் பயத்துடன் அதைப் பார்த்து சற்று பின்வாங்கினர். சிங்கு மட்டும் முன்னே சென்று டேவிட் பிடித்திருந்த நல்ல பாம்பைத் தொட்டுப் பார்த்தான். பின்னர் மற்ற மாணவர்களும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பாம்பைத் தொட்டுப் பார்த்தனர். அது அவர்கள் எதிர்பார்த்தது போல் பிசுபிசுப்பாக இருக்கவில்லை. பாம்பின் தோல் செதில்களால் மூடப்பட்டிருக்கின்றன என்றும், இருந்தாலும் அதன் தோல் சொரசொரப்பாக இல்லாமல் வழவழப்பாகத்தான் இருக்கும் என்றும் டேவிட் அவர்களிடம் கூறினான். பின்னர் அவன் அவர்களெல்லோரிடமும் பாம்பின் நாக்கை கூர்ந்து கவனிக்கச் சொல், 'பாம்பு இந்த பிளவுபட்ட நாக்கைதான் வாசனையை நுகருவதற்கும், இரை இருக்கிற திசையை கண்டுபிடிக்கிறதுக்கும் பயன்படுத்தும்' என்றான். அடுத்து அவன் பாம்பின் வாயை நன்றாக பிளக்கச் செய்து, அதன் வாயிலிருக்கும் நச்சுப் பற்களை காட்டி, 'துளையுள்ள இந்த பற்களாலத்தான் பாம்பு எதிரியோட உடம்பில் விஷத்தை எத்துகிறது' என்றான். மாணவர்களினுள் சற்று கிலியிருந்தாலும் அவர்கள் மிகவும் ஈடுபாட்டுடன் பாம்பைப் பற்றி அவன் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தனர். சிங்கு ஒரு படி மேலே போய் அந்த பாம்பை கொஞ்ச நேரம் தன் கையில் வாங்கி வைத்துக்கொண்டான். சுந்தரேசனுக்கும் அதனை தன்கையில் வாங்கிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் பயம் அவனை அவ்வாறு செய்யவிடாமல் தடுத்தது. என்ன இருந்தாலும் எல்லோரும் பாம்பைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொண்ட சந்தோசத்துடனும் வீடு திரும்பினர்.

இரண்டாவது முறையாக மாணவர்கள் வகுப்புக்கு மட்டம் போட்ட விசயம் சுவாமிதாஸ் வாத்தியாரை கோபத்தின் உச்சாணிக்கே கொண்டுசென்றது. அதனால் அவர் மாணவர்களிடம் மறுநாள் பள்ளிக்கு வரும்போது எல்லோரும் வீட்டிலிருந்து அப்பா அல்லது அம்மாவை கூட்டிவரவேண்டும் என்றும், அவ்வாறு கூட்டி வராதவர்களை மறுநாளிலிருந்து பள்ளிக்குள் அனுமதிக்க முடியாது என்றும் கூறினார். பின்னர் டேவிட்டை மட்டும் முன்னால் வரச்சொல், 'நீ கெட்டு போறது மட்டுமில்லாம ஏண்டா மத்தவங்களையும் கெடுக்குற?' என்று கூறிப் பிரம்பால் கையிலும் கால்களிலுமாக மாறி மாறி அடித்தார். அவன் வலி தாங்க முடியாமல் 'அய்யோ... அம்மா .... அடிக்காதீங்க சார்.....' என கத்தினான். பின் வாத்தியார் அவனைத் தரதரவென்று இழுத்து வெளியே கொண்டுபோய் வெயில் சரளைக் கற்கள் நிறைந்த பகுதியில் முழங்காலில் நிற்க செய்தார். வெயிலின் குரூரம் தாங்க முடியாமலும் அடிபட்ட வலியாலும், அழுதுகொண்டிருந்தான் டேவிட். வகுப்பினுள் வந்த வாத்தியார் தான் முந்தின தினம் பாம்பைப் பற்றி நடத்திய பாடத்திருந்து கேள்விகள் கேட்டார். மாணவர்கள் கேள்விகளுக்கு ஆச்சர்யப்படும் அளவுக்கு தெளிவாக பதிலளித்தனர். எல்லோரையும் விட தன்னால் நன்றாகப் பதில் சொல்ல முடியும் என்ற எண்ணத்துடன் சிங்கு வாத்தியாரின் கேள்விக்காக

எதிர்பார்த்திருந்தான். ஆனால் வாத்தியார் அவனிடம் மட்டும் கேள்விகளே கேட்கவேயில்லை. அதனால் வருத்தத்துடன் அவன், 'ஏன் சார் எங்கிட்ட மட்டும் கேள்விகளே கேட்கமாட்டேங்கறீங்க?' என்று கேட்டான். வாத்தியார் தான் தன்னுடைய விருப்பு வெறுப்புகளை தன் மாணவர்களுடனான உறவில் புகுத்துவதை உணர்ந்தார். அவருக்கு இதயத்தில் முள் தைத்தது போலிருந்தது. தன் குற்ற உணர்ச்சியை வெளிக்காட்டாதவாறு முகத்தில் புன்னகையை வரவழைத்துக்கொண்டு, 'எல்லோரையும் விட உனக்கு இந்த பாடம் நல்லாத் தெரியும்னு எனக்குத் தெரியும். அதனாலத்தான் கேக்கல' என்றார். வாத்தியாரின் இந்தப் பதிலால் சிங்கு சந்தோசமடைந்தான். அப்போது வாத்தியாருக்கு திடீரென்று டேவிட்டின் ஞாபகம் வர அவர் வகுப்பிற்கு வெளியே வந்து அவனை எட்டிப் பார்த்தார். அவனுடைய கன்னங்களில் கண்ணீரின் தடம் தெரிந்தது. அவனால் இப்போது அழக்கூட முடியவில்லை. வாத்தியார் தான் அளவுக்கு அதிகப்படியாக அவனை தண்டித்துவிட்டதாக நினைத்து வருந்தினார். கோபம் தணிந்த அவர் டேவிட்டை வகுப்பினுள் வரச்சொன்னார். அவன் உள்ளே வந்து தன்னுடைய இருக்கையில் அமர்ந்து கொண்டான். சோர்ந்து போயிருக்கும் அவனை உற்சாகப்படுத்தும் எண்ணத்துடன் வாத்தியார், 'பாம்பைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்' என்றார். டேவிட் தன் புத்தக கூடையிருந்து ஒரு துணிப்பையை எடுத்து திறந்து முந்தின தினம் தான் பிடித்த நல்ல பாம்பை வெளியிலெடுத்து பாம்பைப் பற்றி விளக்க முற்பட்டான். மாணவர்கள் 'பாம்பு' என்று இழுத்தனர். சிங்கு, 'சார் இது நேற்று பிடிச்ச பாம்பு' என்றான். வாத்தியார் அதிர்ந்து போனார். முந்தின நாள் என்ன நடந்திருக்கக் கூடும் என்பதை ஊகித்த அவருக்கு கோபம் தலைக்கு ஏறியது. கோபத்தில் அவர் டேவிட்டை பாம்பை பையினுள் போட்டு கட்ட வைத்து, அவனுடைய புத்தகக் கூடையையும் எடுத்துக் கையில் கொடுத்து, 'இனிமே நீ பள்ளிக்கூடத்துக்கே வரவேண்டாம்' என்று கழுத்தைப் பிடித்து வெளியேத் தள்ளினார். டேவிட்டுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. அதனால் வாத்தியாருக்கு பாடம் கற்பித்து கொடுப்பதென அப்போதே முடிவு செய்தான்.

வாத்தியாருக்கு பாடம் கற்பித்துக் கொடுக்க வேண்டும் என்று நினைத்த டேவிட், தான் அவசர அவசரமாக வீட்டுக்குச் சென்று எடுத்து வந்த கவணுடன் ஆற்றின் மறுகரையின் கீழே இருக்கும் வயல் வரப்பில் நின்றிருந்த ஒரு புங்க மரத்தினருகில் மறைந்துகொண்டு சுவாமிதாஸ் வாத்தியாரின் வரவுக்காகக் காத்து நின்றான். அவர் வழக்கம் போல தன் தங்கையின் வீட்டில் மதிய உணவு சாப்பிட்டுவிட்டு வயல் வரப்புகளின் வழியாக குறுக்கு பாதையில் பள்ளிக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வாத்தியார் அருகில் வரவும் டேவிட் கவணில் கல்லை வைத்து குறிபார்த்து அவருடைய நெற்றியில் அடித்தான். கோலியாத் போல் ஆஜானுபாகுவாக இருந்த வாத்தியார் வேரற்ற மரம் போல் சாய்ந்தார். அவர் சலனமற்று வயலில் கிடந்ததைப் பார்த்த சத்துணவை சாப்பிட்டுவிட்டு ஆற்றில் பாத்திரங்களை

கழுவிக்கொண்டிருந்த மாணவர்கள், 'ஹே வாத்தியார் செத்துட்டாரு போய்…' என்று தங்கள் பாத்திரங்களை அடித்து ஆரவாரம் செய்தனர். சற்று நேரமாகியும் வாத்தியார் எழுந்திருக்காததை பார்த்து அவர் உண்மையிலேயே செத்துபோயிட்டாரோ என்று பயந்து போயினர். விசயம் தலைமை ஆசிரியருக்கு தெரியவர, அவர் மற்ற ஆசிரியர்களுடன் சேர்ந்து சுவாமிதாஸ் வாத்தியாரை ஆசிரியர் அறைக்கு தூக்கிக்கொண்டு சென்றார். டேவிட் மிகவும் பயந்து போனான். என்னாதான் வாத்தியார் மேல் அவனுக்கு கோபமிருந்தாலும் அவன் ஒருபோதும் அவர் சாகவேண்டும் என நினைத்ததில்லை. அவன் வாத்தியாருக்கு ஒன்றும் ஆகக்கூடாது என்று கடவுளை வேண்டிக்கொண்டான்.

ஆசிரியர் ஓய்வு அறையில் வைத்து வாத்தியாருக்கு மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட்டது. டேவிட்டும் மற்ற மாணவர்களும் ஆசிரியர் அறையினுள் நடப்பவற்றை வெளியிலிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். சிகிச்சைக்குக் கொடுத்த சற்று நேரத்தில் வாத்தியார் கண் விழித்தார். டேவிட்டுக்கு அப்போதுதான் மூச்சு வந்தது போலிருந்தது. கண்விழித்த வாத்தியாரைப் பார்த்து தலைமையாசிரியர், 'யாரோ மாணவன் உங்கள கல்லாலடிச்சதாச் சொன்னாங்க. அது யாருனு உங்களுக்குத் தெரியுமா? தெரிஞ்சா சொல்லுங்க அவனுக்கு சான்றிதழ் கொடுத்து பள்ளிக்கூடத்தை விட்டே அனுப்பிருவோம்' என்றார். வாத்தியாருக்கு டேவிட்தான் தன்னைக் கவணால் அடித்தான் என்றுத் தெரிந்தாலும், 'யாருனு தெரியல சார் ஒருவேளை பசங்க விளையாடிட்டு இருக்கும் போது தெரியாம பட்டிருக்கும்' என்றார். பின்னர் டேவிட்டையும்

அவனுடன் நின்றுகொண்டிருந்த மற்ற மாணவர்களையும் பார்த்து, 'ஏன் இங்க நின்னு வேடிக்க பாக்குறீங்க? வகுப்புக்குப் போய் ஒழுங்கா பாடத்தப் படிங்க' என்றார்.

பள்ளிக்கூடத்திருந்து மாணவர்கள் வீட்டுக்குத் திரும்புவதற்குள்ளாகவே யார் மூலமோ தாத்தா, சுவாமிதாஸ் வாத்தியார் டேவிட்டை வகுப்பறையிருந்து வெளியேற்றியதையும், கோபத்தில் டேவிட் வாத்தியாரை கவணால் வீழ்த்தியதையும் பற்றித் தெரிந்துகொண்டார். நடந்ததைப் பற்றிய முழுவிபரம் தெரியாத அவர் 'வாத்தியார் ஒரு உயர்சாதி பையனை இப்படி வெளியேத்தியிருப்பாரா? எனக் கேட்டார். பின்னர் சற்று பெருமிதத்துடன், 'பையனுக்கு டேவிட் என்று பெயர் வச்சது சரியாத்தான் இருக்குது. பார்த்தீங்களா. இந்த பொடியன் அந்தக் கோலியாத் வாத்தியானை ஒரு சிறு கல்லாலேயே வீழ்த்திவிட்டான்.....' என்று கூறினார்.

மாலையில்தான் டேவிட்டின் தாத்தாவுக்கு நேரடியா கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்க்கொண்டு டேவிட் விஷ பரீட்சையில் இறங்கிய விசயம் பள்ளியிருந்து திரும்பிய மாணவர்களின் மூலமாகத் தெரியவந்தது. தைலாசி கிழவி வேறு அவரிடம் வந்து 'பையன் டேவிட் நாகராஜாவோடப் பாம்பு குட்டி ஒன்றை பிடிச்சிட்டு போயிட்டான். அவனுகிட்ட அந்தப் பாம்பு குட்டிய விட்டுட சொல்லுங்க இல்ல நாகராஜா அவனைத் தண்டிச்சுடும்' என்று போட்டு வைத்தாள். சுப்பு தாத்தாவுக்கு கடவுள் நம்பிக்கை எதுவுமில்லை. அதனால் அவர் தைலாசி கிழவி சொன்னதைக் குறித்து எதுவும் கவலைப்படவில்லை. இருந்தாலும் டேவிட் செய்த அபாயகரமானச் செயல் அவரைக் கவலைக்கொள்ள செய்தது. அதனால் அவர் டேவிட்டை அழைத்து கண்டித்து, 'சுற்றியுள்ள உலகத்துல இருந்து கத்துக்க முயற்சி செய்யவேண்டும்தான். ஆனா இத மாதிரி விஷ பரீட்சையிலெல்லாம் இறங்கக்கூடாது. ஏதாவது நடந்தா என்ன ஆயிருக்கும்? நாளைக்கு பள்ளிக்கூடத்துக்கு போனதும் முதல் வேலையா வாத்தியாருகிட்ட செய்த தப்புக்கு மன்னிப்பு கேளு' என்று கூறினார். பின்னர் அவனை அந்த நல்ல பாம்பு இருந்த பையை எடுத்து வரச் செய்து அதைத் தைலாசி கிழவியிடம் கொடுத்தார். அவள் அந்தப் பாம்பை வெளியிலெடுத்து தன் உடம்பில் சுற்றிக்கொண்டு பாம்புப் படப்பைக்கு புறப்பட்டாள்.

தாத்தா கேட்டுக்கொண்டபடி சுவாமிதாஸ் வாத்தியாரைப் பார்த்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற தீர்மானத்தோடுதான் டேவிட் காலையில் பள்ளிக்கு கிளம்பினான். அப்போதுதான் மற்ற மாணவர்கள் சுவாமிதாஸ் வாத்தியாருக்கு பைத்தியம் பிடித்து அவர் திரும்பிப் போன விசயத்தை தெரிவித்தனர். அவன், தான் அவர் தலையில் கல்லால் அடித்ததனால்தான் அவருக்கு மூளை குழம்பி பைத்தியம் பிடித்துவிட்டது என்று எண்ணி

கலங்கினான்.

அப்படியிருக்கும் சமயத்தில்தான் தலைமையாசிரியருக்கு சுவாமிதாஸ் வாத்தியாரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் தன்னுடைய மனைவி பைக்கிருந்து விழுந்துவிட்டதால் அவரை மருத்துவமனைக்கு கூட்டி சென்றுவிட்டு மதியம் பள்ளிக்கூடத்துக்கு வருவதாக சொன்னார். சொன்னவர் சொன்னபடியே வரவும் செய்தார். வாத்தியார் வகுப்புக்கு வந்த தோரணையை பார்த்தவுடன் மாணவர்கள் அவருக்கு பைத்தியம் ஒன்றும் பிடிக்கவில்லை என்று தெரிந்துகொண்டனர். அவர்களுக்கு ஒருவிதத்தில் அது ஏமாற்றமாகவும் இருந்தது. என்ன நினைத்தானோ டேவிட், வாத்தியாரிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமென்ற தன்னுடைய முடிவை மாற்றிக்கொண்டான். வாத்தியாரோ வந்த உடனேயே, 'இன்று நாம தாமரை கொடிகளப் பத்தி கத்துக்கப் போறோம்' என்று பாடத்தை நடத்த தொடங்கிவிட்டார். பின்னர், பாடம் நடத்தி முடித்தவுடன் அவர், 'இப்போ உட்கார்ந்து நடத்தின பாடத்த ஒழுங்கா படிங்க. ஏதாவது சந்தேகமிருந்ததுனா இப்பவே கேளுங்க. மத்தியானம் கேள்வி கேட்குற சமயத்துல யாரும் பாடம் புரியலனு சொல்லக்கூடாது. அப்புறமா ஒரு முக்கியமான விசயம். இனிமே யாராவது வகுப்புக்கு மட்டம் போட்டாங்கனா அவங்கள பள்ளிக்கூடத்த விட்டே வெளியேத்தனும்னு தலைமை ஆசிரியர் சொல்யிருக்காரு. அதனால அத மாதிரி எண்ணம் யாருக்காவது இருந்ததுன்னா இப்பவே மாத்திருங்க' என்று கூறினார். அந்த அறிவிப்புக்கு பிறகு மாணவர்கள் யாரும் வகுப்புக்கு மட்டம் போட வாய்ப்பில்லை என்று தான் வாத்தியார் நம்பினார். ஆனால் அன்று மதியம் கூட மாணவர்கள் யாரையும் வகுப்பில் காணோம். தாமரை கொடிகளை பற்றி நேரடியாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று உன்னங்குளத்துக்கு டேவிட்டுடன் சென்ற அவர்கள் தாமரை கொடிகளுக்கிடையே நீந்திக் கொண்டிருந்தனர். ●

சங்ககாலத் தமிழர் சமயம்

க. நெடுஞ்செழியன்

விலை : ரூ. 90 /- பக்கங்கள் : 220

அறிவியலுக்கெல்லாம் தாயாக விளங்கும் மெய்யியல் (தத்துவம்) துறையில் முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்கள் எடுத்திருக்கும் முயற்சியும், உழைப்பும், ஆய்வும் தமிழகத்தின் சிந்தனைத் தளத்தில் புதிய அணுகுமுறைக்கு வழிகாட்டும் என்று நம்புகிறேன். பெங்களூர் சிறையில் தனிக் கொட்டறையில் துவண்டு கிடந்த வேளையிலும், சமுதாய நோக்கோடு இணைந்த ஆய்வு முயற்சி தமிழ்ச் சமுதாயத்துக்குப் புதிய ஆய்வுப் படைப்புகளைக் கொடுத்துள்ளது. இரண்டாண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் தவமாய்த் தவமிருந்ததுபோல் வாழ்ந்து வந்திருக்கிறார்; சங்க காலத் தமிழர் சமயம் என்ற நூலைத்தந்துள்ளார்; தமிழ் ஆய்வுத் தளத்துக்குப் புதிய நல்வரவாக விளங்கும், பாராட்டப்படும் என்று நம்புகிறேன்.

- இரா. நல்லக்கண்ணு

தமிழரின் அடையாளங்கள்

க. நெடுஞ்செழியன்

விலை : ரூ. 80 /- பக்கங்கள் : 184

புத்தர், மகாவீரர் ஆகிய இருவரின் சமகாலத்தவரும் அவ் இருவரையும் விடச் செல்வாக்கு மிக்கவராகவும் திகழ்ந்தவர் மற்கலிகோசாலர் எனும் மாசாத்தனார் ஆவார். உலகப் பேரறிஞர்களுள் ஒருவராக மதிக்கத்தக்க அம்மாபெரும் மனிதரை அறிந்து கொள்வதும், அறிவியல் கலைக்களஞ்சியம் எனப் போற்றப்படும் அவர் கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதும் ஒவ்வொரு தமிழனின் கடமையல்லவா!

- பெ. மணியரசன்

தொடர்புக்கு :

பாலம்

இ/7, பாரத் அடுக்ககம், ஆர்.வி. நகர்,
அண்ணா நகர் கிழக்கு,
சென்னை - 600 102.

அனிதா நாயர் கவிதைகள்

தமிழில் **லாவண்யா**

1997 ல் முதல் சிறுகதைத் தொகுப்பில் துவங்கி The Better Man, Mistress, Adventures of Nonu the Skating squirree, Living next door to Alise என நாவல்களும், பயண நூல்களும், நூல் மதிப்புரைகளும் நிறைய எழுதியுள்ளவர் அனிதா நாயர். கேரளத்துக்காரர். ஆங்கிலத்தில் எழுதும் இவருடைய நூல்கள் கிரேக்க, இத்தா, ப்ரெஞ்சு, ஸ்பானிஷ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. Malabar Mind என்ற இவருடைய முதல் கவிதைத் தொகுப்பிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டவை.

இவை யதார்த்த வாழ்க்கைக்கு திரும்பிவரும் கவிதைகள். இந்தத் தொகுப்பு ஹிந்து, சண்டே எக்ஸ்பிரஸ், தி ஏசியன் ஏஜ், டைம்ஸ் ஆப் இந்தியா, சண்டே ஹெரால்ட், தி ட்ரிப்யூன் பத்திரிகைகளின் பாராட்டுகளைப் பெற்றவை.



'Malabar Mind' Anita Nair - English
YETI BOOKS, P.B. NO: 15,
Calicut University Post Office,
Kerala - 673 635.

சுதந்திரமான வீழ்ச்சி

என்னுடல் காதலிக்கப்படுவதை
தொடப்படுவதை வருடப்படுவதை
விருப்பப்படுவதை நான் விரும்புகிறேன்.
நரம்பு நுனிகளின் ஏக்கங்களை
நிறைவேற்றிக்கொள்ள வாழ்கிற பெண் நான்.
கொஞ்ச நாட்களாக நான் ஓவியம் வரைகிறேன்
வண்ணங்களின் சிதறல்களில்
ஒருதனித்த மீன்
பழுப்பு நிறத்தில் மூன்று பெண்கள்.

என் வீடு ஒரு கருவைப்போல
முகமற்ற கால்கள் அமைதியின்றி
மேலும் கீழும் உலவுகின்றன.
தனிமைக்கான ஏறுவழியில்
என் கணவர் ஏறிக்கொண்டிருக்கிறார்.
குப்பைக் கடிதங்களோடும்
குடும்ப கோரிக்கைகளோடும்
அஞ்சல்பெட்டி நிரம்பி வழிகிறது.
என் குழந்தைகள் தொட்டிச் செடிகள்
அவர்களென்னிடம் எதையும் கோருவதில்லை
என்முகத்தில் முடிவுகளைத் திறந்தவாறு
சில சமயங்களில் நான் கனவு காண்கிறேன்
இன்னும் கொஞ்சம் கனவு காண்கிறேன்.
பாறைக்குளத்தில் இருந்து
நீருக்கடியில் சுவாசித்து
பவழத்தோட்டங்களையும் இரகசியக் குகைகளையும் கண்டு
ஆணுடலும் மீன்வாலுமுள்ள ஒருவனுடன்
ஆழமான நீருக்குள் சென்று
வாழ்க்கையை வாழ்கிறேன்.
வீழ்கிறேன். ●

ஒரு அரிய இடைவேளை

மதிய உணவு
கசப்பு
முறிந்த காதல்
தனிமை
உடலுறவுகள்
மௌனங்கள்
சலனப்படுத்தின
அலைஅலையாய்
மேலும் கொஞ்சம் சலனப்படுத்தின
ஒரு நீண்ட பெருமூச்சுடன் விரைந்து
மனித முட்டாள்தனங்களையும்
உணர்ச்சிகளின் சிதிலங்களையும்
குமிழிகளுடனும் இரகசியச் சிரிப்புடனும்
தண்ணீர் உறிஞ்சிப்போக
காலியாகியும்
ஓய்ந்து போயும்
உலகின் எல்லாக் கடல்களும்
ஒன்று சேரும்.
கழிவறை பேசினின் வாயை
நான் வெறிக்கிறேன். ●

எனக்கு வேண்டும்

சத்தமும் இருளும் நிறைந்த மதுக்கடையில்
நான் உன்னருகில் உட்காரவேண்டும்.
கால்களை ஆட்டிக்கொண்டு தோள்களை பிடித்துக்கொண்டு
முழங்கால்கள் தொட்டுக்கொண்டு
என் புருவங்களின் மீதுள்ள வேர்வை
உன் மூச்சுக்காற்றில் மறைய வேண்டும்.
என் உதடுகளிருக்கும் கசப்பை
உன் நாவினால் நீ சுவைக்க வேண்டும்.
உன் கண்கள் என் கண்களைத் தேடவேண்டும்.
சத்தத்துக்கிடையே இரகசியக் காமத்தை
உன் குரல் நான் கேட்கவேண்டும்.
இருண்ட மாடியில் நான் உள்பக்கத்திலமர வேண்டும்.
நேற்றைய மோதல்கள் பிளவுபட்ட தன் சிறகுகளை விரிக்காமல்

இரவின் அழைப்பை நாம் கேட்கவேண்டும்.
நிழல்களின் பந்து விளையாட்டையும்
காலம் எழுப்பும் தெய்வீகச் சுவரையும் காணவேண்டும்.
உன் விரல்கள் என் விரல்களைத் தேடவேண்டும்.
நான் வாழவேண்டும் வெறும் பழக்கத்தைவிட உயர்வாக. ●

நீ சொன்னாய் நான் ஒத்துக்கொண்டேன்

நாம் நண்பர்களாயிருப்போம் நீ சொன்னாய்
நாம் நண்பர்களாயிருப்போம் நான் ஒத்துக்கொண்டேன்

இனிமேலெதுவும் வேண்டாம் நீ சொன்னாய்
இனிமேலெதுவும் வேண்டாம் நான் ஒத்துக்கொண்டேன்

நான் எந்த அறிவிப்பையும் வாக்குறுதியையும் தரவில்லை நீ சொன்னாய்
நீ எந்த அறிவிப்பையும் வாக்குறுதியையும் தரவில்லை நான்
ஒத்துக்கொண்டேன்.

அது ஒரு சிறிய மன அவசம் குறுக்குப்பாதை நீ சொன்னாய்
அது ஒரு சிறிய மன அவசம் குறுக்குப்பாதை நான் ஒத்துக்கொண்டேன்.

நானெதுவும் செய்தது போலல்ல அது நீ சொன்னாய்
எதுவும் நிகழ்ந்தது போலல்ல அது நான் ஒத்துக்கொண்டேன்.

அதிருந்து நாம் கௌரவத்துடன் வெளிவந்தோம் நீ சொன்னாய்
அதிருந்து நாம் கௌரவத்துடன் வெளிவந்தோம் நான்
ஒத்துக்கொண்டேன். ●

பிருந்தாவனத்தில் வல்கன் பறவை

பவுல், செகோஸ்லாவிய நாட்டுக்காரன் வரவேயில்லை.

வந்து சேர்ந்தான் பின்.
கொதிக்கும் வெயிருந்து காக்கி தொப்பியுடன்
கொசுவலைகளுடன் பூச்சிகளை விரட்டும் மருந்துகளுடன்
ஒரு கையேட்டுடனும் நீலமான தேடல் நிறைந்த கண்களுடன்

கம்யூனிசம் ஒரு மாயை
உளவுப்படை இராணுவம் பற்றிய பயத்துடன் வாழவேண்டும்.
சமத்துவம் ஒரு தெளிவற்ற வார்த்தை.
இந்தியாவில், உங்களுக்கு பயமென்றால் என்னவெனத் தெரியாது.
ஒவ்வொரு கட்டத்திலும் முறியடிக்க வேண்டியது எதுவென
தோல்விகளை வோட்காவுடன் விழுங்கும்வரை அறியமாட்டீர்கள்.
அது தேசாபிமானிகளின் பானம்
உண்மை. உண்மை. நாங்கள் பயத்துடன்
ஆமாம் ஆமாம் என்றோம்.

பைத்தியக்கார பவுல்
பக்கெட்டுகளில் நீரை நிரப்பி
பழுப்பான இறுகிய நிலத்தில் கொட்டி
பசுமையாக ஈரமாக அடர்த்தியாக
புற்களை வளரச்சொல்த் தூண்டினான்

வேதங்கள் குப்பை
வாத்சாயனர் ஒரு பிரம்மச்சாரி
உங்களுக்குத் தெரியாதா?
கண்ணனின் நிறம் நீலமல்லவா?
நீலம் எல்லையற்ற நிரந்தர நிறம்.

நாங்கள் கதகளியை கண்டுபிடித்தோம்.
பவுன் பக்கத்தில் சம்மணமிட்டமர்ந்து
பவுல் அந்நியப் பிரமிப்புடன்
நம் பாரம்பரியங்களை பொட்டலம் கட்டி
அன்பளிப்பாய் எங்களுக்குத் திருப்பிக் கொடுத்தான்

புகழ்பெற்ற பேக்ஹேண்டால்
வலைகளின் குறுக்கே
மார்ட்டினா டென்னிஸ் பந்துகளையெறிந்தது

பவுலுக்குத் தெரியும்.
அணுக்களின் முட்டாள்தனத்தையும் பலவீனங்களையும்
பவுல் அந்த உலகில் கண்டுபிடித்தான்.

நீங்கள் ஏன் தொய்வாக்குகிறீர்கள் எல்லோரையும்?
உங்கள் நகர எழுத்தரிருந்து மேயர்வரை
நீங்கள் ஏன் லஞ்சம் தருகிறீர்கள்?
உங்கள் தீவிரத்தன்மைகூட மெத்தனமானது.
உங்கள் தேசியமிருகம் பசுவாயிருக்க வேண்டும்.
நாங்கள் எங்களுக்குத் தெரியாதென தலையாட்டுகிறோம்
எங்கள் சால்ஜாப்பு: எங்களை வெள்ளையர்கள்
முந்நூறு வருடங்கள் ஆண்டதினாலிருக்கலாம்.

பவுல் ப்ரியதர்சினியை ஒரு ராணியென்றான்.

அதீத சுயமுக்கியத்துவமும்
தடுமாற்றமும் நிறைந்தவரென்றான்.
ஏறக்குறைய நாங்கள் அவன் கழுத்தை அறுத்துவிட்டோம்
நம்மைவிட அவனுக்கு அதிகம் தெரியுமென்பதற்காக?
வெளிநாட்டானிடமிருந்து அத்தகைய பேச்சை
நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ●

ஒரு நெருப்புக்கோழியின் காதல் பாட்டு

உன் போர்களை நீயே செய்.
நீ வென்றால்
உன் வெற்றியையும் புகழையும்
உன்னுடன் சேர்ந்து கொண்டாடுவேன்.

நீ தோற்றால்
இரு தலையணைகளுக்கிடையில்
உன் தலையை ஒளித்துக்கொள்ளும்
ஆறுதல் உனக்கிருக்கிறது. ●

தொன் குவிக்ஸாட் என்னும்

தொன் க்விஹோதே !

கார்லோஸ் ஃபுயண்டஸ்

Hackett Memorial Lecture-ன் *பொருட்டு 1975ல் கார்லோஸ் ஃபுயண்டஸ் எழுதி வாசித்த கட்டுரை. டோபியாஸ் ஸ்மோல்லெட் மொழியாக்கத்தில்* **The Modern Library, New York (2004)** *வெளியிட்டுள்ள* **Don Quixote** *நூலுக்கான முன்னுரையாக இடம் பெற்றுள்ளது. தமிழில்: சா. தேவதாஸ்*

மறுமலர்ச்சி என்னும் கடல் வெள்ளத்திற்கும் எதிர்சீர்திருத்தவாதம் என்னும் கடல் வடிதலுக்கும் இடையே சிக்கிக் கொள்ளும் செர்வாண்டிஸ், ராட்டர்டாமின் எராஸ்மஸைப் **பற்றிக் கொள்கிறார்.

ஸ்பெயினில் எராஸ்மஸின் பாரியதாக்கம் தற்செயலானதாக இருக்க முடியாது. நம்பிக்கை மற்றும் பகுத்தறிவின் மெய்மைகளுக்கும் பழமை மற்றும் புதுமையின் காரணங்களுக்கும் இணக்கம் காண்பதற்காகப் போராடிக் கொண்டிருந்த மறுமலர்ச்சி மனிதராக அவர் சரியாகவே அடையாளங் காணப்பட்டார். செர்வாண்டிஸின் முறையான கல்வியைப் பொறுத்தவரை, அவர் தனது ஆசிரியரான யுவான் லோபஸ் டெ ஹோயேஸ் மூலமாக எராஸ்மஸ் சிந்தனைகளில் தோய்ந்தவர். ஹோயோஸ், எராஸ்மஸின் ஸ்பானிய சீடர்.

செர்வாண்டிஸின் மீதான எராஸ்மஸ் தாக்கத்தை மூன்றங்கங்களாகக் காணலாம். அவை எத்தத்துவாசிரியருக்கும் நம் நாவலாசிரியருக்கும் பொதுவானவை: உண்மையின் இருமைநிலை, தோற்றங்களின் மாயத்தன்மை மற்றும் மடமையைப் போற்றுதல். எராஸ்மஸ் மறுமலர்ச்சிக்கால இருமைநிலையைப் பிரதிபலிக்கின்றார்: புரிதல், நம்பிக்கை கொள்வதினின்றும் வேறாகலாம்.

ஆனால், புறத்தோற்றங்களை வைத்து முடிவுக்கு வருவதில் பகுத்தறிவு அலுத்துப்போய்விடும். "ஒன்றுக்கொன்று நேர்எதிரான இருமுகங்களைக் கொண்டிருந்த அல்ஸியையாடெஸின் நிசப்தங்கள் போலவே, மானுட அம்சங்கள் அனைத்துமே இரு அம்சங்கள் கொண்டிருப்பவை; இவ்வகையில், முதல் பார்வைக்கு மரணமாகத் தோன்றியது, நெருங்கிப் பார்க்கையில் உயிராக இருக்கும்" (Praise of Folly). அவர் கூறிக்கொண்டு போகிறார். "விஷயங்களின் யதார்த்தம்..... அபிப்பிராயத்தினையே சேர்ந்தது வாழ்க்கையிலுள்ள ஒவ்வொன்றும், எந்தவொரு உண்மையிலும் நாம் உறுதி கொள்ள முடியாதபடிக்கு, அவ்வளவு வேறுபட்டதாக, அவ்வளவு எதிரானதாக, அவ்வளவு இருண்மைமிக்கதாக உள்ளது".

தொன் க்விஹோதே உலகளாவியதன் மொழிபேச, சாஞ்சோ பான்ஸா குறிப்பானதன் மொழிபேசுகிறான்; நாயகன் நம்பிக்கை கொள்ள, துணைநிற்பவன் சந்தேகிக்கிறான்; ஒவ்வொருவரின் தோற்றமும் மற்றவரின் யதார்த்தத்தால் வேறுபடுகிறது, இருண்மையடைகிறது மற்றும் எதிர்க்கப்படுகிறது: சாஞ்சோ நிஜமனிதன் எனில், அப்போது அவன், தொன் க்விஹோதேயின் மாயஉலகில் பங்கேற்பவனே: ஆனால் தொன் க்விஹோதே மாயமனிதன் எனில், அப்போது அவன், சாஞ்சோவின் யதார்த்த உலகில் பங்கேற்பவன் ஆகிவிடுகிறான்.

தெய்வீகக் காரணத்தில் மயக்கமுற்றிருந்த காலகட்டத்தில், எல்லா விஷயங்களையும் விட்டுவிட்டு எராஸ்மஸ் மடமையைப் போற்றி எழுதுவது, சிந்தனை வரலாற்றின் முக்கியமான புதிர்களுள் ஒன்றாகும். எனினும், இப்பைத்திய நிலையில் ஓர் ஒழுங்குமுறை இருந்தது. பகுத்தறிவினிடமிருந்தே அவசர அழைப்பொன்றினை எராஸ்மஸ் பெற்றிருந்தது போலிருக்கிறது: கடந்த காலத்தில் நம்பிக்கை இருந்தது போல், நான் இன்னொரு தனிமுதலாகி

(absolute) விடக்கூடாது - அப்போது நான் என் பகுத்தறிவின் பகுத்தறிவை இழந்து போவேன் ஏராஸ்மஸின் மடமை இருமடங்கான முரண்களை நடைமுறைக்கொள்கையாகும் பொய்மையான அறுதிகள் மற்றும் இடைநிலைக்காலத்தில் இணிக்கப்பட்ட மெய்மைகள் ஆகியவற்றிலிருந்து ஒரே வேளையில் அது மடமையை விலக்கிவிடுகின்றது: இருப்பினும் பகுத்தறிவின் மீதே அளப்பெரும் சந்தேகத்தை வீசிவிடுகின்றது.

.... இருமண்பாடுகளின் முச்சந்தியில் நிறுத்தப்பட்ட ஏராஸ்மஸின் மடமை. இரண்டின் அறுதிகளையும் இணக்கமாகச் செய்கிறது. இம்மையத்திய நிலை நம்பிக்கையின் நெஞ்சத்திலே விமர்சனபூர்வமாக பதிக்கப்பட்டதாகும்: பகுத்தறிவின் நெஞ்சத்திலேயும் கூட ஏராஸ்மஸின் மையத்தியநிலை மனிதன் மனிதனை வினவுவது, பகுத்தறிவு பகுத்தறிவை வினவுவதே ஒழிய யாராக கடவுளாலோ பாவத்தாலோ சாத்தானாலோ வினவப்படுவதல்ல இவ்வாறாக விமர்சனபூர்வ மற்றும் முரண்களையான மடமையால் இணக்குவிக்கப்பட்ட மனிதன் விதிக்கோ நம்பிக்கைக்கோ கட்டுப்பட்டவனாக இருப்பதில்லை அதேவேளையில் பகுத்தறிவின் அறுதியான எஜமானனாகவும் இருப்பதில்லை

ஏராஸ்மஸினால் பிரதிபலிக்கப்பட்ட ஆன்மீக யதார்த்தங்கள் இலக்கியத்தளத்தில் எவ்விதம் மொழியாக்கம் செய்யப்படுகின்றன?...... வார்த்தைகள் நடவடிக்கைகளாகுகின்றன, வார்த்தை ஒரு வாளாகுகின்றது மற்றும் ஹேம்லட்டின் வாளால் இலக்கியவாளால் துளைக்கப்படுகிறான் பொலோனியஸ் வார்த்தைகள், வார்த்தைகள், வார்த்தைகள் - முணுமுணுக்கின்றான் ஹேம்லட்: அதனை அவன் இழிவுபடுத்தும்வகையில் கூறவில்லை: ஏராளமான குறிப்புணர்த்துதல்கள் இவ்வாறு, இலக்கியம் என்ற ஒன்றின் இருப்பினை, அவன் வெறுமனே சுட்டிக்காட்டுகின்றான் தெய்வீக வினைச் சொல் (அ) நிலைநிறுத்தப்பட்ட சமூக அமைப்பின் வெளிப்படையான வாசிப்பாக இல்லாது போயுள்ள ஒரு புது இலக்கியம்; ஆனால் கடந்த காலத்தில் மதவியல் மற்றும் சமூகவியல் அமைப்புகளைப் போன்று இசைவான (அ) சந்தேகிக்கமுடியாத புதியதொரு மாறுபட அமைப்பைப் பிரதிபலிக்கின்ற அடையாளமாக மாற முடியாது போயிருப்பது

தொன் க்விஹோதே, லியர் அரசன் மற்றும் மேக்பெத் ஆகிய அனைத்தும் ஒரே பிறந்த நாளான 1605ஆம் ஆண்டினைக் கொண்டிருப்பது தற்செயலானதாக இருக்க முடியாது போகலாம் உலகின் இருகால கட்டங்களானது இந்த இடைநிலை மாறுதலை நாடகமாக்கிட உலகின் மேடைமீது இருமுட்டாள்களும் ஓர் இளம் கொலையாளியும் ஒரே வேளையில் தோன்றுவது "நாம் மூவரும் திரும்பவும் எப்போது சந்திக்கலாம்?" என்று சூனியக்காரிகள் வினவுவது "என் வாளின் மீதே நான் என் மடியவேண்டும்!" என்று மாயமடைய ஆயத்தமாகும் மேக்பெத் வினவுவது மற்றும் "என் முன் நான் காண்கின்ற இது குறுவாளா?" என்னும் அடிப்படைக் கேள்விகள் என கேள்விகளால் ஆன நாடகம் "மேக்பெத்" என்கிறார் ஜீ. வில்சன் நைட். நட்சத்திரங்களும் கிரகணங்களும், கோள்களின்

தாக்கமும் விண்ணக உருக்களால் ஆன நம் அரசின் அரசாங்கமும், திசைமாறிப்போன மண்ணக அம்சங்களின் படிமங்களுடன் கலந்து போகின்ற கொந்தளிப்பான பிரபஞ்சத்திருந்து பெறப்பட்ட மாட்சிமைமிகு உருவகங்களால் ஆன நாடகம் "லியர் அரசன்" விண்ணகம் மற்றும் பூமியின் இப்புயலின் மத்தியில், ஒரு முட்டாளின் துணையுடன் மட்டும், ஏற்கனவே தான் அறிந்துள்ளதற்கும் அதிகமாக அறிந்து கொள்ள இயலாது, வேதனைமிக்கதும் தனிமையானதுமான இயற்கை உலகிற்குள் ஒன்று கலந்தவனாக, நிராதரவான கிழவன் ஒருவன் தத்து நடை போடுகின்றான்.

உலகமெல்லாம் ஒரு நாடகமேடை, அதனின்றும் பேசப்படும் வார்த்தைகள் சப்தமும் சீற்றமும் நிறைந்தவை. உலகின் அரசு இல்லாது போய்விட்டது மற்றும் மேடைமீது தத்தி நடக்கும் நடிகன் அலைபாய்கின்றதும் அனாதையானதுமான வார்த்தைகளைப் பேசுகின்றான்: நம் தந்தையை இழந்திருக்கிறோம், ஆனால் நம்மை கண்டறிந்திருக்கவில்லை. வார்த்தைகள் தெளிவின்மை மற்றும் புதிரின் வாகனமாகின்றன. அனைத்தும் சாத்தியமே, என்கிறார் மார்ஸிலியோ ஃபிஸினோ. அனைத்தும் சந்தேகத்தில் உள்ளன என்கிறார் ஜான் டன். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் உச்சரிக்கப்பட்ட இவ்விருவாக்கியங்களுக்கிடையே, ஒளி ஊடுருவாத வட்டமாக புதிய இலக்கியம் தோற்றமளிக்கிறது - அங்கே, ஹேம்லட் தன் முறையான பைத்திய நிலையை, ராபின்ஸன் க்ரூஸோ, தன் நன்னம்பிக்கை சார்ந்த பகுத்தறிவுவாதத்தை, செவில்லேயின் டான் யுவான் மதச்சார்பற்ற பாயல் தன்மையை மற்றும் புனித யோவான் தனது விண்ணகக் காமவியலைப் பிரதிநிதித்துவப் படுத்தமுடியும்: இலக்கியத்தில் அனைத்தும் சாத்தியமாகின்றது.

இடைக்காலத்துப் பேரண்டத்தில், தெள்ளத்தெளிவான நிலையில் அங்கீகரிக்கப்பட்ட அடையாளங்களுக்கேற்ப, ஒவ்வொரு யதார்த்தமும் இன்னொரு யதார்த்தத்தை வெளிப்படுத்திக் காட்டிற்று. ஆனால் கோபர்நிகஸ் விட்டுச் செல்லும், மிகவும் நிலையற்றதும் தெளிவற்றதுமான உலகிலே இம்மைய அடிப்படைகள் எப்போதைக்குமாக காணாது போகின்றன.

அனைத்தும் சாத்தியம், ஆனால் அனைத்தும் சந்தேகத்தில் உள்ளன. அனைத்தும் ஒத்திசைவை இழந்துள்ளன. மனிதாய உறுதிப்பாட்டின் விடியலிலே சந்தேகங்கள், விமர்சனங்கள், கேள்விகளால் தனிநபர் தாக்குதலுக்குள்ளாகின்றான் - இவற்றைக்கொண்டு தான் கோபர்நிக்கஸும் கலிலியோவும் பிரபஞ்சத்தில் அடங்கி இருந்த ஆற்றல்களை விடுவித்தனர்; தள்ளமாக்கப்பட்ட தனிநபர், அடக்கி வைக்கப்பட்ட தன் வேட்கைகளை, கட்டற்ற பெருமிதத்தை, தன் அரசியலதிகாரத்தின் குரூர பயன்பாடுகளை, சூரியனது புதிய நகரம் குறித்த கற்பனாவாதக் கனவினை, பிரபஞ்சத்தின் புதிரானதும் ஊமையானதுமான வெளியை எதிர்கொள்வதற்கான, புதிய மானுட வெளியின் பாலான தாகத்தை, பிரம்மாண்டமாக வெளிக்காட்டும் அளவுக்கு விரிவுபடுத்தினர்: புதிய உலகின் கண்டுபிடிப்பிலும் Piero della

Francesca -வின் சுவரோவியங்களிலும் தென்படுகின்ற வெளிசார்ந்த வேட்கை அது.

எதனையும் மறுக்கக்கூடாது, என்றெழுதுகிறார் ஃபிஸினோ: அதலபாதாள சக்திகளின் குரூர வடிவங்களிருந்து, அனுபூதியாளர்களால் விவரிக்கப்படும் தெய்வீக ஞானப்படி நிலைகள் வரையிலான, படைப்பின் ஒவ்வொரு தளத்தையும் மானுட இயல்பு கொண்டுள்ளது; எதுவும் நம்பமுடியாததல்ல, எதுவும் சாத்தியமற்றதல்ல. நாம் மறுதலிக்கின்ற சாத்தியப்பாடுகள் நாம் புறக்கணிக்கின்ற சாத்தியப்பாடுகளே. உல்லாசியும் துறவியும், டான்யுவானும்

சவோனரோலாவும், செஸேபர் போர்கியாவும் ஹொர்னான கோர்டெஸும், கொடூரவாதியும் சாகசக்காரனும், மார்லோவின் ஃபாஸ்டும் ஃபோர்டின் முறையற்ற காதலர்களும், மாக்கியவல்லியின் இளவரசனும் தாமஸ் மோரின் கற்பனாவாதப் பயணியும், கலகக்கார அறிவும் கலகக்காரத் தனிமையும் ()() அனைத்தையும் உள்ளடக்கும் கற்பனை: தவறுகள் ஒருபோதும் தொன்மையான அமைப்பினை மறுநிர்மாணம் செய்வதில்லை. பெருமிதம், வேட்கை, அறிவு, சந்தோஷம் மற்றும் அதிகாரம் என்னும் தற்சார்பான அக்கினிகளில் அவை தம்மை எரியூட்டிக் கொள்கின்றன. ஆனால், அவை வெல்லப்பட்டாலும், விமர்சனாபூர்வ உணர்வு அவற்றை நிறுவியமை காரணமாக, இப்புதிய யதார்த்தங்களை விமர்சனாபூர்வ உணர்வினால் சந்தேகிக்கப்படுகின்றன.

II

அனைத்தும் சாத்தியம். அனைத்தும் சந்தேகத்தில் உள்ளன. கேஸ்டிலேயின் மத்திய பீடபூமியின் வறண்ட லா மஞ்சா சமவெளியிருந்து வரும் கனவான் (hidalgo) மட்டுமே உறுதிப்பாட்டின் நெறிகளைப் பின்பற்றுகிறான். அவனைப் பொறுத்தவரை எதுவும் சந்தேகத்தில் இல்லை, அனைத்தும் சாத்தியம். விமர்சனத்தின் புது உலகத்தில், தொன் க்விஹோதே நம்பிக்கையின் நாயகன். இந்நம்பிக்கை அவனது வாசிப்பிருந்து வருகின்றது. அவனது வாசிப்பு ஒரு வித பைத்தியமானவை. (வாசிப்பு மற்றும் பைத்திய நிலைக்கான ஸ்பானியச் சொற்கள் இத்தொடர்பினை வலுவாக உணர்த்துகின்றன: வாசிப்பு: lectura; பைத்தியநிலை: locura)

.... ஆக, வாசிப்பின் உடனடித்தளத்தில், தொன் க்விஹோதே தன் மூளையை வாடி வதங்க வைத்த, முந்தைய வாசிப்புகளின் நாயகன். ஆனால் வாசிப்பின் இரண்டாம் தளத்தில், "தொன் க்விஹோதே" என்னும் தலைப்பிடப்பட்ட புத்தகத்தின் வார்த்தைப் பிரபஞ்சத்தில் உள்ள வார்த்தைகளின் நாயகன் ஆகின்றான். சாகச நாவல்களின் வாசகனாக இல்லாது, தனது இதிகாச சாகசங்களின் நடிகன் ஆகின்றான். அவனது புத்தகங்களின் வாசிப்புக்கும் அவற்றில் சொல்லப்பட்டுள்ளவற்றின் மீதான அவனது நம்பிக்கைக்கும் இடையே நிரடல் இல்லாது இருந்தது போலவே,

இப்போது அவனது சாகச நடவடிக்கைகளுக்கும் வார்த்தைகளுக்கும் இடையே பிரிவினை இல்லாது இருக்கிறது. தொன் க்விஹோதேயுடன் ஒன்றாகிவிட்ட காரணத்தால், நாம் அதனை வாசிக்கிறோம். ஆனால் காண்பதில்லை, அக்கனவான் தன் தலையில் வைத்துக் கொள்வது என்னவென்று நமக்கு ஒருபோதும் தெரியப்போவதில்லை. அது மாம்ப்ரினோவின் கதையில் வரும் தலைக்கவசம் (அ) இழிவான நாவிதனின் வட்டில். முதல் சந்தேகம் நம்மைத் தாக்குகிறது: க்விஹோதேயின் நிலை சரியா, குருடன், முட்டாள் என ஒவ்வொருவரும் வட்டிலையே காண்கின்றதான இடத்தில், கீர்த்திமிக்க தலைக்கவசத்தை அவன் கண்டறிந்திருக்கின்றானா?

இவ்வார்த்தைக் கோளத்திற்குள், தொன் க்விஹோதே முதல் வெல்லமுடியாதவனாக இருக்கின்றான். இவ்வார்த்தை நோக்கு நிலையிலிருந்து பார்த்தால், சாஞ்சோவின் அனுபவவாதம் பயனற்றது. ஏனெனில், தோற்றுப்போகும் ஒவ்வொருமுறையும் தொன் க்விஹோதே உடனடியாக தன் இலக்கியச் சொற்பொழிவை தளராது ஆரம்பித்து விடுகிறான் - வார்த்தைகள் எப்போதும் யதார்த்தத்தை ஒத்து இருக்குமாறு பார்த்துக் கொள்கிறான்.

.....யதார்த்தத்துடன் கற்பிதத்தை அடையாளங் காண்பது, ஹேம்லட்டை யதார்த்தத்திடம் சேர்க்கிறது மற்றும் இயற்கையாகவே யதார்த்தத்திருந்து மாணத்திடம் அவனை ஒப்படைக்கின்றது. ஆனால் கற்பிதத்துடன் கற்பிதத்தை அடையாளங் காண்பது தொன் க்விஹோதேயை புத்தகங்களிடம் சேர்க்கின்றது. தன் வாசிப்புகளிலிருந்து வரும் தொன் க்விஹோதே, அவற்றை நோக்கிப் போகின்றான். தொன் க்விஹோதே வாசிப்புகளின் தூதுவன். அவன் மனதில், அவனது நடவடிக்கைகளுக்கும் யதார்த்தத்திற்கும் இடையே குறுக்கிடுவது, யதார்த்தமே அல்ல. தன் வாசிப்புகளின் மூலமாக அவனறியும் மாயாஜாலக்காரர்கள்.

இது அப்படி இல்லையென்று நாமறிவோம். தொன் க்விஹோதேயின் பைத்தியக்கார வாசிப்புகளுடன் முரண்பட்டு நிற்பது யதார்த்தமே என்றும் நாமறிவோம். ஆனால் அவன் அதனை அறிவதில்லை மற்றும் இவ்வறியாமை (அல்லது இந்நம்பிக்கை) நாவல் மூன்றாம் தளவாசிப்பை ஏற்படுத்துகின்றது. "நாம் காண்பது அரக்கர்கள் அல்லர், மாறாக, காற்றாலைகளே" என்று சாஞ்சோ சதா கூறுகின்றான். ஆனால் தொன் க்விஹோதே அதை கண்டு கொள்வதில்லை: தொன் க்விஹோதே வாசிக்கின்றான், அவை அரக்கர்களே என்கிறது அவனது வாசிப்பு.

தனிச்சிறப்பானதும் புனிதமானதுமான சங்கேதத்தின் வாசிப்புகளாக இவை இருக்கும் மட்டும், தொன் க்விஹோதே ஒட்டுமொத்த உலகத்தையும் தன் வாசிப்புகளுக்குள்ளே அறிமுகப்படுத்த விரும்புகின்றான். ரோன்செஸ்வால்லெஸில நடப்பது, புத்தகங்களின் உன்னத நடவடிக்கையுடன், வரலாற்றின் உன்னத நடவடிக்கையை அடையாளங் காணும் சங்கேதம் அது. ரோலண்டின் தியாகம்: அல்லது ஆர்லாண்டே.

"மேற்கின் அக்கிலெஸ்" என்று போற்றப்படுபவர் Song of Roland- இக் நாயகனான இவர் 8 அடி உயரமுள்ள போர்த்தளபதி.

வீரப் பெருந்தன்மையின் வீரலட்சியத்தையும் கிறித்தவ அரசின் அரசியல் நலனையும் பாதுகாத்தது அவரது உற்சாகம் இலட்சிய நெறியாகும். வீரப் பெருந்தன்மைப் புதினங்களது நாயகர்கள் அனைவருக்குமான இலட்சிய வடிவமாகும் அவர்களுடன் தன்னை ஒன்றிக் கொள்கிறான் தொன் கிவிஹோதே. வரலாற்றின் உண்மை சரித்திரங்களுக்கும் மற்றும் புத்தகங்களின் உண்மை சரித்திரங்களுக்கும் இடையே பிளவுகள் ஏதும் இருக்க முடியாது என அவனும் நம்புகிறான். ஏனெனில் அவை எல்லாவற்றுக்கும் மேலாக அவை இரண்டையும் ஆளுகின்ற புனித சங்கேதம் நிற்கின்றது. அச்சங்கேதத்தின் மேலே கடவுளால் வடிவமைக்கப்பட்ட உலகின் கட்டைடயான காட்சி எழுகின்றது. இலாமிப்புகளிருந்து வெளிவரும் தொன் கிவிஹோதே தோற்கின்... ஒவ்வொரு முறையும் தன் வாசிப்புகளில் பாடம் தேடுகின்றான்.

நாவல் இரண்டாம் பகுதிக்கு வரும்போது செர்வாண்டிஸ் நாவ... புகழுக்கொண்டு ஆதாயம் தேடுவதற்காக அவெல்லாநெடா என்பவ... எழுதிய இரகசிய நாவல் விஷயமாக தான் இருந்துள்ளதை தொன் கிவிஹோதேவுடன் தனித்த அடையாளம் பெருக்கமடைவதாக... தோன்றுகிறது. தொன் கிவிஹோதே அவெல்லாநெடாவின் விளக்கத்தை விமர்சிக்கின்றான். ஆனால் தன்னைப் பற்றிய இன்னொரு புத்தகத்தின் இருப்பு அவனது வழித்தடத்தை மாற்றவைத்து இந்நூலின் வரலாற்றாசிரியரின் பொய்களை பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டுவர முடியும் என்பதற்காக பார்ஸிலோனா போகின்றான் - "அப்போது அவர் கூறும் தொன் கிவிஹோதே நானில்லை என்பதை மக்கள் கண்டு கொள்வார்கள்".

தன் கற்பித சாகசங்களில் வாழ்கின்ற ஒரு பாத்திரம் அதேவேளையில் தான் எழுதப்பட்டுக் கொண்டிருப்பதை அறிந்துகொள்வது இலக்கியத்தில் முதல்முறையாக இருக்கக் கூடும். அடுத்து வரப்போவதைத் தீர்மானிக்... இப்புதிய வாசிப்புத்தளம் முக்கியமானதாகும். முந்தைய இதிகாசங்களால் தன்னை நிறுத்திக்கொள்வதை நிறுத்தியபின் தொன் கிவிஹோதே தனது இதிகாசத்தைக் கொண்டே தன்னை நிறுத்திக் கொள்ளத் தொடங்குகிறான். ஆனால் அவனது இதிகாசம் இதிகாசமாய் இல்லை. இத்தருணத்தில்தான் செர்வாண்டிஸ் நவீன நாவலைக் கண்டறிகின்றார். வாசகனான தொன் கிவிஹோதே தான் வாசிக்கப்படுவதை அறிகின்றான் - அக்கிலெஸிற்கு ஒருபோதும் தெரியாத ஒன்று இது. தொன் கிவிஹோதே என்னும் மனிதனின் விதி தொன் கிவிஹோதே என்னும் புத்தகத்தின் விதியிலிருந்து பிரிக்க முடியாததாக ஆகியுள்ளது. ஒடிஸியைப் பொறுத்த அளவில் யுலிஸஸ் ஒருபோதும் அறியாதது: தட்டையானதும் வெளிப்படையானதுமான இதிகாச வாசிப்பின் நாயகன் என்றும் அவனது நாமம் ... அடிமைகளோ (அ) அவனைப் பார்த்துச் சிரிக்கும் அழிக்கை... பெண்டிரோ (அ) கோட்டைகள் என்று அவன் கருதிச் செல்லு...

பிரதிகளிலிருந்து அவன் தாங்கிக் கொள்ள வேண்டிய காடபுகள் மற்றும் கற்களாலோ (அ) யுத்தகளங்கள் என்று அவன் கருதும் மேய்ச்சல் நிலங்களாலோ தகர்க்கப்படுவதில்லை. தன் இதிகாச வாசிப்புகளிலுள்ள அவனது நம்பிக்கை, யதார்த்தத்தின் அனைத்துத் தாக்குதல்களையும் அவன் தாங்கிக் கொள்ளுமாறு செய்கின்றது. ஆனால் இப்போது, அவனது நாணயம் அவன் சரணடைந்துள்ள வாசிப்புகளால் அழித்தொழிக்கப்படுகிறது.

பழங்காலத்து வீரனின் கேலிச்சித்திரமான தொன் க்விஹோதேவை, இவ்வாசிப்புகளே முதலாவது நவீன வீரனாக உருமாற்றுகின்றன - பல்கோணங்களிலிருந்து நோக்கப்படும், வீரப்பெருந்தகை நெறிகளில் உள்ள அவனது நம்பிக்கை இல்லாதிருக்கும், பலவான கண்களால் நுணுகி ஆராயப்படும், அவனை வாசிக்கும் வாசகர்களுடனேயே ஒன்று கலந்து, அவர்களைப் போலவே தன் கற்பனையில் தொன் க்விஹோதேவை மறுபடைப்பாக்கம் செய்துகொள்ள நிர்ப்பந்திக்கப்படும் நவீன வீரன். அவன் வாசிப்பு நடவடிக்கையால் இரட்டைப் பலியாள் ஆன தொன் க்விஹோதே, இருமுறை தன் நினைவை இழந்து போகின்றான். அடுத்தது, அவன் வாசிக்கப்படும் போது. ஏனெனில் இப்போது, பழைய வீரர்களின் இருப்பினை நிரூபணம் செய்வதற்குப் பதிலாக, இன்னும் சிக்கலான சவாலை எதிர்கொள்கிறான்: தன் இருப்பினையே அவன் நிரூபிக்க வேண்டும்.

இது மேலும் ஒரு வாசிப்புத்தளத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது. இரவு பகலாக தீவிரமாக இதிகாசங்களை வாசிக்கும் தொன் க்விஹோதே, யதார்த்தத்திற்கு வந்து சேரவேண்டும் என்பது பிடிப்பாகி, தன் அசலான நோக்கில் பரிதாபமாகத் தோற்றுப் போகிறான். ஆனால் அவன் வாசிப்புப் பொருளானதுமே யதார்த்தத்தை வெல்லத் தொடங்குகிறான், தன் பைத்திய வாசிப்பால் அதனை மாசுபடுத்தத் தொடங்குகிறான்: வீரப் பெருந்தகை நாவல்களின் வாசிப்பால் அல்ல, மாறாக புதிய நாவலான, தொன் க்விஹோதேவின் நிஜமான வாசிப்பால் மற்றும் இப்புதிய வாசிப்பு, உலகை உருமாற்றுகின்றது - இவ்வுலகம், மேலும் மேலும், தொன் க்விஹோதே என்னும் நாவலுள்ள உலகினை ஒத்திருக்கத் தொடங்குவதால்.

தொன் க்விஹோதேவைப் பரிகசிப்பதற்காக, தொன் க்விஹோதேவின் பிடிப்புகளால் ஆன முகமூடிகளைக் கொண்டு, உலகம் மாறுவேடம் புனைகிறது. எனினும், தனது சொந்த அகத்தைவிடவும் மோசமானதாக ஒருவர் தன்னை மறைத்துக் கொள்ள முடியுமா? நமது அன்றாட தோற்றத்தை விடவும் மிகப்பெரும் உண்மையுடன் நமது மாறுவேடங்கள் நம் யதார்த்தத்தை வெளிப்படுத்தவில்லையா? தொன் க்விஹோதேவின் பக்கங்களுக்காக, தொன் க்விஹோதேவை வாசித்துள்ளவர்களின் மாறுவேடம் பூண்டுள்ள உலகம், உலகின் மாறுவேடம் புனையாத யதார்த்தத்தை வெளிக்காட்டுகிறது: அதன் குரூரத்தை, அதன் அறியாமையை, அதன் அநீதியை, அதன் முட்டாள்தனத்தை, ஆக, தன் காலத்ததும் எல்லாக்காலங்களினதுமான தீவினைகளை நிந்திக்க, செர்வாண்டிஸ் அரசியல் அறிக்கை ஒன்றினை எழுதவேண்டிய அவசியம் இல்லை. அவர் சுவாப்பின்

மொழியைத் தேடவேண்டிய அவசியம் இல்லை. விஞ்சிச் செல்வதற்காக மரபார்ந்த இதிகாசக் கட்டுமானங்களிருந்து அவர் தீவிரமாக விலகிச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. தன் புத்தகத்தின் ஆயுள், தர்க்கம் மற்றும் அவசியத்திற்குள்ளாகவே, அவர் இதிகாசக் கருத்தினையும் யதார்த்த எதிர்கருத்தினையும் இயங்கியல் ரீதியில் ஒன்றிணைத்து, நாவலார்த்தக் கூட்டிணைப்பை செய்து முடிக்கின்றார். அவருக்கு முன்னே ஒருநாலகத்திற்குள்ளாக இப்பன்முகப் படைப்பினை யாரும் கருதிப்பார்த்து இருந்ததில்லை.

அபரிமிதமாக எழுதும் செர்வாண்டிஸ், இப்போது நம்மை மேலுமொரு வாசிப்புத் தளத்திற்கு இட்டுச் செல்கிறார். உலகம் மேலும் மேலும் தன்னை ஒத்திருப்பதாக ஆகிவர, தொன் க்விஹோதே, மேலும் மேலும், தன் இருப்பின் மயக்கத்தினை இழக்கின்றான். வாசிப்பு நடவடிக்கையால் அவன் பூஜ்யமாகி இருக்கிறான்; பிகாஸ்லோ அவனை வரைய இருந்ததுபோல, ஒரு திருப்புமைக் கேள்விக்குறியாக. ஆனால் பிரபுக்களின் கோட்டையை அவன் சென்றடையும்போது அக்கோட்டை நிஜமாகவே கோட்டை என்று தொன் க்விஹோதே காண்கிறான்; இதற்கு முன்னரோ, கேஸ்டிய சாலையோரத்து சாதாரண விடுதியை கோட்டையென்று கண்டதாக கற்பிதம் செய்ய முடியும்.

தன் கனவுகள் யதார்த்தத்தில் உருக்கொள்வது, தொன் க்விஹோதேயின் கற்பனையினைக் கொள்ளையிட்டுவிடுகிறது. பிரபுக்களின் உலகிலே, நிஜமற்ற உலகினை அவன் கற்பிதம் செய்து கொள்வது அவசியம் இல்லாது போகிறது; அவன் கற்பனை செய்திருப்பவற்றை எல்லாம் பிரபுக்கள் நிஜமாகவே முன்வைக்கின்றனர். அப்போது, வாசித்தல் அர்த்தம் என்ன? புத்தகங்களின் அர்த்தம் என்ன? அவற்றின் பயன் என்ன? அதிருந்து அனைத்தும் சோகம் மற்றும் ஏமாற்றம். புராண சுவையான வகையில், யதார்த்த உலகிலே அவனது வாசிப்புகளின் உலகம் அவனுக்குத் தாப்படுகின்ற தருணத்தில், தொன் க்விஹோதே தன் நம்பிக்கை இழந்து விடுகிறான்.

தனது முட்டாள் இளவாசன் மிஷ்கின் என்னும் நல்லவனுக்காக உத்வேகத்தை செர்வாண்டிஸிடம் கண்டு கொண்ட ரஷ்ய நாவலாசிரியர் தாஸ்தோயெவ்ஸ்கி, செர்வாண்டிஸின் நாவலை "மிகவும் வேதனைதரும் நூலாக"க் குறிப்பிடுகின்றார். நாவல் முடிவுறுகையில் அந்நாயகன் வேதனை தரும் தோற்றத்தைக் கொண்டுவிடுகிறான். தொன் க்விஹோதேயை வாட்டும் இந்நோய் "யதார்த்தத்தின் மீதான ஏக்கம்" என்கிறார் தாஸ்தோயெவ்ஸ்கி.

.........தொன் க்விஹோதே தன் பகுத்தறிவை மீண்டும் பெறுகின்றான். அவனைப் போன்றோருக்கு இது உன்னதமான மடமையாக இருக்கிறது. அது தற்கொலையாகும். மரபார்ந்த "யதார்த்தத்தை" ஒத்துக்கொள்ளும்போது தொன் க்விஹோதே, ஹேம்லட்டைப் போல், மரணமடையுமாறு விதிக்கப்படுகிறான். ஆனால் நவீன நாவலை நிறுவுகின்ற நடவடிக்கையில், செர்வாண்டிஸினால் கண்டறியப்பட்ட விமர்சனபூர்வ வாசிப்பால், தொன் க்விஹோதே இன்னொரு ஆயுளை வாழ்ந்து கொண்டு செல்வான்; தன் இருப்பினை நிருபணம் செய்வது தவிர்த்து வேறெந்த வழிவகையும் இல்லாமல்

விடப்படுகிறான் - அவனது அசலான இருப்பினை அவனுக்களித்த தட்டையான வாசிப்பில் அல்லாமல், அதனை அவன் இழக்கச் செய்த பன்முக வாசிப்புகளில், தனது ஏக்கமிகுந்த, தற்செயல் ஒப்புமையான யதார்த்த வாழ்வை இழந்துபோகும் தொன் க்விஹோதே, தன் புத்தகத்தில், தன் புத்தகத்தில் மட்டுமே, எப்போதைக்குமாக வாழ்ந்து கொண்டு போகிறான்.

ஆகவேதான், தொன் க்விஹோதே எல்லா நாவல்களிலும் மிக ஸ்பானியத்தன்மை கொண்டதாக உள்ளது. இதன் சாரம்: இழப்பு, சாத்தியமின்மை, அடையாளத்தின் மீதான தகிக்கும் தேடல் மற்றும் இருந்திருக்கக் கூடியவை ஆனால் இல்லாது போனவை குறித்த வேதனையான மனசாட்சி - மற்றும் இவ்விழப்புக்கு எதிர்வினையாக, யதார்த்தத்தில் காண முடியாதவற்றையெல்லாம் காணமுடிகின்ற கற்பித தளத்தின் முழுமையான இருப்பினை உறுதிப்படுத்துதல் - உண்மை சார்ந்த இம்மறுதலிப்பின் காரணமாகவே, மிகத் தீவிரத்தளத்தில் இருக்கும் உண்மை. ஏனெனில் ஸ்பெயினின் வரலாறு, அது என்னவாக இருந்துள்ளதோ அப்படி இருக்க, அதன் கலை, வரலாறு ஸ்பெயினுக்கு மறுத்துள்ளவை எவையோ அவையாக உள்ளன. ஸான் யுவான் டெலாக்ரூஸின் அனுபூதிக் கவிதை, லூயி டெ கோன்கோராவின் அலங்காரக் கவிதை, வேலஸ்கொயஸின் Menians, கோயாவின் Caprichos மற்றும் லூயிபுனுவலின் திரைப்படங்கள் பொறுத்தும் இதுவே உண்மை. வரலாறு கொன்றுள்ளதை, கலையானது வாழ்க்கைக்கு அளிக்கின்றது. வரலாறு மறுதலித்தவற்றுக்கு, நிசப்தமாக்கியவற்றுக்கு (அ) ஒடுக்கியுள்ளதற்கு கலை, குரலை அளிக்கின்றது. வரலாற்றின் பொய்களுக்கு கலை, உண்மையினைக் கொண்டுவந்து சேர்க்கிறது.

உண்மை, பொய்மையால் காப்பாற்றப்படும் நாவல் தொன் க்விஹோதே என்று தாஸ்தோயெவ்ஸ்கி குறிப்பிட்டபோது இதனைத்தான் அர்த்தப்படுத்தினார். ஒரு தேசத்தின் கலைக்கும் அதன் வரலாற்றுக்குமான உறவினைத் தாண்டியும் செல்வது ரஷ்ய ஆசிரியரின் ஆழ்ந்த குறிப்பு. தாஸ்தோயெவ்ஸ்கி இங்கே யதார்த்தத்திற்கும் கற்பனைக்கும் இடையிலான விரிவான உறவுநிலையினைப் பேசிக் கொண்டிருக்கிறார்.

தொன் க்விஹோதேயின் வழித்தடத்தில் முதலாவதாகவும் முடிவானதாகவும் உள்ள புள்ளிகள், வாசிப்பு நடவடிக்கையே. அவன் வாசித்த யதார்த்தமோ அவன் வாழ்ந்த யதார்த்தமோ இப்படியில்லை, வெறுமனே காகிதப் பேய்களே. தன் வாசிப்புகளிலிருந்து மட்டும் விடுபடுகிறான்; ஆனால்- முடிவற்றவகையிலே நாவன் தளங்களை பெருகச் செய்யும் வாசிப்புகளால் கைப்பற்றப்படுகிறான்: தனது அசலானதும் கற்பிதமானதுமான யதார்த்தத்தின் மத்தியிலே தன்னந்தனியாக நிற்கும் தொன் க்விஹோதே வியப்படைய முடிகிறது:

"என்னை நம்புங்கள்! என் சாகசங்கள் உண்மை, காற்றாலைகள் அரக்கர்கள், ஆட்டு மந்தைகள் இராணுவங்கள், விடுதிகள் கோட்டைகள்; லா மஞ்சாவின் சக்கரவர்த்தினி, ஈடிணையற்ற டல்ஸீனியாவை விடவும் அழகான

பெண் இவ்வுலகில் இல்லை! என்னை நம்புங்கள்".

இத்தகைய வார்த்தைகளைக் கேட்கும் யதார்த்தம் நகைக்கலாம் (அ) அழலாம். ஆனால் யதார்த்தம் அவற்றால் படையெடுக்கப்பட்டு, நன்கு வரையறுக்கப்பட்ட தன் எல்லைகளை இழந்து, இடம் பெயர்ந்ததாக உணருகிறது - வார்த்தைகள் மற்றும் காகிதத்தால் ஆன இன்னொரு யதார்த்தத்தால் உருமாற்றப்படுகிறது.

ஸ்பானிய மேதமையின் மாபெரும் படைப்புகள் ஸ்பானிய சமூகத்தின் நெருக்கடி மற்றும் சீரழிவுக் காலகட்டங்களுடன் தற்செயலாகப் பொருந்திப் போயுள்ளன. ஃபெர்னாண்டோ டெ ரோஜஸின் La celestina (1499) யூத ஸ்பெயினின் தலைசிறந்த படைப்பாகும்: ஸ்பானிய ஹீப்ருக்களை வெளியேற்றியது மற்றும் ஒடுக்குமுறைக்குள்ளானதுடன் அது பொருந்திப் போகிறது. செர்வாண்டிஸ், லோப் டெ வேகா, கியூவெடோ, கோன்கோரா, கால்டெரான் என்னும் ஸ்பானிய இலக்கியத்தின் ஒட்டுமொத்த பொற்காலமும் ஸ்பெயின் சரிவுகாணும்போது மலர்கின்றது. வேலஸ்கொயஸ், நான்காம் பிப்பின் அறிவு விளக்கம்பெறாத அரசவையில் ஓவியர்; கோயா, நான்காம் சார்லஸ் மற்றும் ஏழாம் ஃபெர்னாண்டோ என்னும் சீரழிந்த மன்னர்களின் உடனிகழ்காலத்தவர். ஸ்பானிய அமெரிக்க யுத்தத்தில் பேரரசின் மிச்சம் மீதிகளை இழந்து போயிருந்த ஸ்பெயின் சிந்தனை, அறிவியல் மற்றும் கலையில் அசாதாரணமான ஆளுமைகளை எழுச்சி கொள்ளச் செய்தது: உனாமுனோ, வல்லே இன்க்லான், ரமோன் அய் கேஜல், ஆர்டெகா ஒய் கேஸேட், புனுவேல், மிரோ மற்றும் கார்ஸியா லோர்க்காவின் கவிதைத் தலைமுறை. ஸ்பெயினின் அரசியல், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளங்கள் தாழ்நிலையில் இருந்துள்ளபோது, கலையின் அறுதியான மதிப்பு மிகவும் பிரகாசமாய் இருந்திருக்கிறது.

ஆகவே, செர்வாண்டிஸ் பொதுவிதிக்கு விலக்கல்ல. ஆனால், மறுமலர்ச்சி மற்றும் எதிர்சீர்திருத்தவாதம் ஆகியவற்றின் அநாதைக் குழந்தையான அவர், யதார்த்தத்தை இருதயத்திலே திரும்பப் பதிக்கின்ற குறிப்பான பெறுமதிகள் எவை: லாஃபயாட்டே சீமாட்டியின் பகுத்தறிவு சார்ந்த தெளிவு மற்றும் சுய - திருப்தி ஆகியவற்றின்பால் நெருங்கமுடியாத (அ) டெஃபோவின் நடைமுறைத் திறன் இல்லாத அவர் தந்த பெறுமதிகள் எவை? செர்வாண்டிஸ் மீதான எராஸ்மஸின் செல்வாக்கினை நினைவு கூர்ந்துள்ளேன். Utopia வைப் போற்றுதலை ஒத்து, மடமையைப் போற்றும் ஒரு ஸ்பானிய விரிவாக்கமான தொன் க்விஹோதே, காதல் மற்றும் நீதியின் அறத்தைக் கொண்டுள்ளது. தான் வாழும் சமூகத்தின் மையத்தில் அது இருக்க முடியாததால், ஒரு தார்மீக யதார்த்தம், செர்வாண்டிஸின் கற்பனை மையத்தை இடம் பிடித்துக் கொள்கிறது.

காதல் மற்றும் நீதி. பைத்தியக்காரன் தொன் க்விஹோதே, தான் வாசித்திருப்பவற்றை எல்லாம் நம்பியிருப்பதால் மட்டும் பைத்தியமில்லை வீரச்செயலை நாடித்திரியும் நாயகன் என்றவகையில், நீதி, தன் கடமை மற்றும் நீதி, சாத்தியமானது என்று அவன் நம்புவதாலும் பைத்தியமாய் இருக்கிறான்.

திரும்பத்திரும்ப அவன் தன் கொள்கையை பிரகடனம் செய்கின்றான்: "தவறுகளையும் பொல்லாங்குகளையும் அழிக்கின்ற, வீரதீரமிக்க தொன் க்விஹோதே டெ லா மஞ்சா நானே." "என் கடமை அநீதியைப் போக்கி, தேவைப்பட்டோருக்கு உதவச் செல்வதே." அவன் கருணை காட்டுவோரிடமிருந்து தொன் க்விஹோதே பெறுகின்ற நன்றி எத்தகையது என அறிவோம்: அவன் அடிபடுகிறான், பரிகசிக்கப்படுகிறான் இக்காட்சிகளிலே செர்வாண்டிஸின் சமூக முரண்சுவை உச்சத்தை தொட்டுவிடுகிறது. ஏழைகளும் பரிதாபமானவர்களும் தவறிழைக்கப்பட்டவர்களும் தொன் க்விஹோதேயால் உதவப்பட, அவர்களோ அவனால் காப்பாற்றப்படுவதை விரும்பாது உள்ளனர் ஒருவேளை அவர்கள் தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ள விரும்பி இருக்கலாம். தங்கள் ஒடுக்குமுறையாளரைப் போன்றே சாதாரண மக்களும் அவ்வளவு குரூபமாய் இருக்கக் கூடியவர்களே என்பதை செர்வாண்டிஸ் கண்டு கொள்கிறார். நீதியற்ற ஒரு சமூகம், பலவான்களும் பலவீனர்களும், உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் ஆன தன் உறுப்பினர்களை எல்லாம் பிறழ்வுநிலை கொள்ளச் செய்கிறது என்னும் உள்ளார்ந்த குறிப்பினை இது முன்வைக்கவில்லையா?

நன்மை செய்பவனாக தொன் க்விஹோதே, திரும்பத்திரும்ப தோல்விகளை எதிர்கொண்டாலும், நீதி என்னும் இலட்சியத்தில் உள்ள நம்பிக்கையில் ஒருபோதும் தோற்பதில்லை. அவனொரு ஸ்பானிய வீரன்; சாதாரண யதார்த்தத்தின் விபத்துகளால் இயற்கை கடந்த கருத்து மறைபட்டு விடாது. தொன் க்விஹோதேயின் நீதிக்கான தேடலை நிலைநிறுத்தி வைக்கும் சித்தாந்தம் எது? அது பொற்காலத்தின் கற்பனாவாத உலகம்.

எருதினைப் போல வலுவும் முரட்டுத் தனமும் கொண்டு, உரத்துக் கத்தும் குடியானவப் பெண்ணான அல்டோன்ஸா லோரென்ஸோவை அழகியான டல்ஸீனியா என்று தொன் க்விஹோதே கூறுவதைக் கண்டு அப்பகுதியினர் எல்லாம் நகைக்கின்றனர். இதற்கான தொன் க்விஹோதேயின் எதிர்வினை, இதுவரை எழுதப்பட்டிருப்பதான நெகிழ்ச்சி தரும் காதல் பிரகடனங்களில் மிகவும் நெகிழவைப்பதாக உள்ளது. டல்ஸினியா யார், எப்படிப்பட்டவள் என அவனறிவான்; எனினும் அவன் அவளை காதலிக்கிறான் - உலகிலுள்ள இளவரசிகளில் மிக உன்னதமானவள்" அவள் என்பதால் அவளை காதலிக்கிறான். குடியானவப்பெண் அல்டோன்ஸாவை, தனது கற்பனையே சீமாட்டி டல்ஸீனியாவாக உருமாற்றியுள்ளதை அவன் ஒத்துக்கொள்கிறான். செல்வம்/வறுமை, தனிச்சிறப்பு / சாதாரணம் என்னும் நிலைகளையெல்லாம் பொருட்படுத்தாது, நேசிக்கும் ஒருவரை ஒப்பீடு அற்றவராக, தனிச்சிறப்பானவராக உருமாற்றிவிடுவது காதலின் சாராம்சம் அல்லவா? "இவ்வகையில், அல்டோன்ஸா அழகானவள் மற்றும் நேர்மையானவள் என்று நான் எண்ணுவதும் நம்புவதும் போதுமானது; வர்க்கம் தொடர்பான பிரச்சினை இங்கே எடுபடாது.... நான் அவளை விரும்புவதுபோலவே என் கற்பனையில்

நீட்டுகிறேன் — உலகம் தான் விரும்பியதை எண்ணிக் கொள்ளட்டும்"

காதல் மற்றும் நீதி ஆகியவற்றின் இம்மறுசந்திப்பில், தொன் க்விஹோதேயின் சமூக, அறிவியல் மற்றும் அரசியல் உள்ளடக்கம் வெளிப்படையாகின்றது. பொற்காலத்தின் தொன்மம் அதன் சித்தாந்த அடிப்படையாகும்: சகோதரத்துவம், சமத்துவம் மற்றும் சந்தோஷத்தின் கற்பனாவாத சமூகம். கடந்த காலத்தை அழித்தொழித்து, ஒன்று மற்றதிருந்து நீரமிகு புது உலகை நிர்மாணிக்கத் தொடங்குவதன் மூலம் கற்பனாவாத சமூகத்தை சாதிக்காமல், கடந்த காலத்திலிருந்து கிடைப்பவை மற்றும் நிகழ்காலத்தில் நம்மால் படைத்துக்கொள்ளக் கூடியவை என்னும் பெறுமதிகளின் ஒருங்கிணைப்பால் சாதிக்க வேண்டும். தற்காலத்தில் நீதி இல்லாதிருக்கின்றது என்பதை தொன் க்விஹோதே குறிப்பிடுகிறான்: காதல் மட்டுமே நீதிக்கு நிஜத்தைத் தரக்கூடியது; தொன் க்விஹோதே பேசுகின்ற காதல், ஒரு ஜனநாயக நடவடிக்கை, வர்க்க பேதங்களைத் தாண்டிய ஒரு நடவடிக்கை, கீழ்நிலையிலுள்ள குடியானவப் பெண்களிடையே காணப்படக் கூடிய ஓர் உண்மை. ஆனால் இக்காதலிடத்தே, வீரமும், உயர்குடி வீரப்பெருந்தகை மதிப்புகளும், நீதி நாணயம் மற்றும் பராக்கிரமத்திற்குமான தேடலுள்ள தனிநபர் பணயமும் கொண்டுவரப்பட வேண்டும். வீரப்பெருந்தகை காலத்தின் பெறுமதிகள், காதலின்மூலமாக, ஜனநாயக இசைவை தொன் க்விஹோதேவில் பெறுகின்றன; மற்றும் ஜனநாயக வாழ்வின் பெறுமதிகள் உயர்குடியின் இசைவைப் பெறுகின்றன. வல்லவர்களின் குரூர அதிகாரத்தையும், தாழ்நிலையினரின் மந்தை உணர்வையும் தொன் க்விஹோதே மறுதலிக்கின்றான். மானுடம் குறித்த அவனது நோக்கு, சாதாரண நிலை மீதமைந்ததில்லை, மாறாக, சாத்தியமாகும் உயர்ந்தபட்ச சாதனை மீதமைந்தது. காதல் மற்றும் நீதி குறித்த அவனது கருத்தமைவு, ஒடுக்குவோர் மற்றும் ஒடுக்கப்படுவோர் ஆகிய இருவரையும், அவர்களிருவரையும் பிறழ்நிலை கொள்ளச் செய்யும் ஒடுக்கு முறையிலிருந்து காப்பாற்றுகின்றது.

இந்த அறவியல் நிலைபாட்டின் மூலமாகவே பழையதும் புதியதுமான உலகங்களை இணைத்திட செர்வான்டிஸ் போராடுகின்றார். வாசிப்பு குறித்த அவரது ஆய்வுரை, இடைக்காலங்களின் இறுக்கமானதும் ஒடுக்குகின்றதுமான தன்மைகள் மற்றும் ஸ்பானிய எதிர் சீர்திருத்தவாத அம்சங்களை மறுதலிப்பது: அதேவேளையில், நவீன உலகைநோக்கிய இடைநிலை மாறுதல் கட்டத்தில் தொலைத்துப்பட்டு விடக்கூடாத தொல் மதிப்புகளை ஏற்பதுமாகும். ஆனால் தொன் க்விஹோதே பன்முகப் பார்வையின் நவீன மதிப்புகளை ஏற்பதுமாகும் என்றால், செர்வான்டிஸ் நவீனத்திடம் சரணடைவதும் இல்லை. இத்தருணத்திலேதான் அவரது தார்மீக மற்றும் இலக்கிய நோக்கு முழுமையானதாக ஒன்றிணைகின்றது-யதார்த்தமானதின் பன்முகத்தளங்களின் பெயராலே இலக்கியம் யதார்த்தத்தைப் படைக்கிறது, யதார்த்தத்துடன் சேர்க்கிறது; நெகிழவைக்காத மெய்மைகள் (அ)யதார்த்தத்திற்கு முன்னுள்ளவற்றினுடனான வார்த்தைத்

தொடர்புறுத்தலாக இல்லாது போகின்றது. இப்புதிய அச்சிடப்பட்ட யதார்த்தமான இலக்கியம் உலக விஷயங்களைப் பற்றிப் பேசுகின்றது: ஆனால் இலக்கியம், தன்னளவிலே உலகின் புதிய விஷயமாகும்.

அடிமைத்தனமிக்க இலக்கிய இயற்கைவாதத்தின் ஆபாசத் தந்திரங்களை முன்கூட்டியே கண்டுகொண்டதுபோல், யதார்த்தத்தின் வெறும் நகலே இலக்கியம் என்னும் மாயையினை செர்வாண்டிஸ் அழித்தொழிக்கிறார்; கைப்பற்றுவதற்குச் சிரமமானதும் பாரதூரமான ஆற்றல் மிக்கதுமான இலக்கிய யதார்த்தத்தைப் படைக்கிறார்: வாசிப்பு ஆய்வுரையின் அனைத்துத் தளங்களிலும் நாவலின் யதார்த்தம் இருப்பு கொண்டிருப்பதுதான். தொன் க்விஹோதேயின் தார்மீகச் செய்தி, ஆசிரியரால் மேலிருந்து திணிக்கப்படுவதற்குப் பதிலாக, தன் கலையியல் மற்றும் தார்மீக முன்மொழிவுகளையே விமர்சிக்கின்ற படைப்பை வாசித்துக் கொண்டிருக்கும் பலவான வாசகர்களின் பன்மையான வாசிப்புகளின் சல்லடையினூடே கடந்து போகின்றது. படைப்பின் இடத்திலேயே படைப்பின் ஆய்வுரையை வேரூன்றச் செய்வதன் மூலம், நவீன கற்பனையின் நிறுவனர்களுள் ஒருவராக செர்வாண்டிஸ் தன்னை ஆக்கிக் கொள்கிறார். திரும்ப உருவாக்கி மோசமாகச் சேவை புரிந்து யதார்த்தத்தின் அடங்கிய பாவனையாளர்களாக அல்லாமல், தாமாக இருந்திட, கவிதை, ஓவியம் மற்றும் இசை பிறபாடு சமஉரிமை கோரும். கலை இன்னொரு யதார்த்தத்தைப் படைக்காது போனால், மேலும் யதார்த்தத்தைப் பிரதிபலிக்காது.

கடந்த காலத்துப் பெறுமதிகளை நிகழ்காலத்தவற்றுடன் ஒருங்கிணைக்கும், காகிதப் பாத்திரம் தொன் க்விஹோதே மூலம், பீதியுற்றதும் அநாதையானதுமான மையமற்ற பிரபஞ்சம் மற்றும் வெற்றிகரமான தனிநபர்வாதம் என்னும் மாபெரும் கருத்திழைகளை, புதிய யதார்த்தத்தின் அச்சாணியாக இலக்கியப் பரப்புக்கு இடம்பெயரச் செய்கிறார் செர்வாண்டிஸ். மேலும் துன்பியல்நாடகமோ மேலும் இதிகாசமோ இருக்கப்போவதில்லை - மீட்டமைக்கக் கூடிய தொல்பழங்கால அமைப்போ (அ) தோற்றுவாயில் தட்டையான பிரபஞ்சமோ இல்லை என்பதால் யதார்த்தத்தின் பன்முக அடுக்குகளைப் பரிசோதிக்கும் திறன்மிகு பன்முகத் தள வாசிப்பு இருக்கும்.

III

தண்டிக்கப்பட்ட கப்பல் அடிமையும், பொய்யான பொம்மலாட்டக் காரனும், கேடியுமான ஜினெஸில்லோடெ பாரபில்லா என்கிற பெட்ரோ மாஸ்டர் என்கிற ஜினெஸ் டெ பஸாமோன்ட், தன் வாழ்க்கை குறித்தே ஒரு நூல் எழுதிக் கொண்டிருக்குமாறு அமைந்து விடுகின்றது. "நூல் முடிவடைந்து விட்டதா?" என்று தொன் க்விஹோதே கேட்கிறான். ஜினெஸின் பதில்: 'என் வாழ்க்கை இன்னும் முடிவுறாதபோது அது எப்படி முடியும்?"

இது செர்வாண்டிஸின் இறுதிக் கேள்வி: புத்தகங்களை எழுதுவது

யார் மற்றும் அவற்றை வாசிப்பது யார்? தொன் க்விஹோாதேயின் ஆசிரியர் யார்? செய்யுளை விடவும் சோகத்தில் அதிகம் தேர்ந்த ஒரு செர்வாண்டிஸா? - தொன் க்விஹோாதேயின் நூலகத்தைத் துருவி ஆராய்கின்ற புரோகிதர், அவரின் Galatea வைப் படித்து, தனக்குப் பிடிக்காத புத்தகங்களை எரித்துவிட்டு, சட்டென்று செங்கலாலும் சாந்தாலும் அந்நூலகத்தை மூடி முத்திரையிட்டு, அது மந்திரவாதிகளின் வேலை என்று நம்ப வைத்து விடுவார். விடுதலை பெறும்பொருட்டு அனைத்தையும் செய்கின்றவனும், அவன் செய்த காரியங்களுக்காகவே போற்றுதலுடன் தண்டனைக் கைதியால் குறிப்பிடப்படுபவனுமான சாவெட்டாவா?

தொன் க்விஹோாதே என்னும் பாத்திரம் போலவே செர்வாண்டிஸ் தொன் க்விஹோாதே நாவன் மற்ற பாத்திரங்களால் வாசிக்கப்படுகிறார் - அந்நாவல் அசலான ஆசிரியர் இல்லாத புத்தகம், அநேகமாக விதி ஒன்று இல்லாத புத்தகம், பிறக்கின்ற நிகழ்ச்சிப் போக்கில் வேதனைக் குள்ளாக்கும் புத்தகம், அரேபிய வரலாற்று நிபுணர் சைடே ஹாமெட் பெனெங்கெலியின் ஆய்வுக் கட்டுரைகளால் மீளவும் உயிரூட்டம் பெற்று, அப்புறம் இனந்தெரியாத மூர் மொழிபெயர்ப்பாளரால் ஸ்பானிஷில் மொழியாக்கம் செய்யப்பட்டது மற்றும் அதுவே வெல்லானெடாவின் இழிவான இரகசியப் பதிப்புக்குரிய விஷயமாக இருக்கப்போகின்றது..... வாசித்தல் மற்றும் எழுதுதலின் முடிவற்ற வளையம் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது: செர்வாண்டிஸ், போர்கெஸின் ஆசிரியர்; போர்கெஸ், பியரிமேனார்டின் ஆசிரியர்; பியரி மேனார்ட், தொன் க்விஹோாதேயின் ஆசிரியர்; தொன் க்விஹோாதே, மிகுவெல் டெ செர்வாண்டிஸ் சாவெட்ராவின் ஆசிரியர்.

தான் வாசிக்கப்படுவதை வாசகன் அறிந்துகொள்வதும், தான் எழுதப்படுவதை ஆசிரியன் அறிந்துகொள்வதும், வில்லியம் சேக்ஸ்பியர் போல, 23.04.1616 என்னும் ஒரே நாளில் இல்லாவிட்டாலும், ஒரே தேதியில் அவர் இறந்துபோனார் என்று கூறப்படுவதுமான, புத்தகத்தின் பக்கங்களை செர்வாண்டிஸ் திறந்து வைக்கின்றார். அவர்கள் இருவருமே ஒரே நபராயிருந்தனர் என்று மேலும் கூறப்படுகிறது. செர்வாண்டிஸின் கடன்களும் சண்டைகளும் சிறைகளும் தன்னை சேக்ஸ்பியர் என்று மறைத்துக்கொண்டு, அவன் நாடகங்களை இங்கிலாந்தில் எழுதுவதற்குப் பயன்பட்ட கற்பிதங்கள்; தமாஷ் நடிகரும், ஆயிரம் முகங்கள் கொண்ட நபரும், எலிஸபெத் காலத்து Lon Chaney யுமான வில்லியம் சேக்ஸ்பியரோ, ஸ்பெயினில் தொன் க்விஹோாதேயை எழுதினார். நிஜமான தினங்களுக்கிடையிலான இக்குளறுபடி மற்றும் பொது மரணங்குறித்த கற்பித தேதி ஆகியன, செர்வாண்டிஸின் ஆவி காலத்தே லண்டனுக்குப் பறந்து சென்று, சேக்ஸ்பியரின் உடலில் மேலும் ஒருமுறை மடிவதற்கான காலத்தைத் தந்தன. அவர்கள் ஒரே நபராக இல்லாதிருக்கக்கூடும் - இங்கிலாந்திலும் ஸ்பெயினிலும், 1616லும் சரி 1975லும் சரி, காலண்டர்கள் ஒருபோதும் ஒரேமாதிரியாக இருந்ததில்லை.

ஆனால் அக்காலகட்டங்களின் அபிப்பிராயங்களுக்கேற்ப, ஒரே நபராக இல்லாமல் இருக்கலாம், அவர்களெல்லாம் ஒரே எழுத்தாளரே, எல்லா புத்தகங்களுக்கும் ஒரே ஆசிரியரே - ஹோமர், விர்ஜில், தாந்தே, சிடே ஹாமெட் பெனெங்கெ, செர்வாண்டிஸ், சேக்ஸ்பியர், ஸ்டெர்ண், டெஃபோ, கதே, போ, டிக்கென்ஸ், பால்ஸாக், லீவிஸ் கரோல், ப்ரவுஸ்ட், காஃப்கா, போர்கெஸ், பியரி மேனார்ட், ஜேம்ஸ் ஜாய்ஸ்.... ஜினெஸ்டெ பஸாமோண்ட்டின் சுயசரிதம் போல் அதே திறந்த புத்தகத்தின் ஆசிரியரான அவர் இன்னும் முடிக்கப்படவில்லை, ஏனெனில் நம் வாழ்க்கைகள் இன்னும் முடிவுறவில்லை. பாரபில்லாவின் கேடியைப் போல, மல்லார்மே ஒருநாளன்று அதே எண்ணத்தை வேறு வார்த்தைகளில் கூறுவார்:

"ஒரு புத்தகம் தொடங்குவதுமில்லை
முடிவுறுவதுமில்லை, அதிகபட்சம்
புனைந்துரைக்கும்........ "

மல்லார்மேயை வாசித்திருந்தவர்போல செர்வாண்டிஸ், முதல்திறந்த நாவலினை எழுதினார் .... தொன் க்விஹோதேயின் வீரப்பெருந்தகை இதிகாசங்களது வாசிப்புடன் தொடங்குவதாகத் தோன்றுவதும், எல்லா யதார்த்தமும் பல தளங்கள் கொண்டதே, படைப்புக்குள்ளே படைப்பின் ஆய்வுரை உள்ளது என்று வாசகன் உணர்ந்து கொள்ளும் வகையில் முடிவுறுவதாகத் தோன்றுவதும் ஆன வாசித்தன் ஆய்வுரை மூலமாக அவர் முன்மொழிகின்றார். தொன் க்விஹோதேயின் உலகியல் சாராததும், அதேவேளையில், உடனடித் தன்மையான பண்பும், அதன் உள்ளார்ந்த யாப்பியல் தன்மையிலிருந்து பெறப்படுவதாகும். தன் ஆதியாகமத்தை கற்பித நடவடிக்கையாக மாற்றிடும் பிளவுக் கவிதை அது: கவிதையின் பிறப்பைப்பாடி, நாம் வாசிக்கின்ற புதினத்தின் தோற்றுவாயை எடுத்துரைக்கும் அது கவிதையின் கவிதை (அல்லது) புதினத்தின் புதினம்.

இலக்கியம் எல்லாமாகவும், வேறொன்றாகவும் தத்துவம், அரசியல், அறிவியல் மற்றும் அறங்கள் - இருக்க வேண்டும் என்று உலகம் விரும்புகிறது. எல்லாப் பெரிய எழுத்தாளர்களுக்கும் தெரியும் என்றெழுதியிருக்கிறார் கேஸ்டன் பாசெலார்ட். அவன் இக்கோரிக்கை என்று ஃபிரெஞ்சுச் சிந்தனையாளர் வினவுகிறார். தத்துவம், அரசியல், அறங்கள் மற்றும் அறிவியல் ஆகியவை தாமே சாத்தியமாகின்ற பேச்சின் அடியாழத்தே, பேசப்படுவதன் தோற்றுவாய்களுடன் இலக்கியம் நேரிடையான தொடர்பு கொண்டிருப்பதால்தான்.

ஆனால் அறிவியலும் அறங்களும் அரசியலும் தத்துவமும் தம் வரம்புகளைக் கண்டறிந்து கொள்ளும்போது, தம்போதாமைகளைத் தாண்டிச் செல்லும்பொருட்டு, இலக்கியத்தின் நயத்திற்கும் நயமின்மைக்கும் காட்சிதருகின்றன. எனினும், அவை இலக்கியத்துடன் சேர்ந்து, வார்த்தைகளுக்கும் விஷயங்களுக்குமிடையேயான நிரந்தர முறிவையே கண்டறிந்து கொள்கின்றன: மொழியின் பிரதிநிதித்துவப் பயன்பாடுகளுக்கும் மொழியாக இருத்தலுக்குமான அனுபவத்திற்கும்

இடையேயான பிரிவினை.

அத்தொலைவினைக் குறைத்திடக் கூடிய கற்பனாவாத நடவடிக்கையே மொழி. அது வெறுமனே அம்முறிவை மறைத்திடும்போது, அது இதிகாசம் எனப்படுகிறது. அதனை வெளிப்படுத்துகையில், நாவல் / கவிதை எனப்படுகிறது. வார்த்தைகளும் பொருட்களும் பொருந்திப் போகவேண்டும் என்னும் போராட்டத்திலுள்ள வேதனைதரும் தோற்றத்தின் நாயகனது நாவலும் கவிதையும் இத்தகையன. பொருட்கள் எல்லாருக்கும் உரியன அல்ல என்று நம் வாழ்க்கைகளில் நாமெல்லாம் கண்டறிவது போலவே, தொன் க்விஹோதே கண்டறிகின்றான்; ஆனால் வார்த்தைகள் எல்லாருக்கும் உரியன. வார்த்தைகள் காற்றினைப் போன்றவை: அவை அனைவருக்கும் உரியவை (அ) யாருக்கும் உரியவை இல்லை. பொதுச் சொத்தின் முதலாவதும் மேலானதுமான இயற்கை உதாரணம் மொழியே. அப்படியானால், மிகுவெல் டெ செர்வாண்டிஸ் தன் வார்த்தைகளின் உரிமையாளர் மட்டுமே - அவர் மிகுவெல் டெ செர்வாண்டிஸ் அல்ல, எல்லா மனிதரும் என்பது போலவே: ஜாய்ஸின் டெடலாஸ் போல், மானுட இனத்தின் படைக்கப்படாத மனச்சாட்சியினைப் பாடுகின்ற, அவர் ஒரு கவிஞர்.

தன் நடவடிக்கையான கவிதைக்குப்பின் பிறப்பவன் கவிஞன். கவிதை தன் வாசகர்களை உருவாக்குவது போலவே தன் ஆசிரியரையும் உருவாக்குகிறது. வாசித்தல் குறித்த செர்வாண்டிஸின் ஆய்வுரை மீதான இறுதி விவரிப்பு இந்த எளிய கல்வெட்டு வாசகமே: **ஒவ்வொருவராலும் எழுதப்பட்டுள்ள தொன் க்விஹோதே, ஒவ்வொருவராலும் வாசிக்கப்படுகிறது** ●

குறிப்புகள்:

Don Quixote என்பதைப் பொதுவாக, ஆங்கில எழுத்தமைதிப்படி 'டான் க்விஜோட்' என்று உச்சரித்து வந்துள்ளோம். ஸ்பானிய உச்சரிப்புப்படி 'தொன் க்விஹோதே' என்பதே சரியாகும்.

ராட்டர்டாமின் எராஸ்மஸ்: எராஸ்மஸ் டெஸிடெரியஸ் என்னும் புனைபெயரின் முழு வடிவம் Gerhard Gerhards என்பதே இயற்பெயர். *1469-1536* காலகட்டத்தில் வாழ்ந்த இவர் நெதர்லாந்தின் தத்துவவாதி. சீர்திருத்தவாதத்தின் முன்னோடி கத்தோலிக்க, புராட்டஸ்டண்ட் பிரிவுகளை மனிதாய நிலையிருந்து விமர்சித்தவர். Praise of Folly என்னும் நூல் வெறித்தனம், வன்முறை, போத்தனம், மதவெறுப்பு, அறியாமை போன்றவற்றைச் சாடியவர்.

பிஸினோ: (கி.பி. 1433 - 1499) இத்தாலியத்தத்துவாசிரியர், இறையியலாளர் மற்றும் மொழியியலாளர். பிளேட்டோ மற்றும் இதர கிரேக்க ஆசிரியர்களது நூல்களை மொழியாக்கம் செய்தார் மற்றும் அவற்றுக்கு விளக்கவுரை எழுதினார்.

ஏன் யுவான்: 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செவில்லே பிரதேசத்தின் மேட்டுக்குடி சார்ந்த உல்லாசி.

சவோனரோலா: (1452-1498). இத்தாலியின் தத்துவவாதி, அறிஞர், புலனடக்கத்தை வற்புறுத்தியவர். இவரைப் பின்பற்றியோர் "அழுமூஞ்சிகள்" என்று கேலிக்குள்ளாயினர்.

கனவான்: இங்கு குறிப்பிடப்படும் hidalgo என்னும் சொல்லுக்கு, ஸ்பெயினின் கீழ்மட்ட வகுப்பைச் சேர்ந்த கனவான் என்று பொருள்.

ஹரவி

பேருந்திற்குள் குளிர்காலத்தை தேடுபவன்

கோடைகாலங்களை சுமந்து வரும்
பேருந்திற்குள் நுழையும் இவனுக்கு
யாரும் அடையாளம் காட்டவில்லை
கண்களில் எரிமலைகளை சுமந்து வருபவர்கள்
நெரிசலின் பாலைவனங்களுக்குள்
சிக்கிக் கொண்ட வழிதெரியாத
வசந்த காலப் பறவையாய்
அல்லாடியவனிடம் தடயங்கள் ஏதும் கிடையாது
சன்னல் கதவுகளை அடைப்பவர்கள்
அறியாதிருக்கிறார்கள்
வசந்தகாலங்கள் வருவதையும்
குளிர்காலங்கள் இருப்பதையும்
முட்டி மோதி பனிக்காலங்களின்
கணப்பு அடுப்பாய் சூடேறும் எஞ்சின்
வரையிலான அனைத்து இடங்களையும்
தேடிச் சலித்தவன்
விட்டு விலகி
வேகமாய் கடக்கும் பேருந்தின்
வாசலை நோக்கி வந்தவன்
கண்டான்
அங்கே நெரிசல்
குளிர்காலம் படிக்கட்டில்
தொங்கிக் கொண்டு பயணம் செய்து கொண்டிருப்பதையும்
சன்னலோர இருக்கையில் அமர்ந்து
வசந்தகாலம் வேடிக்கை பார்ப்பதனையும்
குடிமேசையில்
காலி டம்ளர்களுக்கிடையிருந்து
எடுத்துக் கொடுக்கிறான் ஒருவன்
மின்கணிதங்கள் எழுதிய வறுமைக் கவிதையை ●

நள்ளிரவின் கலங்கிய
மனதுடன் தொலைபேசி வழியே
வழிய விடுகிறான் வேறொருவன்
அறிவு நிறுவனங்கள் புறந்தள்ளிய மேடைப்பிரதியை

அவன் மொழியால் உலகை சமைப்பவன்
இவன் உடன் வெளியால் உலகை செதுக்குபவன்

துயரங்களின் பாடல் ஓசையை
செவிமடுத்தபடி இவன் கேட்பது
கேட்பவரின் துயரமா
சொல்பவரின் துன்பமா
இதை வரிவடிவத்தால் வெளிப்
படுத்திக் கொண்டிருப்பவனின் சலனமா

எதுமற்ற மௌனம்
யாவற்றையும் பார்க்கிறது
தனது பசியுற்ற வெற்று விழிகளால்

யார் காண்பிக்கக் கூடும்
வெளியில் படரும் ஈரப்படலம் என்பது
மழையால் ஆனதல்ல
கண்ணீரின் நடனத்தால் ஆனதென்பதை

அதை விளக்கிக் காண்பிக்க முயற்சித்தவனின்
ஒளிப்படக் கருவி
தப்பியோடும் முயற்சியில்
அரிச்சல் முனை கடலுக்குள் வீழ்ந்து விட்டதை
கடற்படை வானரங்கள்
ஒளிவீசி தேடியபடி
ஆத்மாவின் ரேடியம் ஒளிர
ஆழ்கடல் மீன்கள் தங்களது திரைப்படங்களை
படப்பிடிப்பு நடத்திக் கொண்டிருக்கின்ற
தற்சமயத்தில் ●

முருகபூபதிக்கும் - பாரதிநிவேதனுக்கும்

புது எழுத்து 16
ஆகஸ்டு 2007 இறுதியில்
நகுலன் நினைவு மலராக
வெளிவருகிறது.

ஆதிமூலம் - அட்டை

கோணங்கி - சிறப்புக் கட்டுரை

படைப்புகள் மற்றும் கட்டுரைகள்
ஆகஸ்டு 15ற்குள் வரவேற்கப்படுகின்றன.

மயக்கு வித்தைக்காரன் பின் செல்லும் சிறுமி

ஏது உன்னை ஈர்த்தது அவ்விடம் நோக்கி
வசீகரம் கூடிய மாயக்கரங்கள்
வாவென்றழைக்க கிளம்பி விட்டாய்.
மயக்கு வித்தைக்காரன் பின்செல்லும் சிறுமி நீ
சரளைக் கற்களின் மீது மேடான மேட்டில்
எதற்கிந்த நடை
வியர்வைப் பெருக்கில்
ஆடைகள் நவநவத்து விட்டன
நீ சலித்து ஒயும் ஒவ்வொரு வேளையிலும்
அது தன் வனப்பின் சின்னஞ் சிறு துளியை
உன் மீது தெளிக்கிறது
நீ மறுபடியும் சிறுமி ஆகிறாய்

வேண்டாம் இவ்வலி என்று சொன்னால்
பாதி தூரம் வந்துவிட்டேனே
எனக் கலங்கும் நண்பா
அரவக்குட்டிகள் பதுங்கிக் கிடக்கும்
காட்டு வழி துவங்குகிறது
நல்லதற்கே சொல்கிறேன்
இப்போதேனும் திரும்பிப் போ ●

திமிங்கிலங்கள்

நேஷனல் ஜியோகிராபிக் சேனலில்
ஒரு கடலைக் காண்பித்தார்கள்
அதில் கருத்த திமிங்கிலமொன்று
தன் பெருமூச்சால் நீரைக் கிளறியபடி
நீந்திக் கொண்டிருந்தது

இன்னொரு சேனலில்
இரண்டு திமிங்கிலங்கள்
இரண்டு பெருமூச்சுக்கள்
ஒன்றையொன்று தழுவிக் கொண்டு
சுகித்துக் கிடக்கின்றன

இதை இமைக்காது வெறித்துக் கொண்டிருக்கும்
திமிங்கிலத்தின் பெருமூச்சால்
குளமாகி வருகிறது இவ்வறை ●

குமிழ்

நீலகண்டன்

பாத்திரத்தில் பூவாங்கி நீர் நிரப்பி
பப்பாளிக் குழாயில் ஊதி நீர்க்குமிழ்களை
பெருக்கிக் கொண்டிருக்கும் சிறுவன்
வெளி முழுக்க
குமிழ்களைப் பரப்புகிறான்
அதனொரு நீர்க்குமிழுக்குள் விழுந்தவன்
சுழன்று கொண்டிருக்கும்
எண்ணற்ற சூரிய குடும்பங்களையும்
ஒன்றாகவே நினைக்கிறான்
ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவ
நீர்க்குமிழ் உடைகிறது
வாழ்நாள் ஒரு கணமாக
ஒருநாளாக ஓராண்டாக
பல நெடுங்காலமாக
எதுவாக இருந்தாலும்
நேரம் ஒரு குறுகிய வட்டமாகவே
பதிவாகியிருந்தது அவனுள்
ஒன்றுக்குள் இருந்து மற்றொன்றென
அடுத்தடுத்து தாவி
எல்லா நீர்க்குமிழ்களையும்
உடைத்துக் கொண்டு வருகிறான்
பிரபஞ்சம் முழுக்க காயாக
அவனே ஒரு நீர்க்குமிழாக •

விஸ்வநாதன் கணேசன் கவிதைகள்



ஆட்டமாய்க் குடித்து விட்டு வரும்
எல்லைச் சாமிக்கு
தன் சிலை தென்படா நகரம்
ஆச்சரியமூட்டினாலும்
ஒருசில மரங்கள் தென்படுதல்
ஆசுவாசமடைகிறான்
ஏதோவொரு மூலிகையெடுத்து
ஏதோவொரு சாறுடன் கலந்துச்
சுவைக்கிறான்
புரிந்த போலீஸ்காரனின் அன்பை
அள்ளியபடிப் பயணிக்கிறான்
அடுத்து வரும் பகலில்
அவனாட்டம் அப்படியே
அமையப் போவதாய் எண்ணிக்
கதவு தட்டுகிறான்
ஏழுலகின் ஒரே தேவதை
கதவு திறக்கிறாள் •

கோடிங்

இரவு இரண்டு மணிக்கு
ஒரு ஏழாவது தளப் ஃப்ளாட்டின்
திரிசங்கு சொர்க்கத்திருந்து
எறிந்த கல் தப்பிப் போயின
வேப்ப மரம்
கறிவேப்பிலைச் செடி
பூசணிக் கொடி
வீசப்பட்ட கல்லின் வலி அறியாது
உறங்கிக் கொண்டே இருக்கும்
புன்னை மரத்தின் அடியில்
ஆஸ்திரேய பச்சைப் புற்கள் •

கார்டினல் ப்ராண்டி

வெத்து வேட்டுக் காற்றில்
உதிரும் ஒரு இலை நான்
இலைகளை மிதித்தவன்
கண்டடைவானா
வெத்து வேட்டு வெய்யிலில்
சருகானேன்
கண்டு கொண்டான்
மறந்தும் போனான்
இலைகளுக்கு
விலாசமில்லையென்று
நிருபித்தலில்
பருகியது தான்
இந்த
கார்டினல் ப்ராண்டி



நிலவு ஒன்றினைக்
கொல்வதெனக் கொல்
சாயைகள் இன்னும்
சரக்கை முடிக்காமல்
இருக்கலாம்
சூரியனாய்
ஒளி உருவெடுத்து
ஒழுகிய தேன் துளிகள்
அனைத்தும் நிலவு •

இன்னிக்கு என்ன தேதி மச்சான்

ஏது அசைந்தாலும்
அசையாத மரமொன்று
சிவப்புக் கண்டு நின்றது
சில இலைகளை உதிர்த்த மரம்
பக்கவாட்டில் பாய்ந்தது
கனி கண்டதாய்ச் சொன்னவன்
கனி அறிய வைத்தான்
இலைப் பச்சை கண்டவள்
பொலிவுற்றதில் பேசவும் செய்தாள்
மஞ்சளில் பேசிய மழலைகள்
பெருக்கம் தேடிப் பின் கூடடைந்தன
முதலைக் கறி உண்ண அசைந்தன •

உறுதியான பூக்கள்

ஒன்றாய்ப் பூத்ததில்லை
எல்லா மலர்களும்
தன்னழகைப் பேசியவை
மொழி பூத்த இப்பெரு
நிலத்தில் கட்டிடங்களை
கட்ட ஆரம்பித்தன
ஒன்றாய் இருந்ததில்லை
எதுவும்
ஒரு மனிதனின் கேள்வி
பறந்து விதை இறைப்பதாய்
கொள்ளலாம்
ஏக தேசமாய்
அப்படி நான் சொல்ல.......... ●

வியர்த்த உயிரினங்கள்

சிரிப்பாய் சிரிக்கும் எத்தெருவும்
என் தெருவில் நான் வழுக்கியதை
இந்தத் தகவலைத் தெரிவித்த பகலைத்
தெரிந்ததாய்ச் சொன்ன வியர்த்த
உயிரினங்கள் ஒரு சில
சிகரெட் பாக்கெட்டுகளையும்
வாந்திச் சிதறல்களையும்
எத் தெருவும் எடுத்துச் செல்கின்றன
சிரிப்பாய்ச் சிரித்த படி. ●

சிறுகதை

ஆண்கள் விடுதி : அறை எண் 12

பா. திருச்செந்தாழை

கழிப்பறை:

சிதிலமுற்ற குழாயிலிருந்து கொட்டிக் கொண்டிருந்த நீரில் பிளாஸ்டிக் வாளி நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. மிகுந்த அமைதி நிலவிய அவ்விடத்தில் சீரான அவ்வோசை மூலம் தன்னிருப்பை இயல்பாக்கும் விதமாய் அச்செயலை மாற்றியிருந்தான். மறுபடியும் அப்படங்களைப் பார்த்தான். புகைப்பட பெண்ணின் நிர்வாணக் கோணங்கள் இவனுக்குள் எவ்வித ரத்தப் பாய்ச்சலையும் நிகழ்த்தவில்லை. மடக்கி வைக்கப்பட்டிருக்கும் அப்புத்தகத்தில் வழமையேறியிருக்க, புகைப்பட வர்ணங்கள் மினுமினுப்பற்று உணர்ச்சியிழந்திருந்தன. நீண்ட கால ரசித்தன் விளைவாய் சிரித்துக் கொண்டிருக்கும் அப்பெண்களின் நிர்வாணம் அவர்களின் இயல்பான உடைகளாகி, 'மர்மங்களற்ற நீள் பாலைவெளியின் சுவாரஸ்யங்களற்ற பரப்பை ஒத்திருந்தன. இவன் ஆயாசமாய் உணர்ந்தான். கதவின் கீழ் இடைவெளியில் ப வடிவத்தில் வெயில் விரிந்திருக்க, அதன் மேல் நிழல்களின் பிரதிகள் அசைவுறுகிறதாவென கவனித்தான். கதவிற்கு வெளியே இவன் யூகித்திருந்த நடமாட்டமற்ற வெறுமை பத்திரமாயிருந்தது. குழாயிற்கும், சுவற்றிற்குமான இடைவெளியில் புத்தகத்தை சொருகினான். உடலெங்கும் நிரம்பியிருந்த வேட்கையில் உறுப்பு பசி கொண்ட மிருகத்தின் வேட்டைக்கு முன்னான இரையின் மீது கூர் குவிந்த மௌன உன்னிப்புடன் அலைந்தது. மிகச்சிறிய ஒரு பாதையின் திறப்பு அச்சமயத்திற்கு போதுமானது. காமத்தின் வேட்டைப் பாய்ச்சலில் உடல் அனிச்சையாய் தன்னை ஒப்புக் கொடுத்து விடுகிற அந்த தருணங்கள் தேவைப்படுகின்றன. இவன் மலையின் விளிம்பைத் தேடிக் கொண்டிருந்தான்.

இப் பெருநகரத்தில் வாரப் பகல்களெல்லாம் வேலை செய்கின்ற நிறுவனத்தால் சேமிக்கப்பட்டிருக்க, சோர்வும் தூக்கமும் நிரம்பிய நடுஇரவுகளே இவனுக்கான நேரங்களாகி விட்டிருந்தன. சிறிய இவ்வறையின் தரையில் நெருக்கமாய் படுத்திருக்கின்ற நண்பர்கள் மத்தியில் இவனுக்கான தனிமை காணாமல் போயிருந்தது. தவிர, வேலையின் பகல் நேர நெருக்கடி தருகின்ற காட்டமான நெடி படர்ந்த மூளைப் படிவுகள் சமனாகிற தருணத்தில் இவன் மெய்மறந்து உறங்கியிருந்தான். இன்று விடுமுறை. முகங்களிலெல்லாம் சூட்டுக் கொப்புளங்கள் பரவி எரிந்தது. உடல் வெப்பத்தை வெளியேற்றுவதற்கான உபாயங்களால் இச்செய்கை தருகின்ற போதையேறிய மெய்மறப்பால் இவன் ஒவ்வொரு விடுமுறை தினத்தன்றும் இதனை தவறாத அடிப்படை நிகழ்வாக்கியிருந்தான். அதற்கு சில புத்தகங்களும், 'நினைவில் சேகரித்திருந்த சில பெண்களின் முகங்களும் உதவின. இந்த இருப்புகளில் அவ்வப்போது உள்ளீடும், வெளியேற்றமும் நிகழ்ந்தபடியிருக்கும். தோற்றுப் போன புத்தகம் வெற்று காகிதமாயிருக்க,

இவன் நினைவிலிருந்த பெண்களை வெற்றுச் சுவரில் உருவகப் படுத்தத் துவங்கினான். இன்னும் மிகக் குறைந்த தருணங்களே இவனது கழிவறை இருப்பை வெளியிலிருப்பவர்களுக்கு இயல்பான விசயமாகப் படச் செய்யும். அதிவேக முனைப்புடன் சுவற்று சித்திரங்களை ஓடச் செய்தான். சோதனையாக புணர்விற்கு பின்னான முகத் தோற்றங்களே பிரதியாகியபடியிருக்க, நரம்புகளிலெல்லாம் பதட்டமேறி வியர்வை பொங்கியது. தான் தவற விடக் கூடிய இத்தருணத்திற்கான ஒரு வார காத்திருப்பின் பிரம்மாண்ட பயம், உணர்வுகளின் குவிமையத்தை சிதைக்கத் தொடங்கியது. வியர்வையூறிய உள்ளங்கையை வாளித் தண்ணீரில் அமிழ்த்தினான். குளிர் பரவியதும் மெதான சமநிலை கிடைத்தாற் போல உணர்ந்தான். சற்று நேரம் தலைகுனிந்தபடி அமர்ந்திருக்க, ரம்யமிக்க இசை பொங்கும்படி மனதை வைத்துக் கொண்டான். வெளிர் மஞ்சள் நிறப் பூக்கள் பரவிய ஒரு சமவெளியும், எடையற்ற சிட்டுக் குருவிகளின் வானமும் தோன்றியபடியிருந்தது. மிக இயல்பாக சாயமற்ற புன்னகையுடன் அவளின் முகம் பூத்த பொழுதில் மங்கத் துவங்கிய புலன்களின் கூர்மைகள் விழிப்படைந்தன.

இவன் தன்னில் விரவுகிற அனிச்சைச் செயலை உணர்ந்தான். அம்முகத்திற்குரியவளுடனான தனது உறவின் படிநிலையை யோசித்தபொழுது திடுக்குற்றான். புனிதங்களால் நிரப்பப்பட்டிருக்கும் உறவுகளின் எல்லையைக் கடந்திருந்தது வேட்கை. மிக மோசமான ஒரு பாவத்தைச் செய்தவனாய் தன்னை நினைத்துக் கொண்டு, நினைவுகளின் அடுக்குகளை மூடியபடி வெளியேற முனைந்தான். சொற்பக் கணங்களில் தான் தப்பிவிட்டதாகத் தோன்றியது. மிகப் பெரிய தண்டனைக்கான வாசலின் நுனியைத் தான் எவ்வாறு தேர்ந்தெடுத்தோமென பெருமூச்சுடன் எண்ணியபடி, துடித்த குறியை சமனப்படுத்த வேறு விதமான சூழல்களையும், மனிதர்களையும் அசைபோட்டான். அவளை மிகச் சாதாரணமாகவே இவன் கடந்திருந்த வேளைகளில் அம்முகத்தின் ரம்யமும், கவர்ச்சியும் பெரிதான அம்சமாகவே படாமல் போய்விட்டதாகத் தோன்றியது. ஒரு வேளை இவன் அந்த கணங்களால் அவளிடமிருந்து இது போன்றதொரு தேவை ஏற்படாதென தவறவிட்டிருக்கலாம். கோட்டோவியத்தின் உயிரற்ற இடைவெளிகளில் வேட்கையின் கிளர்ச்சிமிகு வண்ணங்கள் இளகி பரவி அவளின் சித்திரத்தை உயிர்ப்பாக்கி மின்னச் செய்தன. மேலும் சில தர்க்கங்கள் வலிமையற்ற கால்களுடன் இவனை வந்தடைந்தன. இவன் குறைந்தபட்ச ஜாக்கிரதையுடன் அவளைப் பார்க்கத் துவங்கினான். உறவுகளற்ற ஒரு புள்ளியில் அவளது சித்திரம் இவனைத் தின்னத் துவங்கியது. மழைநீரில் பாய்ச்சலோடு செல்கின்ற இலையைப் போல இவன் மிதந்து சென்றான். இவனது எதிர்பார்ப்பிற்கும் சற்று முன்னதாகவே இரண்டாய் மடங்கிக் குனிந்தான். வேட்டையின் மிச்சங்களைத் துப்பித் தணிந்தது குறி. லேசான கணங்கள் வழிந்து கொண்டிருந்த பொழுதில் சட்டென இறுகி ஸ்திரமான கண்ணாடி நிமிடங்களில் இவன் சிறைப்பட்டிருந்தான். உடலில் வழிந்த வியர்வையை வழித்து உதறினான். பிளாஸ்டிக் வாளி நிரம்பி வழிந்து

கொண்டிருந்தது. சோர்வாய் உணர்ந்தான். அவளின் சித்திரத்தை எந்தப் பெட்டியில் வைப்பதென்ற புதுவித குழப்பமெழ, முதன் முதல் ஏற்பட்ட பாவ உணர்வுகள் புதிய பச்சயம் வீச முளைத்தெழுந்தன. மறுபடியும் அந்த காட்சி நினைவில் வந்தது. மஞ்சள் பூக்களடங்கிய சமவெளியில் இறங்கு வெயின் மௌனக் கதிர்கள் எதிர்பார்ப்பற்று அழிந்து கொண்டிருந்தன. சிட்டுக் குருவிகளற்ற வானத்தின் ஸ்படிக நீலத்தில் அனுமானிக்கவியலாத பதட்டமிருந்தது. இவன் எளிதில் உடைபடும் விதமாக ஒரு தாவரத்தைப் போல விரிசல் பரவியிருக்கும் கண்ணாடிக் கோப்பையாய் தான் மாறிவிட்டதாக துயரமாய் உணர்ந்தான். புனிதங்களை சிதைத்தெறிந்த மிருகத்தின் மறு வருகை மீதான பயத்துடன் தாழ்ப்பாளை நீக்கினான்.

மைய அறை:

மிக நீண்ட நேரமாய் இவன் படுத்தே இருந்தான். உடையற்ற மேலுடம்பில் முதுகுப் பரப்பெங்கும் சிறு மணற் துகள்கள் ஒட்டிக் கிடந்தன. தூக்கமற்று கழிந்த இரவு ரத்த கசிவுற்ற கண்களையும் அயர்ச்சியான முகத்தையும் விட்டுச் சென்றிருந்தது. வெய்யின் பாதங்கள் உறவினர் வீட்டுச் சிறுமிகள் திரைச் சீலைகளுக்கு பின்னிருந்து எட்டிப் பார்ப்பதைப் போல தயக்கமாய் நுழைந்து கொண்டிருக்க, தலையணையில் முகம் பதியுமாறு படுத்தான். நைந்த தலையணை வாங்கிய சமயத்தில் நிறமுற்றிருந்த பூக்களனைத்தும் அழிவின் விளிம்பிருக்க, கருப்பாய் விரவியிருந்த எண்ணைத் தடங்களிருந்து வாடை பரவியது. இந்த அறையில் முன்பு தங்கிச் சென்ற யாரோ ஒருவரின் அடையாளமாக குண்டு பல்பும், அலமாரித் திட்டிலிருக்கும் முனையற்ற முகக் கண்ணாடியும், இந்த அழுக்கு தலையணையும் அவ்விடுதியில் இவர்களின் நிரந்தரமற்ற வாழ்வை அவ்வப்போது மெதாக முனகியபடியிருந்தன. இழந்து விட்டிருந்த நேற்றைய மதிய கணங்கள் வழக்கமான தடயமற்ற உதிர்தலைப் போலன்றி துக்கமேறிய பெருங்கனவின் விரிதலாய் பரவிக் கொண்டிருந்தது. கழிவறையில் தொடர்ந்து தண்ணீர் சிதறும் ஒலிக்குறிப்புகள் கேட்டபடியிருக்க, மிகக் குறுகிய தனிமையின் கரங்களில் சிக்குண்ட பதற்றத்திலிருந்தான்.

நகரத்தின் சிக்கல் நிறைந்த கட்டுமானங்களால் சிதைந்து போயிருந்த மதியம் புறநகரின் பரபரப்பற்ற சூழல் தன்னை முழுமையாய் விரித்திருந்தது. இருவருக்குமிடையேயான மிகச் சரியான தூர விலகலில் இரு நிழல்கள் ஒதுக்குப்புறமான கட்டிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அவ்வப்போது முன் சென்று கொண்டிருந்த அவள் இவனைத் திரும்பிப் பார்த்து, இவனது ஆர்வத்தின் பரப்பை விரிவாக்கம் செய்து கொண்டாள். இதற்கு முன்பு திரையரங்குகளின் வாசலில், தங்கும் விடுதிகளின் சமீபத்தில், நெரிசலான முக்கிய வீதிகளில், புணர்தலின் அழைப்பிற்குரிய மொழி பேசும் கண்களை அவன் தெரிவு செய்திருந்தான். மிகுந்த வியப்புறும் விதமாக அரசாங்க மருத்துவமனையில் நவுற்ற நண்பனொருவனை பார்க்கச் சென்ற இன்றைய காலையில் மருந்து கசப்புகளின் நெடிபடரும் பதட்ட வெளியில்

இவனது கவனத்தை இவள் தன்பால் குவித்தாள். குறுகிய பொழுதில் இவனது சம்மதத்தைப் பெற்று இப்புறநகரின் சப்தமற்ற வீதிகளில் இவனை இழுத்துச் சென்று கொண்டிருக்கிறாள். இவன் எச்சில் ஒழுகும் மிருகத்தின் சுய கட்டுப்பாடற்ற வெறி பொங்க, வியர்வையை துடைத்தபடி பின் தொடர்ந்தான். சுற்றிலும் புதர் நிறைந்த ஆஸ்பெட்டாஸ் வேய்ந்த அச்சிறிய வீட்டின் முன்னிருந்தனர் இருவரும். சுவரோரமாய் சாயமற்ற சிறிய சைக்கிள் சாய்ந்து கிடக்க, கடைசியாய் பெய்த மழையில் நிறைந்திருந்த ஆட்டுரல் மேல் காகித கப்பலொன்று முற்றிலும் ஊறி ஒரு தொடுதல் சிதைந்து விடுவதற்கான அபாயத்தில் அலைந்தது. ஆளரவமற்ற இச் சூழல் தன் கிளர்ச்சியை எவ்வித நாசூக்கற்ற செயல்பாடுகளின் வழி இவன் திருப்திப்படுத்த விரும்பினான். அவள் பூட்டைத் திறக்கையில் கருவேல மரமொன்றில் சிறுநீர் கழித்தபடி சிரித்தான். அவளின் பதிலுணர்வு என்னவாயிருந்ததென்பதை அனுமானிக்கவியலவில்லை. ஊரிலிருக்கும் சமயங்களில் உறவு முடிந்த நடுஇரவுகளில் இவன் தெரு விளிம்பிலும், இவனது மனைவி முற்றத்துத் தென்னைத் தட்டிகளின் மறைவிலும் சிறுநீர் கழித்து விட்டு மெல்லிய சிரிப்புடன் ஒருவரை யொருவர் சீண்டியபடி சந்தோஷத்தின் பரப்பை நீட்டிக்கும் அந்த கண உணர்வு இன்று ஏற்பட்டிருந்தது.

திறந்திருந்த ஒரு கதவின் வழியே நுழைந்தான். மூடியிருந்த கதவின் முதுகுப் பரப்பில் விதவித கார்ட்டூன் பொம்மைகள் ஒட்டப்பட்டிருந்தது. மெதுவான ஆரம்பத்தில் மின்விசிறி சுழலத் துவங்க, இதற்கு முந்தைய கணங்களின் இருப்பின் வழி சிதைந்து கிடந்த அல்லது இயல்பாயிருந்த அறையின் முகத்தை சீராக்கியபடி சிறிய மரநாற்காலியில் இவனை அமரச்சொன்னாள். அந்த நாற்காயில் சிறுவர்களுக்கான ஓவியப் புத்தகமிருக்க, அதை புரட்டியபடி அவளைப் பார்த்தான். அடுப்பைப் பற்ற வைத்து எதையோ சூடுபடுத்தும் பாத்திரங்கள் ஒலி கேட்டது. பொதுவாக இவன் புணர்தலுக்குண்டான இடங்களில் கையாளப்படும் வலிந்து உருவாக்கப்பட்ட தனிமையின் பீதி, இங்கு தவறுவதை கவனித்தான். ஊரில் மனைவியுடனான உறவின் எல்லா இயல்புகளும், இவள் மூலம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. வலது ஓர கொடிக் கயிற்றில் ஆரஞ்சு வர்ண கவுன் ஒன்று அவசர அவசரமாய் கழற்றிப் போட்ட நிலையில் கிடந்தது. இதே நிறத்தில் தனது மகளுக்கொரு தடவை கவுன் எடுத்துச் சென்றது நினைவிற்கு வந்தது. அக்கொடிக் கயிற்றுப் பின் சுவரில் கருப்பு வெள்ளை புகைப்படத்தில் இவளும், இவளது கணவனும் பாந்திருந்தனர். அதிக மையிட்ட கண்களும், முன் நெற்றியோர நெளிநெளியான கூந்தல் முடிகளும், சற்றே செயற்கையான புன்னகையுமாய் இவளது அந்த பருவத்தின் மிகச் சிறந்த ஓவியமாய் அப்படமிருந்தது. மண்ணெண்ணை அடுப்பின் சீற்றம் அடுப்பில் ஒக்க. சிரித்தபடி, பாயை விரித்தாள். அதீத கற்பனைகளுடன் வந்திருந்த இவன் இப்பொழுது இயல்பான உடலுடன் தானிருப்பதை அதிசயமாக உணர்ந்தான். கதவைப் பூட்டித் தாளிட்டவள் மிக நெருங்கி வந்து இவனது கேசத்தை கலைத்தபடி அணைத்தாள். இவன் கடைசியாய் வியர்வை படிந்திருந்த அவளது அக்குள் பகுதியின் வாசனையுடன் நினைவிழந்தான்.

இவனது வெறி கூடிய உடலசைவில் அவள் தன்னை சிறியதாக்கிக் கொண்டாள். இவனால் ஒரு வித்தியாசத்தை உணர முடிந்தது. இதற்கு முன்னான பெண்ணுடல்கள் உறவின் எல்லாச் சூட்சுமங்களையும் மிக நன்றாக அறிந்திருந்தன. இவனது ஆவேசப் பாய்ச்சலை எளிதாக வகை பிரித்து மட்டுப்படுத்தி கரை சேர்க்கின்ற வல்லமையுற்றிருந்தன. ஆனால் இந்த உடலில் இவனது வெறியனைத்தும் மிகச் சரியாக உள்வாங்கப்பட்டன. உச்ச கணங்களில் அவளின் மெல்லிய வலி முனகலும், இவனைத் திருப்தியுறச் செய்தன. தோல்வியின் கசப்புப் படரச் சிதறிச் சரிகின்ற இறுதி கணங்களின்றி, சரியான இடைவெளி கூடிய உருகுதலுடன் உடல் கரைந்து கொண்டிருந்தது. இருவரிடமிருந்தும் பிழியப்பட்டிருந்த வியர்வையில் வெம்மை அதிர்ந்து கொண்டிருந்தது. இவன் நிதானமாய் தன்னைப் பிரித்தான். மூச்சிரைத்து ஏறி இறங்கிக் கொண்டிருந்த அவளது அடிவயிற்று பிரசவத் தழும்புகளை சிறிது நேரம் உற்றுப் பார்த்தவன், பின் மெதுவாக அவ்விடத்தில் முத்தமிட்டான். அடிபட்ட சிறுபறவையின் உயிரதிர்வு அவளுள் நிகழ்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. அடுப்பில் சூடான தேநீர் பொங்கும் ஓசையும், வாசனையும் வர, உரிமையாய் எழுந்து சென்று இரு தம்ளர்களில் தேநீர் நிரப்பினான். சற்று முன்பு இயல்பாயிருந்த அறைப் பொருட்களிலெல்லாம் குற்றவுணர்ச்சி தளும்பியபடியிருக்க, அவைகளின் மௌனம் பல அர்த்தங்களுடன் இவனால் உணரப்பட்டது. மெல்ய மயக்கத்துடனிருந்த அவள் மீது சேலையை ஒழுங்கற்று விரித்துவிட்டு, சில ரூபாய் தாள்களின் மீது தேநீர் தம்ளரை வைத்தான். அவள் சமனாகும் வரை அங்கேயே இருக்க விரும்பினான். அவள் நசிந்த குரல் வழி பிள்ளைகள் வருகின்ற சமயமாகிவிட்டதென்றாள். அவ்வார்த்தைகள் இவனது எல்லையை தெளிவாக வரையறைச் செய்து சுய கழிவிரக்கம் பெருகச் செய்தது. கதவை வெறுமனே சாத்திவிட்டு, உடைகளை நேர் செய்தபடி வெளிவர குளிர்ந்த காற்று முகம் பரவியது.

ராகமற்ற விசிலோசையுடன் சாலை நோக்கி வந்தான். இறக்கத்தில் அழுக்குச் சீருடையுடன் ஒழுங்கற்ற முடி பொங்க சிறுவனும், துவக்க வகுப்பி-ருக்கும் சிறுமியும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டபடி வந்தனர். அவ்வப்போது அச்சிறுவன் உரக்கக் கத்தி அச்சிறுமியை சீண்டினான். இவனைக் கடக்கின்ற பொழுதில் அச்சிறுமி பக்கவாட்டு குத்துச் செடியில் வண்ணத்துப் பூச்சியொன்றைக் கண்டாள். பிறகு அழுகையை நிறுத்திவிட்டு, மிகுந்த ஜாக்கிரதையுடன் இரு விரல்களை அதன் சிறகை நோக்கி நகர்த்த, முன் சென்ற சிறுவன் இவளைத் திரும்பிப் பார்த்தான். என்னவென கேட்டபடி அருகில் வந்தவனை ஆட்காட்டி விரலால் உதட்டை மறைத்து சமிக்ஞை செய்ய அவன் தன் நடையின் அதிர்வை சட்டென ஒரு பூனையின் லாவகத்திற்கு மாற்றிக் கொண்டான்.

இவன் பேருந்தில் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுதில், அவ்வண்ணத்துப் பூச்சியும், அச்சிறுமியின் கண்ணீர் வடிந்த கண்களில் விரிந்த பரவசமும், சிறுவனின் புழுதி படிந்த பாதங்களும், அவர்களது

அம்மாவுடனான தனது மதிய கணங்களும் வேறு வேறு புள்ளிகளில் ஒன்றாய் இணைந்து இனமற்ற அமைதியுடன் வேதனையின் கீற்றை ஒளிரச் செய்தன. நேற்றிரவு மனைவியுடன் தொலைபேசியில் பேசும் பொழுதில் இவனது குரல் அழுகையின் தொனியில் இருப்பதாய் கூறினாள். இவன் வேறுவிதமாக குரலை மாற்றிக் கொள்ள முயன்றான். எதிர்முனையில் ஏற்றுக் கொண்ட அடையாளங்களில்லை. குழப்பம் மிகுந்த முழு இரவை இவன்

கடந்திருந்தான். கழிவறையில் தாழ்ப்பாள் திறக்கும் ஓசை கேட்டது.

ஆண்கள் விடுதி அறை எண் - 12:

தூசியின் படலம் விரிந்திருக்கும் அவ்வறையில் விடுமுறை தினத்தின் முற்பகல் சோம்பலுடனும், உபயோகமற்றும் சிதிலமடைந்திருந்தது. மைய அறையில் குப்புற படுத்துக் கிடந்தவனின் துவைக்கப்படாத கைலி வலது கால் தொடை தெரிய ஏறிக்கிடந்தது. மூலையோர பிளாஸ்டிக் குடத்தின் பாசி படர்ந்த அடிப்பாகத்தில் நேற்றைய தண்ணீர் கூடேறிக் கிடக்க, சுவற்றுப் பல்லியின் பார்வை நெடுநேரமாய் அதன் மேல் உறைந்திருந்தது. கழிவறையிருந்து தண்ணீர் தெறிக்கின்ற ஓசை பெரும் போர்வையாய் அறையின் வெளியெங்கும் விரிந்து, சமீபமாக படிப்படியாகக் குறைந்து, மௌனத்தை நுழையச் செய்து கொண்டிருந்தது. சிறிய கணத்திற்குப் பின் கழிவறை தாழ்ப்பாள் திறக்கப்பட, ஈரமான பாதங்களை கோணிக்கு உறிஞ்சக் கொடுத்தபடி அவன் நின்றான். படுத்திருந்தவன் ஒருமுறை அவனை எறிட்டுப் பார்த்தான். இருவருமே மிக நீண்ட பிரதேசத்தை கடந்து வந்திருந்த சோர்வுற்ற முகக் குறிப்புகளுடனும், முதல் வார்த்தைக்கான யோசிப்புடனும் தாமதித்தபடியிருந்தனர். இருவருக்குமிடையேயிருந்த நிழல் வெளியை மௌனமாய் தின்று கொண்டிருந்தது பகல். ●

காற்றில் சிக்குண்ட சருகு

மணிகண்டன் வாசுதேவன்

ஹங்கேரிய மொழிப்படங்கள் குறித்தான பரிச்சயம் எனக்கிருந்ததில்லை. நல்ல வெளிநாட்டுப் படங்களைப் பார்ப்பது அந்த நாட்டின் இலக்கியங்களைப் படிப்பதற்கு சமமானது என எழுத்தாளர் எஸ்.வி.ராமகிருஷ்ணன் சொல்வார். 'ஹைதராபாத் ஃபிம் கிளப்' இந்தியாவில் செயல்படும் ஒத்த வகையான அமைப்புகளுள் முக்கியமானது மட்டுமல்லாது செயலூக்கம் மிக்கது. ஹங்கேரியப் படங்கள் திரையிடப்படுகின்றன என்பதனை அறிந்த போது குறுகுறுப்பான ஆர்வம் தொற்றிக் கொண்டது. அவை ஆழமான கதையமைவுடன் காமம் நிறைந்த படங்கள் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

டோரா ஆண்களின் மீதும் பாதுரனின் மீதும் மிகுந்த மோகம் கொண்டவளாக இருக்கிறாள். T ஐ சந்தேகமாக பார்க்கும் டோரா அவனின் மீது காழ்ப்பு அடைந்து அறைந்து செய்கிறாள். பின்னர் வரும் T டோராவை, லியனி என நினைத்து உறவு கொள்கிறான். அமைச்சராக சொல்லும் இலக்கில் தோல்வியுறும் லியனி தப்பிச் செல்வதற்காக மறைவிடம் தேடி அலைகிறாள். சகோதரர்கள் இருவரும் சந்திக்கிறார்கள். இருவரும் தாங்கள் தப்பிப்பிட்டி விற்ற இடத்திற்கு வருகிறார்கள்.

3

இல்டிகோ என்யெடி (Ildiko Eyedi) என்னும் பெண் இயக்குனரின் முதல் திரைப்படம் இது. கோர்வையான திரைக்கதையற்று காட்சிகளின் தொகுப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. நியூஜெர்ஸி, புடாபெஸ்ட் என பல இடங்களுக்கும் நகரும் கதையமைவில், 'Surrealistic' எனப்படும் வேறுபட்ட அல்லது முரணான காட்சிகள் படம் முழுவதும் பிணைக்கப்பட்டு விரவிக் கிடக்கின்றன. தான் மிருககாட்சி சாலைக்கு வந்த கதையை சிப்டன்ஸ்

கூறுவது உதாரணம்.

விசித்திரமான 'Z' ன் பாத்திரப்படைப்பு, குண்டு வைக்க வரும் பில்லியின் வாழ்க்கைச் சூழல் போன்றவை எல்லாம் சிதறிக் கிடக்கும் காட்சியமைப்புகள். ஆனால் பார்வையாளனால் கதையின் நகர்வினை தொடர முடிவது, இயக்குனரின் சாமர்த்தியம். ஒரு ஆராய்ச்சியாளர் பாலுறவில் ஆண்-பெண் உளவியலை விவரிக்கும் போது கலாச்சார கட்டமைப்பில் சிக்குண்டிருக்கும் ஹங்கேரியப் பெண்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அதே கால கட்டத்தில் வாழும் டோராவின் பாலுறவு சார்ந்த இச்சைகள் படம் முழுவதும் நீண்டு கிடக்கின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட தார்மீகமின்றி நகரும் படம் முழுவதும் அரசியல், விஞ்ஞானம், காமம் ஆகியவற்றின் மாற்றங்களையும், உண்மைக்கூறுகளையும், தனது கதையின் நுணுக்குகளாக அமைத்திருக்கிறார் இயக்குனர். டோரா, லில்லி ஆகிய இரண்டு பாத்திரங்களிலும் டொரொத, செக்டா (Dorotha Segda) நடிக்கிறார்.

4

இரண்டு படங்களும் வேறு தளம், வேறு கதையமைவு. இருப்பினும் மெல்லிய நூலொன்றின் மூலமாக இணைக்கப்பட்டிருப்பதனை உணர முடியும். இரண்டு கதைகளிலும் மனித மனதின் ஆசைகளையும், அவற்றினை புற-அக வாழ்வில் வெளிக்காட்டும் முறைகள், அதனால் விளையும் சிக்கல்கள் ஆகியவற்றின் மூலமாக தொடர்புபடுத்தப் படுகின்றன. தனிமனித ஆசை, சமூகம் குறித்தான விருப்பம், அதனில் நுழைக்கப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்த வேட்கை போன்றவற்றினை நிறைவேற்ற வேண்டி மனித மனம் எதனையும் செய்யத் தயாராகி நிற்கிறது.

மொனோர் தனது தங்கத்தின் மீதான வெறி காரணமாக எதிர்ப்படும் எந்த விதமான விளைவுகளையும் சந்திக்க முற்படுகிறான். வேட்கை தாண்டிய வெறி, உளவியல் சிக்கல் என்பதனை உணர முடியாதவனாக அவனுள் ஆசை வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதன் விளைவாக அவன் பெறும் பலன் ஆயிரம் வினாக்களை தொடுக்கிறது.

மற்றொரு படம், இரண்டு சகோதரிகளின் ஆசையினை அடிப்படையாகக் கொண்டது. டோராவின் ஆசை தன் உடல் குறித்தான விருப்பம், ஆண்களின் மீதான மோகம் என சுயம் சார்ந்தது. லில்லி சமூக மற்றும் அரசியல் அவலங்களை தீவிரவாதத்தால் தகர்க்க முடியும் என வெடிகுண்டு சுமந்து திரிகிறாள். மனிதனை இயக்கும் கருவியாக ஆசை மட்டுமே நிலைபெறுகிறது.

ஒரு வேட்கையை இலட்சியமாகக் கொண்டு மனிதன் ஓடிக் கொண்டே இருக்கிறான். உலகின் மற்ற கூறுகளை கவனிக்கக் கூட விருப்பமின்றி, இறுதி புள்ளியாக வைத்திருக்கும் இலட்சியத்தை தொடும் கணம் வரை அவனது புறக்கணிப்புகளால் ஏற்படும் இழப்புகள் கணக்கிலடங்காமல் கிடக்கின்றன. தளத்தின் வெளியே நின்று பார்க்கும்போது உண்டாகும் அதிர்வுகளை ஏற்றுக் கொள்ள மனம் தயாரில்லை. யோசிக்கக் கூட இயலாத மனம் அலைந்து கொண்டிருக்கிறது. சூறாவளிக் காற்றில் சிக்குண்ட இலைச் சருகு ஒன்றினைப் போல். ●

அய்யப்ப மாதவன் கவிதைகள்

கோப்புகள் மூடப்பட்டு விட்டன

அவன்
ஆகாயத்திலிருந்து விழுந்துகொண்டிருக்கிறான்
எந்தக் கைகளும் தாங்கிக் கொள்ள
முயல்வதாகத் தெரியவில்லை
அவனின் பேரண்டத்தைத் தகர்க்கும் குரல்
எந்த செவிகளையும் எட்டியதாக
உணரமுடியவில்லை
நிலத்தின் மீது நொறுங்கிவிழ
பெரிய கூட்டம் கூடிவிட்டது
தெறித்த உடல் துண்டுகளைச் சுற்றி
கவிஞன் என்ற பெயர் மட்டும் கிடந்தது
தற்கொலையின் பாடலை
சட்டைப் பைகளில் எழுதி வைத்திருந்தான்
போலீஸ்காரன்
அநாதை இறந்துவிட்டதாக
குறிப்பெடுத்துக் கொள்கிறான்.
பொறுக்கப்பட்ட கவிஞன்
மூடையாக மாறினான்
பெயரில்லாதவனை பிணவறையில்
கிடத்தினார்கள்
அநாதைகள் எரியூட்டப்பட்ட நாளில்
அவனும் எரிந்துபோனான்
தற்கொலைப் பாடலின் கோப்புகள்
காவல்நிலையத்தில் மூடப்பட்டுவிட்டன.

திமிங்கலங்கள் வெளியேறுகின்றன

அவள் தந்திரத்தின் அடியில்
கண்களுக்குப் புலப்படாதவாறு நீந்திக் கொண்டிருக்கிறாள்
புதைகுழிக்குள் ஒளிந்துகிடக்கும் ரகசியங்களில்
அவளிதயம் செதில்களாய் அலைகின்றன
சுறா மீனின் முதுகிலேற
பயணத்தை மிக்கத் துணிவுடன் கண்காணிக்கிறாள்
எங்கெங்கோ நகர்ந்து சோர்ந்து
முதுகுத் தண்டு உடைந்து வீறிடுகிறாள்
இரவுகளில்
ஓர் ஆணின் விரல் பிடித்து மடி மீது சாய்கிறாள்
வ சென்ற பின் அவனிடமிருந்து விலகியவள்
கடலோரத்தில் திமிங்கிலத்தைத் தேடுகிறாள்
இன்னும் அது வந்தபாடில்லை
கனவை இறுகப்பிடித்து
ஏறி ஏறிச் சறுக்குகின்றாள்
உடல் களைத்து தினமும் புதைகின்றாள்
அவளின் இமைகளின் வெளியே
உலகம் பெரிதாகிக் கொண்டு போகிறது
அவள் வயதாகிக் கிழவியாய் மாறுகையில்
திமிங்கிலங்கள் வெளியேறுகின்றன
கரையை நோக்கி. ●

ஜோஸின் பேனா

அவன் ஒரு பேனா கொடுத்தான்
அது ஊதா நிறத்தில் ஆகாயத்தை வரைந்தது
ஊதா நிற பூப்போட்ட தாவணி அணிந்த
ஒரு பெண்ணாக விரல்களிடையே நடக்கிறது
ரத்த நிற சோகங்களை மகிழ்ச்சிக்குரிய
சொற்களாக மாற்றுகிறது
கண்ணீர் நிரம்பிய விழிகளை
காகிதத்தால் துடைக்கிறது
கனத்த இதயத்தின் மீது
மயிலிறகின் கற்றைகளாகிறது
குழம்பிய மனதுக்குள்
ஆறுதலுக்கான தெளிவிற்கான
சொற்றொடர்களை உருவாக்குகிறது
நீல நதியாகி உடைந்த படகை
தன் அலகால் மூடி கரைக்கு கூட்டிபோகிறது
உறக்கத்தில் அவன் பேனா
காதலின் ஆழத்தில் முட்டையிடுகிறது
பொரித்த குஞ்சு பேனாவை எடுத்துக்கொண்டு
பகலுக்கு வருகிறேன்
கடுமையான வெயிலில் அதைப் பாதுகாக்க
பஞ்சாரத்தை தேடுகிறேன்
தாயின் பரிவோடு
அவனின் பேனா என்னைப் பார்க்கிறது. ●

காமமுற்ற இரவில்

இரவின் நிசியில்
அவன் உரையாற்றிக் கொண்டிருக்கிறான்
இதுவரை பார்க்காத காதலியிடம்
ஒவ்வொரு ராத்திரியும் என்ன பேசுவான்
வார்த்தைகள் வந்துகொண்டே இருக்கின்றன
அவனிடமிருந்தும் அவளிடமிருந்தும்
இரவுகள் அவர்கள் முன் மண்டியிட்டிருக்கின்றன
தூக்கம் விழிக்க முடியாமல்
தள்ளாடுகின்றன
நல்ல உறக்கத்தில் அது கனவு காண்கின்றது
அவர்கள் ஆழ்ந்து உறவு பற்றியதாக
இருவரும் பேசுகிறார்கள்
முத்தமிட்டு கொள்கிறார்கள்
தொலைபேசி வழியே நீண்ட நேரம்
காமமுற்ற இரவு ஆடை கலைந்து
நிர்வாணமாகிறது
விடிந்த போது சூரியன்
இரவைப் புணர்ந்துவிடுகிறது
கனவு மரித்த இரவு காத்திருக்கிறது
அடுத்த விழிப்பிற்கு
அவர்கள் பற்றிய அடுத்த கனவிற்கு •

விரலொரு . . .

அவள் மேஜிக் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறாள்
ஆணின் பெயர்கள் சுழல்கின்றன
சுழன்று ஒரு பெயர்
அவள் சேலை தலைப்புக்குள் வருமாறு
பார்த்துக் கொண்டாள்
அவளுக்குள் உருண்டோடுகின்றான்
கைவிரலைக் கடித்தவனை
எச்சில் துப்பி துரத்துகின்றாள்
கம்பி வலை பின்னப்பட்ட கூடாரத்திற்குள்
அவனின் துருப்பிடித்த ஆன்மாவை
நெருப்பால் உருக்குகிறாள்
சக்கரத்தை மறுமுறை சுற்றியபோது
பேரரசர்கள் வந்துபோகத் தொடங்கினார்கள்
அழகற்ற முகங்களுடன்
மிருகங்களின் காமவெறியுடன்
எவனையும் சேலைக்குள் திணிக்காதவாறு
விரலை ஆண்குறியாக்கி
புணர்ந்துகொள்கிறாள்
நாளடைவில் தோள்பட்டையில்
ஆண்குறியை சுமக்கமுடியாதவள்
புதிய ஆண்மகனைக் கண்டடைந்தாள்
மேஜிக் சக்கரத்தை முத்தமிட்டவாறு
இப்பொழுதெல்லாம் அவன்
யோனிக்குள் அவள் சொற்படி
வளைந்தோ நெளிந்தோ இருந்துகொள்கிறான்
யோனியில் அவனை
இறக்கைகளாய்ப் பொருத்தி பறக்கத் தொடங்கிவிட்டாள்.

தெறித்தோடிய சிங்கம்

யாருமற்ற அவள் இருந்தாள் இரவுக்குள்
கர்ஜித்த ஆண் சிங்கமொன்று திடுமென
அவள் மடியில் விழுந்தது
அலறியவள் சற்று நேரத்திற்கு பின்
பழக்கப்பட்ட சிங்கத்தின் வாசனையில்
சாந்தமடைந்தாள்
நக்கிய சிங்கத்தின் ரோமங்களைத் தடவினாள்
முகத்தை நக்கியது
முடிகள் உதிர்ந்திருந்த சிங்கத்தின் முகம்
ஒரு மனிதனாக அவளைப் பார்த்து
காமக் களிப்பில் உடல்மொழி காட்டியது
விட்டுச்சென்றவனின் அடையாளத்திலிருந்தான்
சீறி எழுந்த பற்களுடன்
அவனைக் கொத்தினாள்
அவன் ஆடைகளைக் கிழித்தாள்
நிர்வாணமானவன் போக வழியற்று திகைத்து நின்றான்
நச்சுக் கலந்த உடலுடன்
பயந்த சிங்கமாக கதவை உடைத்து வெளியேறினான்
அங்கே அதற்கு பிறகு
அலங்கோலமான அவளிலிருந்து
சுயபுணர்ச்சியின் சத்தம் ஒக்கத் தொடங்கியது. ●

சாபமான காலை

காலை சாபமாக விடிகிறது
ஓர் அரக்கியின் வடிவில் ஒரு பெண் எழுகிறாள்
அவளின் மார்புகள் மலைகள் போன்று
நசுக்கவருகின்றன
கடந்த காலத்தை நினைவுபடுத்தி
என்மீது பாய்கிறாள்
அரக்கி பற்களை காட்டி பயமுறுத்துகிறாள்
கைகளால் அள்ளி விழுங்குகிறாள்
செரிக்காத என்னை வெளியில் துப்புகிறாள்
தடித்த கால்களால் எத்துகிறாள்
சுவரில் மோதி சாய்கையில்
கைகொட்டி சிரிக்கிறாள்
அவள் சிரிப்பு அந்த நகரை தகர்க்கிறது
மனிதர்கள் வேடிக்கை பார்க்க வருகிறார்கள்
அரக்கியை கண்டவர்கள்
பயந்தோடுகிறார்கள்
என்னை ஓடிவிடுமாறு அறிவுறுத்துகிறார்கள்
அவள் விலங்குகளால் ரகசியமாய்
பூட்டி வைத்திருப்பது அவர்களுக்குத் தெரியாது
என் தொண்டையையும் கிழித்து வைத்திருக்கிறாள்
கத்தி பார்க்கிறேன் என் குரல் சன்னமாக ஒக்கிறது
அவளின் பாய்ச்சலில் நடுங்கிய கூட்டம்
ஓடி ஒளிந்துவிட்டது
தனித்த நான் அறைக்குள் புலம்புகிறேன்
இரவுகள் போய்க்கொண்டிருக்கின்றன. ●

நாற்பதாண்டு கால மவுனம்

'காலம் செல்லச் செல்ல மக்கள் அரசாங்கத்தை விடவும் எழுத்தாளர்களை நம்பத் தொடங்கி விடுகிறார்கள்'. -காப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ்
('ஒரு நூறு ஆண்டு காலத் தனிமை' நாவன் நம்பகம் குறித்து.........)

இரா. நடராசன்

கதை எனும் கதவு திறக்கப்பட்டது முதல் இன்றுவரை எத்தனையோ நடந்துவிட்டது. நிலப்பரப்பின் எல்லா விளிம்புகளிலிருந்தும் எல்லா விளிம்புகளை நோக்கியும் கதைகள் வீசப்பட்டன. பட்டுவருகின்றவன், பட்டுவரும், மானிடர்கள் வார்த்தைகளை இணைக்க கற்றுக்கொண்ட காலத்திலிருந்தே தொடங்கிவிட்ட குழந்தை விளையாட்டு கடைசி மனிதனின் கடைசி கணம்வரை உறிஞ்சி பதிவு செய்யாது விடாது. இது காலக்கண்ணாடி. வேடிக்கை என்னவென்றால் ஒரு கணமோ இரு கணமோ..... துல்லியமற்ற காலத்திலிருந்து துல்லியமற்ற காலத்தை நோக்கி ஒரு சூன்ய துவாரத்தின் வழி சூறாவளியாக தடையின்றி வீசிக்கொண்டே இருக்கின்ற கதையாடலில் சில கணங்கள் அதன் உள்ளே நடப்பனவா, கதையாகாத நிகழ்வா.... நிகழ்வான பின்கதையானதா.............. கதையானதால் நிகழ்வானதா என்ற பரிதவிப்பு ஏதும் இல்லாமலேயே விஷமேற்றப்பட்ட வாழ்வின் ரத்தவெறி பிடித்த கொடூரங்களால் மனிதர்கள் காகித அச்சில் முகமூடி பல அணிந்து திரிந்துகொண்டே இருந்தார்கள்............ 'ஒரு நூறாண்டுகாலத்தனிமை' நாவல் வெளிவரும் வரை.

உண்மையில் அது ஒரு நாவல் அல்ல. அவ்வெளி கடக்கும் எவரையும் விழுங்கி ஈவு இரக்கமற்று உள்வாங்கும் கருங்குழி. கொள்ளிவாய் பிசாசான அதன் தோற்றம் நிகழ்ந்தது 1967ல். இந்த நாற்பதாண்டு காலம், அந்த பிண்டோ காகிதக் கூழ் செக்கில் அரைபட்டு ஒரு ஆறுபோல ஓடிக்கொண்டிருக்கிறான் வாசகன். அவனது அலறல்கள் புதிய வாசிப்புமுறையாக அறியப்பட்டன. அதன் கருவில் வளர்ந்து பன்றிவாலுடன் புயெண்டியாவின் பரம்பரையில் உயிர்த்தெழும் பெருமுயற்சிகள் துயரத்தோடு மேற்கொண்டு எறும்புகள் தின்ன சடைப்பூரான்களாக ஊர்ந்த வாழ் வார்த்தைகளால் ஒரே சுருட்டில் விழுங்கப்பட்டவர்கள் விடாப்பிடியாய் வாயருகே பாறைப்பாங்காய் எழுதப்பட்ட பத்திகளில் தன் உளியை விடாப்பிடியாக ஊன்றிச் செலுத்த, செலுத்த..... செதுங்கி மறைகுறிப்புகளாகி..... கொள்ளைநோயான உறக்கமின்மை மற்றும் வாழைப்பழ ஜுரம் வந்தும் பழகிப்போனவர்கள் போலானார்கள்.

எவ்விதமும் சாத்தியமில்லை எனும்படி சிலவரிகள் ஏதோ கம்பியில் உலர்த்தப்பட்ட துணிகளைப் போலவும்....... எழுத்துகளை மீறிய தூக்கில் தொங்கும்

இதயங்களாகவும் காட்சியளித்து அப்பக்கங்களின் வழியே கடந்தவர்கள் அவற்றின் அர்த்தமானார்கள். ஆனால் உடனேயே காதை பிளந்தபடி ஒரு அறிவிப்பு நூறுவயதைத் தொடும்வரை அவற்றை அர்த்தமானப்படுத்துவது சாத்தியமில்லையென வார்த்தை வழியே கேட்டது. புயெண்டியாவினது இரண்டாவது தலைமுறையும் மெல்கியூவாடெஸ் ஜிப்ஸியின் தோல் வார்த்தைகளால் ஒரு சுழல்போல வீசப்படும்போது திறவுகோலை வைத்துக்கொண்டே மரணம் நிகழும் பெரிய அறைக்குள் நுழைய முடியாது. கதவு கதவாக திறவுகோல் நாடும் பரிதவிப்பை ஊர்சுலாவின் பச்சையீரம் உலர்ந்து காற்றால் இறுக்கமடைய வைக்கப்பட்ட தோல் எழுத்துத் தோற்றத்தின் வாசிப்பும் வீசியெறியப்பட்டது.

அந்த எழுத்து தன் வரையிலான எழுத்துப்பேற்றின் நோக்கிலிருந்து தன்னை விடுவித்து......மலைப்பாம்புபோல பசியேறி ஆரவாரமின்றி, எத்தனை வகை வாசிப்பு உண்டோ அத்தனைவகை வாசிப்பையும் உறிஞ்சி பெரிசுபெரிசாய் முழுங்கத் தொடங்கி குறிக்கத்தக்க மாறுதல் ஏதுமற்ற வழியில் காலங்காலமாய் சிக்கலானதாய் ஒரு பணித்திட்டமும் இன்றி கிடந்த வாசகனை அவனது மண்டையில் ஓங்கி அடித்து ஒரே கணத்தில் அவ்வெரலியானோ நடத்தும் ராணுவப் புரட்சியின் கத்தரிக்கப்பட்ட செய்தியாகி நீண்ட காலத்திற்கு எஞ்சியிருக்க சாபமிட்டது. கடமைப் பொறுப்பு ஒரு தலைமுறையினின்று அதற்கடுத்த தலைமுறையின் தேர்ந்தெடுக்கப்படாத அங்கத்தினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு - ஒரு விசித்திரப் புதிரைப்போல தனது சவத்துணியை சாவகாசமாய் அலங்காரங்களோடு தானே தைக்கும் அமரந்தாவின் தையல் இயந்திரத்தின் உள்ளே நூலாகி மௌனமாய் ஊசியேறி வலி பெருக வழிநடத்திட யாருமின்றி பரிதவிக்கப்பட்டது.

'இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதி என்பது லத்தீன் அமெரிக்க நாவன் யுகமாய் அறியப்படுமென' மாரிக் நாடியூவும் ரெமாண்ட் செக்கலோவும் பதறினார்கள். தால்ஸ்தாயின் அன்றாட வாழ்வின் மீதான யதார்த்தவாதமும், டாஸ்தோவஸ்கியின் விசித்திரகவர்ச்சி கொண்ட கட்டற்ற புனைவியலும், ஃபாக்னரின் மாய மதிநுட்பமும்,

ப்ளொஸ்ட்டினது இசையமைதியும். நபகோவின் லைநயாண்டி அங்கதமும். ஒரே வரியில் அடுக்கடுக்கு இடம்பெறும் ஒரு ஒட்டுமொத்த பேய்க்கூத்தை கண்டு கடலிலிருந்து விட்டெறியப்பட்டு நேரே உயிரோடு உப்பில் போய்விழுந்த கருஞ்சிவப்பு மிருதுமீன் போல இருதயம் பிளந்து ஊடுபிரிவு உள் கொடுவாள் தேடி தானே அறுப்பேறும் வலியோடு பருவமடைந்த நாளிலிருந்த மெமேமையை கடைசிவரை வண்ணத்துப்பூச்சியாகி சுற்றி சுற்றிவா வலையில் விழுகிறது மாளிடம்.

நமது நாட்டின். சூழலில் கேட்டும் பார்த்தும் இராத ஒரு கலாச்சாரத்தின் வரலாற்றை. கதைவெளியை 'ஒருநூற்றாண்டுகால தனிமை' முன்வைக்கிறது என்பது உண்மை அல்ல. ஸ்பானியமொழி சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியதுதான் எனும் செய்தி வாசகர்களுக்கு இந்த நாவலை வாசிக்கும் எங்கோ ஒரு இடத்தில் உதவும் என்பதற்காக இங்கே பதிவு பெறுகிறது. இந்த புதையல் காட்டில் வாரியெடுப்பவர் யாராக இருந்தாலும் சரி.................. நாற்பதாண்டுகளாக உலாவைத்ததை தமிழுக்கு தருகிறோம் எனும் மாயையை உடைத்து இன்று புதிதாய் எதேச்சையாய் கிடைத்த வழியில் இட்டுச் செல்லப்படுவதான ஞானத்திரள் உணர்வே எல்லார்க்கும் ஏற்படுகிறது என்பதைச் சொல்ல வேண்டும். இந்த விழிப்புடைமை போதுமானது.

கிரிகரி ரெபஸா 1970ல் ஆங்கிலத்தில் கொண்டு வந்ததில் தொடங்கி (கிரேக்கத்திலும் அரேபிய மொழியிலும் திருட்டுப்பயணமாய் நுழைந்து) இன்று முப்பது மொழிகளில் 'ஒரு நூறாண்டு காலத்தனிமை' மொழிபெயர்ப்பாகி உள்ளது. 1979ல் மலையாளத்திலும் 1980ல் வங்காளத்திலும் வந்துவிட்டதை தமிழில் பலர் முயன்றும் இன்றுவரை முழுமையாக கொண்டு வர இயலாத நெருக்கடி தொடர்கிறது. நாவல் வெளிவந்த நாற்பதாவது ஆண்டையும் மார்க்வெஸ்ஸின் எண்பதாவது வயதையும் கொண்டாடும் தருணத்தில் நினைவாய் பறக்கவிடப்படும் வெண்புறா இது.

Cien anos de soledad ஸ்பானிய மொழியில் வெளிவந்தபோது புயூனஸ் ஆரஸ் புறவழிசாலை கடைகளில் மட்டும் 8000 பிரதிகள் ஒரே ஆண்டில் விற்று பின் உலகெங்கும் 10 மில்லியன் பிரதிகள் விற்பனையான ஒரே நாவல் எனும் அந்தஸ்தை பெற்றது

அமெரிக்க அரசின் வெளிவிவகாரத்துறையின் விசா செல் மார்க்வெஸ்ஸை மிகவும் ஆபத்தான கொலை பட்டியலில் வைத்துள்ளபோதிலும் நியூயார்க்கிலும் வாஷிங்டனிலுமே ஒரு மில்லியன் பிரதிகள் நாவல் விற்றுள்ளது. சோவியத் யூனியனின் காலத்து ரஷ்யமொழி பிரதியில் எழுபது பக்கங்கள் வெட்டப்பட்டு வெளிவந்தது என்றாலும் அங்கேயும் ஒரு மில்லியன் இலக்கை பத்தே மாதங்களில் அது அடைந்தது. ஒரு காலத்தில் பிரான்ஸின் குடும்பங்கள் பால்ஸாக் மற்றும் விக்டர் ஹியூகோவின் அடுத்தடுத்த எழுத்துக்களுக்கு காத்திருப்பது போலவும் யாங்கி ஆங்கிலேயர்கள் டிக்கன்ஸுக்காக ஏங்கியிருப்பதும் மார்க்வெஸ்ஸுக்கு கிடைத்த ஆதரவோடு ஒப்பிடுகையில் ஒன்றுமில்லாதவையாகின என்பது வரலாறு.

தமிழில் கொண்டுவரும் பொருட்டு புதுஎழுத்து வாயிலாக முயற்சிகளில் இறங்கும் பரஸ்பர முனைப்பின்போது ரெபஸாவின் ஆங்கில மொழிபெயர்ப்பை மார்க்வெஸ் அங்கீகரித்ததோடு ஸ்பானிய மூலத்தினைவிட மூன்று மடங்கு அதிகம் விற்பனையாகி அது வாசக அங்கீகரிப்பும் பெற்றதை பரிசீ-த்ததோடு, தான் ஆங்கிலத்தில் cien anos de soledad டை எழுதி இருந்தால் அது ரெபஸாவின் எழுத்துபோலவே இருந்திருக்கும் என்று மார்க்வெஸ் ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்ததையும் கணக்கில் எடுத்துக்கொண்டு ரெபஸாவின் ஆங்கில மொழிபெயர்ப்பை உதவிக்கு வைத்துக்கொண்டு மொழியாக்கம் செய்வதென தீர்மானித்தோம்.

புதுவையில் வசித்துவரும் ஸ்பானிய மொழித் தம்பதியரான திரு மற்றும் திருமதி எழனோ மார்ட்டிஸ் ஜோடிக்கு அவர்களின் பலவிதமான உதவிகளுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர்களுக்கு உண்மையில் நான் யார் என்பது கூட தெரியாது.... பிரான்ஸ் கான்சலேட்டின் ஜோஸப்பிற்கும் (எழனோ தம்பதியரை அறிமுகம் செய்து வைத்ததற்காக) அவரது மார்க்வெஸ் வெறிக்கும் ஒரு சல்யூட்.

இம்மொழிபெயர்ப்பின் முடிவுறுதியற்ற சிக்கலான மோசப்பகுதிகளுக்கு முழுக்க முழுக்க நானும் ஈடுஇணையற்ற வரலாற்று நிகழ் முறை அனைத்திற்கும் மார்க்வெஸ்ஸுமே பொறுப்பு என்பதை அறுதி இட்டுக் கூறிவிடுகிறேன். கியூபாவிற்கு நட்புமுறை பயணம்

மேற்கொண்ட மார்க்வெஸ் அதை யாத்திரை என்று அறிவித்தார். அங்கே விவசாயக் கூலிகளோடு அவர்களது பானங்களை அருந்தி பேச்சுக்களில் மதியங்களை கழித்த ஒரு நாளில் 'சாப்பாட்டுக்கு என்ன செய்கிறீர்கள்' அவர்கள் கேட்டார்கள்.

'நானா?' மார்க்வெஸ் தயக்கமின்றி சொன்னார். எழுதி சம்பாதிக்கிறேன். ..... ஒரு நூறாண்டு காலத்தனிமை என்று ஒரு நாவல்...'

உடனடியாக அனைவரும் சேர்ந்து கூச்சட்டார்கள்.....

"அட ...... நீங்கள் மெக்காண்டோவிருந்து வந்திருக்கிறீர்களா?"

பலமொழிகளில் இவ்வளவு ஆழத்திற்கு சென்று சேர்ந்த ஒரு நாவலை தமிழில் புதுஎழுத்துக்காக ஒரு இதழுக்கு சில அத்தியாயங்கள் எனக் கொண்டு வருவதில் இருக்கும் அக்கறை மார்க்வெஸ் மொழியிலேயே சொல்வதானால், 'சமகாலத்திய புகழ்வாய்ந்த லத்தீன் அமெரிக்க இலக்கியங்களை ஊடுருவிப் பிறக்கும் கண்ணோட்டங்களின் ஒரு பகுதி' என்பதைத் தவிர வேறில்லை.

அதோ. அவ்ரெயானோ கொலைப்படையின் முன் சுடப்படுவதற்காக நிற்கிறார்........... நாற்பதாண்டு கால மவுனத்தை உடைக்கும் தருணம் வந்து விட்டது. ●



கேப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ்

Cien Anios de Solidad

ஒரு நூறாண்டு காலத் தனிமை

One Hundred Years of Solitude

தமிழில்

இரா நடராசன்

கேப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ்

Cien Anios de Solidad

ஒரு நூறாண்டுகாலத் தனிமை

One Hundred Years of Solitude

பரம்பரை கொடி வழி (வம்ச விருட்சம்)



பல ஆண்டுகளுக்குப் பிறகு, கொலைப்படையை எதிர்கொண்டபோது கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா, தன்னை ஐஸ்கட்டி கண்டுணர தனது தந்தை அழைத்துச்சென்ற அந்த தொலைதூர மதியத்தை நினைத்துக் கொண்டார். அச்சமயம் இருபதே மரவீடுகளைக் கொண்ட தூயநீரோடு கூழாங்கற்களை வெள்ளைப் பெரும்பாறைகளை வழவழப்பேற்றி வரலாற்று காலத்துக்கு முந்தைய முட்டைகள் போல காட்சியளித்த ஒரு ஆற்றின் கரையில் மெக்கொண்டோ புதிய கிராமமாக இருந்தது. உலகம் மிகக் குறைந்த கால பொழுதுகளையே கழித்திருந்தமையால் பெரும்பாலான பொருட்களுக்கு பெயர்கள் இன்றி, குறிப்பிடுவது என்றால் கைநீட்டிச் சுட்டவேண்டிய அவசியத்தோடு இருந்தன. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் தங்களது பெரிய ஊதல் மற்றும் பிரம்மாண்ட தப்பட்டை மத்தள வாத்தியங்கள் முழங்க புதிய கண்டுபிடிப்புகளை கடைவிரித்தபடி வெறிபிடித்த நாடோடி ஜிப்ஸிக்கள் தங்கள் கூடாரங்களை ஊருக்கு வெளியே அமைத்தார்கள். முதலில் அவர்கள் காந்தத்தை எடுத்து வந்தார்கள். தன்னை மெல்கியூவாடெஸ் என்று அறிமுகம் செய்து கொண்ட, கத்தரிக்கப்படாத தாடியும் அகன்ற கைகளும் கொண்டிருந்த பெருத்த ஜிப்ஸி அதை வைத்து மாசிடோனியா பொன்செய் ரசவாதி யாரும் கண்டறியாத எட்டாவது அதிசயம் என்றழைத்தபடி அனைவருக்குமாக செயல் விளக்கம் செய்துகாட்டினார். இரண்டு பெருத்த இரும்பு காந்தங்களை கையில் பிடித்தபடி அவர் அந்த மெல்கியூவாடெஸ் - வீடுவீடாகச் சென்றார். வீட்டின் மூலை முடுக்குகளில் இருந்த பானை, பாத்திரம், இடுக்கி, கத்திரி என் அணிகலன்கள் கூட உயிர் பெற்று வந்து ஒட்டிக் கொண்டதைக் கண்டு ஊரே பதறியது. விட்டத்தின் ஆணிகள் திருகாணிகள் வீட்டில் எங்கோ வைத்து எப்போதோ காணாமல் போன ஏதேதோ பொருட்கள் கூட மூலைக்குழம்பி ஓடோடி வந்தன. 'ஒவ்வொரு பொருளுக்கும் உயிர் உண்டு', அந்த ஜிப்ஸி தனது முரட்டுக்குரல் விளக்கினார், "அவை தம் ஆன்மாக்களை தட்டியெழுப்புவதே முக்கியம்". ஜோஸ் அர்காடியோ புயெண்டியா - எப்போதும் அனைவரையும் தாண்டி அனைத்தையும் கடந்து, மாயமந்திரங்களை கூட விலக்கி அதீத கற்பனை செய்பவர். அந்த ஈர்க்கும் இரும்புகளைக் கொண்டு பூமித்தாயின் அடியிலிருந்து தங்கத்தை ஈர்த்து இழுத்து வர முடியும் என்று கற்பனை செய்தார். இயற்கையின் அறிவு ஜீவிதத்தையும் மீறிய கற்பனை. நேர்மையான மனிதரான மெல்கியூவாடெஸ் 'அதற்கு இது வேலை செய்யாது' என எச்சரித்தார். எனினும் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அந்த காலங்களில் ஜிப்ஸிக்களின் நேர்மையை நம்பாததால் - தனது கோவேறுகழுதையையும் ஒரு ஜோடி ஆடுகளையும் அந்த காந்தக் கற்களுக்கு விலை பேசினார்.

ஊர்ஸுலா இகுவாரான் - அவரது மனைவி. தனது பாவப்பட்ட குடும்பத்தின் அன்றாடத் தேவைகளுக்கு அந்த விலங்குகளையே நம்பி இருந்தாள். எனினும் கணவரின் மனநிலையை மாற்ற அவளால் முடியவில்லை. "விரைவில் தரையைக்கூட பூசக்கூடிய அளவுக்கு நிறைய தங்கம் வீட்டில் நிரம்பப் போகிறது" அவர் தீர்க்கமாக பதிலுரைத்தார். பல

மாதங்கள் தனது எண்ணத்தை ஈடேற்ற பலவிதத்தில் செயல் சோதனைகள் எத்தனையோ செய்தும் பார்த்தார். பிராந்தியத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் — ஏன் நதியில் இறங்கிக்கூட அந்த இரண்டு பெரிய காந்தக் கற்களையும் கையில் சுமந்துகொண்டு மெகியூவாடெஸ்ஸின் வார்த்தைகளை உரக்க உச்சரித்து எவ்வளவோ முயன்றார். அவரால் எடுக்க முடிந்ததெல்லாம் பதினைந்தாம் நூற்றாண்டின் ராணுவ இரும்பு கவசம் ஒன்றே. அதன் பகுதிகள் ஒன்றாக பற்றவைக்கப்பட்டு உள்ளே காலியான இடத்தில் ஒரு டாலருடன் இருந்தது. ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவும் நான்கு பிறமனிதர்களுமாக சேர்ந்து அதை அக்கக்காக பிரித்து உள்ளே ஒரு எலும்புக்கூடு இருப்பதை கண்டனர். கழுத்தில் தாமிர டாலர் தான் இருந்தது. அதை உடைத்தால் உள்ளேயோ பெண்ணின் மயிர்க்கற்றை சுற்றப்பட்டிருந்தது.

மார்ச்சில் ஜிப்ஸிக்கள் திரும்பிவந்தனர். இம்முறை ஒரு தொலைநோக்கியும், ஆம்ஸ்டர்டாமின் யூதர்கள் கண்டுபிடிப்பு என்று மத்தள அளவிலான பெரிய உருபெருக்கி ஆடியும் கொண்டு வந்து கடை பரப்பினர். ஒரு ஜிப்ஸிப் பெண்ணை கிராமத்தின் கடைகோடி எல்லையில் நிற்க வைத்து தங்களது கூடார வாயிலில், தொலைநோக்கியை வைத்தனர். அத்தொலைதூர மங்கையை ஒருவர் கைநீட்டும் தொலைவில் வைத்து காணமுடியும். 'அறிவியல் இடங்களுக்கு இடையிலான தூரங்களை குறைத்துவிட்டது', மெகியூவாடெஸ் பிரகடனம் செய்தார், 'இன்னும் கொஞ்ச நாட்களில் தனது வீட்டைவிட்டு வெளியே வாராமலேயே உலகெங்கும் என்ன நடக்கிறது என்பதை மனிதன் காண்பான்.' வெயில் சுட்டெரித்த ஒரு மதியத்தில் பிரம்மாண்டமான அந்த உருபெருக்கி ஆடியின் செயல்விளக்கம் நடந்தது. காய்ந்த சருகுகளை களருக்கு நடுவில் கொட்டி உருபெருக்கியின் உதவியோடு சூரியக்கதிரை குவித்து நெருப்பை வரவழைத்துக் காட்டினார்கள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, தனது காந்தக்கல் தோல்வியால் சமாதானங்கள் ஏதும் ஏற்படாதிருந்தும் உடனடியாக அந்த உருபெருக்கியை யுத்தகால ஆயுதமாக பயனாவது குறித்து கற்பனை செய்தார். மீண்டும் அதன் அசாத்தியங்கள் குறித்து மெகியூவாடெஸ் எச்சரிக்கை விடுத்தும், காந்த கற்கள் மற்றும் மூன்று காலனித்துவ பொற்காசுகளுக்கு அந்த உருபெருக்கியை ஜோஸ்.அர்காடியோ புயெண்டியாவுக்கு தர அவர் சம்மதித்தார். ஊர்சுலா இம்முறை கட்டுப்படுத்தமுடியாமல் அழுதாள். அவை அவளது தந்தை தனது வாழ்நாள் முழுவதும் சேமித்து தந்த பொற்காசுகள் ஆகும். தனது படுக்கை அடியிலேயே எப்போதாவது அவசர சந்தர்ப்பத்திற்காக அவற்றை அவள் மிகவும் பத்திரப்படுத்திஇருந்தாள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அவளை சமாதானம் செய்ய எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லை. ஒரு விஞ்ஞானியின் மன உறுதி மற்றும் தீர்மானமான சஞ்சலத்துடன் தனது உடலையும் பணயம் வைத்து சோதனைகளைத் தொடங்கினார். எதிரியின் மீது எத்தகைய விளைவுகளை உருபெருக்கி ஏற்படுத்தும் என்பதை நிரூபணங்கள் செய்ய அவர் தனது உடம்பை சூரிய ஒளிக்குவியல் தாக்கிடும்படி காட்டினார். இதனால் உடல் பல இடங்களில் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டு பல நாட்களாகியும் ஆறாது இருந்ததோடு பெரிய

தழும்புகள் ஏற்பட்டன. தனது மனைவியின் கடுமையான எதிர்ப்பிற்கு மத்தியில் தனது வீட்டையே எரித்துவிடுமளவு மிகவும் ஆபத்தான கண்டுபிடிப்பாக அது இருப்பது குறித்து எச்சரிக்கப்பட்டார். தனது அறையின் ஒரு மூலையில் மணிக்கணக்கில் அதனோடு கழித்து — தான் கண்டுபிடித்த அந்த புதிய ஆயுதத்தை எப்படியெல்லாம் பயன்படுத்த முடியும் என்பதில் எண்ணிலடங்கா சாத்தியக் கூறுகளை ஆய்ந்து கடைசியில் மிகச்சரியான விளக்கங்களுடன் தெளிவான கையேடு ஒன்றை தயாரித்து இருந்தார். அதை மூலைகளை கடந்து சென்ற ஒரு தூதுவன் மூலம் அரசாங்கத்திற்கு தனது ஆய்வுகள் குறித்த பல பக்கங்கள் எழுதிய விளக்கங்களை விரிவான படங்களுடன் அனுப்பி வைத்தார். அவனோ கணக்கிடமுடியாத அடர் காடுகளில் தொலைந்து புயலடித்த ஆறுகளில் தத்தளித்து, பிளேக்கில் கிட்டத்தட்ட செத்து ஒருவழியாக கோவேறு கழுதைகள் கடிதங்கள் எடுத்துச்செல்லும் வழியை அடைந்தான். ஓரளவு முடியவே முடியாது என்றே நம்பப்பட்ட தலைநகர் நோக்கிய அக்காலப் பயணத்தை அரசு தன்னை நேரடி செயல்விளக்கங்கள் செய்துகாட்ட அழைக்கும் பட்சத்தில் மேற்கொள்வதென உறுதிபூண்டார். அப்படியாக அந்த ராணுவத்தலைமைக்கு சூரியஒளி யுத்தங்கள் பற்றிய முழுமையை அவர் விளக்கி உதவுவார். பல ஆண்டுகள் அவர் அரசு அழைப்பிற்காக - பதிலுக்காக காத்திருந்தார். கடைசியில் மெகியூவாடெஸிடம் புதிய ராணுவ தளவாடம் பற்றிய தனது தோல்விக்காக துயருற்றார். அப்போது ஜிப்ஸி அவருக்கு அந்த உருபெருக்கிக்கு மாற்றாக தான் வாங்கிய இரு பொன் நாணயங்கள், அவற்றோடு சில போர்ச்சுகீசிய வரைபடங்கள் மற்றும் ஒரு கடல்பிரயாணத்திற்கு தேவையான பலபொருட்களையும் கொடுத்தார். மாஸ்க் ஹெர்மன் கண்டுபிடிப்புகளை தனது சொந்த கையெழுத்தில் எழுதி இருந்ததையும் ஒரு வானியல் ஆய்வுக் கூடத்திற்கான திசைகாட்டி மற்றும் உயரமானியையும் கூட அவர் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவிற்கு அளித்தார். அந்த மழைகாலம் முழுவதும் ஜோஸ் அர்காடியோ தனது வீட்டில் ஒரு மூலையில் தான் கட்டியிருந்த ஆய்வக அறையை விட்டு வெளியே வரவேயில்லை. தனது ஆய்வுகளின் போது யாரும் தொந்திரவு செய்யவும் அவர் அனுமதிக்கவில்லை. தனது அன்றாட குடும்ப வேலைகள் அனைத்தையுமே கைவிட்டிருந்த அவர், தனது இரவுகள் முழுவதையுமே வானின் நட்சத்திரங்களை ஆய்ந்தறிவதில் கழித்ததோடு மதிய - வானைப் பற்றிய முழுமையான விவரணையை அடைய ஏறக்குறைய வெப்பத்தாக்கு - நரம்பிழுப்பு நோயைப் பெற்றார். தனது கருவிகளை உபயோகப்படுத்தவும் அளவீடுகளை அறியவும். துல்லியமாக கற்ற நாளில், அறியாக் கடல்களின் மறுபுறம் எங்கோ வான எல்லைக்கு அப்பாலிருந்தவர்களுடன் தொடர்பு கொள்ளவும், மனிதன் காலடிபடாத பகுதிகளை விஜயம் செய்யவும், புதிய அறிவித்த இனங்களோடு தொடர்பேற்படுத்திக்கொள்ளவும் அவரால் தனது ஆய்வை தொடர்ந்தபடியே அறிவு விருத்தி செய்ய முடிந்தது. ஊர்களாவும் குழந்தைகளும் தோட்டத்தில் முதுகொடிய வேலை செய்து வாழைப்பழும் கசாகாச்செடி மரவள்ளிக்கிழங்கு, வேர் மற்றும் முட்டைத்தாவரங்களை

விளைவித்து போராடிய அந்த நாட்களில் அவர் தனக்குத்தானே பேசிக்கொள்ளும் பழக்கத்தை பெற்றதோடு தம்மை சுற்றி என்ன நடந்தாலும் கவனிக்காதபடி இங்கும் அங்கும் செல்லவும் தொடங்கினார். கூச்சம்தரும் அவரது நடவடிக்கைகள் மெல்ல மாறி ஒருநாள் எதையோ மிகவும் ஆழ்ந்து ருசித்து செய்பவர் போலானார். ஏதோ வினைவைக்கப்பட்ட மனிதனைப் போல தனக்குத்தானே சில அனுமானங்களை வரவழைத்துக்கொண்டு - அச்சம்தரும் அவ்வனுமானங்களை நிரூபிக்க முயன்றார். கடைசியில் திசம்பரில் ஒரு செவ்வாய்க்கிழமை மதிய உணவின்போது தனது மனவேதனை எனும் பெரும் பொதியை இறக்கிவைத்தார். தனது எண்ணிலடங்கா நாட்களின் விழிப்புடன் பலமுறை சோதித்து ஊர்ஜிதம் செய்து முடித்த பின் ஊகத்தை கண்டுபிடிப்பாக ஒருமன நிறைவுடன் எப்படி தங்கள் தந்தை வெளிப்படுத்தினார் என்பதை தங்கள் வாழ்நாள் முழுவதும் குழந்தைகள் நினைவுபடுத்திச் சொல்லியவண்ணம் இருந்தன.

'இந்த பூமி ஆரஞ்சுபழம் போல உருண்டையாக உள்ளது'

'குழம்பிப்போவதானால் அதை உங்களோடு வைத்துக்கொள்ளுங்கள்!' அவள் இறைந்தாள், 'உங்கள் ஜிப்ஸி புத்தியை குழந்தைகள் தலையில் திணிக்காதீர்கள்' எப்போதும் எதையும் நிதானப்போக்கோடு கைகொள்ளும் ஜோஸ் அர்காடியோ, பித்தம் தலைக்கேறி அவள் வான்ஆய்வு மேசையை உடைத்தெறிந்த போதும் தன் மனைவியின் செயல்கள் அவர்மீது ஒரு அசைவைக் கூட ஏற்படுத்தவில்லை. வேறொரு வான் ஆய்வு மேஜையை செய்து கிராமத்து மனிதர்கள் சிலரை தனது சிறிய அறைக்கு அழைத்துவந்து மேசை மீது தனது ஆய்வுகளை செயல் விளக்கமாய் செய்தபோதும் அக்கோட்பாடுகளில் ஒரு அட்சரம்கூட அவர்களுக்குப் புரிவதாயில்லை. கிழக்கு நோக்கி கடலில் பிரயாணிக்கும் ஒருவர் மீண்டும் அதே இடத்தை மேற்கிலிருந்து வந்தடைவதில் எந்த உண்மையும் இருக்க வாய்ப்பு அவர்களை பொறுத்தவரை இல்லை. சந்தேகமே இல்லை. முழுகிராமமுமே முடிவு செய்தது. ஜோஸ் அர்காடியா புயெண்டியா சுயநினைவை இழந்து விட்டார். இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில்தான் மெகியூவாடெஸ் தனது ஜிப்ஸி கூட்டத்தோடு அவரை காப்பாற்ற தக்க தருணத்தில் வந்து சேர்ந்தார். வெறும் வானியல் அனுமானங்களை உருவாக்கிக்கொண்டு மிகக் கடுமையாய் உழைத்து அதை கோட்பாடாக நிறுவிய அந்த மேதமையை அனைவர் முன்னிலையிலும் மெகியூவாடெஸ் பாராட்டினார். ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டதுதான் என்றாலும் மெக்கண்டோவில் அது யாருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை. தனது அங்கீகரிப்பிற்கு அடையாளமாய் அந்த கிராமத்து எதிர்காலத்தின்மேல் மிகுந்த ஆளுமையை ஏற்படுத்தப்போகும் ஒன்றை பரிசாக அவர் வழங்கினார். ஒரு ரசவாதிக்கான வேதி ஆய்வுக்கூடம்.

இந்த காலகட்டத்தில் மெகியூவாடெஸ் அதிவிரைவாய் வயதாகிப் போனவரைப் போருந்தார். தனது முதல் வருகையின் போது அவர் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் வயதை ஒத்தவராகவே இருந்தார். இவரோ ஒரு முரட்டுக்குதிரையை தரையில் காதைப்பிடித்து தள்ளிவிடும் அளவு

பலத்தோடு இருந்தும் ஜிப்ஸியோ எதோ ஒரு வகை ஆள்உருக்குநோயில் சாடுபவர் போலிருந்தார். உலகெங்கும் அவர் மேற்கொண்ட எண்ணிலடங்கா பயணங்களால் எண்ணிலடங்கா ஊர் பலவற்றிலிருந்து பெயர் தெரியாத பலவகை நோய்களால் அவர் அவதிப்பட்டிருக்க வேண்டும். அந்த வேதி ஆய்வகத்தை அந்த அறையில் வடிவமைத்தபோது உடன் உதவிய ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவிடம் அவர் சொல்லியபடி உண்மையில் மரணம் அவரை அவரது கால்சராயில் தொங்கியபடியே கூடவே தூக்கிய வண்ணமிருந்தது– அதன் கடைசி இறுக்குதலை அது நிகழ்த்துவதை எனோ ஒத்திப் போட்டுக் கொண்டே இருந்தது. மனித இனத்தை தாக்கிய அனைத்து வகை பிளேக்நோய்கள், பேரழிவுகள், கொடிய சாவுகள் எல்லாவற்றிடமிருந்தும் தப்பிய ஓடுகாலி அவர். பெர்ஸியாவின் பெல்லாக்ரா நோய், மலேயத்தீவுகளின் குறைதோல் நோயான ஸ்கர்வி, அலெக்ஸாந்திரியாவின் தொழுநோய், ஜப்பானின் பெரிபெர்ரி, மடகாஸ்கரின் பிளேக்நோய், சிசிலியின் பூகம்பம் மற்றும் மெகலன் ஜலசந்தியில் எற்பட்ட மோசமான கப்பல் கவிழ்வு - என அவர் அனைத்திலும் உயிர் தப்பியவர். அறிவில் கொழுத்த ஒரு உயிரி– நாஸ்ட்ரடாம்ஸின் எதிர்கால ஹேஷ்யங்களின் மந்திரச்சாவியை கொண்டிருப்பவரான மெகியூவாடெஸ் எப்போதும் துயரம் ததும்பும் முகத்தை கொண்டிருந்தது ஆகிய இயல்புகளை நடை உடையில் அமுல்படுத்துபவராக இருந்தார். ஒரு அண்டங்காக்கையைப் போல பெருத்த கருப்பு வண்ண தொப்பியோடு கைவைக்காது பளபளத்து உலகின் பல்வேறு வகை புழுதியும் நூற்றாண்டுகால பாசியும் சறுக்கிட ஒரு ரெக்கைபோல காற்றில் தொங்கியது. மேலாடை அறிவுப் பராக்கிரமும், மர்மமயமான பெருமூச்சுகளும் இருப்பினும் ஒருவித மனித சுமை அவரை அழுத்திய வண்ணம் இருந்தது. தனது அன்றாட வாழ்வின் சிறுசிறு செயல்பாடுகளே அவருக்கு வலுத்துவரும் பிரச்சனையாக இருந்தன. தனது முதுமைக்கால நோய் பலவீனங்கள் பற்றி நிறைய புகாருடன் மிகச் சாதாரண பொருளாதார சிக்கல்கள் கொண்டிருந்த அவர், வெகு நாட்களுக்கு முன்பு ஸ்கர்வி நோயால் பற்களை இழந்திருந்தமையால் சிரிப்பதை விட்டுவிட்டிருந்தார். வெப்பம் தகித்த அந்த மதியத்தில் அந்த ஜிப்ஸி தன்னுறித்த ரகசியங்களை அவிழ்த்தபோது ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அங்கே ஆழமான நட்பு துளிர் விடுவதை உணர்ந்தார். குழந்தைகளோ அவரது அனுபவ கதைகளால் மிகுந்த ஈர்ப்பும் பரபரப்பும் அடைந்தார்கள். அப்ரெலியானோவுக்கு ஐந்து வயதுக்குமேல் இருக்காது மீதமிருந்த தன் வாழ்நாள் முழுதும் அவரை - அந்த மெகியூவாடெஸ்ஸை, அன்றைய பதியத்தின் உலோகம்போல் மின்னிய சன்னல் வழி தகித்த ஒளி வான் வெளிச்சத்தில், தனது அதன்பிறகான அனைத்து சோதனைகளின் போதும் இறுதி தைரியத்திற்கு அவனை மெகியூவாடெஸ்ஸை ஒரு சந்ததி அடையாளமாகக் கொண்டான். ஆனால் ஊர்சுலாவோ அன்றைய அந்த சந்திப்பு குறித்து கெட்ட நினைவுகளே கொண்டிருந்தாள். அதற்கு காரணம் இருந்தது. அறைக்குள் அவள் நுழையும் நேரம் பார்த்து மெகியூவாடெஸ்

பாதரச பைகுளோரேட் குடுவை ஒன்றை கைதவறி கீழே போட்டு உடைத்திருந்தார்.

'இதுதான் பிசாசின் வாடை', அவள் சொன்னாள்.

'இல்லவே இல்லை' மெகியூவாடெஸ் அவள் சொன்னதை திருத்தினார். 'பிசாசின் வாடை கந்தகத்தன்மை கொண்டதென நிரூபிக்கப்பட்டுவிட்டது இது வெறும் அரிப்புயேற்படுத்தும் வேதிக்கரைசல்'

எப்போதும் தானே அனைத்தும் கற்றவன் என்பதுபோல தான் வாசித்த அறிந்திருந்த விஷயங்களை பேயின் வெறியோடு அவர் விளக்குவதை - குறிப்பாக - காவிப்பொடியான ஏதோ ஒரு வேதிப்பொடி குறித்தும் அவர் விழுந்து விழுந்து விளக்கியது குறித்து எந்த கவனமும் செலுத்தாது தனது குழந்தைகளுடன் அவள் பிரார்த்தனைக்குப் போய்விட்டாள். அவளைப் பொறுத்தவரை மூக்கை அறுத்த அந்த பாதரச வேதிவாடை தான் மெகியூவாடெஸ் அதன்பிறகு அவளுக்கு.

ஒரு ஆய்வகத்திற்கு அடிப்படைக் கூறுகளான குடுவைகள், பானைகள், புனல், வடிகட்டிகள், சல்லடைகள் பல கண்ணாடிக்கற்களில் விதவிதமான வண்ண திரவங்கள் என கொண்டிருந்த அந்த இடம் மிகப்பழைய ஒரு தண்ணீர் குழாயும் சித்தாந்திமுட்டையை உற்பத்தி செய்ய ஒரு குறுகிய வாயுடைய நீண்ட கழுத்து கண்ணாடிக் குடுவையும் வேதி அடுப்பும் அத்தோடு ஜிப்ஸிக்களின் நவீன, புராதன வடிவத்தின் மாற்றாக வடிவமைத்த மூவாயுத யூத மேரிமாதா உருவப்படம் ஒன்றையும் கொண்டதாக அது இருந்தது. இவற்றோடு மெகியூவாடெஸ் ஏழுகிரகங்களையும் குறிக்கும் ஏழு உலோக மாதிரிகள், தங்கத்தின் அளவை இருமடங்காக்கும் ஸோஸிமஸ் மற்றும் மோஸின் சமன்பாடுகள் மற்றும் சித்தாந்தி முட்டையை உற்பத்தி செய்யும் வழிமுறைகளை விளக்கும் ஒருவருக்கு அதை செய்ய தார்மீக அனுமதி அளிக்கும் பெருங்கல்வி எனப்படும் பழைய காகித பாடங்கள் ஆகியவற்றையும் விட்டுச் சென்றார். தங்கத்தின் அளவை இருமடங்காக்கும் சமன்பாட்டின் எளிமையால் ஏகத்திற்கும் கவரப்பட்டவரான ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, ஊர்சுலாவிடம் அவளது தங்கக்காசுகளை தருமாறு நச்சரிக்கத் தொடங்கினார். அவற்றை அந்த இரட்டை தங்கக் காசுகளை சமன்பாட்டு வேதிவினைகளுக்கு உட்படுத்தி இரட்டிப்பாக்கிட - பலவாரங்கள் தொடர்ந்த உக்கிரமான நச்சரிப்பிற்கு முடிவில் ஊர்சுலா தனது கணவரின் பிடிவாதத்திற்கு பணிந்தாள். மூன்று கிரேக்க தங்கக் காசுகள், ஊர்சுலாவின் பரம்பரை சொத்தான அவற்றை ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஒரு தாலத்தில் இட்டு வேதி அடுப்பில் வைத்தார். உருகுவதற்காக அதனுடன் செம்புத்துண்டு, அரிதார மஞ்சள் மற்றும் காரீயத்தையும் கலந்தார். கொதித்து அவை உருகிக்கலந்தபோது அவைகளை விளக்கெண்ணை கொதித்த ஒரு பானையில் ஊற்றி கொஞ்ச கொஞ்சமாக கலந்து ஒரு கொள்ளைநோய்க்கான இருமல் மருந்துபோல களிம்பாக ஆகும் வரை கலக்கினார். அது காண்பதற்கு தங்கமாக இருப்பதைக்காட்டிலும் சர்க்கரை தீய்ந்த பாகுபோல காட்சியளித்தது. ஏழு கோள்களை முன்னிலைப்படுத்திய உலோக மாதிரிகளுடன் கலந்து உருக்கி ஆபத்தான ஒரு

ஆவியாதல்முறையில் ரசவாத பாதரசத்தோடு சைப்ரஸின் கந்தக அமிலத்தை தெளித்து எண்ணெய் பசை போகவேண்டுமென மீண்டும் கொதிதாலத்தில் இட்டு பானையில் கொதிக்க வைத்ததன் விளைவு ஊர்சுலாவின் விலைமதிப்பற்ற சந்ததிச்செல்வம் வேதிப் பானை அடியில் என்ன செய்தாலும் பெயர்க்க முடியாத அளவிற்கு ஆப்பறைந்து நிரந்தரமாக ஒட்டிக்கொண்டது.

ஜிப்ஸிக்கள் திரும்பி வந்தபோது ஊரையே அவர்களுக்கு எதிராக திருப்பியிருந்தாள் ஊர்சுலா. ஆனால் அனைவரையும் அச்சத்தைவிட ஆர்வமே பிடுங்கித்தின்றது. இம்முறை ஏராளமான ஒசைகளுடன் இசைக்கருவிகளை உற்சாகமாக இசைத்து நாடோடிகள் ஊரையே அதிரவைத்தனர். வீதி வீதியாக கூவி விற்கும் ஒருதலைச்சுமை அங்காடியன் அறிவித்தான். அவர்கள் கொண்டுவந்திருந்த உலகின் அதிஅற்புத கண்டுபிடிப்பு. நாசியானாவிலிருந்து அவர்கள் எடுத்து வந்திருந்தது மெக்காண்டோவே திரண்ட ஒரு கூடாரத்தின் உள்ளே ஆளுக்கு ஒரு செண்ட் என பார்ப்பதற்கு முன்பே பிடுங்கிக் கொண்டார்கள். உள்ளே ஊரே வாய்பிளக்க அமர்ந்திருந்தார் மிக மிக இளமையாக மெகியூவாடெஸ்! முகத்தில் சுருக்கமில்லை. மிகப்புதிதாய் பளபளக்கும் பொய்பற்கள்! ஸ்கர்வி - பல்லுருக்கு நோயினால் தனது ஈறுகளை முழுசாக இழந்திருந்தவராக அவரை நினைவுபடுத்திய அவர்கள் இக்கண்டுபிடிப்பினால் ஜிப்ஸிக்களின் கடவுளுக்கு நிகரான அசாத்திய சக்தி கண்டு அஞ்சி நடுக்கமுற்றனர். மெகியூவாடெஸ் அந்த பல்லை மொத்தமாக கழட்டி வெளியே எடுத்துக்காட்டிய போதோ அச்சம் பதட்டமாக மாறிஇருந்தது. அதை அதன் தாடை சதையோடு கூடி இருந்தவர்களிடம் காட்டிவிட்டு திரும்பப் பழைய வயது முதிர்ந்த மெகியூசாடெஸ்லை கண்டனர். பின் இளமைத் ததும்ப தும்பைப்பூ சிரிப்பு அவர் சிரித்தபோதும் தனிமையில் பொய் பற்கள் வேலை செய்யும் விதத்தை அவர் விளக்கியபோதும், ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவே, மெகியூவாடெஸ்ஸின் அறிவு சகலவித எல்லைகளையும் தாண்டிவிட்டதாகவே உணர்ந்தது மட்டுமல்ல, எளிதாகவும் அதே சமயம் ஆச்சரியமாகவும் இருந்த அந்த ஒற்றை கண்டுபிடிப்பால் ரசவாத சோதனைகள் அனைத்தின் மீதான அவாது ஆர்வமும் நொடியில் மறைந்தே விட்டிருந்தது. கேட்ட நகைப்புணர்வு எனும் புதிய மனசிக்கலால் பீடிக்கப்பட்டவராகி உணவு கொள்ளவும் மறுத்து நாட்கணக்கில் எங்கோ வெறித்தபடி வீடுமுழுதும் நடப்பவரானார். "பல அற்புதமான விஷயங்கள் உலகில் நடந்துவருகின்றன, அவர் ஊர்சுலாவிடம் சொன்னார், "ஆற்றின் மறுபுறம் அனைத்துவகை மந்திரக் கருவிகளும் கிடைக்க நாமோ இங்கே கழுதைகள்போல வாழ்ந்து வருகிறோம்". மெக்காண்டோ கண்டடையப்பட்ட நாளிலிருந்து அவரை அறிந்தவர்கள், அவர் மெகியூவாடெஸ்ஸின் சகவாசத்தால் எவ்வளவு மாறிவிட்டார் என்பதைக் கண்டு பெரும் அதிர்ச்சியுற்றனர்.

ஆரம்பத்தில் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா குழந்தை வளர்ப்பிலும் இன்னும் விவசாயம் குடும்பசண்டை போன்றவற்றிலும் உடல்ரீதி உழைப்பிலும் கூட தனது முழுச்சமூகத்தையும் அனுசரிப்பவராக

உடன் தலைமையேற்று வேலை செய்பவராக இருந்து வந்தார். கிராமத்திலேயே அவரது வீடு முதலில் வடிவமைத்துக் கட்டப்பட்டதாக இருந்தமையால் மற்றவர்கள் அதை பார்த்து கட்டிக்கொள்வதையே ஒரு முன்மாதிரியாக கொண்டார்கள். அது நன்கு சூரியஒளி படரும் வாழ்வதையும் மேடாக்கி அமைக்கப்பட்ட உணவறையும் இரு உறங்குமறைகளும் ஒரு முற்றமும் பிரம்மாண்டமாக படர்ந்திருந்த செம்மலர் பூக்கும் மரம் கொண்டு பராமரிக்கப்பட்ட தோட்டமும் புழக்கடையில் ஆடுகளும், பன்றி மற்றும் உணவுக்கோழிகளும் அமைதியாய் வாழும் சிறு விலங்குப் பண்ணையும் கொண்ட வீடு. அந்த வீட்டில் மட்டுமல்ல அக்கிராமத்தில் எங்குமே யாருக்குமே சண்டை சேவல் வளர்க்க மட்டும் அனுமதி இல்லை.

ஊர்சுலாவின் உழைப்பு தனது கணவருக்கு சற்றும் குறைந்தது அல்ல சிறிய ஆனால் உழைப்பால் உலைக்களமேறிய உடைக்க முடியாத நரம்புகளுடன் கூடிய வலுத்த தேகம் அவளது. அதிகாலை கருக்கல் முதல் ஏறக்குறைய நள்ளிரவு வரை கஞ்சியிட்டு விரைத்த தனது பாவாடை சலசலக்க அவளது அசைவுகள் கேட்டபடியே இருந்தன.... அவள் வாழ்வு ஓய்வென்பதே அறியா ஒன்று. தரையை மெழுகோ மெழுகி, மண்சுவர்களை பலப்படுத்தி, மர இருக்கைகள் தட்டுமுட்டு சாமான்கள் பளபளக்கும்படி துடைத்து வீட்டை ஜொலிக்க வைத்தது மட்டுமல்ல, அன்றாடம் ஆடைகளை சுவர்கள் வைக்கும் பழைய மூடிவைத்த செருகுப்பெட்டியில் சரியாக அடுக்கிவைத்து, எவ்வித பழுதடைந்த சாயையும் இன்றி பேணுவதிலும் தனித்திறன் இருந்தது.

ஜோஸ் அர்காடியோ புயெண்டியாதான் கிராமத்திலேயே அனைத்தையும் முடிவு செய்பவராக இருந்தார். எனவே, தன்னுடைய வீடும் ஏனைய பிறவீடுகளும் ஆற்றில் சென்று தண்ணீர் சேந்த சமஅளவு சிரமம் மேற்கொள்ளும்தூரத்தில் அமைத்தார். இன்னும் வீதிகளாக வீடுகளை வரிசைப்படுத்தியபோதும் பகல் நேரத்தில் கிட்டத்தட்ட ஒரே ஊரை அவர் வடிவமைத்திருந்தார். சில ஆண்டுகளிலேயே மெக்காண்டோ மிகவும் நேர்த்தியான - கடின உழைப்பும் முன்னேற்றமும் கண்ட முன்னெப்போதையும் அங்கு வசித்த முந்நூறு பேருமே அறிந்திடாத அற்புத ஊராக ஆகிவிட்டிருந்தது. உண்மையிலேயே மகிழ்ச்சி வெள்ளம் நிறைந்த முப்பது வயதுக்கு மேற்பட்ட யாருமற்ற ஒருவர் கூட இறந்துபோகாத ஊராகவும் அது இருந்தது.

அது கண்டடையப்பட்ட நாளிலிருந்து ஜோஸ் அர்காடியோ புயெண்டியா பொறிகளையும் கூண்டுகளையும் நிறைய அமைத்தார். தனது வீடு மட்டுமன்றி எல்லார் வீடுகளையும் பெருங்குயில்பறவை, மஞ்சள்குருவி தேனித்தின்னி, சிவப்புகழுத்து நாரை என்று பலவிதமான பறவைகளால் நிரப்பினார். சமயத்தில் பறவைகளின் ஒட்டுமொத்த கூச்சலால் பின் நிலைகுறைந்துபோகாமல் இருக்க ஊர்சுலா காதில் தேன்மெழுகுகொண்டு அடைத்துக்கொள்வாள். மெகியூவாடெஸ் இனத்து ஜிப்ஸிக்கள்

தலைவலிக்கு கண்ணாடி டப்பா தைலங்களை முதன்முதலில் கொண்டு வந்தபோது அந்தப்பெருங்காட்டு வெளியில் அவர்கள் ஒளிந்து உறங்கும் மெக்காண்டோவை கண்டறிந்து வந்தது எப்படி என்று ஊரார் ஆச்சரியப்பட்டபோது ஜிப்ஸிக்கள் தாங்கள் அப்பறவைகளின் ஒலியால் வழிநடத்தப்பட்டதாக ஒப்புதல் அளித்தனர்.

சமூக ஒற்றுமை - ஒருங்கிணைந்து உழைக்கும் முனைப்பு யாவுமே, காந்தக்கல், வானியல்கருவி உருமாற்றுதல், புதிய கண்டுபிடிப்புகள் கண்டடைதல் உலக அதிசயங்களை அடைதலென உள்ளே நுழைந்ததும் அங்கிருந்து மறைந்து போனது. சுத்தமான சுறுசுறுப்பான மனிதரான ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, பார்க்க சோம்பேறிபோலவும், உடுப்பதில் அக்கறையற்றும், ஊர்சுலா சமையல் கத்தியால் அவ்வப்போது அறுத்தெறியும் அளவிற்கு தாடி முளைத்தவராகவும் ஆகிப்போனார். பலரும் ஏதோ ஒருவித கெட்ட காலத்தினால் பீடிக்கப்பட்டவராக அவரை கருதினர். ஆனால் மெக்காண்டோவை வெளி உலகின் பெருங்கண்டுபிடிப்புகளோடு இணைக்க இறுதி வழியை கண்டுபிடிக்க உடன்வருமாறு ஒரு சாகசப் பிரயாணத்திற்கு ஜோஸ் அர்காடியோ புயெண்டியா புதர்களை வெட்டிச்சாய்த்து வழிசெய்யும் கருவிகளையும் திசைமானியையும் கொண்டுவந்து அழைப்பு விடுத்தபோது அவர்களும் கூட மறுக்காமல் உடன் கிளம்பினார்கள்.

ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அப்பகுதியின் நிலஅமைப்பு குறித்து எதுவுமே அறிந்திருக்கவில்லை. அவருக்குத் தெரிந்தவரை கிழக்கே ஒருபோதும் கடக்க முடியாத பெருமலைகளும் அவற்றின் பின்னே பழங்கால நகரமான ரியோஹாச்சாவும் இருப்பதை இவாது பாட்டனாரான முதல் அவ்ரெலியானோ புயெண்டியா சொல்படி - சர் பிரான்ஸிஸ் ட்ரேக் முதலை வேட்டையாடி அவற்றிலிருந்து உயிரை வெளியே எடுத்துவிட்டு, வைக்கோல் சொருகி பாடம் செய்து எலிஸபெத் ராணிக்காக எடுத்துக் சென்றது அங்கிருந்துதான். இளமைப்பருவத்தில் ஜோஸ் அர்காடியா புயெண்டியா அவரது மனிதர்களுடன் அம்மலைகளைக் கடந்து கடல் நோக்கி தங்கள் மனைவியர், குழந்தைகள், கால்நடைகள் மற்றும் அனைத்துவகை அன்றாட பொருட்கள் தட்டுமுட்டு சாமான்களுடன் இருபத்தாறு மாதங்களுக்குப் பிறகு மெக்காண்டோ வந்தபோது தங்கள் தேடுதலை நிறுத்தினார்கள். திரும்பிச்செல்ல மனமின்றி இக்கிராமத்தை கட்டமைத்தார்கள். எனவே அந்த வழியில் மீண்டும் செல்வதற்கு அவருக்கு ஆர்வம் ஏற்படவில்லை. அது அவரை இறந்த காலத்திற்கு அழைத்துச் சென்றுவிடும். தெற்கே மிக அடர்த்தியான இருண்டகாடு நிறைந்திருந்தது. ஜிப்ஸிக்களின் வாசகப்படி அவ்விதமான பெருங்காடு முடிவின்றி தொடர்ந்தது. மேற்கே வனத்தின்முடிவில் தொடர்ந்தது முடிவற்ற நீர்நிலை. அங்கே தலையும் இடுப்புவரை யாவும் பெண்போலிருந்த நீர்வாழ் பாலுண்ணி இருப்பது குறித்து கேள்விப்பட்டார்கள். அவ்வழி அதிகம் பிரயாணம் செய்யும் மாலுமிகள் கூட அவற்றின் பெருத்த மார்பகங்களால் மிகவும் கவரப்பட்டார்கள். இவ்வழியே ஜிப்ஸிக்கள் ஆறுமாதங்களுக்கு முன்

பிரயாணம் செய்து கோவேறுகழுதைகள் கடிதங்கள் சுமந்து செல்லும் வழிப்பாதை இடறும் ஒரு நிலப்பரப்பை தந்திருக்கிறார்கள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவைப் பொருத்தவரை வெளிஉலகோடு தொடர்பு ஏற்படுத்த இருந்த ஒரே வழி, வடக்குநோக்கி பிரயாணிப்பதே ஆகும். எனவே, மெக்காண்டோ பயணத்தின்போது வந்த அதே நபர்களிடம் கானகத்தில் கொடிபுதர்களை களைந்து வழியேற்படுத்தும் கருவிகளைத் தந்துவிட்டு தனது திசைமானி வரைபடங்கள் ஆகியவைகளை தனது தோள்பையில் அவர் போட்டார்..... பின் முடிவற்ற அந்த கொடிய சாகசப்பிரயாணத்தை அவர் மேற்கொண்டார்.

முதலில் சில நாட்கள் அவர்கள் குறிப்பிடத்தக்க தடையரண் எதையும் சந்திக்கவில்லை. நதியின் பாறை மிகுந்த கரை ஓரமாகவே அவர்கள் சென்றார்கள். பல ஆண்டுகளுக்கு முன் படைவீரனின் கவசத்தை கண்டெடுத்த இடத்தில் திரும்பி காட்டுக்குள் அடர்ந்த ஆரஞ்சு பழமரங்களுக்கு ஊடாக நடக்கத் தொடங்கினார்கள். முதல் வாரத்தின் முடிவில் அவர்கள் ஒரு மானை அடித்து நெருப்பில் சுட்டார்கள். ஆனால் பாதியை உண்பதெனவும் மீதியை உப்பு தோய்த்து வரும் நாட்களுக்கு பத்திரப்படுத்திடவும் முடிவு எடுக்கப்பட்டது. இப்படி முடிவெடுத்ததன் மூலம் மக்காவ் பறவைகளின் சுவை இல்லாத நீலக்கறியை தின்பதிலிருந்து விடுபட்டதாக சமாதானம் அடைந்தார்கள். மீண்டும் பத்து நாட்களுக்கு சூரியனையே பார்க்க முடியாதபடி அடர்ந்த காட்டில் நடந்தார்கள் திடீரென்று தரை மிருதுவாகியது. எரிமலை சாம்பல்போல கருத்த மண்ணில் அடர்ந்த காடு பயங்கரமாக வளர்ந்திருக்க அவர்கள் கண்டார்கள். குரங்குகள் கிரீச்சிடுவதும் பறவைகள் இரைவதும் மெல்ல தூரத்து விஷயமாகி உலகே துயர அமைதியுறுவதாக இருந்த இடத்தை அடைந்திருந்தார்கள். ஆழமான அந்த அமைதியின் தடித்த சொர்க்கபுரி அம்மனிதர்களின் புராதன நியாயங்களை கிளறி விடுவதாயும் இருந்தது. பொன்னிற நீர்தாவரங்களை கால் பூட்ஸ்கள் மிதிக்க எண்ணெய் சேற்றில் புதைந்தவர்கள் ஆதியின் முதல் பாவத்தை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டார்கள். அந்த கும்மிருட்டில் மிகுந்த அமைதியாய் இருந்த அந்த இடத்தில் நெருப்புப்பூச்சிகளின் பளபளப்பு தவிர வேறு ஒளியற்ற ரத்தம் கக்கும் லில்லி மலர்கள் மிதிபட்டு அவர்களது மூச்சுக்குழலிலும், நுரையீரலிலும் ரத்தவாடை தாக்கியது. அவர்களால் தங்கள் பாதையிலிருந்து திரும்பிடவும் முடியவில்லை. கடந்த பாதையை மூடியபடி உடனடியாக அவர்களது கண்முன்னே விரிந்து படர்ந்தது காடு. "சரி" ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அறிவித்தார். "நமது நம்பிக்கையை தளரவிடக்கூடாது என்பதே முக்கியம்". தனது திசைமானியின் வடக்கு நோக்கிய அம்புக்குறியை பின்பற்றி மேலும் மேலும் அவர்களை அவர் பயணிக்க வைப்பதென முடிவு செய்தார். இப்படியாக கண்ணிற்கு புலப்படாத வடக்கை நோக்கி மேலும் சில நாட்கள் நடந்தபோது ஒரு கரிய நட்சத்திரமற்ற இரவில் காட்டின் அடர்த்தி குறைந்து தூயகாற்றை அவர்கள் சுவாசித்தார்கள். இத்தனை நாள் நடந்ததன் களைப்பில் தாங்க

முடியாது அழுத்திய சோர்வு தங்களது தொங்குத் தூளிப்படுக்கையில் இருவாரங்களுக்குப் பிறகு அவர்களை தூங்கப் போட்டது. எழுந்திருந்த போதோ ஏற்கனவே சூரியன் உச்சியில் இருக்க—— வாய் வார்த்தையே வராத ஆனந்த அதிர்ச்சியில் அப்படியே நின்றார்கள். பாக்குமரங்களும் வேறுவகை பழ மரங்களும் காட்டின் வழுவமைதியும் கூடிய அந்த இடத்தில் அவர்கள் கண் எதிரே ஸ்பானிய பெரும் பாய்மரக்கப்பல் ஒன்று நின்று கொண்டிருந்தது. லேசாய் நட்சத்திரம் வரைந்த பலகை பக்கமாய் சாய்ந்து கந்தலாய் தொங்கிய பாய் அங்கங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டதுபோல நின்றிருந்த அதனை பறவைகள் ஆக்கிரமித்திருந்தன. சப்பன் உடற்பகுதி போர்கவசத்தால் பெரிய லாடங்கள் அடித்து சாத்தப்பட்டதாயிருந்தது. அந்த கப்பல் தன் மட்டில் ஒரு தனித்துவமிக்க பிரதேசம்போல தனது இருப்பை தன் பெரிய உருவத்தை கொண்டு ஸ்தாபித்திருந்ததை அவர்கள் கண்டார்கள்.

சிதிலமடைந்த அந்த போர்க்கப்பலை கண்டுபிடித்தது என்பது கடல் அருகே உள்ளதற்கான அடையாளமாக இருந்தமையால் அது ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் ஆர்வத்தை முற்றிலும் சிதைத்தது. வடக்கே எதிர்பார்த்திராத கடல், இத்தனை கொடிய சிரமங்களுக்குப் பிறகு, எந்த முன் அறிவிப்புமின்றி எதிர்நோக்காத ஒருநாளில் பளிச்சென கண்முன்னே தோன்றியமை கொடிய விதியென்றே அவருக்குப் பட்டது. அதுவோ அவரது கண்முன்னே தாண்டிடமுடியாத ஒரு பெரிய அரணாக விரிந்திருந்தது. வெகுபல ஆண்டுகளுக்குப் பிறகு கர்னல் அவ்ரெயானோ புயெண்டியா இந்த இடங்களை - அது அப்போது பழகிப்போன கடினப் பாதையாக வெளிவிட்டிருந்தது - கடந்தபோது இக்கப்பன் எரிந்து சாம்பலாக்கப்பட்டதன் மிச்ச சொச்சத்தையே அவரால் காண முடிந்தது. அதை தனது தடையற்ற வளர்ச்சி மூலம் பாப்பி தாவரப் பூக்கள் மூடிவிட்டிருந்தன. அதுவரை தனது தந்தை சொன்னது ஒரு கற்பனைக்கதை ஊற்றாக இருக்க வேண்டுமென நினைத்திருந்த அவர் அப்போது முதல்முறையாக ஆச்சரியமடைந்தது மட்டுமின்றி கப்பல் கடலைத் தாண்டி மண்ணிற்கு காட்டுக்குள் இத்தனைத் தொலைவு வந்தது எப்படி என பலவாறு அதிர்ச்சியுற்றார். ஆனால் அடுத்த நான்கு நாட்கள் நடைக்குப் பிறகு கடலை அடைந்த ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அதை எல்லாம் யோசிக்கவில்லை. அவருக்கு அழுக்காய் நுரைதள்ளி இரைச்சலுற்ற அந்தக் கடல் அவரது கனாக்களின் முடிவை, துயரங்கள், கஷ்டங்கள், தியாகங்களின் வீண் விரயத்தையே பறைசாற்றுவதாய் இருந்தது.

"கடவுளே... நாசமாகப்போக! " அவர் கத்தினார், "மெக்காண்டோ அதன் எல்லாபுறமும் நீரால் சூழப்பட்டுள்ளது".

ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தனது பயணத்தை முடித்து வரைந்து வைத்த மெக்காண்டோவையும் அதன் சுற்றுவட்டார காடுகளையும் புவிஇயலையும் விளக்கும் வரைபடத்தைக் கொண்டு அது ஒரு தீபகர்ப்பம் என வெகு ஆண்டுகள் வரை நம்பப்பட்டது. அந்த வரைபடத்தை ஆத்திரத்தோடு அவ்விடத்தை உறைவிடமாக தான் தேர்ந்தெடுத்த முட்டாள்தனத்தை சபித்து சலித்தபடியே சிறுசிறு தடையாண்களையும்

ஊதிப் பெருக்கி படத்தில் இடம்பெற செய்தார் "நாம் எங்குமே செல்லமுடியாது" ஊர்சுலாவிடம் அவர் புலம்பினார், "அறிவியன் எந்த பயனும் கிடைக்காமல் நாம் இங்கே கிடந்து நம் வாழ்வை நாறடிக்கப் போகிறோம்" பிறகு இதே நினைவு அவரை பலமாதங்கள் தனது ஆய்வகம் என்றழைக்கப்பட்ட ஒரே அறையில் உள்ளே தனியனாய் கிடந்து மெக்காண்டோவை அதைவிட சிறந்த பிரதேசத்திற்கு எடுத்துச் செல்ல

பலிதமாய் திட்டங்களை அவர் தயார் செய்தார். ஆனால் அந்த சமயத்தில் ஊர்சுலா அப்பகுதி பெண்கள் இடையே ஒரு எறும்புபோல ஊர்ந்து சுறுசுறுப்பாய் இயங்கி அவ்விடம் விட்டுச் செல்ல கணவன்மார்கள் செய்யும் முயற்சிகளுக்கு எதிராய் அவர்களை தயார் செய்திருந்தாள். இப்படிப்பட்ட எந்த வேலையும் தனக்கெதிராய் நடப்பது தெரியாத ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, தனது கனவுகள் சிதறி, முனைப்புகள் முடங்கி, திட்டங்கள் கடைசியில் பொய்யாய் பழங்கதையாய் போவதை செய்வதறியாது பதற்றத்துடன் காண்பார். ஏதும் தெரியாத அப்பிராணிபோல் ஊர்சுலா அவரை கவனித்தபடியே இருந்தாள். அவர்மீது அவளுக்கு இரக்கமும் பரிதாப உணர்வும் ஏற்பட்டது. ஒரு நாள் காலையில் தனது ஆய்வறையில் மெக்காண்டோவையே இடம்பெயர்த்து எடுத்துச் செல்வதன் காரணங்களை பட்டியலிட்டபடியே அவர் பெரிய மரப்பெட்டியில் தனது பொருட்களை அடுக்கத் தொடங்கினார். முடிக்கும்வரை ஊர்சுலா வாயே திறக்கவில்லை. மூடியை ஆணிகள் அடித்து அதன் வெளிப்பக்கம் தனது பெயரின்

இனிஷியல்களை எழுதும் வரையிலும் அவர் ஏதும் கூறவில்லை... அவர் மிகவும் மெல்லிய குரலில் ஏதேதோ புலம்பியபடி இருந்தமையால் காதில் விழாதவளைப் போல அவள் இருந்தாள். ஊரில் எந்த ஆண்மகனும் தனது திட்டத்திற்கு துணை வரவில்லையென புலம்பியபடியே எழுந்து வெளிக்கதவை கழட்டிட அவர் தொடங்கியபோதுதான் அவர் என்ன செய்யப்போகிறார் என அவள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டாள். அவர் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா சற்றே வெறுப்போடு "யாருமே ஊரைவிட்டு வர விரும்பவில்லை—ஆகையால் நாம் — தனியாகவே கிளம்ப வேண்டியதுதான்" ஊர்சுலா மனமுடையவில்லை.

"நாம் போகப்போவதில்லை" அவள் சொன்னாள். "நாம் இங்கேயே இருப்போம். ஏனெனில் நமக்கு இங்கே ஒரு மகன் பிறந்தான்".

"இன்னும் நம் வீட்டில் மரணம் ஏற்பட்டவிடவில்லை" அவர் சொன்னார். "ஒருவருக்கு அவ்வீட்டில் மரணம் ஏதும் ஏற்படாதவரை யாரையும் புதைக்காத வரை ஊர் சொந்த ஊர் அல்ல".

மெல்லிய பிடிவாதத்தோடு ஊர்சுலா சொன்னாள். "நீங்கள் அனைவரும் இங்கே இந்த ஊரில் தங்கி சொந்த ஊராக இதை கொண்டிட நான் சாகவேண்டுமானால் .... செத்துப்போக தயாராக இருக்கிறேன்".

ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தனது மனைவியின் விருப்பம் இவ்வளவு பிடிவாதமானதாக இருக்குமென்று எதிர்பார்க்கவில்லை. அவர் தனது கற்பனாவாத பெருங்கனவுகளாலும் எதிர்காலத்தில் வெளியே எங்கோ அவர்கள் வசிக்கப்போகும் இடத்தில் ஒரு விசேட திரவம் அதை ஒரு சொட்டுவிட்டதும் நினைத்த மரங்கள் நினைத்த இடத்தில் முளைத்து பெருத்து... நினைத்த பழத்தை தரும் வகையில் அறிவியல் வளர்ச்சி இருக்கும் என பலவகை கதைகள் விட்டு அவளை எப்படியோ மாற்றிவிட முயன்றார். அங்கே அவ்வுலகில் வயை முற்றிலும் போக்கும் கருவிகள் எந்த வேலை செய்யும் அவை - மிகவும் மலிவானவிலையில் கிடைக்கும். ஆனால் அவளோ அவரது சொற்களை எதுவுமே காதில் வாங்காத சரணையற்றவளைப் போலிருந்தாள்.

"உங்களது பைத்தியக்காரத்தனமான கண்டுபிடிப்புகளையெல்லாம் எட்ட எறிந்துவிட்டு குழந்தைகளை பற்றி கொஞ்சமாவது கவலைப்படுங்கள்." அவள் பதிலாக........ சொன்னாள். "பாருங்கள் அவர்கள் இருக்கும் நிலையை— கழுதைகளைப் போல மிருகவெறியுடன்.... ஓடுவதை அதோ பாருங்கள்"

ஜோஸ் அர்காடியோ புயெண்டியா மனைவியின் வார்த்தைகளை நேரடியாக எடுத்துக்கொண்டார். ஜன்னலுக்கு வெளியே வெறுங்காலோடு

தனது இரு குழந்தைகளும் வெயில் கொளுத்தும் அம்மதியத்தின் தோட்டத்தில் விட்டேத்தியாக சுற்றுவதை பார்த்து அப்போதுதான் அவர்களை கண்டுபிடித்தவராக - தன் மனைவியின் பக்கமிருந்த நியாயத்தின் பேரோசை வழிநின்று அதிர்ந்தார். அவருக்குள் அப்போது ஏதோ நடந்தது. ஏதோ மிகவும் மர்மமான மனவேதிமாற்றங்கள்..... அவரது கற்காலத்திலிருந்தே அவரை பெயர்த்தெடுத்து நினைவுத் தடங்களில் எங்கோ அவரை அழைத்துச் சென்று விட்டிருந்தன. வீட்டை உர்சுலா பெருக்கி சுத்தம் செய்த அந்த வேளையில் - இப்போது ஏதும் நிகழாது என்ற பாதுகாப்பு உணர்வு அவளுக்கு ஏற்பட்டு விட்டிருந்தது மட்டுமல்ல இனி தன் வாழ்நாள் முழுவதற்குமான சொந்தவீடாக அது விடப்பட்டிருந்ததை அவள் எப்படியோ அறிந்தாள் - அவர் அங்கே வெகுநேரம் காற்றை வெறித்தபடி குழந்தைகளை துயரம் ததும்ப ஒரு குற்றமனதோடு கண்டு கண்கள் ஈரமாகி புறங்கையால் துடைத்தபடி பெருமூச்சுகள் விட்டார்.

"சரி..... அப்படியானால் சரி" அவர் பிறகு பேசினார், "இந்தப் பெட்டிகளிலிருந்து அனைத்தையும் பழையபடி எடுத்துவைக்க அந்தப் பயல்களை இங்கே வரச்சொல்".

மூத்தவனான ஜோஸ் அர்காடியாவுக்கு அப்போது வயது பதினான்கு. அவன் சதுரத்தலையும், அடர்ந்த முடியும், அவன் தந்தையின் குணமும் கொண்டிருந்தான். அதேபோன்ற விபரீத வளர்ச்சியும் உடல்வாகும் கொண்டிருந்தபோதிலும் தந்தையை ஒத்த கற்பனாதிபதியாக அவன் இருக்கவில்லை என்பதைக் கண்டனர். அவன் - அவர்கள் மலைகளை கடந்த அந்த சோதனையான காலகட்டத்தில் கருவாகி பயணத்தின் இடையிலேயே பிறந்தவன்.... மெக்காண்டோவை அவர்கள் அடைவதற்கு முன். அவனுக்கு எத்தகைய விலங்கு உறுப்பும் இல்லாததற்காக வானுலகிற்கு அவனது பெற்றோர்கள் நன்றி பகள் கொடுத்தார்கள். அவ்ரெலியானோ புயெண்டியா, மெக்காண்டோவில் பிறந்த முதல் மனித உயிரான அவனுக்கு மார்ச் வந்தால் ஆறு வயதாகும். அவன் அமைதியே வடிவானவனாகவும், யாரிடத்திலும் ஒட்டாதவனாகவும் இருந்தான். தாயின் கருவறையிலேயே அழுததோடு, கண்களை திறந்தபடியே அவன் பிறந்தான். தொப்புள் கொடியை அவர்கள் அறுத்தபோது தலை இப்படியும் அப்படியுமாய் அசைத்து அங்கே இருந்த மனிதர்களை எவ்வித அச்சமும் அற்ற ஆர்வத்தோடு நோட்டம் விட்டான். ஏனையவர்கள் அவனைக்காண வந்தபோதே அவன் மழை கொட்டிக் கொட்டி தகர்க்க முயன்ற பனைமரமே விட்டத்தை பார்த்தபடியே நிலைகுத்தி இருந்தான். அந்தப் பார்வையின் உக்கிரத்தை ஒருநாள் அவ்ரெலியனோவிற்கு மூன்று வயதாயிருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவம் வரை அவள் நினைவில் கொள்ளாது இருந்தாள். அன்று அவள் உளர்சுலா அடுப்பிருந்து கொதித்த சூப் பானையை எடுத்துக்கொண்டு உணவுமேசைக்குச் சென்றாள். அங்கே அதை மேசை மேல் வைத்தாள். "அது கொட்டப்போகிறது" குழந்தை தீர்க்கமாக அலறியது. பானை நடுமேசையில் சரியாகவே வைக்கப்பட்டிருந்தும் சற்று நேரத்தில் நகர்ந்து கவிழ்ந்து சூப் அனைத்தும்

கொட்டியபோது— நடுநடுங்கி ஊர்சுலா தன் கணவரிடம் ஓடி நடந்ததைச் சொன்னாள். அவரோ, இயற்கை தான் என அதிகம் பெரிதுபடுத்தாமல் எடுத்துக் கொண்டான். எப்போதுமே அவர் அப்படித்தான் தன் குழந்தைகள் என்றால் பட்டும்படாமலேயே இருப்பார். அவர் குழந்தைப்பருவம் என்பதை அறிவு ரீதியிலான போதாமை பருவமாகக் கண்டது அதற்கு ஒரு காரணம். அற்புதங்கள் - கனவு குறித்த அனுமானங்கள் குறித்து ஆய்வு மேல் ஆய்வுகள் செய்து வந்தது. இரண்டாவது காரணம்.

ஆனால் அன்று மதியம் - தன் குழந்தைகளை எப்போது ஆய்வக பெட்டியை திறந்து திரும்பவும் அடுக்கி வைக்க அழைத்தாரோ அப்போதிலிருந்து தனது மிகச்சிறந்த கவனிப்பை அவர் அளித்து வந்தார். சுவர்களில் பலவகையான வரைபடங்களும் ஓவியங்களுமாய் காட்சியளித்த அந்த சிறிய தனி அறையில் அவர், அவர்களுக்கு எழுதவும் படிக்கவும் கற்பித்தார். கணிதத்தை போதித்தார். அதுமட்டுமின்றி உலக அதிசயங்கள் அறிவியல் அற்புதங்களை தனக்கு தெரிந்திருந்த நிலையையும் கடந்து அவர் கற்பனைக்கு எட்டியவரை பலவாறு போதித்தார். இப்படிப்பட்ட பொழுதுகளில்தான் அச்சிறுவர்கள் ஆப்பிரிக்காவின் தெற்கு கடைகோடியில் மனிதர்கள் அன்றாட பொழுதுபோக்கே சும்மா உட்கார்ந்து யோசிப்பதுதான் எனுமளவு அமைதியும். பேரறிவும் பெற்றுள்ளதையும். சோலாங்கிய துறைமுகம் நோக்கி ஆஜியக்கடலை காலாலேயே, ஒவ்வொரு தீவாய் கால் பதித்து குதித்துக் கடந்தே அடைய முடியும் என்பதையும் அறிந்தனர். மனதை பெருமயக்கநிலைக்கு இட்டுச்சென்ற அதுபோன்ற போதனைத் தருணங்கள் எந்த அளவிற்கு குழந்தைகளின் மனதில் ஆழமாக பதிந்தது என்றால், பல ஆண்டுகளுக்குப் பிறகு தன்னை நோக்கி கொலைப்படை தயாரான நிலையில் ராணுவ அதிகாரி சுடும் உத்திரவை பிறப்பிப்பதற்கு ஒரு நொடிக்கு முன்னால், அந்த மார்ச்ச மாத மதிய இயற்பியல் போதனைக்கு நடுவில் காற்றில் கைகளை உயர்த்தி கண்கள் இமைக்க மறந்து தான் தந்தையின் வார்த்தைகளை கேட்ட அப்பொழுதில் தாரை தப்பட்டைகளின் முழக்கம் தூரத்தில் கேட்க மீண்டும் மெக்காண்டோவிற்கு இம்முறை மெம்பிஸ்ஸின் அற்புத கண்டுபிடிப்பு ஒன்றுடன் ஜிப்ஸிக்கள் வருவதை உணர்ந்த தருணத்தைத்தான் நினைவு கூர்ந்தார் கர்னல் அவ்ரெயானோ புயெண்டியா.

அவர்கள் புதிய ஜிப்ஸிக்களாக இருந்தார்கள். இளவயது ஆண்கள்— பெண்கள். அவர்கள் தங்களது மொழியை மட்டுமே அறிந்திருந்தார்கள். எண்ணைத்தைலமிட்டு பளபளத்த தேகமும், அறிவார்ந்த கைகளுமாய் அவர்கள் தெருவெங்கும் ஆடிய இசைநடனம், அச்சத்தோடான வெறிமிகுந்த எழுச்சியை கிராமமெங்கும் விதைப்பதாயிருந்தது: இத்தாலிய பாடல்கள் இசைக்கும் பல வர்ண கிளிகள்; கஞ்சிரா இசைக்கருவி நாதம் கேட்டு நூறு பொன்முட்டைஇடும் கோழி; மனித மனங்களை அப்படியே சொல்லி பழக்கப்பட்ட குரங்கு; பித்தான் தைப்பதிலிருந்து காய்ச்சலை தணிப்பது வரை பலவேலைகளை ஒரே நேரத்தில் செய்யும் கருவி! கெட்ட இறந்தகால நினைவுகளை ஒருவர் மறக்க வைக்கும் சிறப்பு கையகலக் கருவி; காலத்தை

மரக்கடிக்கும் களிப்புமாகக் கட்டி என ஞாபகம் வைக்க ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஒரு புதிய நினைவாற்றல் கருவிதான் கண்டுபிடிக்க வேண்டும் எனுமளவிற்கு ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புகளுடன் அவர்கள் வந்திருந்தார்கள். ஒரு நொடியில் கிராமத்தையே அவர்கள் முற்றிலுமாய் மாற்றி இருந்தார்கள்.... மெக்காண்டோ வாசிகள் அந்த கூட்டமாக பொருட்காட்சியினால் குழம்பிப்போய் சித்தமும் பித்தமும் தலைக்கேறி சுற்றித் திரிந்தார்கள்.

ஒவ்வொரு கைக்கும் ஒரு சிறுவனை பிடித்து அந்த வித்தைக் காட்சி சந்தையில் தொலைந்து விடாமல் தங்கப்பல் இழைக்கூத்தாடியை சுற்றி இருந்த கூட்டத்தை கடந்து, ஆறு கைகள்கொண்ட செப்படி வித்தைக்காரனை மொய்த்திருந்த ஜனங்களைத்தாண்டி, மனித கூட்டத்தில் மிதந்து மூச்சுத்திணறி ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, தனது வெளிஉலகைத் தேடும் பிரயாணத்தின் தோல்வியை விளக்கிட மெக்யூவாடெஸ்ஸை தேடிக்கொண்டிருந்தார். அவர் பல ஜிப்ஸிக்களிடம் எப்படியெல்லாமோ வினவியும் விடை கிடைக்க வில்லை. அவர்களால் அவரது மொழியையும், அவரால் அவர்களது மொழியையும் புரிந்துகொள்ள முடியவில்லை. கடைசியில் மெக்யூவாடெஸ் எப்போதும் முகாமிடும் கூடார இடத்திற்கு அவர் வந்திருந்தார். அங்கோ மெக்யூவாடெஸ் இல்லை. அதற்கு மாறாக வேறு ஒருவன், மனிதனின் உடலை வெளியே தெரியாமல் செய்யும் சுழிப்புமையை விற்க காட்டிக்கொண்டு, ஒரு மடக்கு அதை குடித்தபடியே ஜோஸ்அர்காடியோ புயெண்டியாவின் கேள்வியை எதிர்கொண்டான். அவனது உடல் மறைந்து நுரைப்புகை வந்தபோது காற்றில் விடையை புகையால் எழுதி பதித்தான்; மெக்யூவாடெஸ் இறந்து போய்விட்டார்! செய்தியை அறிந்து அதிர்ச்சியுற்றவரான ஜோஸ் அர்காடியோ புயென்டியா அந்த மாயக்கூத்து முடியும்வரை காத்திருந்து ஆர்மீனியனான அவனிடம் மேலும் ஊற்றி மறைந்தான். மற்ற ஜிப்ஸிக்கள் பிறகு விளக்கியது போல மெகியூவாடெஸ் சிங்கப்பூரின் கடற்கரை காய்ச்சல் பலியாகி ஜாவா கடல் ஆழத்தில் அவரது உடல் வீசப்பட்டது. குழந்தைகளுக்கு அது பெரிய செய்தியாக இருக்கவில்லை. சிறுவர்களோ கூடாரத்திற்கு நுழைவாயில் மெம்பிஸ் காலகட்ட அற்புதங்களில் ஒன்றும் மாமன்னன் சாலமனுக்கு சொந்தமானதாகக் கூறப்பட்டதுமான ஒரு காட்சிப் பொருளைக் காண அழைத்துச் செல்லுமாறு நச்சரித்தார்கள். அங்கோ சரியான கூட்டம். சிறுவர்கள், அவரை ஜோஸ் அர்காடியே புயெண்டியாவை, முப்பது ரியால்கள் பணம் செலுத்தி கூடார மையத்திற்கு அழைத்துச் செல்ல நச்சரித்து பணியவைத்தார்கள். அங்கே சுடர் முடி முளைத்த தோள்களும் வழுக்கைத்தலையுமாய் ஒரு பெரும் அரக்கன் அமர்த்தப்பட்டிருந்தான். மூக்கில் ஒரு தாமிர வளையம் கால்களில் பெரிய சங்கிலி அருகிலோ ஒரு பெரும்பெட்டி. அதை திறந்தபோது அதிலிருந்து சில்லெனும் உணர்வு வெளிவர அங்கே வெள்ளை வெளேரென்று ஒளி ஊடுருவும் பெரிய பாளத்தில் மாலை சூரிய ஒளி சிதறி பளபளப்பேறி ஒரு அரிய புதிய

பெரும்பொருளை அவர்கள் கண்டனர். அது என்ன என்பதை அறிய குழந்தைகள் மிகவும் ஆர்வத்தோடு இருப்பதை விளக்கம் அப்போதே எதிர்பார்ப்பதை உணர்ந்த ஜோஸ் அர்காடியோ புயெண்டியா முணுமுணுப்பை வெளியிட முனைந்தார்

"இது உலகின் மிகப்பெரிய வைரக்கல்".

"இல்லை" ஜிப்ஸி அரக்கன் மறுத்தான் "இது ஐஸ்" புரிந்துகொள்ள முடியாதவராயிருந்து ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அதை அரக்கை தொட கைகளை நீட்டினார். ஆனால், அரக்கன் உடனடியாக தட்டிவிட்டான். "தொட்டுப்பார்க்க ஐந்து ரியால்கள்" அவன் சொன்னான். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா காசுகொடுத்து அதில் கைவைத்து, அதில் ஏதோ சில்லிட இதயத்தில் அச்சம் எறிப்போய் ஒரு மர்ம உலகில் புதிதாய் தோன்றிய அனுபவத்தைப் பெற்றார் என்ன சொல்வதென்று தெரியாமல் தனது மகன்கள் இருவரும் அதைத் தொட்டுணர மேலும் பத்து ரியால்கள் கட்டினார். ஜிப்ஸி அரக்கன் குழந்தைகளை தொட அனுமதித்தான். ஆனால் பெரியவனான ஜோஸ் அர்காடியோ அதை தொட மறுத்துவிட்டான். அவ்ரெலியானோ ஒரு அடிமுன்னே எடுத்துவைத்து அதை ஒரு நொடி தொட்டு உடனடியாக பின்வாங்கினான். "கொதிக்கிறது" என்று ஆச்சரியப்பட்டு அதிர்ந்து நின்றான். இந்த அற்புதத்தை உணர்ந்த மன எழுச்சியிலும் அது கொடுத்த போதையிலும் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தனது நிலவழி சாகசப் பிரயாணம் தோற்றதையும் மெர்கியூவாடெஸ் உடல் சுடல் பிராணிகள் தின்னப்போடப்பட்டதையும் ஒரு கணம் மறந்தார். மேலும் ஐந்து ரியால்கள் கொடுத்து அந்த ஐஸ் பாளத்தின் மேல் கைவைத்தபடியே ஏதோ புனித நூல்களின் மேல் கைவைத்தபடியே ஏதோ புனித நூல்களின் மேல் ஆணையிட்டு சாசுவதமாய் சத்தியம் செய்பவர் போல பரவசப்பட்டார்:

"நமது காலகட்டத்தின் மாபெரும் கண்டுபிடிப்பு இது"!

2

கடற்கொள்ளைக்காரனான சர். பிரான்ஸிஸ் ட்ரேக் ரியோஹாச்சாவை தாக்கியபோது, அந்த பதினாறாம் நூற்றாண்டில் ஊர்சுலா இருகுவரானின் பாட்டியின் பாட்டி, அந்த தோட்டாக்கள் பீரங்கிகள் வெடிக்கும் சப்தத்தால் நடுக்கமுற்று கலவரமடைந்து பேயறைந்தவள் போலாகி எரியும் அடுப்பில் போய் தன்னிலை இழந்து உட்கார்ந்துவிட்டாள். அப்போது புட்டத்தில் தான் பெற்ற சூட்டுக் காயங்களில் மீதமிருந்த வாழ்நாள் முழுவதும் பயனற்ற இல்லத்தரசியாய் அவள் பதவி இழப்பு அடைய வேண்டி இருந்தது. ஒரு பக்கமாக அடுக்கி வைக்கப்பட்ட தலையணைகள் மீது சாய்வாக உட்காரத் தொடங்கிய அவளது நடையின் விபரீத

மாறுதல், ஊர்முன் பிறகு அவள் நடக்கமுடியாது செய்தது. உடலிலிருந்து வெளிப்பட்ட தீய்ந்த மணத்தால் வெறுப்புற்று பொதுக் காரியம் எதிலுமே கலந்து கொள்வதை அவள் தவிர்த்தாள். ஆங்கிலேயர்களின் கொடிய தாக்குதல் வேட்டை நாய்கள் படுக்கை அறையின் சன்னல் வழியே அத்துமீறி நுழைந்து தன்னை தங்களது சிவந்த பிறப்புறுப்புகளால் வெட்கங்கெட்ட சித்திரவதைகள் செய்வதை கண்மூடி அனுபவித்து நினைவோடைநோய் பெற்றமையால் உறங்கவே அச்சமுற்ற அவளை அதிகாலை இருளில் ஒருவர் முற்றத்தில் பார்க்கலாம். ஆரகானை சேர்ந்த வணிகரான அவளது கணவர் தனது வருமானத்தில் பாதியை அவளது மருந்துகளுக்கும், நினைவிலி பயங்கரம் போக்கிடும் பொழுதுபோக்கு அம்சங்களிலும் செலவு செய்தார். ஏதும் சரிவாராதபோது அனைத்தையும் விற்றுவிட்டு, இந்திய வம்சாவளி மக்கள் அதிகம் வாழ்ந்த, கடலிலிருந்து கூடுமானவரை வெகு தொலைவில்

இருந்த ஒரு குடியிருப்பிற்கே குடும்பத்தை மாற்றிக்கொண்டு சென்று, அங்கே அவளுக்கு தன் மனைவிக்கு பேரச்சம் விளைவித்த வெள்ளைக்காரரின் வேட்டை நாய்கள் நுழையாதிருக்க ஜன்னலே இல்லாத ஒரு படுக்கை அறையை கட்டிக் கொடுத்தார்.

வெளிஉலகிலிருந்து மறைந்து வாழ்ந்த அந்த கிராமத்தில் உள்ளூர்க்காரரான புகையிலை தோட்டக்காரர். அங்கேயே சிலகாலமாக

வாழ்ந்து வந்தவர் டான் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா - என்பவரோடு ஊர்சுலாவின் பாட்டனாருக்கு நட்பும் ஒரு வித கூட்டாளி மனப்பான்மையும் வணிகத்தில் பலவித வேதிவினைகளும் ஏற்பட்டு சில ஆண்டுகளில் அவர்களுக்கு அதிர்ஷ்டம் காற்றாய் வீசத் தொடங்கியது. பல நூற்றாண்டுகள் கழித்து ஆரகோனைச் வணிகரின் பேத்தியின் பேத்தி, உள்ளூர் தேயிலை தோட்டக்காரரின் பேரனது பேரனை மணந்தாள். எனவே தனது கணவருக்கு வைத்தியக்காரத்தனமான யோசனைகள் தோன்றும் போதெல்லாம் ஊர்சுலா, பலநூறு ஆண்டுகளுக்கு முன் கடற்கொள்ளையன் சர். பிரான்சிஸ் ட்ரேக் ரியோஹாச்சாவை தாக்கிய விதியை நினைத்துப் புலம்புவாள்.

அவளது ஆற்றாமையை போக்கிக் கொள்ள அது ஒரு வழியாக இருந்தது. உண்மையில் நேசத்தையும் காதலையும் விட ஒருவித ஒப்பந்தம் அவர்களை மரணம் வரை இணைத்து பிணைத்துள்ளது. பெரியப்பா சித்தப்பா குழந்தைகளாக ஒருவருக்கு ஒருவர் உறவுமுறை பெற்றவர்கள் அவர்கள் தங்களது பழைய கிராமத்தில் ஒன்றாகவே பிறந்து நல்ல நாட்களை பழக்கங்களைக் கடந்து தங்களது முன்னோர்கள் தம் கடுமையான உழைப்பினால் அதை ஒரு நேர்த்தியான நகரமாக ஆக்கியதை பார்த்து நன்றாக வளர்ந்தவர்கள் அவர்கள். அவர்களது பிறப்பிலிருந்தே அவர்களது திருமணம் எதிர்பார்க்கப்பட்ட சர்வ சாதாரணமான விஷயமாகிலும் அவர்கள் மணந்து கொள்ள விருப்பம் வெளியிட்டபோதும் உறவினர்கள் உள்ளே புகுந்து நிறுத்தவே முயன்றனர். ஒருவருக்கு ஒருவர் நூற்றாண்டு காலமாக ரத்த உறவு கொண்டு விட்ட இருவேறு சந்ததியர், ஒன்றாகி பிறந்த நல்ல ஆரோக்கியம் கொண்டிருந்த இரண்டு உயிர்கள் ஆபத்தான ஒருவரை கொள்வதன் மூலம் உடும்புகள் பெற்றெடுத்த அவமானம் வந்து விடுமோவென அவர்கள் அஞ்சினர். ஏற்கனவே அதற்கு வெறுப்பும் பேரச்சமும் ஊட்டும் தவறான முன்னுதாரணம் இருந்தது. ஊர்சலாவின் அத்தை ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் சித்தப்பாவை மணந்தபோது நடந்தது அது. நாற்பத்தி இரண்டு வயது வரை ஆண்மை நிரூபண உறவுகளின்றி இருந்த ஒரு மகனை - வளரும் தன்மையுடைய நுனியில் மயிர்க்கற்றை கொண்ட பன்றிவாலுடன் அச்சிறுவனின் கால் தெரியாமல் தொளதொளத்த அரைக்கால் சட்டையை எப்போதும் அணிந்திருக்க வைத்ததோடு பெண்கள் யாரும் அவனைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. உறுதியுடன் போராடி பன்றிவால் மகனுக்கு உதவ முன்வந்து அதை எப்படியும் அறுத்தெறியும் செயலை மாட்டிறைச்சிகாரர் தனது பெரிய இறைச்சி கத்தியால் செய்தபோது அதிலிருந்து பீறிட்டு அவன் இறந்து போனான். 'என்னைப் பொருத்தவரை பேசும் சக்தி இருக்குமேயானால் எத்தனை பன்றி குட்டிகள் வேண்டுமானாலும் பெற்று வளர்ப்பது பற்றி கவலை இல்லை' ஜோஸ் அர்காடியோ புயெண்டியா முடிவாக சொல்-விட்டார் - ஒரே வரியில். பத்தொன்பது வயது இளமையின் வேகம். அது பட்டாசும் வானவேடிக்கையுமான ஒரு திருவிழாவின் பேண்ட் வாத்தியம் மூன்று நாட்கள் முழங்க அத்திருமணம் நடந்தது. அதுமுதல் அவர்கள் எவ்வளவோ நிம்மதியாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் ஊர்சுலாவின் தாய்

அவளை அவளுக்குப் பிறக்கப்போகும் பலவிதமான கொடிய கற்பனை அச்சங்களை விதைத்து ஒரு சமயம் திருமணத்தை முறித்துக்கொண்டு விட தூண்டுவதுவரை அனைத்தையும் செய்தாள். தனது கணவன் உறங்கும்போது தன்னை இச்சைகளின் தூண்டுதலால் கற்பழித்துவிடக் கூடுமெனும் அச்சத்தில் ஊர்சுலா தன் தாய் தைத்துக்கொடுத்த தோலை வைத்து இறுக்கித்தைத்த முரட்டுத்துணி டௌசரை இறுக்கி அணிந்து, அடிவயிற்றில் கீழே குறுக்கும் நெடுக்குமாய் அசைக்கக்கூட இயலாத அளவு இறுக்கிய அந்த தோல் பாண்டேஜோடு உறங்கினாள். அதை இரும்பு கொக்கிகள் வைத்த - அதை அவிழ்ப்பது சாத்தியமில்லை. பகல் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தனது சண்டை சேவல்களோடே காலம் கழித்தான். ஊர்சுலா தனது தாயோடு தையல் துணி பூவேலைகளில் ஈடுபடுவாள். இரவில் இருவரும் நீண்டநேர மல்யுத்தம் - அப்படி தொடுவதே காதல் வெளிப்பாட்டின் ஒரே மாற்று வழியாக இருந்தது - வெகுநேரம் போட்டு வந்தார்கள். பலமாதங்கள் இப்படித்தான் வாழ்க்கை கழிந்தது - ஊரின் பொதுவான விஷயங்கள் மீதான அதீத ஆர்வம் முற்றிலும் வழக்கத்திற்கு மாறான தன்மைகளை ஒருவித புரளியாக பரப்பிய அந்த நாள்வரை. ஊர்சுலா திருமணமான ஓராண்டு கழித்தும் கன்னித்தன்மை கழியாது இருப்பதையும், ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஆண்மையற்றவன் என ஊர்பேசித் தீர்த்தது. புரளியை கடைசியாக கேட்டவன் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா.

"ஊர்சுலா... ஊர் ஜனங்கள் சுற்றிலும் என்ன பேசிக்கொள்கிறார்கள் பார்த்தாயா" அவன் அமைதியாக தன் மனைவியிடம் சொன்னான்.

"பேசட்டுமே" அவள் சொன்னாள், "அது உண்மையல்ல என்பது நமக்குத் தெரியும்".

இதே நிலையிலேயே அடுத்த ஆறுமாதமும் கழிந்தபோது அந்த துரதிர்ஷ்டமான ஞாயிற்றுக்கிழமை வந்தது. அன்று ஜோஸ் அர்காடியோ புயெண்டியா சேவல் சண்டையில் ப்ருடென்சியோ அக்விலாரின் சேவலை கொன்றான். ஆத்திரமும் வெறியும் அடைந்த அவன், சேவல் சண்டை தளத்தைவிட்டு சற்றே பின் வாங்கினான்... சண்டை ரசிகர்கள் காதில் அவன் கத்தப்போவது விழும்விதமாக......

"வாழ்த்துக்கள்" அவன் இறைந்து சொன்னான் ஒரு அறிவிப்புபோல, "போ... உனது சேவலாவது உன்மனைவியை திருப்திப்படுத்தட்டும்".

மிகுந்த காழ்ப்புணர்ச்சி பெற்ற ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தனது சண்டைக்கோழியை எடுத்துக்கொண்டான், "சற்று நேரத்தில் நான் வந்து விடுவேன்" என்று அனைவருக்குமாக அறிவித்தான்; பிறகு ப்ருடென்சியோ அக்விலாரிடம் சொன்னான் தீர்மானமாக: நீ வீட்டிற்கு சென்று ஆயுதம் ஏதாவது எடுத்துக்கொள், ஏனெனில் உன்னை நான் கொல்லப்போகிறேன்".

பத்து நிமிடங்கள் கழித்து அவன் தனது பாட்டனாருக்கு சொந்தமான ஈட்டியை எடுத்து வந்தான். அந்த நகரத்தின் அரைவாசிப்பேர் கூடியிருந்த சேவல் சண்டை அரங்கின் நுழைவாயிலுக்கு அருகே ப்ருடென்சியோ

அக்விலார் அவனுக்காக காத்திருந்தான். ஆனால் அவனை தற்காத்துக்கொள்ள நேரம் எதும் அப்போது இருக்கவில்லை. அந்தப் பிராந்தியத்தின் சிறுத்தைப்புலிகளை ஓட ஓட விரட்டி முதலாம் அவ்ரெலியானோ புயெண்டியா கொன்றிருந்த அதே ஈட்டி அதே அளவு வேகத்தோடும் குறியோடு தவறாது ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவால் ஒரு காளையின் பலத்தோடு வீசப்பட்டிருந்தமையால் அது அவனது தொண்டைக்குழியை கிழித்துச் சென்று தாக்கி இருந்தது. அக்விலாரின் பிணத்தின் மீது ஊர் எழுப்புதல் அதே சண்டைக்கோழி தளத்தில் நடத்தப்பட்ட இரவில், ஈட்டியோடு வீடு திரும்பிய ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தன்மனைவி தோல் தைத்த முட்டுத்துணி கால்சராய் அணிவதை கவனித்து ஈட்டியை அவளைப்பார்த்து குறிவைத்தான். "அதை கழட்டி எறி". தனது கணவனின் நோக்கம் குறித்து ஊர்சலாவுக்கு சந்தேகமோ தயக்கமோ ஏற்படவில்லை. எதற்கும் தயாராக அவனிருப்பதை அவள் உணர்ந்தாள். "இப்போதே சொல்லி விடுகிறேன் பின் விளைவுகளுக்கு நான் பொறுப்பல்ல". அவள் ஏதோ சொல்ல முயன்றாள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஈட்டியை தரைநோக்கி செலுத்தி நிறுத்தினான்.

"நீ உடும்புகளை கருத்தரிப்பதானால்.... நான் உடும்புப் பண்ணையே பராமரிக்கத்தயார்" அவன் சொன்னான். "நகரில் இதற்குமேல் உன் காரணமாக கொலைவிழாது இருக்கட்டும்".

அது அற்புதமான ஒரு ஜூன் இரவாக இருந்தது

ப்ருடென்சியோ அக்விலாரின் சுற்றம் அழுது கதறிய அன்றைய இரவின் ஓலத்திற்கு நடுவே அது குறித்த எந்த சலனமும் இல்லாமல் விடியும்வரை உறங்காது தங்கள் படுக்கையில் அவர்கள் கலந்து கிடந்தார்கள்.

ஒரு சண்டையின் முடிவான விளைவென்றும் மரியாதை குறைவின் எதிர்வினை என்றும்தான் அந்த சம்பவம் விரைவில் மறக்கப்பட்டது. ஆனால் ஊர்சலாவும் அவளது கணவரும் மனசாட்சியின் கூக்குரலுக்கு இரையாகிப்போனார்கள். உறங்கவே முடியாத ஒருநாள் இரவு முற்றத்திற்கு தண்ணீர் சேந்திடச் சென்றவள் தனது தண்ணீர் குடுவை அருகே ப்ருடென்சியோ அக்விலாரை சட்டென கண்டாள். வலியில் துடியாய் துடித்தபடி கழுத்து ரத்தத்தை காட்டுப்புற்களால் மூடித் தடவியபடி துயரமே உருவாய் அவன் அவளைப் பார்த்தபடி இருந்தான். அவளுக்குள் அது அச்சத்தை அல்ல பாவம் என்ற பரிதாப உணர்வையே ஏற்படுத்தியது. அறைக்குத் திரும்பி தான் கண்டதை தன் கணவனிடம் அவள் உடனே சொன்னாள். அவனோ அதை பற்றி அதிகம் அப்போது சிந்திக்கவில்லை. "நமது மனசாட்சிகள் நம்மை அழுத்துகின்றன என்றுதான் அர்த்தம்". இரண்டு இரவுகள் கழித்து ஊர்சலா, ப்ருடென்சியோ அக்விலாரை தனது குளியலறையில் குழாய் நீரில் தனது தொண்டைக்குழி ரத்தத்தை கழுவியபடி இருக்கும்போது கண்டாள். மற்றொரு இரவில் அவன் மழையில் இங்கும் அங்கும் ஓடுவதாகவும் அவள் கண்டாள். தன் மனைவியின் மருட்சியுண்டாக்கும் மாய மனநிலையால் மிகவும் வருத்தமடைந்த ஜோஸ்

அர்காடியோ புயெண்டியா ஈட்டியுடன் வெளிமுற்றம் வந்தான். அங்கே செத்த அம்மனிதன் துயரமுகத்துடன் நின்றிருந்தான்.

"நரகத்திற்கு போ" ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அவனை நோக்கி இறைந்தான், "நீ எத்தனைமுறை வந்தாலும் அத்தனை முறையும், அத்தனை முறையும் கொல்வேன்".

ப்ருடொன்சியோ அக்விலாரும் போகவில்லை. ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவும் ஈட்டியை எறியவில்லை. ஆனால் அதன்பிறகு அவன் உறங்கவே இல்லை. கொலையுண்ட மனிதன் தன்னைப் பார்த்த அந்த பார்வையின் அர்த்தக் கணங்கள் அவனை எண்ணியெண்ணி மருங்கவைத்தன. பாழான பார்வை அது. தனது தாயக நாட்டத்தால் மக்கள் அனைவரின் நலம் விரும்பியான ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அவனுக்காக ஆழ்துயர் அடைந்து பரிதவித்தான். தாள் செய்யும் ஸ்பானிய புல்லினால் காயத்தைத் துடைத்தபடி அதை பிடுங்கிட தண்ணீர் தேடி அவன் தவித்த ஆற்றாமை அவர்களை தாக்கியது. "அவன் மிகவும் கஷ்டத்தில் இருக்க வேண்டும்" அவன் ஊர்சுலாவிடம் சொன்னான். "அவன் மிகுந்த தனிமையில் வாடுவதை நீ காணலாம். அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. மறுமுறை அவன் சமையல் அறையில் தடுப்பிற்கு அருகே தண்ணீர் தேடியபோது வீட்டில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் அவனுக்காக தண்ணீர் குவளைகள் வைத்தாள். தனது அறைக்குள்ளேயே வந்து தனது காயத்தை அவன் கழுவுவதைக் கண்ட ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவால் வாயை மூடிக்கொண்டிருக்க முடியவில்லை.

"சரி... ப்ருடொன்சியோ" அவனிடம் தீர்மானமாக சொன்னான், "இந்த நகரத்தை விட்டே நாங்கள் போகிறோம். எவ்வளவு தொலைவுக்கு முடியுமோ அவ்வளவு தொலைவிற்கு நாய்கள் திரும்பி வரவே போவது இல்லை.... இப்போது அமைதியாக...... சமாதானமாகப் போய்விடு".

இப்படித்தான் மலைகளை கடந்திடும் பயணத்தை அவர்கள் மேற்கொண்டார்கள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் பல நண்பர்கள் நலம் விரும்பிகள் அந்த சாகசப்பயணத்தால் கவரப்பட்டு, அவரைப்போலவே தங்களது வீடுகளை பிரித்து கட்டி, தங்கள் மனைவி, பிள்ளைகுட்டிகளுடன் தங்களுக்கு யாருமே உறுதியளித்திடாத ஒரு இடம் தேடி புறப்பட்டார்கள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஈட்டியை வெளிமுற்றத்தில் புதைத்தான். பின் ஒவ்வொன்றாக சண்டை சேவல்கள் கழுத்தை அறுத்து, அது ப்ருடொன்சியோ அக்விலாருக்கு அமைதியை ஏற்படுத்துமென - கொன்றான். ஊர்சுலா எடுத்துக்கொண்டதெல்லாம் ஒரு டிரங்க் பெட்டியில் திருமண உடை, சில வீட்டுபயோகப் பொருட்கள் ஒன்றிரண்டு பாத்திரம், தந்தையிடமிருந்து வந்த மூன்று தங்கக் காசுகள் வைத்த சிறுபை இவ்வளவே. அவர்கள் முன் திட்டமிடல் ஏதும் செய்யவில்லை அவர் ரியோஹாச்சாவிற்கு எதிர்திசையில் - யாரும் தெரிந்தவர்களின் பார்வையில் பட்டுவிடாதிருக்கவென நடக்கத் தொடங்கினார்கள்". அது ஒரு அர்த்தங்கெட்ட பிரயாணமாக இருந்தது. கிளம்பி பதினான்கு மாதங்கள் கழித்து வழியில், பாம்பு சூப்பும், குரங்குக்கறியும் தின்று கெட்ட வயிறிருந்து

ஒரு மகனை பிரசவித்தாள். அவனுக்கு முழுதும் மனித உருவமாகவே இருக்க பிரயாணம் முழுவதும் அவன் தொங்கும் தூளி ஒன்றில் இருவர் சுமக்கவே பெரும்பாலும் பிரயாணித்தாள் - கால்கள் வீங்கி - வீங்கிய புடைகா ரம்புகள் நீர்குமிழ்போல உப்பியிருந்தபோதும் வேறு வழிக இருக்கவில்லை. சிறிய வயிறும் உள்ளொடுங்கிய கண்களும் நடந்து நடந் களைத்த தோற்றமும் இருப்பினும் பெற்றோர்களை விட குழந்தைக பிரயாணத்தில் அதிக ஆர்வம் காட்டினரேனும் பெரும்பாலும் அவர்களுக் அது உற்சாகமாகவே இருந்தது. இரண்டாண்டுகள் கிட்டத்தட் இப்படியாக நடந்த பிறகு ஒருநாள் காலை அவர்கள் தொடர்ச்சி மலைகளின் மேற்கத்திய பகுதியை முதலில் பார்த்த மனிதர்கள் ஆனார்கள். மேகம் சூழ்ந் அந்த மலையின் மறுபுறமோ வேறொரு உலகை நோக்கி பெரி மரக்கனடர்ந்த மலைச்சரிவு விரிவதை அவர்கள் மகிழ்ச்சியோடு கண்டார்கள். ஆனால் அவர்களால் கடலைக் காண முடியவில்லை. மாதங்கள் அந் மலைசரிவின் சதுப்பு நிலமனைத்திலுமாக சுற்றித்திரிந்து விட்டு ஒரு இரவ கடைசி இந்திய வம்சாவழி மனிதர் தென்பட்ட இடத்திற்கும் வெகுதூரத்தில் பாறைகள் மிகுந்த தலைவிரி தூய்மையே வடிவாய் கண்ணாடி போல் ஓடிய ஒரு நதியின் கரையில் முகாமிட்டார்கள். பல வருடங்கள் கழிந் இரண்டாவது உள்நாட்டு யுத்தத்தின் போது கர்னல் அவ்ரேலியானோ புயேண்டியா இவ்வழியில் மீண்டும் சென்று ரியோ ஹாச்சாவை படையெடுப்பால் திணறவைக்க முயன்றபோது அடக்கம் என ஆறு நாட்கள் கழித்து கண்ட நோக்கது. ஆனால் அன்றைய இரவில் அவர்கள் முகாமிட்ட பொழுதில் அவரது தந்தை ஜோஸ் ஆர்காடியோ புயேண்டியாவின் மனை கப்பல் கவிழ்ந்து பிழைத்தவர்கள் போலிருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கையே நடக்க நடக்க அதிகரித்து இருந்தது. அந்த இடத்தி கண்ணாடி சுவர்களால் ஆன பெருநகரம் ஒன்றை அவர் - ஜோஸ் ஆர்காடியோ புயேண்டியா - கனவாகக் கண்டு அதனின் பெயரை கேட்டபோது சிலர் அவர் இதுவரை அறிந்திராத பெயரை சொன்னார்கள் அவர்கள் யாவருமே வயதாகி பட்டுமே இறக்க சித்தமாயிருந்தார்கள். அதில் வெற்றியும் கண்டார்கள். ஆனால் கனவின் எதிரொலி போலவே ஊர் பெயரும் இருந்தது. மெக்கான்டோ. மறுநாள் அவர் தனது சகாக்கள் அனைவரையும் கடலை காண வேண்டியதில்லை என சமாதானம் செய்தா அங்கே மரங்களை அகற்றி திறந்தவெளியாக்கி புதர்களை அழித்து விட்டு நதியின் கரையில் குளிர் நிறைந்த நிலப்பகுதியை தேர்ந்தெடுத்து கிராமத்தை அமைத்தார்கள்.

ஜோஸ் ஆர்காடியோ புயேண்டியா கண்ணாடி சுவர்களால் ஒரு நகர அமைப்பதை தீப்பெட்டிக்களின் ஜன்கட்டுமை பார்க்கும் வரை தெளிவாக்க முடியவில்லை. பிறகு அதற்கு அர்த்தமனைத்துமே தெளிவாகிவிட்டதாய் அவர் உணர்ந்தார். விரைவில் அவர்கள் பெருமளவுகளாய் ஒன் உற்பத்தி செய் அவைகளால் வீடுகள் கட்டுவார்கள். மெக்கான்டோ தகவல் தாழ்ப்பா உருகி வளையும் வெப்ப பிரதேசமாக இன்றும் இல்லாமல்

பனிப்பிரதேசமாகிவிடும். ஆனால் அவர் ஐஸ்கட்டி தொழிற்சாலை கட்ட உடனடியாக முயற்சி ஏதும் செய்யவில்லை. காரணம் மகன்களின் கல்வி குறிப்பாக இரண்டாவது மகன் அவ்ரெலியானோ, ஆரம்பம் முதலே உலோகவியலிலும் ரசவாதத்திலும் தனிகவனமும், ஆர்வமும் அவனுக்கு இருந்தது. ஆய்வகம் புழுதி கப்பிப் போனதிலிருந்து மீண்டது. மெகியுவாடெஸின் குறிப்புகளை ஆய்ந்து மறுவாசிப்பு செய்தல் எனத் தொடங்கி அவர்கள் பானையில் ஒட்டிக்கொண்ட ஊர்சுலாவின் நாணயத் தங்கத்தை பெயர்த்தெடுக்க பலவாறு முயற்சிகள் மணிக்கணக்கில் நாட்கணக்கில் மேற்கொண்டார்கள். இளமை ததும்பும் ஜோஸ் அர்காடியோ இதில் கிஞ்சிற்றும் பங்கேற்க வில்லை. அவனது தந்தை உடலாலும் உள்ளத்தாலும் உருகி உருகி அந்த வேலையில் ஈடுபட்டிருந்த அந்த நாட்களில் அவன் ஏற்கனவே உடல் பெருத்தவன் இப்போது ஆண்மையின் சின்னங்களை அடைந்திருந்தான். அவனது குரல் மாறிவிட்டது. அவனது மேலுதட்டிற்கு மேல் முதல் மீசை முளைத்திருந்தது. ஒரு இரவில் தனது உடைகளை களைந்துவிட்டு அவன் படுத்துறங்க சென்றபோது அகஸ்மாத்தாய் அவ்விடம் சென்ற ஊர்சுலா வெட்கமும் பரிதாபமும் ஒருங்கே பெற்றாள். தனது கணவருக்கு அடுத்த படியாக வேறுமுதல் ஆண்மகனின் உடலைப் பார்த்திருந்தாள். சராசரியாக இல்லாமல் மிகவும் பெருத்து நீண்டிருந்த மகனின் இல்லற வாழ்வுக்கான தயார் நிலை அவளை தாக்கியது. மூன்றாம் முறை கர்ப்பவதியாக ஆகியிருந்த அவள் திருமணமான புதிதில் கொண்ட திகிலை மீண்டும் பெற்றாள்.

சற்றேறக்குறைய அதே சமயத்தில் தான் வாய் கோணிய ஆனால் எரிச்சலூட்டும் பெண் ஒருத்தி வீட்டில் ஊர்சுலாவிற்கு உதவிகள் புரிய தினமும் வரலானாள். எதிர்காலத்தை தனது சீட்டுக்கட்டை வைத்து கணிப்பதில் திறமை வாய்ந்தவளான அவளிடம் தனது மகனின் அபரிமித விபரீதத்தை குறித்தும் தனது சிற்றப்பா மகனின் பன்றிவால் இத்யாதிகள் போலிருக்குமாவெனும் சந்தேகத்தையும் ஊர்சுலா அவிழ்த்தாள். கண்ணாடி உடைந்து நொறுங்குவது போன்ற ஒரு சிரிப்பை சத்தமாக வீடு முழுதும் அதிரவிட்டு 'நேர் எதிர் இது' அவள் சொன்னாள். 'இதன் அர்த்தம் அவன் அதிர்ஷ்டமுள்ளவன்' தான் கணித்ததை சரிபார்க்க சில நாட்களுக்குப் பிறகு சீட்டாட்ட சீட்டுகள் சிலவற்றுடன் வந்து சமையலறைக்கு அருகே தானிய அறையில் பெரியவன் ஜோஸ் அர்காடியோவை அழைத்துக்கொண்டு கதவை சாத்திக்கொண்டாள். சீட்டுகளை பழைய தச்சன் மேசையில் இப்படியும் அப்படியுமாக போட்டு மனதில் தோன்றியவைகளை அவள் சொல்ல வேன் மறுபுறம் உட்கார்ந்து ஒட்டுதலின்றி கவனித்தான். ஆர்வத்தைவிட இதிலெல்லாம் அலுப்பு அடைந்தவன்போல முகத்தை வைத்துக்கொண்டான். ஆனால் திடீரென்று நீண்டு அவளது கைகள் அவனை தொட்டன. 'வார்டி' அவ்வளவே அவளால் சொல்ல முடிந்தது. உண்மையிலேயே அவள் அதிர்ச்சி அடைந்திருந்தாள். ஜோஸ் அர்காடியோ தனது எலும்புகள் சில்ட அவை நுரையால் நிரம்பியதுபோல உடல்பதற்றம்

பெற்றான். எழுச்சியின்மை, அச்சம், அழும் உணர்வு என பலவும் பீடித்த ஒருத்தன் ஆனான். அப்பெண்மணி ஏதும் அவனது எதிர்காலம் குறித்து குறிப்பிடவே இல்லை. ஆனால் அப்பெண்மணியை இரவெல்லாம் நினைத்து அவளது கையடியில் அடித்த புகை நெடி தன் உடல் அடிப்பதை உணர்ந்தது மட்டுமல்ல. அவள் தன் தாயாக இருந்திடவும் அந்த தானிய அறையிலேயே 'லார்டி' என தொட்டு அவனை நோக்கி சொல்லிக்கொண்டே அவள் இருக்கவும் வேண்டுமென அவன் விரும்பினான்... ஒரு நாள் அதற்குமேலும் பொறுக்க முடியாது எனும் நிலையில் அவன் அவளது வீட்டை தேடி அடைந்தான். அங்கே ஏதும் பேசாது சம்பிரதாயமாக அமர்ந்திருந்தான். அவனுக்கு அங்கே அந்த நிமிடம் அவள் மீது ஏதும் ஏற்படவில்லை. வேறுயாரோ ஒருத்தியாக, அந்த சுகமான வாடை இனிமேலும் நின்று விட்டவளாக, அனிச்சையாக அவள் தெரிந்தாள். கொடுத்த காப்பியை குடித்து விட்டு மனமுடைந்து அவ்வீட்டைவிட்டு அவன் வெளியேறினான். அன்றைய இரவில் ஏராளமான பதட்டத்தோடும் எதிர்பார்ப்போடும் திரும்பவும் அவளை நினைத்தான்..... தானிய அறையில் 'லார்டி' எனச்

சொல்பவளாக அல்ல.... மதியம் பார்த்தவளாக அவள் அவனிடம் வர விருப்பமுற்றான்.

சில நாட்களுக்குப் பிறகு ஒருநாள், அப்பெண்மணி அவனை, சீட்டாட்ட சீட்டுகளில் காலம் கணித்து அறிய, தான் தனது தாயோடு வசித்த வீட்டிற்கு அழைத்து தனியாக தான் தங்கும் படுக்கை அறைக்குள் கொஞ்சம் சுதந்திரமாய் அவனை தொட்டு, அவனுக்கு கதகதப்பும், இச்சைப் பூர்த்தியை விட அச்சத்தையும் கொடுத்தாள். அன்று இரவு தன்னைக் காண வருமாறு அவனை அவள் அழைத்தபோது, அவ்விடமிருந்து உடனடியாக தப்பிச்செல்ல அவனும், தன்னால் அவ்விதம் இரவில் போக இயலாதென தெரிந்தும், சம்மதித்திருந்தான். ஆனால் அந்த இரவில் தனது தகிக்கும் படுக்கையில் இருப்பு கொள்ளாமல் தன்னால் சாத்தியப்படாது என்றாலும் அவளிடம் சென்றேயாக வேண்டுமென புரிந்து கொண்டான். ஏதோ ஒரு உந்துதலில் உடையணிந்து, இருட்டில் தனது தம்பியின் உறங்கும் மூச்சு சுவாசத்தை, பக்கத்து அறையிலிருந்து கேட்ட தந்தையின் வறட்டு இருமலை, ஆஸ்த்துமாவின் பண்ணை கோழிகள் கத்தலை, கொசுக்களின் கொடிய ரீங்காரத்தை.... அதுவரை அவன் கண்டிராத அறிந்திராத ஏதேதோ ஒலிகளை கும்மிருட்டில் கடந்து உறங்கும் வீதிகள் வழியே நடந்தான். கதவே இல்லாதிருக்க வேண்டுமென அவனது இதயம், திறந்து வைப்பதாக அவள் கொடுத்த வாக்குறுதியைவிட அதிகம் விரும்பியது. தனக்கு வழங்கப்பட்ட உறுதியை மதித்து அவன் தொட்டதும் கதவு இருளில் லேசாக திறந்தது. திருப்பாணிகள் துக்ககரமான ஒரு ஓசையை வெளியிட்டு அவனது இதயத்தை துடிக்க வைத்தன. பக்கவாட்டில் நுழைந்தவன் எந்த சப்தமும் தான் எழுப்பி விடக்கூடாதென மிகவும் முஸ்தீபோடு செயல்படுபவனைப் போல நடந்தான். அங்கே அந்த நெடியை உணர்ந்தான். இன்னமும் முன் அறையில்தான் இருந்தான்.... அங்கே அப்பெண்மணியின் மூன்று சகோதரர்களுக்கும் படுக்கை -இருளில் அவன் கண்ணிற்கு தெரியாதிருந்தது. இருளில் அவளது படுக்கை அறையை சுவரை பிடித்து தடவி அடைய இயலாதபடி யாரோ ஒருவனின் படுக்கையில் இடறினான் அவன். அவன் எதிர்ப்பார்த்ததைவிட தூளிப் படுக்கையின் கயிறு கீழாக இருந்தமையால் இது நேர்ந்தது. படுத்திருந்தவனோ உறக்கத்தின் பிடியிருந்து விலகாமலேயே "அன்று புதன்கிழமை" என்று எதற்கோ சொல்விட்டு மீண்டும் உறங்கினான். படுக்கை அறை கதவை தள்ளியபோது அது தரையில் மோதி இழுத்து சப்தம் செய்வதை தவிர்க்க அவனால் முடியவில்லை..... அதிர்ந்து ஒரு நொடி பதைத்தான். உண்மையிலேயே வழியை விட்டுவிட்டான். நெடியை முன் நிறுத்தி சென்றிருக்கலாம்.... ஆனால் அதுவோ எல்லா இடங்களிலும் ஏன் அவனது மேலும் கூட வீசிய வண்ணமே இருந்தது. அந்த அழகிய படுக்கை அறையில் அப்பெண்மணியின் தாய், அவளது மற்றுமொரு மகள், கணவன் குழந்தைகள் என உறங்கிக் கொண்டிருந்தார்கள்.... இருளில் அவனால் அதை காணமுடியவில்லை எனினும் அவன் அசையாது வெகுநேரம் அப்படியே

நின்றான். அனைத்தாலும் கைவிடப்பட்டவனாய் தன்னை உணர்ந்து அவன் அதிசயித்தபோது அவனது முகத்தை ஒரு கை வருடுவதை உணர்ந்தான். ஆச்சரியம் இல்லை... அவன் எதிர்பார்த்து போலானான். பின் அக்கைகளில் தன்னை அவன் ஒப்படைத்தான். தன்னை முற்றிலுமாய் தொலைக்க நேர்ந்த அந்த அமைப்பற்ற இடத்தில் ஆடைகள் அவனைவிட்டுக் களையப்பட்டிருந்தன. ஒரு மூட்டையிலிருந்து கொட்டப்பட்ட உருளைக்கிழங்குகள் மேல் கிடத்தப்பட்டதுபோல உருள வைக்கப்பட்டான். இருளில் தான் நினைத்த பெண்ணின் முகத்தை காண எண்ணி ஊர்சுலாவின் முகத்தையே நினைக்க முடிந்தவனானான். கைகள் பயனற்றுபோன அவ்விடத்தில் பல நாட்களாக செயல்படுத்த நினைத்த காரியம் ஒன்றை செயல்படுத்த ஏதுவற்றதாக கருதிய இடத்தில் தான் செயல்படுத்தப்பட வைப்பதை உணர்ந்தான்.... ஆனால் தன் கால்கள் எங்கே இருக்கின்றன தனது கைகள், தலை எங்கே யாருடையக் கால் யாருடைய முகம் தலை என எந்த முகாந்திரமும் இன்றி தனது சிறுநீரகங்கள் அதிர்வதை, சிறுகுடல் பயத்தால் துடிப்பதை.... உடனே ஓடிவிடத் தவிக்கும் ஒரு அவசரத்தோடு அதேசமயம் எப்போதும் இப்படியே இருந்து விட துடிக்கும் ஆழ்மன ஏக்கத்தோடு அந்த முதிர்ந்து எரிச்சலூட்டிய அமைதியில் அந்த அச்சமூட்டும் தனிமையில் தன்னை இழக்க முடியாதவனானான்.

அவள் பெயர் பிலர் டெனரா. மெக்காண்டோவை கண்டுபிடித்து அங்கே முடிவுக்கு வந்த பெரும் பயணத்தில் தனது குடும்பத்தினரால் வலுக்கட்டாயமாக - தன்னை பதினான்கே வயதில் கற்பழித்துவிட்டு, இருபத்திரண்டு வயதாகியும் விட முடியாது காதத்தும் கூட அதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு அவளை மணக்கவிரும்பா அவனிடமிருந்து பிரிக்க - அழைத்து வரப்பட்டவள். புவியின் இறுதிநாள் வரை அவளை தொடரவும், காக்கவும் உறுதிகள் பல முறை அளித்தவன்... பின்னர் தெரியாதவன் போல் நடந்து தனது பக்கத்தை நேர் செய்ததும், தன் சீட்டாட்ட அட்டைகள் காட்டிய நெட்டையான குட்டையான ஆண்களோடெல்லாம் அவனையே இணைத்து அவள் கண்டாள்.... அதுவும் அட்டைகள் காட்டிய நிலமும் கடலுமான, மூன்றுநாள், மூன்றுமாதம் அல்லது மூன்றாண்டுகள் நிஜம் போலவே இருந்தன. அவளுக்காக காத்திருந்து தொடைகளில் பலத்தையும் முலைகளில் விரைப்பையும் தனது மிருதுவான இயல்பையும் அவள் துறந்தாள். எனினும் இதயத்தின் உறுதியை மட்டும் இழக்கவில்லை. ஒவ்வொரு இரவிலும் நடந்த அறிவுக்கு அப்பாற்பட்ட விளையாட்டுகளால் மிகவும் தூண்டப்பட்டு ஜோஸ் அர்காடியோ அவளது வழிதேடி தினமும் இருள்வீட்டை அடைந்து வந்தான். ஒரு குறிப்பிட்ட நிகழ்வின்போது கதவு சாத்தப்பட்டிருப்பதை கண்டு அதை தட்டினான். களைப்பூட்டிய, முடிவில்லா காத்திருப்பிற்கு பின் அவனுக்கு அவள் கதவை திறந்துவிட்டாள். பகல் பொழுதிலோ, படுத்தபடி முன்னிரவின் ஆட்டங்களை ரசித்து அந்த நினைப்பில் காலத்தை ஓட்டிய அவன், புதியவளாய், உற்சாகியாய், எவ்வித சந்தேகமும் ஏற்படா வண்ணம், வாயாடியபடி அவள் வரும்போதோ மௌனியானான்... ஏனெனில் அவளது

பளீர் சிரிப்பு, புறாக்களை பயந்து ஓடவைத்ததோடு, மூச்சு கேட்காது மூச்சு விடவும் இருதய துடிப்பை அடக்கவும் அவனுக்கு ஆண்கள் மரணத்திற்கு ஏன் அஞ்சினார்கள் என்பதை அவனுக்கு புரியவைப்பதாகவும் இருந்தது அது. எந்த அளவிற்கு தன்னிடமே தான் மூழ்கிப்போனான் என்றால், ஒருநாள் அவனது தந்தையும் சகோதரனுமாய் உலோக ரசவாதத்தில் வெற்றி அடைந்து ஊர்சுலாவின் தங்கத்தை ஒட்டிக்கொண்ட பானை அடியிலிருந்து வெற்றிகரமாக பிரித்தெடுத்த போதும் அம்மகிழ்ச்சியில் அவனால் ஈடுபடமுடியவில்லை.

மர்மமுடிச்சுகள், விளங்கா சிடுக்குகளுடன் கழிக்க வேண்டிய பலமணி நேரங்களை நாட்கணக்கில் செலவிட்டு அவர்கள் வெற்றி அடைந்திருந்தார்கள். ரசவாதம் எனும் கண்டுபிடிப்பிற்காக கடவுளுக்கு நன்றிப்பகள் வழங்குமளவு ஊர்சுலா மகிழ்ச்சியுற்றாள். ஊர்மக்கள் ஆய்வக அறையை நெரிசலாக்கிய அன்று அவர்களுக்கு கோவா பழப்பாகு பரிமாறினார்கள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தனது சொந்த கண்டுபிடிப்புபோல ஆய்வக தட்டில் பெயர்த்தெடுத்த தங்கத்திரவத்தை அனைவருக்கும் காட்டினார். அனைவருக்கும் காட்டியபடி வந்தவர் தனது முதல் மகனிடம் கடைசியாக ஆர்வத்தோடு வந்து நின்றார். கடந்த சில நாட்களாக ஆய்வகம் பக்கமே எட்டிக் கூட அவன் பார்க்கவில்லை. அவன்முன் ஈரம் உலர்ந்து மஞ்சள் நிறத்தில் இருந்த அந்தக் கூழ்போன்ற வஸ்துவை காட்டி, "உனக்கு பார்ப்பதற்கு இது எப்படித் தெரிகிறது" என்று கேட்டார். ஜோஸ் அர்காடியோ மிகுந்த நேர்மையோடு பதிலுரைத்தான்:

"நாய்ப் பீ".

அவனது தந்தை தனது புறங்கையால் விட்ட ஒரு அடியால் அவனுக்கு ரத்தமும் கண்ணீருமாய் வந்தது. அன்றைய இரவில் பிலர் டெனரா ஒத்தடம் கொடுத்தாள். வீக்கத்தின்மீது படாமல் வ ஏதும் அவன் அடையாத வண்ணம் ஜாக்கிரதையாக அவன்மேல் படர்ந்து... அவனை பாதிப்பிற்குள்ளாக்காதபடி தனக்கு தேவையான அனைத்தும் செய்தாள்... தங்களையும் அறியாமல் காதுகளில் ஏதேதோ கிசுகிசுக்குமளவு அவர்களது நெருக்கம் அதிகமாகியது.

"உன்னோடு தனியாக இருக்க விரும்புகிறேன்" அவன் சொன்னான், "சில நாட்களில் நான் அனைவருக்கும் சொல்லிவிடப் போகிறேன்..... பிறகு நாம் இருட்டில் அவதிப்படுவதை நிறுத்திவிடலாம்"

அவன் வாயை அடைக்க அவள் முயலவில்லை.

"அது அற்புதமாகவே இருக்கும்" அவள் சொன்னாள், "நாம் தனித்திருக்கும்போது..... ஒரு விளக்கு வைத்துக்கொண்டு நம்மை நாம் பார்த்துக்கொள்ளலாம்.... நான் யாரும் வந்து விடுவார்களோ எனும் அச்சமின்றி தேவையான அளவு கலந்து கிடப்பேன்..... என் காதில் நீ நினைப்பதை எல்லாம் பேசித் தள்ளலாம்".

தனது தந்தையின் மீது ஆற்றொண்ணா ஆத்திரத்தை வரவழைத்தபடி அதேசமயம் அசுவாசம் தந்த அந்த சம்பாஷணை அவனுக்குள் அந்த நொடியில் மிகுந்த தைரியத்தையும் ஆண்மை எனும் வீரியத்தையும் கொழுந்துவிட வைத்தது..... ஒன்றையும் விடாமல் இயல்பான பெரு ஊற்றாக்கி

அனைத்தையும் தனது சகோதரனிடம் அவன் கொட்டினான்.

ஆரம்பத்தில், முதியவன் மேற்கொண்ட சாகசங்களின் பின்னே இருந்த ஆபத்துகளும், இடங்களுமே அவ்ரெலியானோவின் கவனத்தை இழுத்தன; அவனால் அச்செயல்பாடுகளின் உடற்கூறு அம்சங்களை யோசிக்க முடியவில்லை. ஆனால் மெல்ல மெல்ல அவனுக்கும் ஆர்வமேலீடு எனும் பதட்டத்தோடு கூடிய உடற் பதைப்பு தொத்திக் கொண்டது. தனது முதிய சகோதரன் மேற்கொண்ட அபாயகரமான முனைப்புகளிலும் அதன் இறுதியில் கிடைத்த அபரிமிதமான சுகத்திலும் தன்னைப் பொருத்திப் பார்த்தபோது அவனுக்கு துயரமும், மகிழ்ச்சியும் ஒருங்கே ஏற்பட்டன. அவன் வரும்வரை ஏதோ கரியடுப்பில் கொதிப்பதுபோலிருந்த படுக்கையில் இவன் இரவு முழுவதும் விழித்துக் காத்திருக்கத் தொடங்கினான். பிறகு காலை தாங்கள் எழுந்து கொள்ளவேண்டிய நேரம் வரும் வரை இருவருமாக பேசித் தீர்த்தார்கள். கிசுகிசுத்த அவர்களது வார்த்தைகளின் நெடிதொடர அண்ணனும் பிடித்த அதே ஆர்வமின்மை, நாளெங்கும் சோர்வுணர்வு ரசவாதத்தில் ஈடுபாடற்ற நிலை யாவும் தம்பியையும் பீடித்தது "இந்தப் பயல்களுக்கு மூளை கெட்டுவிட்டது" ஊர்சுலா சொன்னாள், "அதிகமாகி இருக்க வேண்டும் குடல்புழு" கசந்து குமட்டலெடுக்கும் வெறுக்கத்தக்க கஷாயம் ஒன்றை புழுவிதைகளுக்கு தயாரித்து - அதுவரை கண்டிராத ஒரு கொடிய நாற்றத்தோடு அவர்கள் பருகிய அன்று தங்களது மலப்பானையில் ஒரே நாளில் இருவருமாக ஒரே சமயம் இளம் ஊதாநிறத்தில் நாக்குப் பூச்சிகளோடு குடல்வஸ்துக்களை வெளியிட்டு அதை அனைவருக்கும் காட்டி மகிழ்ந்தார்கள்.... தங்களது காதல் சம்பாஷணைகளை மறைத்து ஊர்சுலாவை சமாதானம் செய்யும் தங்களது சோர்வுக்கும் கவனச்சிதறலுக்கும் திசைமாறியாக நடந்ததை கண்டார்கள். தனது சகோதரனின் அனுபவங்களை தனதாக கருதி தானும் அவ்விதமே அனுபவிப்பது மட்டுமல்ல காதல் வயப்படுவது என்பதை அக்குவேறு ஆணிவேறாக சகோதரன் விளக்கமளித்த ஒருசமயம் அவ்ரெலியானோ கேட்டான், "அது நமக்கு எப்படி இருக்கும்".

ஜோஸ் அர்காடியோ உடனடியாக பதிலுரைத்தான் "அது ஒரு பூகம்பம் மாதிரி".

ஒரு ஜனவரி மாத வியாழன் அன்று அதிகாலை இரண்டுமணிக்கு அமரந்தா பிறந்தாள். வேறுயாரும் அறைக்குள் வருவதற்கு முன் ஊர்சுலா குழந்தையை பரிசோதித்தாள். எடைகுறைவாகவும் மிருதுவாக நீர்மப்புதுப் பொருளாகவும் ஈரத்தில் இருந்த அவளது அவயவங்கள் மனிதத்தன்மையோடிருந்ததையும் அவள் கண்டாள்.

அவ்ரெலியானோவால் வீட்டில் நடந்துள்ளது என்ன என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. கூட்டமாக ஊர் வீட்டை நிரப்பியதுகண்ட இரவில் குழம்பி தன் அண்ணனைத் தேடி வெளியே புறப்பட்டான்– பதினோரு மணியிலிருந்து இரவு படுக்கையில் இல்லாத அண்ணனை யாராவது கேட்டால் பதில் சொல்ல வெலவெலத்தே அங்ஙனம் அவன்

வெளியேறினான். ஆனால் பிலர் டெனெராவின் படுக்கை அறையிருந்து எப்படி அவனை வெளியே கொண்டு வருவதென்று தெரியாதது மட்டுமல்ல. அதற்கு அவகாசமும் அற்ற பதற்றம் அவ்ரெலியானோவை குழப்பியது. பலமணிநேரம் பிலர் டெனெராவின் வீட்டை வட்டமிட்டபடி பலவகையில் சமிக்ஞை ஒலிகள் எவ்வளவோ எழுப்பியும் பலனில்லாமல், ஏறக்குறைய விடிந்திருந்த தருணத்தில் வீடு திரும்பிய அவன், தன்தாயின் படுக்கை அறையில் புதிதாய் பிறந்த குழந்தையை கொஞ்சியபடி அப்பாவிபோல முகத்தை வைத்துக் கொண்டிருந்த ஜோஸ் அர்காடியோவைக் கண்டான்.

குழந்தைப் பேருக்குப் பிறகு ஊர்சுலா ஓய்வெடுத்த நாற்பதாவது நாளில் ஜிப்ஸிக்கள் திரும்பி வந்தார்கள். ஐஸ்கட்டி கொண்டுவந்த அதே வித்தைகாட்டிகளும், கூத்தாடிகளும்தான். மெகியூவாடெஸ் ஆட்களை போல வளர்ச்சிக்கான சின்னமாய் அறிவியல் கண்டுபிடிப்புகளை காட்டாது, வித்தைப் பொழுதுபோக்கு களியாட்டங்களே அவர்களது நோக்கமாக இருந்தது. ஐஸ்கட்டியைக் கூட மனிதனுக்கு அதன் பயன்பாட்டை விளக்காது வித்தைக் காட்டவும் காட்சிப் பொருளாக வைக்கவுமே செய்தனர். இம்முறை பலவிதமான அதிசயங்களுடன் ஒரு பறக்கும் கம்பளியை எடுத்து வந்தனர். ஆனால் அதை புதிய போக்குவரத்திற்கான அறிவியல் சாத்தியமாக காட்டாது: சவாரி செய்யும் பொம்மை களியாட்டமாக்கி காசு கேட்டனர். உடனே ஊரே திரண்டு தங்கள் இல்லத்து கடைசி தங்கக் காசையும் எடுத்துவந்து கட்டி, ஊர் வீடுகளை மேருந்து பார்த்தபடி சுற்றிவர நீ முந்தி நான் முந்தி என்று நின்றது. திடீரென்று ஊரில் ஏற்பட்ட சலசலப்பும் ஒழுங்கு குலைவும் ஜோஸ்கர்காடியோவிற்கும், பிலர் டெனெராவுக்கும் குதூகலத்தை வழங்கியது. இருளின் முகம் போய் பகலின் முகத்தோடு அவர்கள் பரவசமடைந்தார்கள். பிலர் டெனெரா தான் முதல் அமைதியை உடைத்தாள். தனது சகாவாக ஒட்டிக்கொண்ட ஜோஸ் அர்காடியாவின் செயலால் கவரப்பட்டு வாயை திறந்தாள். “இப்போது நீ உண்மையான மனிதன்”, அவள் அவனிடம் சொன்னாள், “ஆண் பிள்ளை”. அவள் எதை சொல்கிறாளென்று புரியாமல் அவன் விழித்தபோது...... நேரடியாக விஷயத்திற்கு வந்தாள்.

“நீ அப்பாவாகப் போகிறாய்”

தனது வீட்டை விட்டு ஜோஸ் அர்காடியோ எங்குமே வெளியில் செல்ல தைரியப்படவில்லை. சமையலறையிலிருந்து கேட்ட பிலரின் வெடிச்சிரிப்பும் ஆய்வகத்தின் வேலைகளோடு ஒன்றுவதுமே அவனுக்கு போதுமானதாக இருந்தன. ஊர்சுலாவின் முழு ஆசீர்வாதத்தோடு ரசவாத ஆய்வகத்தில் இப்போது நாள் முழுவதும் வேலைகள் தொடர்ந்தன. தொலைந்த தன் முதல் மகன் மீண்டும் ஆர்வத்தோடு ஆய்வகம் திரும்பியதைக் கண்ட ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அவனை வாயார புகழ்ந்து, மனதார வாழ்த்தி வரவேற்றார்.... அத்தோடு நில்லாது தத்துவவாதியின் முட்டையை.... கல்லை உற்பத்தியாக்கம் செய்வதில் அவனது வேலையை தொடங்க வைத்தார். அவ்வேலையில் அவனும் அப்பாவிபோல

முழுமையுடன் ஈடுபடத் தொடங்கினான். ஒருநாள் மதியம் வெயில்கால இருவரும் தங்களது ஆய்வக ஜன்னல் அருகே காற்றில் மிதந்தபடி பறந் பறக்கும் கம்பளத்தை ஒரு ஜிப்ஸி இயக்கிட, ஊரின் சிறுவர் சிறுமிய உட்கார்ந்து உற்சாக இரைச்சல்களுடன் பயணிக்க கண்டு ஆர்வம் உற்றனர் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவோ அதை பார்க்கக்கூட இல்லை. “அவர்கள் கனவில் மிதக்கட்டும்” அவர் சொன்னார் “நாம் அந்த மிதக்கும் துப்பட்டாவை விட வசதியான அதேசமயம் மேலும் உயரத்தில் உண்மையிலேயே பறக்கும் ஒன்றை விரைவில் கண்டுபிடிப்போம் என்றார் தான் காட்டிய அபரிமித ஆர்வத்திற்கு இடையிலும் தத்துவவாதி முட்டையின் சக்தி என்ன என்று ஜோஸ் அர்காடியோவிற்கு ஒன்றும் புரியவில்லை. அதை ஏதோ ஒரு கண்ணாடிக்குடுவையின் அடிப்பாகமென்றே அவன் நினைத்து மட்டமாக உருவாக்கப்பட்டதென எரிச்சலுற்றான். உணவு உண்ணும் விருப்பமின்றி, உறக்கமும் இன்றி அவன் குலைந்து போனான். எப்போதும் சோகமான முகத்துடன் யாருடனும் பேசாத தனிமைக்கு அவன் தள்ளப்பட்டான். அவனது தந்தை தனது வெளியுலகம் தேடிச் சென்ற சாகசப் பயணம் தோற்ற போது இருந்த சோர்ந்த மனநிலை அவனுக்கு இருந்தது. எந்த அளவிற்கு சோர்வு மிகவும் மோசமாக வெளித் தெரிந்தது என்றால் அவ்ரெலியானோவோடு பேசுவதை நிறுத்தி முற்றாக தனக்குத்தானே அவன் முடங்கியது மட்டுமல்ல, ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவே போதும் ஆய்வக வேலை அவனை முழுதும் உள்வாங்கிவிட்டதென கருதி அவனுக்கு சற்று விடுதலை வழங்கி வெளியே அனுப்பிடும் அளவிற்கு அது முற்றியது. தனது சகோதரனின் நிலை அப்படி இருப்பதற்கும் ஆய்வகத்தில் தத்துவவாதிமுட்டை உற்பத்தி தோல்விக்கும் சம்பந்தம் இல்லை என்பது அவ்ரெலியானோவிற்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவனது நம்பிக்கைக்கு பாத்திரமாகி இனியும் சம்பாதிக்க அவனால் முடியவில்லை. முன்பிருந்து தன்னிச்சை நிலையை அவன் முற்றிலுமாய் இழந்திருந்தான். உடனிருந்து பொழுதுகளை அழித்து சம்பாஷணைக்கு உட்படுத்த முடிந்த மனிதனாக இருப்பதை கடந்து இப்போது ஜோஸ் அர்காடியோ எரிந்து விழுந்தான். எல்லாவற்றிலுமிருந்து விலகி தனித்திருக்க வேண்டுமென்ற வெறியும் உலகைநோக்கிய நிலையான வெறுப்பும் ஏறி ஒருநாள் இரவு தனது படுக்கையை விட்டு அவன் கிளம்பிய அவன் பிலார் டெர்னெரா வீட்டிற்கு செல்லவில்லை. மாறாக அங்கே நடந்த ஜிப்ஸிக்கள் வித்தை காட்டும் நோக்கி சென்றான். விசித்திரமான பலவகை கருவிகள் எதன்மீதும் விருப்பமின்றி சுற்றித்திரிந்துவிட்டு பின் அங்கிருந்த காட்சிப் பொருட்களிலேயே தன்னை மிகவும் கவர்ந்த ஒன்றை கண்டுபிடித்தான். ஒரு ஜிப்ஸி இளம்பெண் ஏறக்குறைய சிறுமி. முத்துமாலைகள் கழுத்தை எடையோடு அழுத்திட— ஜோஸ் அர்காடியோ தன்வாழ்வில் கண்டதிலேயே அழகான பெண்.

தனது பெற்றோர்க்கு கீழ்ப்படியா பாவத்திற்காக பாம்பாக மாற்றப்பட்ட ஒருவன் வைக்கப்பட்டிருந்து தியாகம் தரும் ஒரு வித்தையை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்

ஜோஸ் அர்காடியோ வேறு எதிலும் கவனம் செலுத்தவில்லை. பாம்பு மனிதனின் துயர சம்பாஷணைகள் நடந்து கொண்டிருக்கையில் கூட்டத்தைக் கடந்து முதல் வரிசையில் அந்த அழகிய ஜிப்ஸி பெண்ணின் பின்னால் நின்றிருந்தான். அவளது பின்பக்கத்தை நோக்கி அழுத்தினான். முதல் தன்னை விடுவித்துக் கொள்ள அவள் முயன்றாலும் ஜோஸ் அர்காடியோ மேலும் கூடுதலாக அவளை அழுத்தினான். பிறகு சற்று நேரத்தில் அவள் அவனை உணர்ந்தாள். அழுத்தியதன் அளவீடு குறித்த அச்சம், நம்பிக்கையின்மை மற்றும் நடுக்கத்தால் பீடிக்கப்பட்டு அசையாதிருந்த அவள் கடைசியில் அவன் பக்கம் திரும்பி ஒரு பதற்ற சிரிப்பு சிரித்தாள். அந்த நேரத்தில் இரண்டு ஜிப்ஸிக்கள் பாம்பு மனிதனை ஒரு கூண்டுக்குள் அடைத்து கூடாரத்திற்குள் எடுத்துச் சென்றனர். அந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய ஜிப்ஸி அறிவித்தான்:

“இப்போது, தான் பார்க்கக் கூடாத ஒன்றை பார்த்த குற்றத்திற்கு தண்டனையாக ஒரு பெண்ணின் தலையை கழுத்து வரை இப்போது முதல் நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு தினமும் இரவில் துண்டிக்கப்படப் போவதை பார்க்க இருக்கிறீர்கள்”.

அந்த தலை அறுப்புக் காட்சியை காண அந்த ஜிப்ஸி பெண்ணும், ஜோஸ் அர்காடியோவும் அங்கே இருக்கவில்லை. அவர்கள் அவளது கூடாரத்திற்குள் விரைந்து சென்று தாங்கொண்ணா ஆர்வம் மிகுதியில் ஆழமாக முத்தமிட்டபடி ஆடைகளை களைந்தெறிந்தனர். அந்த ஜிப்ஸிப் பெண் தன் உடல் தரித்திருந்த வலை நாடா கோர்த்த தோல் உள்ளாடைகள் அனைத்தையும் அவிழ்த்துவிட்டு நின்றாள்..... அவள் உண்மையில் மிகச்சாதாரணமானவள். எலும்பு தெரியும் குட்டித்தவளையைப் போல் கூம்பிய முலைகளும், ஜோஸ் அர்காடியோவின் முன் கைகளின் அளவு கூட தேறாத தொடை மற்றும் கால்களையும் கொண்டு சோனியாக காட்சியளித்தபோதும் அவன் மீது தீராத மோகமும் சூடான காதல் வயப்படும் திராணியும் ஒரு போதும் பின்வாங்காத இளமையும் கொண்டிருந்தாள். இருந்தும் ஜோஸ் அர்காடியோவால் அவளது அழைப்புகளுக்கு சரியாக ஒத்துழைக்க அப்போது முடியவில்லை. அதற்கு காரணம் இருந்தது. மற்றவர்கள் வித்தைகளை முடித்து வந்தபடியும் வித்தை சாமான்களை வைப்பதும் எடுப்பதுமாகவும் இருந்த ஒரு பொதுஇடமாய் அந்தக் கூடாரம் இருந்தது. தாயம் ஆடிட படுக்கைக்கு வெகு அருகே தரை உட்கார வந்தவர்களும் இருந்தார்கள். மேலே கூடாரம் முழுவதையும் பளிச்சென காட்டியபடி ஒரு விளக்கு வேறு எரிந்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட சூழலில் நிர்வாணமாய் ஜோஸ் அர்காடியோ படுக்கையில் நீட்டிப் படுக்க அப்பெண் அவனை கிளர்ந்தெழ செய்ய முயற்சிகளில் ஈடுபட்டாள். உடலெங்கும் நன்கு செழித்திருந்த ஜிப்ஸி பெண் ஒருத்தி ஜிப்ஸியாகவும் மெக்காண்டோ காரனாகவும் அல்லாத ஒருவனுடன் வந்து அவசரமே இல்லாது படுக்கைக்கு முன் உடைகளை களையத் தொடங்கினாள். தன்னையும் அறியாமல் அகஸ்மாத்தாக அப்பெண் ஜோஸ் அர்காடியோவையும் அவனது பிரம்மாண்ட மிருகத்தையும் கண்டு ஒருவித

பரிதாபக் குரலில் கூவினாள்.

'ஓ... பாஸ்' ஆச்சரியத்தில் அலறினாள். "உன்னை இதே நிலையில் வைத்து பராமரிக்கட்டும்"

ஜோஸ் அர்காடியோவின் கூட்டாளி அவர்களை தங்கள் போக்கில் விடுமாறு தீர்மானமாக கூறியதும் அந்த ஜோடி படுக்கைக்குக்கீழே

மல்லாந்தது. அவர்கள் செய்த லீலைகள் ஜோஸ் அர்காடியோவை தைரியமாய் எழவைத்தன. முதல் தொடர்பில் ஜிப்ஸி பெண்ணின் எலும்புகள் முனை பிறழ்வு அடைந்த நிலையில் முகமூடிகள் பெட்டி நிறைய கிழிந்து நொறுங்கும் கலீர் ஒயுடன் அவளது தோல் உடைந்து வேர்வை துளைத்து வெளியேறி கண்களில் கண்ணீர் நிறைந்து முழு உடலும் துன்பம் பற்றி எரியும் தீக்கனலை உணர்ந்தாள். ஆனால் வலியை மிகுந்த வைராக்கியத்தோடு தாங்கும் அவளது குணமும் அதி தைரியத்துடன் பாராட்டும்படி இருந்தன. ஜோஸ் அர்காடியோ தான் மேலே காற்றில் செந்தூக்காய் உயர்த்தப்பட்டதாக உணர்ந்தான். தெய்வீக தூண்டுதலுறும் திசையில் நகரும் அந்த மெல்லிய காற்றின் அந்தரத்தில் மிதந்த அவன் தனது இதயம் திறந்து கனிந்த தூய அன்பின் வாடையெங்கும் பரவக்கண்டான். அந்த ஜிப்ஸிப்பெண்ணின் காது

வழியே புகுந்து அவளெங்கும் தூர்ந்து சென்ற அவன் அவளின் மொழியாக மாறி அவளது வாய் வழியே வெளிவந்து கொண்டிருந்தான். அது வியாழக்கிழமை. சனியன்று இரவில் ஜோஸ் அர்காடியோ தனது தலையில் சிவப்பு துணியை சுற்றிக்கட்டிக் கொண்டு ஜிப்ஸிக்களுடன் ஊரைவிட்டே பயணப்பட்டிருந்தான்.

அவனைக் காணாததை உணர்ந்தபோது ஊர்சுலா கிராமம் எங்கும் சென்று அவனைத் தேடினாள். ஜிப்ஸிக்கள் முகாமிட்டிருந்த இடத்தில் குப்பை குவியல்களும் முகாம் தீயின் எஞ்சிய புகையுமே இருந்தன. அந்த குப்பையில் முத்துக்கள் மணிகளைத் தேடிக்கொண்டிருந்த ஒரு ஆள் ஊர்சுலாவிடம் அன்றைய முதல் நாள் இரவில் அவளது மகனை பாம்பு மனிதன் கூண்டை தள்ளிக்கொண்டு சென்று வன எருமை வண்டியில் ஏற்றுவதைக் கண்டதாகக் கூறினான். "அவன் ஒரு ஜிப்ஸி ஆகிவிட்டான்" அவள் தனது கணவரிடம் இறைந்தபோது, அவன் மறைவு குறித்த மிகலேசான பதற்றத்தைக் கூட அவரிடம் காண முடியவில்லை.

"இது உண்மை என்றே நம்புகிறேன்" அவர் ஜோஸ்அர்காடியோ புயெண்டியா, கல்வத்தில் கனிமத்தை அரைத்து வெப்பமேற்றி மண்ணில் கலந்து மேலும் மேலும் ஆயிரம் முறை வெப்பமேற்றும் வேலையை நிறுத்திடாமலேயே சொன்னார், "அந்த வகையில் கட்டாயம் ஒரு மனிதனாகிட அவன் கற்பான்".

ஊர்சுலா ஜிப்ஸிக்கள் சென்ற பாதையை கேட்டறிந்தாள். அவள் அவர்கள் சென்றதாக கூறப்பட்ட வழியில் வேகமாக நடந்தாள். அவ்விதம் நடந்தால் இன்னமும் கூட அவர்களை பிடித்து விடலாமென்றே அவளுக்குத் தோன்றியது. கிராமத்திலிருந்து மேலும் மேலும் தொலைவிற்கு நடந்து பின் திரும்பிட முடியாது எனும் எல்லையையும் கடந்தாள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தன் மனைவி காணாமல் போயிருந்ததை இரவு எட்டுமணி வரை உணரவில்லை. தாதுக்களின் அடுக்கை சூடேற்றுவதை நிறுத்தி விக்கி விக்கி அழுது தொண்டை கட்டிப்போன அமரந்தாவிற்கு என்ன நேர்ந்தது என்பதைக் காண சென்றபோதுதான் நிலமை புரிந்தது. பார்த்துக்கொள்வதாக மீண்டும் மீண்டும் வாக்களித்த ஒருத்தியிடம் அமரந்தாவை ஒப்படைத்துவிட்டு கிராமத்து பலவான்கள் சிலரோடு ஆயுதங்கள் சகிதம் இரவில் ஊர்சுலாவைத் தேடி ஜோஸ் அர்காடியோ புயெண்டியா புறப்பட்டார். அவ்ரெலியானோவும் உடன் சென்றான். அவர்கள் பேசிய மொழி புரியவில்லை எனினும் சில இந்திய வம்சாவழி மீனவர்கள், சைகைகளில் தாங்கள் பார்க்க யாருமே தென்படவில்லையென கூறினார்கள். மூன்று நாட்கள் எவ்வித பலனுமின்றி தேடிவிட்டு அவர்கள் திரும்பி வந்தார்கள்.

பல வாரங்கள் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவால் பீதியிலிருந்து வெளியே வரமுடியவில்லை. ஒரு தாயைப்போல குழந்தை அமரந்தாவை அவர் பார்த்துக் கொண்டார். அவளை குளிப்பாட்டி, உடைமாற்றி தாதியாக இருந்து கடமையாற்றி ஊர்சுலா பாடியும் வராத சில பாடல்கள் பாடி இரவில்

தூங்க வைப்பது வரை பலவும் செய்தார். நாளுக்கு நான்குமுறை ஆய் கழுவி, அவர் அவளை பேணிய நாட்களின் இடையில் ஒருநாள் பிலர் டெனொரா தான் உதவிடவும் வீட்டு வேலைகளில் ஒரு கை கொடுக்கவும் முன்வந்தாள். தனது மர்மமான உள்ளுணர்வு உந்துதல்களை அதீத அளவு இந்த துரதிர்ஷ்ட சம்பவங்களால் வளர்த்தெடுத்திருந்த அவ்ரெலியானோ உள்ளுணர்வுக்கு அப்பாற்பட்ட வெறுப்பால், பிலர்டெனொராவால் உந்தப்பட்டான். ஒருவகையில் தனது அண்ணனது தலைமறைவிற்கும் அவனைத் தேடிச்சென்ற தனது தாயின் திசையறியா திடீர் தொலைந்து போதலுக்கும் மறைமுகக் காரணம் பிலர் டெனொராதான் என்பதை அவனுக்கு எது உணர்த்தியதோ அது அவனை அமைதியாக அவளை வெறுப்போடு அணுக வைத்து பிறகு வீட்டிற்கே வராதவாறு அவளை விரட்டவும் செய்தது.

காலம் பொருட்களை விஷயங்களை அதனதன் இடத்தில் வைத்தது. ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவும் அவரது மகனும் எப்போது ஆய்வகத்திற்கு திரும்பினார்கள். எப்போது புழுதி துடைத்து தாதுக்கள் வெப்பமேற்றி, எப்போது தண்ணீர் குழாயை ஒளியேற்றி தாதுக்களின் அடுக்கில் வருடக் கணக்கில் உறங்கிய உலோகத்தை தட்டியெழுப்புவார்களென்றும் நேரம் காலமின்றி உழைத்தார்கள். தனது தூளிக் கூடையில் படுத்திருந்த அமரந்தாவே கூட தனது தந்தையும் அண்ணனுமாக செய்த விபரீத வேலைகளை பாதரசம் தீயும் வாடையோடு காற்று சுழன்றடித்த அந்த ஆய்வறையில் இருந்தபடி ஆர்வத்தோடு கவனித்தாள். ஊர்சுலா வழி தவறிய மாதங்கள் சிலவற்றின் பின் ஒரு குறிப்பிட்ட நிகழ்வின்போது அங்கே விபரீதமான பல விஷயங்கள் நடந்தேறின. அங்கிருந்த அலமாரியில் காயாக வைக்கப்பட்டு மறக்கப்பட்ட ஒரு குடுவை திடீரென்று எடை கூடுதலாகி அசைக்க முடியாத ஒன்றாகியது. அவளை மேசை மீதிருந்த பானைத்தண்ணீர் நெருப்பில் கொதித்து அரைமணி நேரத்தில் முற்றிலும் ஆவியாகியது. இந்த விபரீதங்களை ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவும் அவரது மகனும் அதீத பேரதிசயங்கொண்ட ஆர்வம் மேடும் அச்சத்தோடு கண்டு விளக்கம் ஏதும் அளிக்க முடியாது திணறிக் கொண்டிருந்தனர். பிறகொருநாள் அமரந்தாவின் தொட்டில் கூடை தானாக நகர்ந்து அவ்ரெலியானோ ஓடிப் பதறி பிடிக்கும் வண்ணம் ஒரு முழு சுற்று சுற்றி வந்தது. ஆனால் அவனது தந்தை எவ்வித பதட்டமும் இன்றி தொட்டில் கூடையை மேசைகாலில் கட்டிவிட்டு நீண்டநாள் காத்திருந்த தவிர்க்க வியலாத தருணம் வந்து விட்டதுபோல நடந்து கொண்டார். இந்த நிகழ்வின்போதுதான் அவ்ரெலியானோ நினைவு கொள்ளும் ஒரு வாசகத்தை அவர் சொன்னார்.

"நீ கடவுளுக்கு பயப்படவில்லையாயின், உலோகங்களின் வழியே அவருக்கு பயப்படு.........."

திடீரென்று தான் மறைந்த ஐந்தாவது மாதம், ஊர்சுலா திரும்பி வந்தாள். மிகவும் சோர்ந்துபோய் ஆனால் புத்துணர்வோடு அவள் திரும்பி இருந்தாள் —— அதுவரை கிராமம் கண்டிராதவகை புதிய ஆடைகள் உடுத்தி

இருந்தாள். அது ஏற்படுத்திய தாக்கத்தை தாங்கி நிற்க ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவால் முடியவில்லை. "அப்படியேயாகட்டும்....." அவர் கத்தினார். "இது ஒருநாள் நடக்கும் என்பதை நான் அறிவேன்"..... ஆனால் உண்மையிலேயே அப்படி நடக்கும் என்று அவர் நம்பவே செய்தார். தனிமங்களை தூர்ந்தெடுக்கும் அந்த நீண்ட நெடும் பணியால் சிறைபட்ட காலத்தில்...... இதயத்தின் ஆழத்திருந்து வேண்டினார், ஒரு அற்புதம் நடக்க வேண்டும்...... தத்துவவாதியின் கல்லை கண்டுபிடிக்கும் அற்புதம் அல்ல... உலோகங்களை சுழிவுறாமல் காக்கும் மூச்சை பிடிக்கவும் அல்ல..... வீட்டின் தாழ்ப்பாள்களையும் பூட்டுகளையும் தங்கமாக்கும் அற்புதமும் அல்ல...... மாறாக அவர் இறைஞ்சிய அற்புதம்..... அப்போது நடந்ததுதான் ஊர்சுலா திரும்புதல்! ஆனால் அவளோ அவரது மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்பவளாக இல்லை. ஏதோ ஒரு மணிநேரம் வெளியே சென்று வந்தவளைப் போல அவரை சம்பிரதாயமாக முத்தமிட்டு அவரிடம் சொன்னாள்:

"கதவுக்கு வெளியே பாருங்கள்"

அங்கே நின்றிருந்த கூட்டத்தை கண்டபோது அந்த அதிர்ச்சியிருந்து ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவால் நீண்டநேரம் வெளிவரமுடியவில்லை. அவர்கள் ஜிப்ஸிக்கள் அல்ல. அவர்களைப் போன்ற ஆண்களும் பெண்களும்..... நீள்முடியும் கருத்த தோலும்.... அவர்களது மொழியே பேசி அவர்களது வகளையே உணர்ந்த மனிதர்கள். அவர்களிடம் உணவுப் பொருட்கள் ஏற்றிய கோவேறுக் கழுதைகள், காளை வண்டிகள், மர இருக்கைகள், சமைக்கும் பாத்திரங்கள்,இருந்தன. கூவி விற்க விரும்பாத ஆனால் விற்பனைக்கு கடை விரிக்கப்பட்ட எளிய சில கருவிகளும் இருந்தன சதுப்பு நிலத்தின் மறுபக்கதிருந்து - மெக்காண்டோவிருந்து இரண்டுநாள் நடைதூரத்திருந்த ஆண்டில் ஒவ்வொரு மாதமும் தபால்கள் கோவேறுக் கழுதைகளில் வரும், கிராமங்களிருந்து அங்கே நல்ல செழிப்பான வாழ்வு வாழும் பல குடும்பங்களிருந்து அவர்கள் வந்திருந்தார்கள். ஊர்சுலாவால் ஜிப்ஸிக்களை பிடிக்க முடியவில்லை ஆனால் புதிய கண்டு பிடிப்புகளைத் தேடி தனது கணவன் சென்று தோல்வி கண்ட வழிகளை கண்டுபிடித்து திரும்பிட அவளால் முடிந்திருந்தது. ●

தொடரும் . . .

தலித் கவிதை வெளியில் என்.டி. ராஜ்குமார்

'ரத்த சந்தனப் பாவை'யை முன்வைத்து

காசி மாரியப்பன்

தமிழில் - ஆகச்சிறந்த தலித் கவிஞர் பெயர்களைக் கேட்டால் என்.டி.ராஜ்குமாரின் பெயரை முதலில் சொல்வேன். அதற்கான ஆதாரவளமும் ஆங்காரமும் சொல்முறையும் தாட்டியமும் அவரிடம் இருக்கின்றன. மதங்கொண்ட யானையின் தடதடப்போடும் புலிப்பாய்ச்சலோடும் ஏகும் கவிதைகளில் மந்திரம் போற் பிணிக்கும் சொல் நடை எல்லாவற்றையும் உடைத்துப் பெருகியோடும் காட்டாறு ஒப்பப் பீறிடுகிறது.

இராப்பொழுதின் உச்சத்தில் சன்னதம் கொண்டு பேய்களோடும் தேவாதிகளோடும் பேசிக் களித்துக் குதித்தாடும் கோமரத்தாடியின் தீப்பந்தத்தில் பட்டுத் தெறிக்கும் இருளெனப் பரவும் கவிதைகள்; நாற்றிசைத் தெய்வங்களுக்குப் பலி எறிந்து ஊளையிட்டுக் குதூகலித்து நெஞ்சு பிளந்த கிடாய்களிடம் ஊட்டெடுக்கும் பேரோசயைக் கொண்டவை.

கவிதை ஓர் உன்னதம்; நித்யம்; அழகு; அழகான சொற்களின் அணிவகுப்பு; வலிமை உணர்ச்சிகளின் கரை உடைப்பு; தவம்; கவிக்கொடை போன்ற வரையறைகளைப் புரட்டிப் போடுபவை என்.டி. ராஜ்குமாரின் கவிதைகள். கலயக் கள்ளோடும் மிகு சாராயத்தோடும் கஞ்சாவோடும் கருக்கொண்டவை. சுடுகாட்டு வெளியைத் தனதாக்குபவை வெறி கொண்ட பொழுதுகளில் பிறப்பவை.

> எனது சாத்தானிடமிருந்து புதிய சொல்லை வ்வாங்க
> ஊற்றிக் குடித்தேன் வடிசாராயத்தை *(10)*
> மயக்கும் கஞ்சாவைப் போலென் கவிதையிலொரு
> திருகலைச் செய்யும் மந்திரச்சொல் *(44)*
> தனது விரல்தடம் பதிந்த தூரிகைகளை
> எனது கள்ளுக் கலயத்தில் இட்டு வைக்கிறான் *(21)*

என்று கவிதைப் பிறப்பிடங்களைக் கண்டறிகிறது. கலசம் நிறைத்த மதுவன்று கலயம் நுரைக்கும் கள். அவை சாத்தான்களையும் சுடலைகளையும் அடைகின்றன.

> ஆயிரத்தி எட்டு சாத்தான்களாய்
> ஊளையிட்டுக் கொண்டோடிக் களிக்கிறேன் *(21)*

சுடலைப் புகையை நாசியிழுத்து
தலைவலியைத் தீர்த்துக் கொள்கிற தொரு கவிதை (27)
சுடலையில் ஆணியடிக்க மந்திரவாதி
செம்புத்தகட்டில் வைத்திருந்த
ரகசிய மொழியை எடுத்து வந்தேன் (10)

என்கின்றன.

'பெருந்தெய்வ' அனுக்கிரகத்தால் நம் வனங்களில் கவிந்த வெறுமை, தீரா நொய்ம்மை, விளையா மண் பொழியா வானம், வங்கொடுமை கடவுளர் சீதனம் நதியில் மூழ்கக் கரையும் பாவம். பாவம் சுமக்கும் அவல வாழ்க்கை. நாம் பேய்களைக் கொண்டாடுவோம். சாராயத்தில் பொங்கும் உவகையொலியில் கடவுள்கள் ஓடட்டும். இழைத்த கொடுமைகளைச் சாத்தான் அருளால் விரட்டுவோம். கவிழ்ந்து கிடக்கும் 'ரத்த சந்தனப்பாவை'கள் நிமிரட்டும் என்பது தலித் கவிதை அழகியலாக இருக்கிறது.

செய்யக்கூடாது என்ற இடத்தில் செய்த கவிதை
செய் என்ற இடத்தில் செய்யாத திமிர்பிடித்த கவிதை (71)

என்ற வரிகள் ராஜ்குமாரின் அரசியலையும் கவிதை அழகியலையும் விளக்கி விடுகின்றன.

துளசிமாலை நறுமலர்கள்
சந்தனக் களபம்
சிந்தூரத் திலகம்
அலங்காரப்
பந்தலிட்டு வைத்திட்ட பூம்படப்பை
கால் கொண்டடித்து
கைகொண்டள்ளிக் குலைத்து
ஜோடனைகளைக் கழற்றி எறிந்தாடும்
உக்கிரனின் கையிலென் கவிதை
எரிந்து கொண்டிருக்கும்
மூர்க்கமாக (42)

என்பது கவிதைகளின் சாரமான கவிதை.

என் எழுத்துக்களில் நான் வாதைகளை ஏவிவிட்டிருக்கிறேன் (6) என்று எழுதும் ராஜ்குமார் தன்னை மந்திரக்காரனாகவும் கவிதைகளை மந்திரச் சொல்லாகவும் கருதி கவிதைக்குள் மந்திரவெளியை நிறுவுகிறார். கடவுளை விரட்டிய இடத்தில் சாத்தானின் அருட்கோலம். சுடலைத் தீயைக் காண பரவசம். மிருகங்கள் வந்தடையும் மனக்குகையில் சுடலைத் தீ மருந்தாகிறது. காஞ்சிரங்கட்டைகளும் குறளிகளும் நிறைந்த உலகத்தைக் கொண்டலைகிறது கவிமனம். 'தூசி படர்ந்து கிடக்கும் மனசாஸ்திரத்தைக் கவ்விய வாயோடு கண் புதைத்துத் தலைக்குப்புற கவிழ்ந்து கிடக்கிறது சந்தனப்பாவை (14) என்று கவலை கொள்ளும் ராஜ்குமார், நானொரு

மர்மங்கள் நிறைந்த பாதாளம் (30) என்றெல்லாம் சொல்கிறார்.

தலித் அழகியலின் மெருகேறிய சொற்களைக் கொண்ட ராஜ்குமாரின் கவிதைகள் மாபான மனதிற்கு அதிர்ச்சி ஊட்டுபவை.

சிதறும் கண்ணீரிலும் சுகித்துப் புணர
முலைப்பால் தந்துன்னைக்
கொல்லத் துணிவேன் (22)

என்றும்

தடியூனி மூப்பத்தி நின்று குனிந்து
மூத்திரம் பெய்கிறாள் நிலவுக்குள் (50)

என்றும் எழுத ராஜ்குமாரால்தான் முடியும்.

வைதீக அழகியலுக்கு எதிரான அணிசேர்ப்பே தலித் அழகியல். அவைதீக சமய மரபுகள் துணைகொண்டு நிகழ்த்தும் தாக்குதல் ராஜ்குமாருடையது அன்று. சமணம் புத்தத்தோடு சேருவதில்லை நாட்டார் மரபின் துணை கொண்டு சேனை கட்டும் அவரின் கேலியும் எக்காளமும் மலைமுகடுகளின் இடுக்குகளையும் வனாந்தரத்தின் ஆளற்ற வெளியில்சேர்ந்திருக்கும் சிறுசெடியின் நறும்பூவையும் தழுவி இருட்குகையை வந்தடைகின்றன. இருளைக் கண்டு பயங்கொள்ளும் கடவுளரோடு சமர் புரிகின்றன.

கம்பீர நாட்டையில் பாடும் கருங்குயில்களிடம்
முப்புரிச் செவிகள் வர்ணம் பார்க்கின்றன
....
அசையாமல் கிடக்கிறான் அனந்தன்
பொதுவிலின்னும் உதிக்க மறுக்கிறது
அனந்த புரி கோட்டைச் சூரியன் (23)

என்றும் கவிதையில் முப்புரிகள் வர்ணம் பார்ப்பதும் கருங்குயில்களின் பாட்டு மறுக்கப்படுவதும் தலித் அரசியல் பாற்பட்டது. அனந்தனின் அசையாத் தன்மை கேலி செய்யப்படுகிறது.

தென்தமிழ்நாட்டுத் தெய்வம் இசக்கி பிள்ளைத் தொட்டில்களின் கிலுகிலுப்பை ஒலியில் மகிழ்பவள்: 'கொலையில் உதித்த தெய்வம்'. அவள், பால்சுரக்க பூச்சிக்கால், வங்கடை, அயலெனச் சுட்டும் ஆழம்பாக்கியும் மீன் தின்று கொண்டிருக்கிறாள். ஆனால்,

மூக்கைப் பொத்திக் கொண்டும்
மேலே மேலே ஒதுங்கிச் சென்றும்

கட்டுக் குலையாமல்
அழகுக்கு ஆபரணம் சூட்டி
பாலும் பழமும் பக்கத்து வீட்டிருந்து
கழித்துக் கொண்டிருக்கிறாள் உண்ணாமுலையாள் (46)

என்ற ஒப்பீடு 'பெருந்தெய்வ' நாட்டார் தெய்வ முரண்பாட்டைக் காட்டுவது. வளமைக்கும் இன்மைக்கும், உண்ணுதலுக்கும் உண்ணாமைக்கும், தாய்மைக்கும் கன்னிமைக்குமான போரின் ஊடாக ராஜ்குமாரின் எள்ளல் நெளிகிறது'.

சொற்கோப்பு, திருகல், அழுத்தம், வீறிடல், தாக்குதல், ஏவுதல், அதிர்ச்சி, வன்மை, ஆங்காரம், மிருது எல்லாம் இணைகின்றன. ரத்தம், ஊன், குடி, போகம், காதல் எனும் கொந்தளிப்புகள் கவிதைகளாகின்றன.

முற்போக்குப் பட்டறையான கலை இலக்கியப் பெருமன்றப் படைப்பாளியான என்.டி.ராஜ்குமாரின் ஆயுதம் துப்பாக்கி அன்று; போர்ப்பறையையோ சங்கொலியையோ முரசையோ முழக்கவில்லை. புராதனமும் மாந்திரீகமும் செதுக்கிய அவரின் ஆயுதம் உடுக்கொலியோடு இணைந்தது.

தீண்டாமை, சாதிய அவமானம், மேல் × கீழ் சாதி போன்ற தலித் கவிதைப்பாடு பொருட்களை என்.டி. ராஜ்குமாரிடம் காணமுடியாது. இலக்குச் சாதிகளாக எவரையும் தனிப்படச் சொல்வதில்லை. பெருந்தெய்வ மரபுகளுக்கும் நெறிகளுக்கும் எதிராக நாட்டார் மரபுகளைக் கொண்டு களமிறங்குகிறார். மதிவண்ணன், தய். கந்தசாமி போன்றோரோடு ராஜ்குமார் வேறுபடும் புள்ளி இது.

பகலை மதியாத கூகைகளும் ஆந்தைகளும் இருளைத் தின்று வாழுகின்றன. நடப்பு வாழ்வில் சாவின் நிறம் கறுப்பு. சிவந்த கதாநாயகர்களின் காலடியை அண்டிக் கிடப்பவர்கள் கறுத்த காமெடியன்கள். திருடர்களும் தீமைகளும் கருமை வண்ணத்தில் வருகின்றனர். காலண்டர் கடவுள்கள் செந்நிறப் பொன்னிற மேனியைக் கொண்டவர்கள். வெண்ணிறம், வெண்ணிற முல்லை பூக்கும் முல்லைத்திணை, செப்பலோசை வெண்பாக்கள் பிராமணர்க்குரியது. கறுப்பு நிறம், கருங்குவளை பூக்கும் நெய்தல், தூங்கலோசை வஞ்சிப்பாக்கள் சூத்திரர்களுக்குரியது எனப் பாட்டியல் இலக்கணங்கள் விதி எழுதுகின்றன.

ஆயின் கன்னங்கரிய மாடனும் கருப்பசாமியும் கருமை இருளில் பந்தக் கொள்ளியோடு வேட்டைக்கு விரைகின்றனர். மின்சாரம் தடைபடும் போதில் குடியிருப்புகளில் பெருகிச் சிதறும் பேரொலிக் கூச்சல் சொல்கிறது இருளின் புகழை. இருள் கருப்பகிரகங்களில் அடைபடும் பகல் மங்கிய ஒளி

அல்ல. நிலமெங்கும் கவியும் பேரிருள். அஃது ஒற்றைச் சூரியனை விடுத்த பல்லாயிரம் விண்மீன்களைக் கண்டு மகிழும் இருட்பெரும் பொழுது. இருள் இனியது. இருளையும் அதன் வண்ணத்தையும் களி மிக்கூர்ந்து அடையாளம் காண்கிறார் ராஜ்குமார். அவரின் 'கறுத்த கவிதை' (69)

எனக்குப் பிடித்தமான இருட்டு வரும்போது
சூரியனைப் பிடித்து சாக்கில் கெட்டி
கடலுக்கடியில் மூழ்கடித்துக் கொன்றுவிட்டு
என் கம்பின் முனையில் நிலவினைக் கட்டி
சிலம்பு வீசி வருவேன் (28) என்றும்

நண்பனாக தோழனாக அண்ணனாக இருந்த
இரவு நிலா ஏனிப்படி ஆனது (28)

சவங்களுக்குள்ளிருந்து எழுந்து பறக்கிறதெங்கள்
அலகு தீட்டிய அண்டங்காக்கைகள் (69)

என்றும், இருளையும் இரவையும் கருமையையும் விரும்புகிறது.

கஞ்சாக்கிறக்கம், மதுபோதை, தமிழ்வாத்தியார் வேலை, ஆண்களின் காதல் தோல்வி போன்றவை கவிதை தோன்றுவதற்கான காரணங்கள் என்றும்; வலக்கைப் பேனாவை நாடியில் ஒட்ட வைத்துச் சதா யோசிப்பவர்களே கவியரசர்கள் என்றும் பொதுப் புத்தியின் கருத்துப்படிமம் அமைகிறது. மேலும் ஜோல்னாப்பையர்கள் மண்டைக்கிறுக்கர்கள், தாடிவைத்து உளறுபவர்கள் என்றும் நினைப்பதுண்டு.

என்.டி.ராஜ்குமார் தன்னைப் பித்தனாகப் பாவிக்கிறார். சுடுகாட்டுச் சாம்பலை உடலெங்கும் பூசிக்கொள்ளும் பித்தன் என்று சிவனையும்; சுடலையில் குடியிருக்கும் சுடலைமாடனையும் கருதுவது வெகுஜனமரபு. இஷ்ட தெய்வமாகச் சுடலையை ராஜ்குமார் எண்ணுகிறார்.

பைத்தியக்காரத்தனத்தோடும் பேசுகிறபோது
தொடர முடிகிறது (36)

பிறரைப்போல் நீ கேலி செய்ய மாட்டாய்
எனது பைத்தியக் காரத் தனத்தை (44)

ஆவி நொந்து மதியைச் சொறிந்து
மனது பிறழ்ந்து உளறித் திரிந்து (10)

செல்கிறது கவிதை.

கவிச்சியைக் கொண்டாடும் என்.டி.ராஜ்குமாருக்கும் தலைக்கறிமீதும் மூளைக்கறி மீதும் பேரார்வம் உண்டு. மூளையைச் சுமக்க முடியாமல் (71)

கனவில் ஓடும் என் மூளைக்குள்(14), மூளையின் பின்னால் (26), மூளை பிசகி பாதையில் (28) சூக்குமக்காரனின் மூளை (31), மருந்துப்பெட்டிக்குள் மூளையொன்றை (67), ஒரு பைத்தியக்காரனின் மூளையைப் போல (11) மூளையைச் சொறிந்து புண்ணாக்க (7) சிரச்சோறாக (6), சிரசு கட்டில் என்று ஏராளமான தலை - மூளைக்குறிப்புகள். ஐதீகப்படி அது பிராமணனின் இடம். மூளையை உதாசீனம் செய்வதல்லவோ ஒடுக்கப்பட்டவர் அழகியன் வேலை. தீரா உறுத்தலாகத் தொடர்ந்துவரும் மூளை எதையும் குறிப்பாகச் சுட்டாமல் எல்லா இடங்களையும் துழாவுகிறது.

தலித் ஆக இருந்தாலும் சாதி இந்துவாக இருந்தாலும் புருஷனாக இருந்தாலும் 'கவிஞர்' ஆக இருந்தாலும், எழுத்தராக இருந்தாலும் எழுத்தாளர் ஆக இருந்தாலும் ஆண்களின் மனவெளி நியதி ஒன்றாகவே இயங்குகிறது. அவ்வெளிகளில் பாட்டி, அம்மா, மனைவிகளுக்கான இயங்குவெளிகளும், வேலைத்திட்டங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆண்களின் வெளி (space) யில் பெண்களின் இயக்கம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மனுவின் வார்த்தைகளைக் கைப்பிடித்தே பேனா பிடிக்கிறார்கள். காமம், புணர்ச்சி, காதல், சமையல், பிள்ளை வளர்ப்பு, கணவனைப் போஷித்தல் இன்னபிற புண்ணாக்குகளைப் படைப்புகளில் தின்னக் கொடுக்கிறார்கள். மேய்ச்சல் பரவலாகக் கூடாது. கழியை ஆழ இறக்கிக் கட்டிய கயிற்றில் உலவும் பிராணிகளாகச் சமையல் முதல் சம்போகம் வரையில் சுற்றிவரப் பணிக்கப்பட்டுள்ளனர்.

தலித் அரசியல் நுண்பரிமாணங்களையும் எதிர்மறைகளையும் தெளிவாக அறிந்தவர் என்.டி.ராஜ்குமார். தொன்மங்கள், தெய்வங்கள், கதைகள், சொற்கள், செயல்கள் இணைந்த வேதிமாற்றம் அவரின் கவிதைகளில் ரசவாத மாற்றத்திற்கு உள்ளாகிறது. ஆனால் பெண்ணென்று வரும்பொழுது உறுப்புகளோடு தொடர்பு படுத்தாமல் சிந்திக்க முடிவதில்லை. என்.டி.ராஜ்குமார் பெண்ணுக்கான பாலியல் வெளியை அனுமதித்தாலுங்கூட தன் வெற்றியை நிலைநிறுத்தப் பிரயாசைப்படுகிறார்.

ஓர் ஆண்மகனின் வேகத்தோடு கவிதைப் பொருட்களைத் தேர்வு செய்கிறார்.

பெண்களோடு நான் கொண்ட
பயங்கரப் புணர்ச்சியிலென்
வெள்ளியில் படர்ந்த பொட்டுகளெல்லாம் (29),

நேற்றைய முதலிரவில்
ஏறித் தாக்கினாள் ஒரு ராட்சசி என்னை (28),

பகல் உறங்கிக் கிடந்தால் அவளை
பிய்த்துப் பிடுங்கி இழுத்து அணைப்பேன் (19),

என்றெல்லாம் புணர்ச்சியோடு மட்டுமே மனைவியை இணைத்துப் பேசுகிறார்.
தீயை உருவகிக்கும்போது,

> நீலப்புடவை கட்டிப் புணர்ந்தாடுகிறாள்
> நெருப்பு மங்கை (20)

என்று, புணர் உருவகம் மூளைமேட்டில் தட்டுப்படுகிறது.
காட்டைச் சொல்லும்போது,

> மிருக முலை காட்சி கால்நீட்டிக் கிடக்கும்
> மலைத்தாடகை......
>
> அந்தரம் நீராடி அருவியெனத்
> தொங்கிப் பறக்கும் கேசத்துடன் நிற்பாள்
> காளி யோனி விறைத்து

என்று முலை, யோனி இல்லாமல் இல்லை.

மனைவியைப் பற்றிய கவிதைகளில் எல்லாம் புணர்ச்சிக் குறிப்புகள், பிள்ளை வளர்ப்பு, குடும்பபிரிவினை கூறப்பட்டுள்ளன. வீட்டைப் பராமரிக்கும் இல்லத்தரசி எனும் பாத்திர வார்ப்பை மேலும் செதுக்குகிறார்.

> மனைவியில்லாத அறையை எத்தனை முறை பெருக்கினாலும்
> தூசிபடிந்து கொண்டிருக்கிறது (13)

என வீட்டுப் பராமரிப்பு விளக்கப்படுகிறது. புதிதாய் வீட்டுக்கு வரும் மருமகள்களை இருகால் எலிகள் என வர்ணிக்கிறார். உடைமையாளர்களின் மூளையைத் திருடியெடுத்து, அஸ்திவாரப் பொந்துகளில் கொண்டு வைத்து கறம்பிக் கொண்டிருந்தன என்று எழுதுகிறார். வீட்டின் அஸ்திவாரம் இடிந்து பொடிந்து போவதற்குப் பெண்கள் காரணம் என்று குற்றம் சாட்டுகிறது கவிதை. பெண் என்ற சொல் மனதில் பதியும்பொழுதே சமூகம் வரையறுத்துக் கொடுத்திருக்கிற சங்கதிகள் ஆழ்மனதிருந்து மேலே வருகின்றன.

அம்மாக்கள் பற்றிய சித்திரம் வரலாறு நெடுகிலும் பத்திரப்படுத்தப்பட்டு மெருகேற்றறப்படுகிறது. தாயிற் சிறந்த கோவில் இல்லை பிள்ளை பெறுவதில் இன்பம் கொண்ட பெண்கள். இவற்றோடு சினிமாக்காரர்கள் ஊதிப்பெருக்கிய தாய்மைப் பலூன் இன்றளவும் வெடிக்காமல் விரிகிறது. செத்தவுடன் அமரர் ஆதல்போல பெண்கள் தாய்மை எய்தியவுடன் அன்பு இரக்கம் பாசம் எல்லாவற்றையும் பெற்றுவிடுகிறார்கள். .... கேள்விகளுக்கு அம்மாவின் கர்ப்பப்பாத்திரத்தை எடுத்துவிடவேண்டுமென்று மருத்துவர் சொன்னபோது, 'எனது முதல் வீடு இடிந்து தலைக்குப்புற வந்து விழுந்த வேற்றுலக அதிர்ச்சி— துளிப்பாட்டியவள், எனக்காக மண் தின்றவள்,

முலைப்பால் தந்தவள் (34) என்று விரிகிறது கவிதை.

என் அம்மாவின் சோற்றுருண்டை காய்வதில்லை
எப்போதும் (36)

பொத்தி வளர்த்தி குஞ்சுகள் தன்னிச்சையாய் இரை தேட கொத்தித்
துரத்தும் அம்மையைப் போல் (61)

கடன் வாங்கியேனும்

கேட்ட உடனேயெடுத்துத் தரும் ஒற்றை ரூபாயில் கூட
அவளின் அதீத அன்பு நிறைந்திருக்கும்

அம்மாயில்லாத வாழ்வை நினைத்தால் கூட
நீரின்றித் துடிக்குமெனது மீன்குஞ்சு (70)

என்று வரும் அம்மா எனும் மிக நல்லவள் வாசிப்பவரைத் தொந்தரவு செய்கிறாள். பெண் தாயாகும் போது குடும்ப அமைப்பு வலுவடைகிறது.

அப்புறம் தீவிர தமிழ் எழுத்தாளர்களுக்குக் கிழவிகளையும் சாதா எழுத்தாளர்களுக்குக் குமரிகளையும் பிடிப்பதற்கான காரணங்கள் தெரியவில்லை. பல சிறுபத்திரிகைக்காரர்கள் கஞ்சியைக் குடித்து வயிற்றை நிரப்புவதில்லை. கதைகளைத் தின்று பசியாறுகிறார்கள். மேலும் எழுத்தாளர்களின் பெயரெல்லாம் லத்தீன் அமெரிக்காவில் — அவர்கள் சொன்ன கதைகளால்தாம் 'மாயாசால எதார்த்தம்' முளைவிட்டுள்ளது மாந்திரீக யதார்த்த சரக்குகளைக் குழைய அரைத்து இவர்கள் தலைமேல் பூசியவர் மேற்படி கிழவியரே என்பதை அறியும்போது என் சனிர்படர் நெஞ்சு விம்முகிறது. என்டி.. ஆருக்கும் செம்மூதாட்டியர் பாசம் உண்டு

கதை சொல்லும் மாய மரத்தை
நட்டு வைத்தாள் படுகிழவி (12)

ரோமக்கால் படர்த்தி வனத்தில் மருந்துரைக்கும்
காட்டுக்கிழவி (6)

குறி பார்த்தடிக்குமென் மாந்ரீகக் கிழவி

என்பதோடு 'பருத்த முலைகளோடு வளமை குறையாமல் எனது பாட்டி எத்தனை பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள்' (46) என்ற பெருமையும் உண்டு. சொந்தப்பிள்ளை, வளர்ப்புப்பிள்ளை, தாசி மக்கள், பொறுக்கிகள், கெட்டவர்கள், ரொம்பக் கெட்டவர்கள் எல்லாரும் கொண்டாடும் பாட்டியை, வீட்டுக்கிழவியைக் கொல்வதற்கு மருமகள் எனும் எகள்

குதூகலப்பதாக (15) எழுதுகிறார். 'செத்தும் சாகாமருக்கிற பாட்டி' மேல் ஆணையாகச் (17) சிலவற்றைச் சொல்கிறார். திமிரெடுத்த நிலவுடைமைக் கலாச்சாரத்தின் விளைபொருள் பரத்தமை. வேசையர் என்று இழிவாகச் சொல்லப்படும் பெண்களை 'வானம்பாடிக்'கவிஞர்கள் அனுசரணையாகப் பார்த்ததுண்டு. ராஜ்குமார் அவ்வாறு இல்லை. கூத்தரசனாகிய தில்லை நடராசனைத் தூக்குவதற்காக வீசிய அம்புகள் தாசிகள் மேல் விழுகின்றன

வரலாற்றுக்குள்ளிருந்து நட்டுவன் பாடுகிறான்.
(நட்டுவன் - அரசவைக் காரர்களுக்குப் பெண்களைக்
கூட்டிவிடும் தாசி குலத்தோன்)

விவரம் புரியாத வயதில் மாணவி ஆடுகிறாள்
(மாணவி - தொழிலுக்குப் புதிதாகக் கொண்டு
வரப்பட்டவள்)

கோவிலுக்குள் நடந்த தேவடியாத் தனத்திற்கு
கூட்டு நின்றவன் கூத்தரசனா? (68)

என்ற கவிதையில் கவிஞர் தரும் அருஞ்சொற்பொருள் விளக்கம் ஆபத்தானது. பிறிதொரு கவிதையில்

பண்டு சதிர்க்கலை இன்று பரதம்
எமக்குத் தொழில் ஆடுதல் படுத்தல் (35)

தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும்

....

என்று தொழில்களைப் பட்டியல் போடுகிறார். தொழில், கூட்டிக்கொடுத்தல், படுத்தல் போன்ற சொற்கள் வன்மை வாய்ந்தவை. சொத்துடைமை நெறிதனைக் கொண்டாடும் ஆதிக்கவாதியின் மூளைக்குள் குடைபவை.

சமூக நிர்ப்பந்தங்கள் அழுத்தும் எளிய பிரிவினரை மிதித்துத் தள்ளுவது எங்ஙனம் சாலும்? தலித் அரசியலுக்கு எதிரான கொடுந்தாக்குதல்களாகவே இவற்றைக் கொள்ள முடியும்.

இப்படியான விமரிசனங்கள் இருந்தாலும் என்.டி. ராஜ்குமாரைப் புறந்தள்ளிவிட முடியாது. தவளைக் கூச்சலெனப் பகலில் ஒலிக்கும் மந்திர கோஷங்களின் ஒலியிலிருந்தும் கற்சுவர் புனித வளாகத்திலிருந்தும் வேறுபட்டு வனமும் இருளும் முயங்கிய சுடுகாடென்னும் பெருவெளியில் சுடலைத் தீயில் முகம் பொலிய பேய்களின் கூச்சலொடுக்கி உடுக்கொலியின் மேலேறிவரும் ரத்த சந்தனப் பாவையின் ஏவுதலில் கட்டுண்டு கிடக்கிறேன் நானும். ●

கடைசிப் பறவையும் கடைசி இலையும்

சிறீ. நான். மணிகண்டன்

விலை : ரூ.35

மயூரா பதிப்பகம்,
33, தொட்டராயன்கோவில் வீதி,
காட்டூர், கோயம்புத்தூர் - 641009.
பேசி : 0422 2237671

நவீன கவி காதல் தொலைத்து பறிபோன சுதந்திரம், அதிகாரத்தின் இரும்பு கரம், சீரழிக்கப்பட்ட தனது கன்னி நிலம், தனித்தன்மை தொலையும் உலகமயமாக்கல் என்று புற உலகம் கலைக்கப்பட்ட, சீரழிந்த அக உலகத்துடன் திரியும் நெருப்பு - ராட்சத பறவைகளாகிவிட்டான்.

மணிகண்டனின் வீச்சு குறிப்பாக நிலம் சார்ந்த அக நிலையும் சூனியத்தைக் கருதிக் கொண்ட பித்து நிலையும் அது விழைவிக்கும் பார்வை நிலைப்புமே.

முதல் கவிதை பிரமிளின் 'வண்ணத்துப் பூச்சியும் கடலும்' கவிதையை நினைவுபடுத்துகிறது.

வண்ணத்துப்பூச்சி,
நாளிரவு பாராமல்
ஓயாது மலர்கின்ற
எல்லையற்ற பூ ஒன்றில்
ஓய்ந்து அமர்ந்தது.

முதல் கணம்
உவர்ந்த சமுத்திரம்
தேனாய் இனிக்கிறது. (பிரமிள் கவிதைகள்)

ஆனால் மணிகண்டனின்
வண்ணத்துப் பூச்சியின் பயணம்,
தொலைதூர சிறகடிப்பில்
அலுப்பிற்கு பிறகான சலிப்பில்
வந்து விழுமோ
ஒரு சிலந்தியின் வலைக்குள்.

கைகோர்த்து வரும் கவிதைகள் இரண்டும் கடைசி கணத்தில் எதிர்த்திசைகளில் பிரிந்து விடுகின்றன. இந்த பிறழ்வு கவியின் தொடர்ந்த எல்லாக் கவிதைகளிலும் தென்படுகிறது. இதுவே உயரங்களைத் தீர்மானிக்கிறது. உயரம் மிகும் போது பாதிப்பும் மிகுந்துவிடுகிறது.

பதிவுகளை விழுங்கும் கடல். இடம் மாறுகின்ற காட்சிகள். செம்மரத்துக் காய்கள். இரவின் சாளரம். கனவுகளில் துரத்துகிறவர்கள், இரவுப் பூச்சிகள் என கவிஞன் ஒரு சிறிய ரசவாதத்தின் கோலிகளை கலைடாஸ் கோப்பில் இட்டு சுற்றி சுற்றிக் காட்டுவது தொடர்ந்த வாசிப்பும் விளங்குகிறது.

இது தொகுப்பிற்கு ஒரு ஒற்றைத் தாளை. அல்லது நிலைப்பட்டுப்போன கவியின் பார்வை விசனைக் குறிக்கிறது. இதிலிருந்து ஒரு சில கவிதைகளில் அல்லது வரிகளில் மீண்டும் வந்திருக்கிறார். அப்படி கவிக்கு வாய்த்திருக்கும் மொழி, அதன் விபரீதமாக கனமாக முறுக்கிப் பின் கயிற்றை அறுத்தெறிகிறார். அது காலத்தின் கண்களை குருடாக்கத்தான் செய்கிறது. முறுக்கின் அளவு நேர்ப்பட வேண்டும்.

'தீப்பற்றி எரிந்த நகரம்' கவிதை அதிக முறுக்கம் உடைய கயிறாயினும் தொகுப்பில் புனைவு மிக அற்புதமாய் வாய்த்திருக்கிறது.

கொடும்பகல் நெருப்பாய் கொளுத்திய
நாளொன்றில்
கட்டிடங்களின் மேல் விழுந்த
ஒரு பறவையின் எச்சத்தில்
தீப்பற்றி எரிந்தது நகரம்.

இந்த ஐந்து வரிகளே போதும்.

பறவையை அதன் வாழ்விடத்தை நாசப்படுத்தி, அதைக் கொன்றுவிட்டோம். அது ஒரு டிராகனாக மாறுகிறது. எப்படி ஜப்பானியர்களின் 'காட்ஸிலா' அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உருவானதோ, அப்படி அதேபோல, 'வண்ணச் சித்திரம்' கவிதை,

காலத்தின் விளிம்பும்
சூனியத்தின் ஆதிப்புள்ளியும்
புணர்ந்து கலக்குமிடத்தில்
கவிதையின் முதலெழுத்தை
ஆரம்பி என்கிறது. - சூட்சமத்தின் உதடுகள்.

இது குறிப்பாக 'EVENT TORSION' என்ற நிலையைக் குறிக்கிறது. இந்தப் புள்ளி சூன்யத்திற்கும் இருப்பிற்குமான எல்லைக்கோடு. கருந்துளைகளின் எல்லையில் காணப்படும் நிலை. இங்கே இயற்பியலின் விதிகள் தலைகீழாய் நிற்கும். எதுவும் நிகழலாம். கவிதை எழுதினால் அது ஓவியமாகக் காட்சியளிக்கலாம். ஒரு ஓவியம் வரைந்தால் அது சிறுகதையாக விரியலாம். ஆனால் இந்நிலை படைப்பாளியைத் தின்றுவிடும். அவன் சூன்யத்தை அடைவான். முனைப்பு தொலைந்த ஏகாந்தமாகிப் போவான். அங்கே எந்தப் படைப்பும் இருக்காது. இது தற்கால கவியின் மனப்பிறழ்வு நிலையைக் காட்டுகிறது. ஆனால் மற்ற கவிதைகளில் உள்ள அதிகப்படியான முறுக்கல் அல்லது கலைடாஸ்கோப் தன்மை, இதற்கு நேர் மாறாக உள்ளது. அல்லது நவீன சூழலின் அபத்தம் தந்த திடீர் மாற்றமா (mutation) எனவும் புரியவில்லை. இதிலிருந்து பிய்த்துக் கொள்பவனே ஜெயித்த கவியாகிறான்.

நேர்த்தியான தொகுப்பாக வந்திருக்கும் சிற். நான். மணிகண்டனின் கவிதைகள் ஒரு கட்டத்தில் வாழ்வின் அபத்த நிலையை அது உண்டாக்கிய காரணிகளை வெறித்தபடியே கிடக்கின்றன. இந்த பித்து நிலை மனிதனின் இருப்பு நிலைக்கு எதிரானது. கவிஞர் தான் கண்ட மனநிலைக்கான பாடுபொருளை கைக்கொண்டிருந்தாலும் அதற்கான செம்மைப்படுத்தப்பட்ட மொழியை இன்னும் அடையவில்லை. அது ஒரு ஓவியம் வரைவது போலல்ல. ஒரு கல்லில் இருந்து தேவையில்லாதவற்றை நீக்கி சிற்பம் செய்யும் ஒரு செயல்.

முதல் தொகுப்பு என்ற நிலையைத் தாண்டி, மிகத் தீவிரமான ஒரு முயற்சியை முன்வைக்கிறது. இது அனுபவம் சார்ந்த அந்த அனுபவம் விளைந்த காரணிகளை வியப்புடன் பார்க்க வைக்கிறது.

சாஹிப்கிரான்

கதைகள் தீர்ந்தபோது அம்மா சொன்ன கதைகள்

செந்தில்பாலா

விலை : ரூ.35

நறுமுகை

29/35, தேசூர்பாட்டை, செஞ்சி - 604 202.

விழுப்புரம் மாவட்டம். பேசி : 94861 50013.

நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட அழகான அச்சுக்கலை கவிதைத் தொகுப்பு. நீண்ட கவிதை ஏதுமில்லாமல் பெரும்பாலும் சிறு கவிதைகள்.

கவிதைகளை ஒரே அமர்வில் வாசித்துவிடலாம். ஏதோவொரு கிராம நிகழ்வை, மண்ணின் மனத்தைக் கட்டி எழுகின்றன. கிராம வாழ்வு பறிபோன அவலத்தை நாகரிகத்தின் கோரப்பிடியிலிருந்து கத்துகின்றன. தூர்ந்து வருகிறது குளம், சனப்பன் கொல்ல, கதைக்களம் போன்ற தலைப்பிட்ட கவிதைகளிலும் தலைப்பிடாத மற்ற பல கவிதைகளிலும் அதே ஆற்றாமையே வெளிப்படுகிறது.

தொகுப்பை வாசிக்கும்போது அதன் சரளத்தன்மை கவிஞருக்கு சொல்ல நினைத்ததை ஒரு குறிப்பிட்ட வடிவில் சொல்வதில் நல்ல தேர்ச்சி இருப்பதைக் காட்டுகிறது. ஆனால் தொகுப்பின் தொனி ஒற்றைக் குரலாக ஒலிப்பதை தவிர்க்க முடியவில்லை.

ஒரு இளைய கவி எப்படி காதல் சார்ந்து இயங்காமல் போனார் என்பது வியப்பாகிறது. சூழலின் விபரீதம் காதலைப் புறக்கணித்திருக்கலாம். இது கவிதையின் பன்முகத்தன்மைக்கு ஒரு குறையாகப்படவில்லை. எனினும் அது தரும் வீச்சு கவிதையை வேறு கட்டமைப்பில் பயிற்சியை வழங்கியிருக்கும் என்பது மறுக்க முடியாதது.

இந்தத் தொகுப்பைப் பொறுத்தவரை ஒரு நிகழ்வோ, உணர்வோ, அது மட்டுமே தன்னளவில் எப்படி கவிதையாகும் சாத்தியம் உடையது என்பது புரியவில்லை. குறிப்பாக, 'எட்டிப்பார்க்கும் எறும்பு', நிகழ்வு கவிதையில் தனித்து இயங்குவதில்லை. அது புனைவை நாடுகிறது. புனைவு கவிதையின் பக்கங்களுக்குப் பட்டை தீட்டிவிடுகிறது. எனவே பல வண்ணங்கள் சாத்தியப்படுகின்றன. நவீனம் பன்முகப்பட்டதாகவே கருதுகிறேன். பாடுபொருளைப் பற்றியல்ல பாடு முறையை பரிசீலித்தால் கவிஞர் மிக முக்கிய படைப்பை கிராமம் சார்ந்து முன்னிறுத்தக் கூடும்.

வசன கவிதை முயற்சிகளில் கவிஞர் உடைநடைத் தன்மையை முன்னிறுத்திவிடுகிறார். அது கலைத்துப்போடப்பட்டவையாகவே மாறிவிடுகிறது. ஆனால் ஓவியங்களில் ஒரு புதிய ஒளி மின்னுகிறது. அதில் தூரிகையின் வீச்சு கவிதையை விஞ்சுகிறது.

இது தொகுப்பிற்கு ஒரு ஒற்றைக் குரலை, அல்லது நிலைப்பட்டுப்போன கவியின் பார்வை வீச்சைக் குறிக்கிறது. இதிலிருந்து ஒரு சில கவிதைகளில் அல்லது வரிகளில் மீண்டும் வந்திருக்கிறார். அப்படி கவிக்கு வாய்த்திருக்கும் மொழி, அதன் விபரீதமாக நன்றாக முறுக்கிப் பின் கம்பியை அறுத்தெறிகிறார். அது காலத்தின் கண்களை குருடாக்கத்தான் செய்கிறது. முறுக்கின் அளவு நேர்ப்பட வேண்டும்.

'தீப்பற்றி எறிந்த நகரம்' கவிதை அதிக முறுக்கம் உடைய கம்பியானாலும் தொகுப்பில் புனைவு மிக அற்புதமாய் வாய்த்திருக்கிறது.

கொடும்பகல் நெருப்பாய் கொளுத்திய
நாளொன்றில்
கட்டிடங்களின் மேல் விழுந்த
ஒரு பறவையின் எச்சத்தில்
தீப்பற்றி எரிந்தது நகரம்.

இந்த ஐந்து வரிகளே போதும்.

பறவையை அதன் வாழ்விடத்தை நாசப்படுத்தி, அதைக் கொன்றுவிட்டோம். அது ஒரு டிராகனாக மாறுகிறது. எப்படி ஜப்பானியர்களின் 'காட்ஸிலா' அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உருவானதோ, அப்படி. அதேபோல, 'வண்ணச் சித்திரம்' கவிதை,

காலத்தின் விளிம்பும்
சூனியத்தின் ஆதிப்புள்ளியும்
புணர்ந்து கலக்குமிடத்தில்
கவிதையின் முதலெழுத்தை
ஆரம்பி என்கிறது. - சூட்சமத்தின் உதடுகள்.

இது குறிப்பாக 'EVENT TORSION' என்ற நிலையைக் குறிக்கிறது. இந்தப் புள்ளி சூன்யத்திற்கும் இருப்பிற்குமான எல்லைக்கோடு, கருந்துளைகளின் எல்லையில் காணப்படும் நிலை. இங்கே இயற்பியலின் விதிகள் தலைகீழாய் நிற்கும். ஏதும் நிகழலாம். கவிதை எழுதினால் அது ஓவியமாகக் காட்சியளிக்கலாம். ஒரு ஓவியம் வரைந்தால் அது சிறுகதையாக விரியலாம். ஆனால் இந்நிலை படைப்பாளியைத் தின்றுவிடும். அவன் சூன்யத்தை அடைவான். முனைப்பு தொலைந்த ஏகாந்தமாகிப் போவான். அங்கே எந்தப் படைப்பும் இருக்காது. இது தற்கால கவியின் மனப்பிறழ்வு நிலையைக் காட்டுகிறது. ஆனால் மற்ற கவிதைகளில் உள்ள அதிகப்படியான முறுக்கல் அல்லது கலைடாஸ்கோப் தன்மை, இதற்கு நேர் மாறாக உள்ளது. அல்லது நவீன சூழலின் அபத்தம் தந்த திடீர் மாற்றமா (mutation) எனவும் புரியவில்லை. இதிலிருந்து பிய்த்துக் கொள்பவனே ஜெயித்த கவியாகிறான்.

நேர்த்தியான தொகுப்பாக வந்திருக்கும் சிறீ. நான். மணிகண்டனின் கவிதைகள் ஒரு கட்டத்தில் வாழ்வின் அபத்த நிலையை அது உண்டாக்கிய காரணிகளை வெறித்தபடியே கிடக்கின்றன. இந்த பித்து நிலை மனிதனின் இருப்பு நிலைக்கு எதிரானது. கவிஞர் தான் கண்ட மனநிலைக்கான பாடுபொருளை கைக் கொண்டிருந்தாலும் அதற்கான செம்மைப்படுத்தப்பட்ட மொழியை இன்னும் அடையவில்லை. அது ஒரு ஓவியம் வரைவது போலல்ல. ஒரு கல்லில் இருந்து தேவையில்லாதவற்றை நீக்கி சிற்பம் செய்யும் ஒரு செயல்.

முதல் தொகுப்பு என்ற நிலையைத் தாண்டி, மிகத் தீவிரமான ஒரு முயற்சியை முன்வைக்கிறது. இது அனுபவம் சார்ந்த அந்த அனுபவம் விளைத்த காரணிகளை வியப்புடன் பார்க்க வைக்கிறது.

சாஹிப்கிரான்

ஆர்க்கிமிடீஸைக் கொன்ற சிப்பாய்

மீர்ஸ்லாவ் ஹோலுப்

செக் கவிதை ஆங்கிலம் வழி தமிழில் சேனா[illegible]னி

ஒரே போடாய்ப்போட்டுக் கொன்றான்
வட்டம் செங்குத்து
வெட்டும்புள்ளி என
எல்லாவற்றையும் முடிவிலியில்

கிடைத்த வாய்ப்பின் கடைசி
கூறாக
மூன்றிருந்து எல்லா
எண்களையும் தடை செய்தான்

உட்கார்ந்தான் ஆக்கிரமித்து
இப்பொழுது அவன் சைராக்யூசில்
தத்துவமேதைகளின் கூடாரத்துக்கு
தலைமையாளாக

இன்னும் ஆயிரம் ஆயிரமாண்டுகளுக்கு
இருக்கும்படி ஆக்கினை செய்தான்

ஒன்று இரண்டு
ஒன்று இரண்டு
ஒன்று இரண்டு
ஒன்று இரண்டு •

அஞ்சலி

மரணம் மறுபடியும் வெல்லும் . . .

நிருத்தன்

சகதியில் மாடாய் உழைத்துக் கொண்டிருப்பவன்,
அமைதியென்பது என்னவென்றே அறியாதவன்,
ஒரு சிறு ரொட்டித் துண்டுக்காய் சண்டையிடுகிறவன்
யாரோ ஒருவனின் ஒரு 'ஆம்' அல்லது 'இல்லை' யில் இறந்து விடுபவன்
ஒரு ஆண்மகன் தானா என்று எண்ணிப்பாருங்கள்.

- பிரைமோ லெவி



மாஜிக்கல் ரியலிசம் என்பதை மாந்திரீக யதார்த்த வாதம் என்றோ மந்திர யதார்த்தவாதம் என்றோ நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அதன் செல்லக்குழந்தை கர்ட் வோன்கட் இறந்துபோய்விட்டார் என்ன ஒரு விசித்திரம். கடைசியில் இயற்கை மரணம் ஜெயித்து விட்டது. 'உதைபடுவது என்பது, நாம் இருக்கிறோம்— வாழ்கிறோம் என்பது பற்றியேனும் குறைந்தபட்சம் ஊர்ஜிதம் செய்கிறது— அல்லவா" எனப்பதறிய தனது பில்லி பாத்திரத்தின் மூலம் (கொலைபீட இல்லம் அய்ந்து - Slanghterhouse five) உலகை மூச்சடைக்க வைத்தவர் வாழ்வது பற்றிய தனது கடைசி கணங்களை

நோயிடம் பலியிட்டு நிமிடங்களை துறந்திருக்கிறார்.

ஒரு யுத்தகைதியாக நாஜி படைகளால் பிடிக்கப் பட்டு ட்ரெஸ்டன் (ஜெர்மனி) முகாமில் சித்திரவதைகளில் இறந்திருக்கவேண்டிய வோன்கட் அவரது நண்பர் பிரைமோ லெவியைப் போலவே தனது வாழ்வின் கடைசீ ஆண்டுகளை தான் ட்ரெஸ்டனில் இறந்து விடவில்லை, என்ற உண்மையை அவதானிப்பதிலேயே செலவிட்டு வந்துள்ளார். பிரைமோ லெவி 1987ல் வோன்கட் மரணத்திற்கு இருபதாண்டு முன் இதே ஏப்ரல்மாதம் 11ம்தேதி அன்று குடியிருந்த பலமாடிக் கட்டிடத்தின் ஃப்ட் தள இடைவெளியில் தலைகுப்புறக் குதித்து மண்டை நொறுங்கி இறந்துபோனார். ஆனால்

வோன்கட் மிகவும் துரதிர்ஷடசாலி என்றே நான் நம்பி வந்திருக்கிறேன் அதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. எண்பதுகளின் தொடக்கத்தில் கல்லூரி வாழ்வின் முடிவில் நாங்கள் எங்கள் சந்ததியினர் அதிகம் வசித்த தாஸ்தோவஸ்கி வந்து சேர்ந்தவர் இந்த கர்ட் வோன்கட். (Kurt Vonnegut)

"ஸ்லாட்டர் ஹவுஸ் - ஃபைவ்" தான் அவரை ஒரு மந்திர யதார்த்த வாதியாக நிலை நாட்டியது என்றாலும் நான் முதல் வாசித்தது அவரது "கேட்ஸ் க்ராடில்" (பூனையின் தூளி) 1963ல் வெளிவந்த இந்த நாவல் எண்பதுகளில் தான் தமிழக தீவிர வாசகர்களை வந்தடைய முடிந்தது. அமெரிக்காவிலோ அது அப்போதே வெறும் 500 பிரதிகள் மட்டுமே விற்பனை ஆகி இருந்தது. மதிப்பீடுகளும், இலட்சியக் கொள்கைளும் நிலைகுலைந்துபோன அந்த காலகட்டம் தனது மானுட வீரியம் அனைத்துமே இழந்துபோன நிலைகளனாய் ஐரோப்பா முழுவதையுமே மாற்றி இருந்தது. அனைத்து மன உறுதியும் அய்யங்களிடம் பயாக்கிய ஆண்டுகள் அவை. கவிஞர்களிடமும், எழுத்தாளர்களிடமும் தத்துவத்தீர்ப்பை- பிரச்சனைகளின் இறுதித் தீர்வை எதிர்பார்க்கும் ஒரு கூட்டமாக எண்பதுகளின் தொடக்கத்தில் இங்கே நாங்கள் இருந்தோம். கடவுள் எனும் வார்த்தையை உதறி இருந்த நாங்கள் ஈழத்தையும் குவேராவையும் இணைக்க ஒரு புதிரான சூழ்நிலையை எதிர்நோக்கி வேறு எதையும் மறுக்கும் மனநிலையில் இருந்தோம். எங்கள் பிரெஞ்சு புரட்சி மீதான அறிவின் அடிப்படை 'நம்பிக்கைகள்' கியூபா, சோவியத் மீதான நட்சத்திர நோக்கு என பல் அம்சங்களை வேறொடு பிடுங்கும் முனைப்போடு வோன்கட் களம் இறங்கியதை உணர்ந்து அவரை பெரும்பாலோர் கைவிட்டனர். The Rational is real and the real is Rational என்கிற இடத்திருந்து nothing is real என்கிற இடத்திற்குள் நான் புதிய கதவொன்று திறந்ததுபோல் நினைத்து வியர்த்தேன். ஆரம்பத்திலிருந்தே அறிவியல் புனை கதைகள் என்றால் ஒரு பசித்த மிருகம்போல புசித்த ஜந்துவான நான் வோன்கட் இடமிருந்து ஓடமுடியாமல் "கேட்ஸ் க்ராடலால்" கட்டுண்டேன். 'அமெரிக்க சிந்தனாவாதி - ஒருவித பூர்ஷ்வா எழுத்தாளர்' என்றே எனது ஆரம்ப கால அணுகுமுறை வோன்கட்டை நோக்கி இருந்தது என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஒரு புதிய ஸென்வகை மதம் - 'போக்கேநானிஸம்' என்று அதை தீவிரமாய் கடைபிடிக்கும் கதை சொல்லி உலகம் அழிந்து கொண்டிருப்பதை ஆரவாரமின்றி கேட்ஸ் க்ராடல் விவரிக்கிறான். அறை வெப்பநிலையிலேயே தண்ணீர் மட்டுமல்ல அனைத்து நீர்மங்களுமே ஐஸ்கட்டி ஆகிவிடும். 'ஐஸ்-நைன்' எனும் மர்மப்பொருளை எண்ணி இரவுகளை துறந்தேன் நான். மனிதர்கள் கொடிய மரணத்தின் பால் ஒப்புவிக்கப்படுவதை வரலாறு என்று யார் யாரோ விதம் விதமாக பல்வித ,சுவையோடு எழுதிப் போவார்கள். கோடி கோடியாக குழந்தைகள் அநாதைகளாகும் தருணங்களை ஒரு திட்டவட்டமான வரலாற்று ரீதியிலான அம்சமாக்கி வல்லரசுகள் உருவாவதை அவரது நாவலில் கண்முன் கண்டு முழுமையை உள்வாங்கியபோது- முடிவில்லாத வெறுமை ஒன்றில் பயணம் செய்யும்- கடவுளின் தேவையை சிந்திக்கத் தெரியாத ஒரு கட்டத்தில் போய் நானும் விழுந்திருந்தேன்.

ஒரு ஏழெட்டு பாகங்கள் கொண்ட ட்ரியாலஜி நாவல்கள்போல வோன்கட்டின் வாழ்க்கை மிகவும் நீண்ட ஒன்று. வோன்கட் ஒரு அமெரிக்கர் அல்ல. அமெரிக்காவில் பிறந்த ஜெர்மானியர். 1922ல் இந்தியானாபோலிஸில் கர்ட் வோன்கட் - சீனியர்க்கும் எடித் வோன்கட்டிற்கும் பிறந்தார். பொருளாதார நெருக்கடிகள் அமெரிக்காவை தாக்கிய இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளில் ஒரு மாலைப் பொழுதில் தன் வாழ்நாள் முழுதும் நினைத்து நினைத்து வோன்கட் மருகவேண்டியிருந்த அந்த சம்பவம் நடந்தது. தாய் எடித்தின் கொடிய தற்கொலை அவரது நிழலாகி 'மகிழ்ச்சி நிரம்பிய ஞானத்தை' கைவிட வைத்தது. 'கடவுள் மரணமடையவில்லை.... தற்கொலை செய்து கொண்டார்'.... என்கிறான் பில்லி (ஸ்லாட்டர் ஹவுஸ்). கார்னல் பல்கலை கழகத்தில் ஒரு பட்டம் பெறுவதற்கு முன்பே அமெரிக்க ராணுவத்தில் சேர்க்கப்பட்டு 1944ல் அய்ரோப்பிய போர்முனைக்கு பல்ஜ் யுத்தத்தை நோக்கி அவர் அனுப்பப்படுகிறார்.

மந்திர எதார்த்தவாதத்தின் ஏனைய படைப்பாளிகளிடமிருந்து வோன்கட்டின் வாழ்க்கை வேறுபடுகிறது. அயல்நாட்டிற்கு புலம்பெயர்ந்த தனது பெற்றோர்க்கு பிறந்த ஒரு ஜெர்மானியன் அமெரிக்க பிரஜையாகி இரண்டாம் உலகப்போரில் கூட்டுப்படைகளில் ஒரு வீரனாக ஜெர்மனியின் நாஜிப்படைகளுக்கு எதிராக அனுப்பப்படுவது போன்ற ஒன்றை வேறுயார் வாழ்விலும் நாம் கேள்விப்படவில்லை. வோன்கட் போன்றவர்களை எப்படி அழைப்பது என்றும் வரலாறுக்கு தெரியவில்லை. தன் 106வது காலாட்படை பிரிவு நாஜிக்களால் முற்றிலும் தகர்க்கப்பட்டபிறகு கொலைப்பட்டினியுடன் அங்கே எதிரியர் கூடாரங்களை வேவு பார்ப்பவர்போல விட்டேத்தியாக சுற்றித்திரிந்தவரை கைதுசெய்து ட்ரெஸ்டனுக்கு போர்கைதிகளுக்கான முகாமிற்கு ஹிட்லர் படை அனுப்பி வைத்தது. யூதர்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்த வதை சிதை முகாம்களோடு ஒப்பிடுகையில் போர்கைதி முகாம்கள் எவ்வளவோ மேலானவையாக இருந்தபோதிலும் வோன்கட் அனுபவித்தது ஒரு கொடிய வாழ்வு. எப்போதும் ஒரு துர்மரணத்திற்கு தயாராகுபவனைப் போலவே பில்லி (ஸ்லாட்டர் ஹவுஸ்) வீழ்ச்சியடைந்து சீர் குலைந்து தற்சாய்வு அடைந்து திரிகிறான். எத்தனையோ ஆண்டுகளுக்குப்பிறகு 1991ல் தான் எழுதிய 'மரணத்தைவிடவும் கொடிய விதி' (Fates worse than Death) எனும் சுயசரிதை நாவல்..... அந்த நாட்களை நினைவுகூறும்போது, விஷவாயு கிடங்கிற்கு தான் ஏன் அனுப்பிவைக்கப்படவில்லை.... எப்போது அனுப்பிவைக்கப்படுவோம் என்பதறியாமல் தவித்த தருணங்களை விசித்திரமாக அணுகுகிறார். மரணப் பேரணிகளை நேரில் கண்டவராகவே அவரைப் பார்க்கிறோம்.

யுத்தத்தின் முடிவில் சிக்காக்கோவிற்கு திரும்பும் வோன்கட் மீண்டும் தான் 'மற்றவர்'களிடமிருந்து வித்தியாசமானவர் என்பதை நிரூபிக்கிறார். எதையும் செய்யாத நிலைப்பாட்டினை மேற்கொண்ட - அந்நியமாதன் ஏனைய சிந்தனையாளர்களான சாமுவேல் பெக்கட், முதல் ஆல்பர்ட் காம்யூ

காலந்தாழ்ந்து தான் என்றாலும் நான் ஸ்லாட்டர் ஹவுஸ் படித்து முடித்த அந்த நாளை மறக்கவே முடியாது. நாவன் இறுதிப்பகுதியில் வோன்கட் எழுதுவார், "என் வீட்டிருந்து எட்டு மைல்கள் தள்ளி ராபர்ட்

கென்னடியின் கோடைக்கால இல்லம் உள்ளது.... அங்கே இரு இரவுகளுக்கு முன் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்..... இப்படித்தான் நடந்து வருகிறது. மார்டின் லூதர்கிங் ஒரு மாதத்திற்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டார்..... இப்படித்தான் நடந்து வருகிறது.... நாள்தோறும் தன் இராணுவ அறிவால் கொன்று வியத்நாமில் குவித்த பிணங்களின் கணக்கை கொடுக்கிறது.... என் அரசு .... இப்படித்தான் தொடர்ந்து நடந்து வருகிறது" இதை படித்து முடித்த அன்று டிசம்பர் 2ஆம் நாள் மாமேதை அம்பேத்கர் நினைவு நாள்..... வருடமும் நன்றாக நினைவிருக்கிறது 1992. பாபர் மசூதி அன்றைய தினம் முற்றிலும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டதாக மாலை அறிவிக்கப்பட்டது..... வோன்கட் கூறியது சரிதான்.... இப்படித்தான் தொடர்கிறது....... so it goes.......





மார்க்வெஸ்

அனிதா நாயர்

ஹோலுப்

புது எழுத்து
தனிச்சுற்றுக்கு மட்டும்